# முனையம்



வெளியீடு

**பிரதேச செயலக கலாசாரப்பேரவை**

பிரதேச செயலகம் - கல்முனை த.பி.

2017

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முனையம்

## கலாசார விழா சிறப்புமலர்



வெளியீடு

**பிரதேச செயலக கலாசாரப்பேரவை**

**தமிழ்ப் பிரதேச செயலகம் - கல்முனை**

**2017**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை தமிழ் பிரதேச செயலகம்

## பிரதேச கலாசார பேரவை-2017

தலைவர்
**திரு.கே.லவநாதன்**
(பிரதேச செயலாளர்)

உப தலைவர்
**திரு.வி.சண்முகநாதன்**
(வித்தகர், கலாபூஷணம்)

செயலாளர்: **திரு.த.பிரபாகரன்**
(கலாசார உத்தியோகத்தர்)

உப செயலாளர்: **திரு.க.பரதன் கந்தசாமி**
(ஓய்வு பெற்ற கோட்டக் கல்விப்பணிப்பாளர்)

பொருளாளர்
**திரு.பொ.ஜெகநாதன்**
(ஓய்வு பெற்ற கோட்டக் கல்விப்பணிப்பாளர்)

உறுப்பினர்கள்

திருவாளர்கள் : **மு.சடாட்சரன்** (ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்) **உமாவரதராஜன்** (எழுத்தாளர்), **ஜெ.டேவிட்** (அதிபர்), **சு.அரசரெத்தினம்** (ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர்), **வ.குலசேகரம்** (ஓய்வுபெற்ற கூட்டுறவு உதவி ஆணையாளர் ), **க.சந்திரலிங்கம்** (ஓய்வு பெற்ற அதிபர்), **நா.விநாயகமூர்த்தி** (கலாபூஷணம்), **பி. இராஜகுலேந்திரன்** (உதவி திட்டமிடல் பணிப்பாளர்), **ஆர்.மித்திரன்** (நிர்வாக உத்தியோகத்தர் - கிராம சேவகர்), **கே.யோகலிங்கம்** (பிரதம முகாமைத்துவ உதவியாளர்), **செ.சிவம்** (தலைமை சமுர்த்தி முகாமையாளர்), **பூ.கோவிந்தசாமி** (குடியேற்ற உத்தியோகத்தர்), **திருமதியர் : க.புஷ்பகீதா** (கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்), **சி .கௌசலவாணி** (இந்து கலாசார அபிவிருத்திஉத்தியோகத்தர்)

நிதிக்குழு
பொறுப்பாளர்
**பொன்.செல்வநாயகம்**
(ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி அதிகாரி)

உறுப்பினர்கள்

திருவாளர்கள் : **கே.யோகராசா** (ஓய்வு பெற்ற அதிபர்), **எஸ்.கே. வீரவாகு** (ஓய்வு பெற்ற இலங்கை வங்கி முகாமையாளர்),**கே.நாகராசா** (நிதி உதவியாளர்), **ப.தயாழ்ராஜ்** (அபிவிருத்தி உத்தியோகத்தர்), **கே.கமல்ராஜ்** (அபிவிருத்தி உத்தியோகத்தர்), **ஆர்.மித்திரன்** (கிராம நிர்வாக உத்தியோகத்தர்), **ஏ.அமலதாஸ்** (கிராமசேவை உத்தியோகத்தர்), **எஸ்.சிவகுமார்** (அபிவிருத்தி உத்தியோகத்தர்), **எஸ். தயாபரன்** (அபிவிருத்தி உதவியாளர்), **பி.சயானந்தன்** (முகாமைத்துவ உதவியாளர்), **திருமதியர்:வி.யோகேஸ்வரன்** (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்), **ஆர்.சபீதா** (கிராம சேவை உத்தியோகத்தர்)

மலர் வெளியீட்டுக் குழு
பொறுப்பாளர்
**திரு. உமா வரதராஜன்**

உறுப்பினர்கள்

திருவாளர்கள்: **சு. அரசரெத்தினம்** (ஓய்வு பெற்ற இலங்கை வங்கி முகாமையாளர்), **மு.சடாட்சரன்** (ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்) **வே.சண்முகநாதன்** (வித்தகர், கலாபூஷணம்), **ஜெ.டேவிட்** (அதிபர்), **எஸ்.துஜியந்தன்** (ஊடகவியலாளர்), **பொ.ஏகாம்பரம்** (எழுத்தாளர்), **க.பாக்கியராசா** (ஓய்வு பெற்ற அதிபர்), **பி. இராஜகுலேந்திரன்** (உதவி திட்டமிடல் பணிப்பாளர்) **கே. யோகலிங்கம்** (பிரதம முகாமைத்துவ பணிப்பாளர்), **செ.சிவம்** (தலைமை சமுர்த்தி முகாமையாளர்) **எஸ்.விக்னேஸ்வரன்** (கிராம சேவை உத்தியோகத்தர்), **ஏ.திலீபன்** (கிராமசேவை உத்தியோகத்தர்), **திருமதி.த.சுபத்ரா** (அபிவிருத்தி உத்தியோகத்தர்)

நிகழ்ச்சி ஏற்பாட்டுக்குழு
பொறுப்பாளர்
**திருமதி.டி.கே.பத்திரன**
(சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர்)

உறுப்பினர்கள்

செல்விகள்.**என்.கே.சரோஜா** (ஓய்வு பெற்ற சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர்), **பு.சுகன்யா** (கிராமசேவை உத்தியோகத்தர்), **திருமதியர்: மாலா விக்னேஸ்வரன்** (ஆசிரியை), **விமலா கிருபைராசா** (ஓய்வு பெற்ற சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர்), **வை.திருப்பதி** (முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி உதவியாளர்), **பி.ரேவதி** (பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்), **ஆர்.சபீதா** (கிராம சேவை உத்தியோகத்தர்), **டி.முரசொலி மாறன்** (மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்), **எஸ்.சைலஜா** (மேலதிக மாவட்டப் பதிவாளர்), திருவாளர்கள்: **செ.பிரசன்னா** (அபிவிருத்தி உத்தியோகத்தர்), **வை.கணேசன்** (கலைஞர்), **எஸ்.சந்திரகுமார்** (சமூக அபிவிருத்தி உதவியாளர்)

கலைஞர் கௌரவிப்பு தேர்வுக் குழு
பொறுப்பாளர்
**திரு.மு.சடாட்சரன்**
(ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்)

உறுப்பினர்கள்

திருவாளர்கள்: **உமா வரதராஜன், சு.அரசரெத்தினம்** (ஓய்வு பெற்ற இலங்கை வங்கி முகாமையாளர்), **வே.சண்முகநாதன்** (வித்தகர், கலாபூஷணம்), **பரதன் கந்தசாமி** (ஓய்வு பெற்ற கோட்டக் கல்வி அதிகாரி), **கே.சத்தியநாதன்** (சிரேஷ்ட முகாமையாளர் - பிரதேச அபிவிருத்தி வங்கி), **ஆர்.கணேசமூர்த்தி** (நிர்வாக உத்தியோகத்தர்), **ஜி.எஸ்.மனோகரன்** (கிராம சேவை உத்தியோகத்தர்), **எஸ்.விக்னேஸ்வரன்** (கிராம சேவை உத்தியோகத்தர்)

விழா ஏற்பாட்டுக் குழு
பொறுப்பாளர்
**திரு. இ.பரமேஸ்வரன்**
கணினி நிறுவன உத்தியோகத்தர்

உறுப்பினர்கள்

திருவாளர்கள்: **ஆர்.ஜோயல் ஜைரஸ்** (கலைஞர் ), **ஸ்ரீவேல் ராஜ்** (பாதுகாப்பு அத்தியட்சகர் - மக்கள் வங்கி, அம்பாறை மாவட்டம்), **உ.பிரதீபன்** (கலைஞர்), **ந.சௌவியதாசன்** (கணினி நிறுவன உத்தியோகத்தர்), **கா.அருளானந்தராசா** (அபிவிருத்தி உத்தியோகத்தர்), **என்.சசிகரன்** (அபிவிருத்தி உத்தியோகத்தர் ), **என்.விஜயகுமார்** (அபிவிருத்தி உத்தியோகத்தர்), **எஸ்.அரியானந்தம்** (அபிவிருத்தி உத்தியோகத்தர்), **எல்.சுலெக்ஷன்** (விளையாட்டு உத்தியோகத்தர்), **எஸ்.சுரேஷ்** (தொழில் நுட்ப உதவியாளர்) , **டி.திலிபன்** (கிராம சேவை உத்தியோகத்தர்), **என்.கஜன்** (கிராம சேவை உத்தி-யோகத்தர்), **எஸ். சுரேஷ்** (கிராம சேவை உத்தியோகத்தர்), **எஸ்.அருள்ராசா** (கிராம சேவை உத்தியோகத்தர்), **பி. விமல்ராஜ்** (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்),**டி.விமல்ராஜ்** (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்), **வி.ராஜேஸ்வரன்** (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்), **கே.லவகுமார்** (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்), **ஜனாப் .ஏ.எல்.எம்.சினாஸ்** (அபிவிருத்தி உத்தியோகத்தர்), **திருமதியர்: நந்தினி உதயநாதன், எம்.பூபாலரெட்டணம், எஸ்.அகிலா,எஸ்.கங்கேஸ்வரி, ஜனாபா. ஏ.ஆர்.அரிஷா அவாட்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்முனை தமிழ் பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்முனை தமிழ் பிரதேச செயலக வெளிக்கள உத்தியோகத்தர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்முனை தமிழ் பிரதேச செயலக அலுவலக உத்தியோகத்தர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்முனை தமிழ் பிரதேச செயலக சமுர்த்தி உத்தியோகத்தர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாசார பேரவை குழுக்களின் உறுப்பினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாசார பேரவை குழுக்களின் உறுப்பினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாசார பேரவை உறுப்பினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முனையம்

தலைவர்
**திரு. K.லவநாதன்**
பிரதேச செயலாளர்

உப தலைவர்
**திரு. V. சண்முகநாதன்**
வித்தகர், கலாபூஷணம்

செயலாளர்
**த. பிரபாகரன்**
கலாசார உத்தியோகத்தர்

உபசெயலாளர்
**க. பரதன் கந்தசாமி**
ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர்

பொருளாளர்
**பொ. ஜெகநாதன்**
ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர்

தொகுப்பாசிரியர்
**உமா வரதராஜன்**

பக்கங்கள்
**137**

ஓவியங்கள்
**ட்ராட்ஸ்கி மருது, ஜீவானந்தன், எம்.சசிகுமார்**

கணனி வடிவமைப்பு
**த.சங்கர்**
வணசிங்கா பிரிண்டர்ஸ்

அச்சுப்பதிப்பு
**வணசிங்கா பிரிண்டர்ஸ்**
*126/1, திருமலை வீதி, மட்டக்களப்பு*

## தொகுப்பாசிரியர் குறிப்பு

கலை-இலக்கிய வாதிகள் என்ற ரீதியில் ஒரு விரிவான பிரதேசத்தையே கல்முனைப் பிரதேசமென நாங்கள் அடையாளம் காணப் பழகியிருந்தோம். அது கரையோரமாக பொத்துவில் தொடங்கி நீலாவணை வரையிலுமானது. சம்மாந்துறையும் அதனுள் அடக்கம். எனினும் கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகம் என்பது இன்று நிர்வாக ரீதியாக வேறுபடுத்திக் குறிப்பிடப் படுகின்றது. எனவே அதன் வெளியீடான இந்த மலரும் அதற்குரிய எல்லைகளுடன் வெளியாகின்றது .

இம் மலர் கல்முனை தமிழ்ப் பிரதேசத்தின் கலை - இலக்கிய முயற்சிகள், பண்பாட்டுக் கோலங்கள், ஊர்களின் வரலாறுகள் ஆகியவற்றை மையமாகக் கொண்டது. மூன்று கட்டுரைகள் மாத்திரம் உள்ளூர் எல்லைகளைக் கடந்து கரிசனைக்குரிய இதர விஷயங்களைப் பேசுகின்றன.

இதில் வெளியாகியுள்ள படைப்புகள் மரபின் வேரையும், நவீனத்தின் விழுதுகளையும் கொண்டிருக்கின்றன. ஒருவரின் தனிப்பட்ட ரசனையைக் கருத்தில் கொள்ளாது பல் வேறு போக்குகளுக்கும், பல்வேறு தலைமுறையினருக்கும் இந்த மலரில் இடமளிக்கப் பட்டுள்ளது .

இந்த மலரின் படைப்புகளுக்கான சிறந்த ஓவியங் களை ஓவியர்கள் சிலர் வரைந்து தந்துள்ளனர். நமது *land mark* எனப் படும் முக்கியமான நில அடையாளமொன்றை வெளிப்படுத்தும் விதத்தில் அட்டை ஓவியம் அமைந்துள்ளது.

இந்த மலர் 'நாம் எங்கிருந்தோம்?', 'இப்போது எங்கிருக்கிறோம்?', 'இனி எங்கிருக்க வேண்டும்?' என்ற கேள்விகளை எழுப்பும் ஓர் உரைகல்லும் கூட, இம் மலர் அரசியல், கலை இலக்கிய ரீதியாக புத்தெழுச்சியொன்றை உருவாக்கினால் மகிழ்ச்சி யடைவோம். தனித்துவம் என்பது ஏனையோரிடம் இருந்து பிரிந்து செல்வதோ, பழம்பெருமை பேசுவதோ அல்ல என்பதையும் மாறாகப் பரஸ்பரம் புரிந்து கொள்வது என்பதையும் இம் மலர் உணர்த்தினால் மிகவும் சிறப்புக்குரியதாகும்.

நன்றி.

**உமா வரதராஜன்**
தொகுப்பாசிரியர்
மலர்க்குழு சார்பில்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி

**சுவாமி பிரபுபிரேமானந்தா**

தலைவர், இராமகிருஷ்ணமிஷன், மட்டக்களப்பு



கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகம் தனது பிரிவுக்கு உட்பட்ட பிரதேச கலாசார விழாவினை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை பிரதேச கலாசாரப் பேரவை மேற்கொண்டு, இவ்விழாவில் தமது பிரதேசத்தின் கலை இலக்கிய அம்சங்களை பிரதிபலிக்கும் விடயங்கள் பற்றிய தகவல்களை உள்ளடக்கிய 'முனையம்' சிறப்பு மலர் ஒன்றினையும் வெளியிடத் தீர்மானித்துள்ளனர். விழாக் குழுவினரையும் மலர்க் குழுவினரையும் பாராட்டுகின்றேன். இதற்கான ஆசிச் செய்தியளிப்பதிலும் மகிழ்ச்சியடைகின்றேன்.

தொழில்நுட்பத்தின் அசுர வளர்ச்சியினாலும், நாகரீகத்தின் தாக்கத்தினாலும் இன்று நாடு பல மாற்றங்களைக் கண்டுள்ளது. இம் மாற்றங்கள் பல நன்மைகளை வழங்கியிருந்தாலும் பல பாதிப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது. அவற்றுள் பிரதேச கலை இலக்கியச் சிதைவுகளும் ஒன்றாகும். 'தேசியக் கப்பலில்- நம் சமூகமாகிய அக் கப்பலில் ஓட்டைகள் இருந்தாலும் நாம் அதன் பிள்ளைகள் அல்லவா? நாம் அந்த ஓட்டைகளை அடைப்போம்" என்கிறார் சுவாமி விவேகானந்தர். சுவாமி விவேகானந்தரின் பொன் மொழிக்கேற்ப பாதிக்கப்பட்ட எமது பிரதேச கலை இலக்கியச் சிதைவுகளை சீர் செய்ய எடுக்கும் முயற்சிகளில் ஒன்றே இவ்வகையான விழாக்களும் நூல் வெளியீடுகளும்.

கலை என்பது சொல்லுகின்ற அல்லது சொல்ல விரும்புகின்ற செய்திகளை அழகும் நேர்த்தியும் படச் சொல்வது. காண்போர், கேட்போர், படிப்போர் மனதில் சுவை படவும் அவர்கள் மனம் கொள்ளையுறுமாறும் அவர்களது சிந்தனையில் அல்லது உணர்வில் ஓரளவு அசைவையும் தாக்கத்தையும் ஏற்படுத்துமாறும் அமைவது. மேலும் மேலும் பார்ப்பதற்கும் கேட்பதற்கும் படிப்பதற்குமான ஆர்வத்தைத் தூண்டுவதுமாகும். இக் கலைகள் 64 எனக் கூறுகின்றார்கள். அவற்றுள் தலையாயது கலை இலக்கியமாகும். இது மொழி சார்ந்த கலை எனச் சொல்லப் படுகின்றது. மேலும் மொழியை ஊடிணையாகக் கொண்டு அமையும் இந்தக் கலை முன் கலை என்றும் பயன் கலை என்றும் சொல்லப் படுகின்றது. கலை இலக்கியம் பல பிரதேசங்களில் முற்றாக அழிந்து போனாலும் கல்முனை, பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை, மணல்சேனை, நீலாவணை போன்ற கல்முனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் ஓரளவு உயிர்த்துடிப்புடன் இருக்கத்தான் செய்கின்றன. இப் பகுதிகளில் கூத்து, நாடகம், காவியம், கவிதை போன்றவையும் கோயில்களோடு இணைந்த சடங்குகளும், கைவினைகளும், கைத்தொழில்களும் எனக் கலை இலக்கிய அம்சங்களைப் பிரதிபலிக்கும் பல்வேறு விடயங்கள் பரவிக் கிடக்கின்றன.

இவ்வாறான கலை, இலக்கிய அம்சங்களை மென்மேலும் வளர்க்கும், ஊக்குவிக்கும், மீட்டெடுக்கும் நோக்குடன் கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகம் கலை இலக்கியத்துடன் மற்றும் பல வேறுபட்ட விடயங்கள் பற்றிய தகவல்களையும் உள்ளடக்கிய 'முனையம்' சிறப்பு மலர் ஒன்றினை வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைவதோடு இந்நூல் வெளியீடானது இப்பிரதேச மகத்துவத்தை வெளி உலகுக்குப் பறைசாற்ற வேண்டும் எனக் கேட்டு, இதற்குத் தம்மை அர்ப்பணித்து செயல்படும் பிரதேச செயலாளர், அவர்தம் பணிக்குழுவினர், மலர்க்குழுவினர் அனைவருக்கும் இறைவன் அருளை வேண்டி தெய்வத்திருமூலரின் நல்லாசிகளையும் வேண்டி எனது நல்லாசிகளையும் நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி

**பேரருட்தந்தை ஜோசப் பொன்னையா,**
மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்.



கல்முனை தமிழ்ப் பிரதேச செயலக பிரிவிற்குற்பட்ட பிரதேச கலாச்சார விழாவினைக் கொண்டாடும் முகமாக, கல்முனை தமிழ்ப் பிரதேச சபையினால் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

பண்டைய காலந்தொட்டு கிழகிலங்கையில் தமிழர் பெரும்பான்மையாக வாழ்ந்த பிரதேசங்களான திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை போன்ற நகரங்கள் தமிழர் தம் சமய, கலை, கலாச்சார பாரம்பரியங்களையும், மரபுகளையும் கொண்டு விளங்கின. அந்தோ பரிதாபம். தமிழர் செய்த பாவத்தின் பயனோ என்னவோ, தொடர்ந்து இடம் பெறும் சூறாவளி, சுனாமி, பெருவெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்களாலும், யுத்தம், வன்செயல், இன அழிப்பு, திட்டமிட்ட நில ஆக்கிரமிப்பு போன்ற செயற்கை அனர்த்தங்களாலும் தமிழர் தம் தாயகம் பறி போய் விட்ட நிலையில் பரிதவித்து நிற்கின்ற இவ்வேளையில் இது போன்ற பிரதேச கலாச்சார விழாக்கள் உறங்கிக் கொண்டிருக்கும் தமிழ் மக்களை விழித்தெழச் செய்யவும் உற்சாகம் இழந்தவர்களை ஊக்குவிக்கவும் உறுதுணையாக இருக்கும் என்பது எனது நம்பிக்கை.

முத்தமிழ் வித்தகர் எனவும், கிழக்கிலுதித்த தமிழ்ச்சூரியன் எனவும் போற்றப்படுபவருமான சுவாமி விபுலானந்தர் அடிகளார் அவதரித்தது கல்முனைப் பிரதேசத்திலுள்ள காரைதீவில். அவர் கல்வி கற்றதும், தமிழ்ப்பணி செய்ததும் இறுதியில் வாழ்வினை நீத்ததும் இத்தமிழ் மண்ணில் தான். இந்திய இலங்கை தமிழ் பேரறிஞர்களோடு அவருக்கிருந்த தொடர்பும், தமிழிலே பாண்டித்தியம் பெற அவருக்கிருந்த தொடர்பும், இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசியர் என்ற பெருமையை அவருக்கு வழங்கியிருக்கிறது.

இன, மத, மொழி வேறுபாடின்றி சகல மக்களையும் அரவணைத்து உள்வாங்கும் பிரதேசமாகவும், சுவாமி விபுலானந்தர் அடிகளார் போன்ற சர்வ சமய சிந்தனையாளர்களையும் ஈன்றெடுத்த பெருமையுடைய கல்முனை தமிழ்ப் பாரம்பரியங்களையும் இழந்து கூனிக்குறுகி நிற்கும் தமிழ்த்தாய் புத்துயிர் பெற வழி செய்யும் கல்முனை தமிழ்ப் பிரதேச செயலாளரையும் உடன் உழைப்பவர்களையும் பாராட்டுவதோடு அவர் தம் நல்லெண்ணம் நிறைவேற இறையாசீர்வாதம் வேண்டி நிற்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



**அஷ்ஷெய்க். அன்ஸார் பழீல் மௌலானா (நழீமி),**

விரிவுரையாளர், பிரதித் தலைவர்

ஜம்இய்யத்துல் உலமா சபை, மருதமுனை

கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகத்தின் கலாசார பிரிவால் வெளியிட ப்படும் 'முனையம்' சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இனம், மதம், மொழி என்ற அம்சங்களுக்கு அப்பால் மானுடம் மனிதாபிமானம் போன்ற உயர் விழுமியப் பண்புகளைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய ஒரு முக்கியமான நிலைமாறு நீதியை வேண்டி நிற்கும் காலகட்டத்தில் நாம் கல்முனைப் பிரதேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சமயங்கள் கற்றுத் தரும் பொது விழுமியப் பண்பாடுகளான உண்மை, நேர்மை, பொறுமை, விட்டுக்கொடுப்பு, பரஸ்பரம் மதித்து வாழல் போன்ற அணிகலன்களை தமிழ்-முஸ்லிம் சமூகம் கல்முனைப் பிரதேசத்தில் கட்டாயம் வெளிப்படுத்த வேண்டிய ஒரு வரலாற்றுக் கால கட்டத்தில் 'முனையம்' பல்வேறு ஆக்க பூர்வமான கட்டுரைகளையும், செய்திகளையும் தாங்கி வெளியாகின்றது.

மானுடமும் மனிதநேயமும் சர்வதேச அளவில் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியிருக்கும் இக் காலத்தில் மானிடத்தையும் மனித நேயத்தையும் காப்பதற்கு சர்வசமயத் தலைவர்கள் மட்டுமல்ல சகல சிவில் சமூக உறுப்பினர்களும் சமயங்களைக் கடந்து கை கோர்க்க வேண்டும். இல்லையேல் நாம் வீழ்ச்சிப் பாதைக்கு சென்று விடுவோம்.

மானுடம் தழைத்தோங்க மானுடப் பண்புகளை மேம்படுத்தும் செயற் திட்டத்தை சகல பிரதேச செயலகங்களின் கலாசாரப் பிரிவுகளும் முன்னெடுக்க முன்வருவதோடு, சமயத் தலைவர்களின் வழிகாட்டல் என்றும் கிட்ட வேண்டும் என ஆசிக்கிறேன்.

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



அம்பாறை மாவட்டம், கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தினால் முதல்முறையாக வெளியிடப்படுகின்ற 'முனையம்" எனும் கலை இலக்கிய சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமிதமடைகின்றேன்.

இக்கலை இலக்கிய செண்டுக்கு சூட்டப்பட்டுள்ள நாமம் சாலச் சிறந்ததென நம்புகின்றேன். எழுத்துக்கள் பலம் பொருந்தியவை, அவை இராம பாணத்திலும் கூரானவை. மிகக் கடினமான மலையைக்கூட தகர்த்தெறியக் கூடியவை. ஆதலால் இச்செயலகம் பிரசவிக்கும் முதற் சஞ்சிகை மட்டுமல்லாது நமது சமூகம் கலை, கலாசாரம், பண்பாடு, விழுமியம் போன்ற பல விடயங்களில் விழிப்புணர்வு கொள்ளத்தக்கதானதும், உணர்வுபூர்வமானதுமான பல படைப்புக்கள் நம் சமூகத்திடையே தோற்றம் பெற வேண்டும் என்பதும் எனது அவா.

பல ஆக்கபூர்வமான அம்சங்களுடன் உதயமாகும் இந்த 'முனையம்' ஜன ரஞ்சகம் பெறும் என்பதில் ஐயமில்லை. தமிழர்கள் மத்தியில் மலரும் கலை இலக்கிய படைப்புக்கள் குறைவடைந்து செல்லும் நிலை காணப்படுகின்றது. இதை நிவர்த்திக்கும் வகையில் 'முனையம்' வீறு நடைபோட வேண்டும்.

தமிழ் இலக்கியப் படைப்பாளிகளாக நமது இளம் எழுத்தாளர்கள் ஊக்கப்படுத்தப்பட வேண்டும். வார்த்தைகள் வாள் முனையிலும் சக்தி வாய்ந்தது! எனும் கூற்றை இளம் எழுத்தாளர்களிடம் எடுத்துச் சென்று ஆதரவு வழங்க வேண்டும்.

'முனையம்" எனும் இச்சஞ்சிகைக்கு ஆக்கங்களை வழங்கிய ஆர்வமுள்ள எழுத்தாளர்களையும் அவற்றை சீர் செய்து சஞ்சிகை வடிவாக்கிய கல்முனை வடக்கு (தமிழ்) பிரதேச செயலக உத்தியோகத்தர்களையும், அவற்றை ஒழுங்குப்படுத்தி, செம்மையாக வழிநடாத்துகின்ற பிரதேச செயலாளர் அவர்களையும் பாராட்டுவதுடன் வருடந்தோறும் பல்வகையான கவிதைகள், கதைகள், புத்தாக்கச் சிந்தனைகளுடனும் ஆய்வுக் கட்டுரைகளுடனும் மேலும் பொலிவு பெற்று வெளிவரவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**கௌரவ. க.கோடீஸ்வரன். பா.உ**
இணைத் தலைவர்
அம்பாரை மாவட்ட இணைப்புக்குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



நீண்டகாலம் தொட்டு இலங்கையில் பௌத்த, இந்து, இஸ்லாமிய மத சூழல்களில் வசிக்கின்ற மக்கள் தங்களுக்குப் பரிச்சயமான எவையேனும் விசேட நிகழ்வுகள் மற்றும் பல்வேறு விடயங்களை வெளிப்படுத்தினாலும் அவர்களுக்குள் இருக்கின்ற பாரம்பரியக் கதைகள், கவின் கலைகள், விருந்தோம்பல்கள், மற்றும் பழக்க வழக்கங்களுக்குள் ஒத்த கருத்தினையும் சமத்துவத்தையும் காணலாம்.

இந்து மதத்தவர்களுடனான திகாமடுல்லவின் வரலாறு பல நூறாண்டுகள் தாண்டியதாகும். குறிப்பாக கல்முனையில் யோஸில கிழக்குக் கடற்கரை பிரதேசம் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாகும். நவீன காலத்தில் தேசிய ஒருமைப்பாடு தொடர்பான விடயத்தில் மிகவும் அறியப்பட்டதாகவும், வரலாற்று ரீதியானதாகவும் முக்கியத்துவம் பெற, பூகோள எல்லையான கல்முனை பிரதேச செயலகப் பிரிவில் கலாசார கலை விழாக்களை ஏற்பாடு செய்வதும் இதேவிதமாக 'முனையம்' என்ற பெயரில் நினைவு மலர் எழுதப்படுவதும் காலத்தின் தேவையை நிறைவு செய்வதாக உணர்கிறேன்.

நாம் வாழும் நவீன நுகர்வுச் சமூகக் கட்டமைப்பானது அனைத்து விடயங்களையும் பணப் பெறுமானத்துடன் கலந்து விட்டுள்ள ஒரு சமூகமாகும். லௌகீக வாழ்க்கையைத் தேடவும் அதைக் கைப் பற்றவும் அதி வேகமான போட்டியில் ஈடுபடும் ஒரு சமூகமாக உள்ளது. அந்தப் போட்டியில் கலாசார சமூகப் பெறுமானங்களைக் கருத்திற் கொள்ளாது உயர்வு , தாழ்வு, ஜாதி போன்ற பல்வேறு அளவீடுகளின் பேரில் மனிதன் வேற்றுமை கொள்வதாலும் குறுகிய சிந்தனைகளை மேம் படுத்த எடுக்கின்ற பிரயத்தனங்களாலும் சமூகம் என்பது மனிதனுக்குப் பாதுகாப்பற்ற ஓர் அம்சமாக மாறியுள்ளது. அதனால் நற்பண்புள்ள மனிதர்களின் தலையீட்டுடன் மாற்றாரின் கலாசாரம் ,அடையாளங்களை மதிக்கின்ற மனிதர்களை உருவாக்குவதற்காக வழிகாட்டல்கள் அவசியமாகியுள்ளன .

இந்த நிகழ்வின் ஏற்பாட்டாளர்களிடம் நாம் காண்பது அத்தகைய உயர்ந்த வழிகாட்டலேயாகும். சமூகத்தில் தாங்கள் தனிமைப்படவில்லை என்பதையும் ஏனைய மனிதர்களுக்கும் தங்களைப் போன்ற வாழ்க்கையும் தேவைகளும் ,அந்தத் தேவைகளை அடைவதற்கான உரிமையும் உள்ளதென்பதை மனிதன் புரிந்துகொள்ள வேண்டும். அவ்வாறான அடையாளத்தைக் கண்டுணர்வது முற்போக்கு கலாசார தாக்கம் கொண்ட மனிதர்களுக்கு மட்டுமே சாத்தியமானது .

வாசகர்களிடத்தில் மீள் எழுச்சியை ஏற்படுத்திய ரவீந்திரநாத் தாகூர் தேசிய வாதிகளுக்கு எதிராக 'நான் வங்காளி தாகூர் இனத்தைச் சேர்ந்தவன் என்ற பற்றுறுதி இருந்தது . என்றாலும் 'நான் அதே போன்று அனைத்து இனங்களின் கலாச்சாரங்களையும் மதிப்பவன்' என்றார் . அதுவே மிகவும் பரந்து பட்ட சிந்தனை. லௌகீகம் என்பதற்கும் இனவாதத்தைக் கட்டியெழுப்புகின்ற திட்டங்களுக்கும் எதிராக அவன் இருந்தான். அந்த கலாசாரம் சிங்களவர், தமிழர், முஸ்லிம் என அனைவருக்கும் பொருத்தமான அடிப்படைத் தத்துவத்தைக் கட்டியெழுப்புவதால் நாங்கள் கண்டுபிடிக்க வேண்டியது தன் மனிதனின் வாழ்க்கையை சுபீட்சமடையச் செய்யக்கூடிய , மாற்றாருடன் மோதல் அற்ற புதிய மனிதனின் உருவாக்கத்தையாகும். அந்தப் பயணத்திற்கு வலுவை வழங்குகின்ற இதுபோன்ற மிகப் பெரும் நிகழ்வுகள் மென் மேலும் எதிர்பார்க்கப்படுவதோடு இப்போது எடுக்கப்படும் முயற்சி அனைத்து வழிகளிலும் வெற்றிபெற வேண்டுமென அன்புடன் வாழ்த்துகின்றேன்

**திரு. துசித்த வணிகசிங்க**
மாவட்டச் செயலாளர்
அம்பாறை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



கல்முனை தமிழ்ப் பிரதேச செயலக பிரிவின் பிரதேச கலாசார பேரவையினால் முதன் முறையாக இவ்வாண்டு வெளியிடப்படும் முனையம் சிறப்பு மலரினை உங்கள் கரங்களில் தவழ விடுவதில் பெருமிதம் அடைகின்றேன்.

ஒவ்வொரு இனத்தினை சேர்ந்த மக்களும் அவர்களது தனித்துவத்தினை எடுத்துக்காட்டும் வகையில் முன்னிலைப் படுத்துவது தமது கலை இலக்கிய பண்பாட்டு பாரம்பரியங்களினையேயாகும். அந்த வகையில் கல்முனை தமிழ்ப் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட, கலை, இலக்கிய பண்பாட்டம்சங்களை பிரதேச கலாசார விழா எனும் நிகழ்வின் ஊடாக உலகறியச் செய்யும் வகையில் பெருவிழாவாக ஒழுங்கமைத்து அதில் எமது பாரம்பரிய கலை வடிவங்களை மேடையேற்றுவதுடன் சமூக மட்டத்தில் புகழ் பூத்த மூத்த கலைஞர்களை கௌரவிப்பதனையும் பெருங் கடமையாகக் கொண்டு செயற்படுத்திய திருப்தி எம் அனைவருக்கும் கிடைக்கும்.

எமது பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மக்களது கலை, கலாசார, இலக்கிய அம்சங்களை இன்றைய இளம் தலைமுறையினரும் அறியும் வகையில் அவை தொடர்பான ஆவணப்படுத்தல் எனும் நோக்குடனும் இலக்கியப் படைப்பாளிகளுக்கான ஒரு களமாகவும் இச் சிறப்பு மலரானது வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் எதிர் காலத்தில் எமது கலை இலக்கியப் பயணத்தின் போது காத்திரமான படைப்பாளிகளும் படைப்புகளும் இப்பிரதேசத்தில் இருந்து புத்தெழுச்சியுடன் வெளிவர வேண்டும் என்ற எண்ணமும் அவாவும் என் மனதில் நிறைந்து காணப்படுகின்றது. அதே போல் கலை இலக்கியப் பயணத்திலே காலவோட்டத்திற்கேற்ப நமது கலை இலக்கியங்களின் தனித்துவம், சிறப்புகள் என்பன இழக்கப் படாமல் மாற்றங்களுக்குட்பட்டு நிலைத்து நிற்கக் கூடிய வகையில் நாம் அனைவரும் பணியாற்ற வேண்டியது தலையாய கடமையாகக் காணப்படுகிறது.

நாம் இவ் வருடம் வெளியிடுகின்ற 'முனையம்' சிறப்பு மலரிற்கான முழு நிதி அனுசரணைகளையும் வழங்கிய மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள். கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் படைப்பாக்கங்களை வழங்கிய எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஆகியோருக்கும் சிறப்பு மலர் வெளிவர முழு மனதுடன் பாடுபட்ட மலர்க்குழு உறுப்பினர்கள் ஆலோசனைகள் வழங்கிய கல்விமான்கள், அறிஞர்களுக்கும் நன்றி பாராட்டுவதுடன் கலாசார விழா சிறப்புற முன்னின்று செயற்பட்ட கலாசார பேரவையின் அனைத்து உறுப்பினர்கள், நிதியுதவிகளை வழங்கிய பெருந்தகைகள், அரச தனியார் நிறுவனங்கள், நலன்விரும்பிகள், கலை ஆர்வம் கொண்ட பொதுமக்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச கலாசார பேரவையானது இனி வரும் வருடங்களிலும் தொடர்ந்து சிறந்த மலர் வெளீயிடுகளையும் கலை, இலக்கிய நிகழ்வுகளையும் ஒழுங்கமைத்து நடத்த வேண்டுமென எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன்...

**திரு. K. லவநாதன்**
பிரதேச செயலாளரும்,
பிரதேச கலாசாரப் பேரவை தலைவரும்
கல்முனை - தமிழ் பிரிவு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



ஒரு பிரதேசத்தில் வாழ்கின்ற இனக்குழுமத்தின் தனித்துவத்தை நிலை நிறுத்தவும் அப்பிரதேசம் தொடர்பான வரலாற்று ஆதாரமாகவும், மக்களின் வரலாற்றியல் சார் பதிவுகளை எடுத்தியம்பும் சான்றாதாரங்களாகவும் கலை, இலக்கிய, செயற்பாடுகள் விளங்குகின்றன. கலை இலக்கிய ஆதாரங்கள் ஆவணப் படுத்தப் படுவதுடன், காத்திரமான செயற்பாடுகளில் ஈடுபடும் கலைஞர்கள் கௌரவப்படுத்தப்பட வேண்டும். இத்தகைய செயற்பாடுகளின் ஊடாக பிரதேசத்தின் எதிர்கால சந்ததியினர் தமது நிலம் தொடர்பாகவும், தம் சந்ததியினர் தொடர்பான வரலாறையும் பெருமையுடன் அறிந்து கொள்வர்.

இந்த வகையில் அம்பாறை மாவட்டத்தின் கல்முனைப் பிரதேசமானது தமிழ் முஸ்லிம் மக்கள் ஒன்றாக இணைந்து வாழ்கின்ற பிரதேசம் ஆகும். இனம், மதம், பிரதேசம் போன்ற வேற்றுமைகளைக் கடந்து மக்களை ஒன்றிணைப்பதில் கலைகள் மிக முக்கிய இடத்தினை வகிக்கின்றன. கலை இலக்கியத்திற்கு அத்தகைய சக்தி உள்ளது. இந்த வகையில் கல்முனை பிரதேச தமிழ்ப் பிரிவு முதன் முதலாக பிரதேச இலக்கிய விழாவினை நடாத்துவதுடன், விழா ஞாபகார்த்தமாக 'முனையம்' என்னும் மலரையும் வெளியிடவுள்ளமை பாராட்டப்பட வேண்டிய பணியாகும். இம் மலரில் பிரதேச கலை முயற்சிகள் தொடர்பான பதிவுகளை உள்ளடக்கியிருப்பது சிறப்பானதாகும். இவ் விழாவில் பிரதேச கலை இலக்கிய செயற்பாடுகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்ட 32 கலைஞர்கள் கௌரவிக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகத்தினால் முதன் முதலாக நடாத்தப்படும் பிரதேச இலக்கிய விழா சிறப்புடன் நடைபெறவும், முதன் முதலாக வெளியிடப்படும் 'முனையம்' விழா ஞாபகார்த்த மலருக்கு வாழ்த்து தெரிவிப்பதுடன், இத்தகைய வரலாற்றுக் கடமையில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட விழாக்குழு மற்றும் மலர்க்குழு உட்பட்ட சகலருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி.வளர்மதி ரவீந்திரன்**
மாகாணப் பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கல்முனை தமிழ்ப் பிரதேச செயலக

# கலாசாரப் பேரவை கீதம்

கல்முனை வாழ்கவே !
கல்முனைத் தமிழர் கலாசாரம் வாழ்கவே !

பல்கலைகள் ஓங்கி....பகையெல்லாம் அழிந்து
நல்லவர் வழியில் நாளெல்லாம் உழைக்க கல்முனை வாழ்கவே !

கல்விக் கடல் வளர்க்கும் கல்முனையும்
பாண்டவர் இருப்பான பாண்டிருப்பும்
நெல் பட்டறைகளால் நிமிர்ந்த நற்பிட்டிமுனையும்
இறைவன் அருளால் விளங்கும் பெரிய நீலாவணையும்
சேனைகளாலே சிறப்புடன் உயர்ந்த சேனைக்குடியிருப்பும்
ஐந்து ஊராரும் ஐக்கியமாகி அயராதுழைப்போம் !
ஆண்டவன் காப்பான் அகிலம் போற்ற வாழ்வோம் !

கல்முனைத் தமிழ்ப் பிரதேச செயலக சேவையைப் போற்றி
அல் அயலாருடன் என்றும் அன்போடு வாழ்வோம் !
தமிழர் கலாசார பண்பாட்டு செயல்களை
தவறாது கடைப் பிடித்து தனித்துவமாய் வாழ்வோம் !

கல்முனை வாழ்கவே !
கல்முனைத் தமிழர் கலாசாரம் வாழ்கவே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...

## கட்டுரைகள்


| | |
|---|---|
| வ. அழகரெத்தினம் | 13 |
| ஏ.எல்.எம். ஷினாஸ் | 17 |
| அருட்.சகோ. எஸ்.ஏ.ஜ.மத்தியூ | 26 |
| புவிநேசராசா கேதீஸ் | 29 |
| அகரம் செ. துஜியந்தன் | 38 |
| சஞ்சீவி சிவகுமார் | 50 |
| பரதன் கந்தசாமி | 61 |
| மு. சடாட்சரன் | 72 |
| சிவ. வரதராஜன் | 75 |
| எஸ். அரசரெத்தினம் | 83 |
| கமலாம்பிகை லோகிதராஜா | 86 |
| சே. இந்திரா | 91 |
| ஞானக்குமார் சுகன்யா | 94 |
| டேவிட் பைந்தமிழ்க்குமரன் | 96 |
| செல்லையா பேரின்பராசா | 100 |
| சுபத்ரா சுபேஸ் | 101 |
| சைலஜா சுதர்சன் | 109 |
| வ. சுப்பிரமணியம் | 116 |


## சிறுகதைகள்


| | |
|---|---|
| முகில்வண்ணன் | 34 |
| செ. இன்பராஜா | 53 |
| கமலினி சிவநாதன் | 69 |
| சபா. தயாபரன் | 104 |
| யௌவனா வசந்தன் | 111 |


## கவிதைகள்


| | |
|---|---|
| பாண்டியூரன் | 21 |
| நீலாவணன் | 22 |
| சண்முகம் சிவலிங்கம் | 24 |
| இரா. முரளீஸ்வரன் | 32 |
| நாகமணி விநாயகமூர்த்தி | 46 |
| கலைக்கொழுந்தன் | 47 |
| அக்கரை மாணிக்கம் | 48 |
| எம்.கே. வேல் | 48 |
| சே. இந்திரா | 49 |
| கமலன் | 52 |
| கல்லூரன் | 58 |
| மலரா | 60 |
| எஸ். விக்னேஸ்வரன் | 65 |
| சபா சபேஷன் | 66 |
| பூவை சரவணன் | 67 |
| சுந்தர் நிதர்சன் | 68 |
| வைரமுத்து கணேசன் | 68 |
| பாண்டியூர் பொன். நவநீதன் | 71 |
| கௌசிகன் | 103 |
| சு.டனிஸ்கரன் | 114 |
| ஜெனிற்றா பிரதீபன் | 115 |
| அக்கரைப் பாக்கியன் | 119 |



| | |
|---|---|
| மறைந்த ஆளுமைகள் | 120 |
| கலாசாரப் பேரவை விருதுகள் | 128 |
| நன்றிக்குரியோர் | 137 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கல்முனை தமிழ்ப்பிரிவு

## பிரதேச செயலக வரலாறு

**1989**.04.12 ஆம் திகதி கல்முனைத் தமிழ் பிரதேச தமிழ் மக்களுக்கு ஒரு முக்கிய மான தினமாகும். அன்றைய தினமே கல்முனைத் தமிழ் மக்களுக்கென ஓர் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்விலே தமிழ் மக்களும் அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கமும், உள்ளூர் அரசியல் தலைவர்களும் கல்முனை சுபத்திராயாம விகார திபதியும் கலந்து கொண்டனர். கல்முனைக்கு வாகரைப் பற்று உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் ஏற்கனவே இருந்தது. இந்த அலுவலக நிருவாக எல்லைக்குள் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் வாழ்ந்து வந்ததுடன் முஸ்லிம், சிங்கள உதவி அரசாங்க அதிபர்கள் கடமையாற்றினார்கள். அக்காலத்திலிருந்து கல்முனை வாழ் தமிழ் மக்களுக்கு ஒரு மனக் குறை இருந்தது. நிர்வாக ரீதியாகவும் அபிவிருத்தி ரீதியாகவும் தாங்களும் தங்கள் பிரதேசமும் புறக்கணிக்கப் படுவதாகவும் தங்களுடைய கோரிக்கைகள் கவனத்தில் எடுக்கப் படுவதில்லை எனவும் குறைபட்டுக் கொண்டார்கள். இது முற்று முழுதாக இல்லா விட்டாலும் கூட விகிதாசாரப் படி நடைபெற வில்லை என அறிய முடிகின்றது.

ஆனால் கல்முனை வாழ் தமிழர் இக் காலப்பகுதியில் உள்ளூராட்சி அரசியலில் மேலோங்கி இருந்த சந்தர்ப்பமும் இருந்தது. மனக்குறை கொண்டுள்ள தமிழ் மக்கள் தங்கள் பிரதேசத்துக்கென ஒரு தனியான உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் தேவை என்ற கோரிக்கையை முன் வைக்கத் தொடங்கினார்கள்.

தங்களது தமிழ்ப்பிரதேசம் கல்முனை, பாண்டிருப்பு, பெரியநீலாவணை, நற்பிட்டி முனை, சேனைக்குடியிருப்பு குருந்தையடி, மணற்சேனை, திரவந்தியமேடு ஆகிய கிராமங்களை உள்ளடக்கியதுடன் 10 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைக் கொண்ட தென்பதும் (தற்போது இக் கிராம சேவகர்கள்

**வ. அழகரெத்தினம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவு 29ஐக் கொண்டது) இப் பிரிவில் வாழும் மக்கள் தொகை பின்வருமாறு உள்ளது. சிங்களவர்கள் 163 பேர், தமிழர்கள் 30287 பேர், முஸ்லிம்கள் 3156 ஏனைய இனத்தைச் சார்ந்தவர்கள் 2810 ஆகும். கல்முனை வாழ் தமிழ் மக்களது, தனியான உதவி அரசாங்க அதிபர் கோரிக்கை நியாயமான சாதாரண கோரிக்கையாக முன்வைக்கப்பட்டது.

தமிழ் மக்களுடைய கோரிக்கைகளை அழுத்தமாக வைப்பதற்கு அன்றைய அரசியல் சூழ்நிலை அவர்களுக்கு சாதகமானதாக இருக்கவில்லை. ஆனாலும் காலத்துக்குக் காலம் அவர்களுடைய கோரிக்கைகளை முன் வைத்தார்கள். அவ்வாறு செய்கின்ற போது பல கோணங்களில் சிந்தித்துச் செயற்பட்டார்கள். ஆனால் இவர்களுக்கு அரசியல் பலம் இல்லாத ஓர் காரணத்தால் அவர்களின் கோரிக்கைகள் மேலிடத்திற்கு முன்னெடுக்கப்படவில்லை. காலப் போக்கில் கல்முனை வாழ் தமிழ் மக்களுக்கு சாதகமான ஓர் உள்ளூர் அரசியல் சூழல் உருவாகியது. இதனால் தமிழர்கள் தங்களுக்குப் பாதுகாப்பு இருக்கின்றது எனவும் உதவி இருக்கின்றது எனவும் நம்பினார்கள். இதனால் தங்கள் உதவி அரசாங்க அதிபர் அலுவலகக் கோரிக்கையை மீண்டும் முன் வைத்து ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

கல்முனையில் அரச அலுவலகங்கள் பல மூடப்பட்டன. போக்குவரத்துக்கும் இடைஞ்சல்கள் ஏற்பட்டது. இவ்வாறு இருக்கையில் இந்த விடயம் கொழும்பு பொது நிருவாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு கொண்டு செல்லப்பட்டது. அமைச்சிலே ஒரு செய்தியாளர் மாநாடு நடைபெற்றது. இதிலே தமிழ், முஸ்லிம் அரசியல் தலைவர்களும் அமைச்சர்களும் அமைச்சு உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டு உரையாடினார்கள்.

அதில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப் பட்டன. அதாவது கல்முனைப் பிரதேச வாழ் முஸ்லிம் மக்களின் விடயங்களைக் கவனிப்பதற்காக ஒரு முஸ்லிம் உதவி அரசாங்க அதிபரும், தமிழ் மக்களின் விடயங்களைக் கவனிப்பதற்காக ஒரு தமிழ் உதவி அரசாங்க அதிபரும் நியமிக்கப்பட வேண்டும் என்பதாகும். இந்த இடத்திலே ஒரு விடயத்தைக் குறிப்பிட வேண்டும். தமிழ் மக்களின் விடயங்களைக் கவனிக்க ஒரு தனி உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் ஆரம்பிக்கப் பட வேண்டும் எனக் குறிப்பிடப்படவில்லை. இதை அவதானிக்கும் போது தமிழ் மக்களை அமைதிப்படுத்தும் அல்லது சாந்தப் படுத்தும் நடவடிக்கையாகவே இதை உணரலாம். ஆனால் நடந்தது வேறு. தமிழ் மக்களின் பிரதிநிதியாக ஒருவரை அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கமும், உள்ளூர் தமிழ் அரசியல் தலைவரும் சேர்ந்து தெரிவு செய்து அமைச்சுக்கு அனுப்பி அனுமதி பெற்று நியமனம் செய்யப் பட்டார். ஆனால் அவர்கள் ஒரே அலுவலகத்தில் இருந்து செயற்படாது தனித் தனியான இடங்களில் வெவ்வேறு அலுவலகங்களாக இயங்கத் தொடங்கினார்கள்.

எந்த விதமான வசதிகளும் இல்லாமல் கிராம உத்தியோகத்தர்களோடு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு அருகில் தனியான அலுவலகம் ஓர் இடத்தில் ஆரம்பமானது. சிலநாட்கள் கடந்து இந்த அலுவலகம் இனம் தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப் பட்டது. இதனால் அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கத்தினரும் ஏனைய தமிழ்ப் பிரமுகர்களும் இணைந்து கல்முனை *NHDA* அலுவலகத்தில் ஓர் இடத்தை வாடகைக்கு எடுத்து அரசாங்க அதிபரின் அனுமதியோடு இயங்கினார்கள். இருந்தும் எந்த விதமான வசதிகளும் அங்கிருக்கவில்லை. ஆனால் எப்படி யாயினும் அலுவலகத்தைத் தொடர்ந்து நடாத்த வேண்டும் என கிராம உத்தியோகத்தர்கள் உதவி அரசாங்க அதிபரோடு இணைந்து செயற்பட்டார்கள். அதற்குரிய சில வசதிகளை அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கம் செய்து கொடுத்தது. மெது மெதுவாக அலுவலகம் இயங்கிக் கொண்டிருக்கும் போது இந்த அலுவலகத்தை நிரந்தரமாக்கித் தருமாறு தமிழ் பொதுமக்கள் உண்ணாவிரதம் போன்ற சாத்வீகமான முறைகளிலே தங்களது கோரிக்கைகளை அரசாங்கத்திடம் முன் வைத்தார்கள் தொடர்ந்தும் அரசாங்கத்திடம் இந்தக் கோரிக்கையை வென்றெடுக்கும் பணிகளை முன்னெடுத்துச் சென்றார்கள்.

இதன் பின்னர் 1993ம் ஆண்டு அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றின் படி இலங்கைத் தீவில் 27 உப பிரதேச செயலாளர்களை பிரதேச செயலகங்களாக தரமுயர்த்த நடவடிக்கை எடுக்கப் பட்டது. இவற்றில் கல்முனை தமிழ் மக்களுக்கான உப பிரதேச செயலகத் தைத் தவிர ஏனைய 26 பிரதேச செயலகங்களும் தரமுயர்த்தப் பட்டுவிட்டன. இந்த அலுவலகத்திற்கெனப் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒரு கட்டிடத்திலே இவ்வலுவலகம் இயங்குகின்றது. முன் குறிப்பிட்ட 27 உப பிரதேச செயலகங்களை விட அதன் பின்னர் உருவாக்கப்பட்ட அலுவலகங்கள் பிரதேச செயலகங்களாக உருவாக்கப் பட்டு விட்டன.

இந்த விடயமானது இனப் பாகுபாடு காட்டும் நிகழ்வாகவே இன்று அடையாளம் காணப்படும். கல்முனையில் தமிழர்க்கென ஓர் உதவி அரசாங்க அதிபர் வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் கூறும் காரணம் இனரீதியாக ஓர் அலுவலகம் வழங்க முடியாது என்பதாகும். தங்களுக்கு சாதகமானதாக அமையும் போது இனரீதியாக எத்தனையோ பிரதேச


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

செயலகங்கள் உருவாகி இருக்கின்றன என்பது வரலாறு. உதாரணமாக சாய்ந்தமருது பிரதேச செயலகம், இறக்காமப் பிரதேச செயலகம், வவுனியாவில் சிங்கள மக்களுக்கான ஒரு பிரதேச செயலகம் என பிரதேச செயலகங்கள் ஆக்கப்பட்டு உள்ளன. தமிழ் மக்கள் வேதனையோடு இதனை சுட்டிக் காட்டுகின்றனர். அத்தோடு இந்தக் கல்முனைப் பிரதேச செயலக அலுவலகத்தை விட கிராம அலுவலகர் எண்ணிக்கை, சனத்தொகை இடாப்பு, ஆளணி எண்ணிக்கை குறைவாகக் கொண்டுள்ள பிரதேச செயல கங்கள் தனியான பிரதேச செயலகங்களாக அங்கீகரிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. உதாரணம் சாய்ந்த மருது, காரைதீவு, இறக்காமம், ஓட்டமாவடி, கோறளைப்பற்று மத்தி, ஏறாவூர் நகரம் என்பன வாகும்.



கொழும்பு பாராளுமன்றம் வரையும் சென்று தமிழ் அரசியல் தலைவர்களோடு சேர்ந்து அமைச்சர் களையும் சந்தித்து நிலைமைகளை தமிழர் தரப்பினர் எடுத்து விளக்கினார்கள். ஆனால் அவை யாவும் புறக்கணிக்கப் பட்டன. கல்முனையில் தமிழர்களுக்கென தனியான ஓர் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் வழங்கக் கூடாதென ஒரு சாரரின் அழுத்தம் அரசாங்கத் திற்கு வழங்கப்பட்டதால் அலுவலகம் ஆரம்பிக்கும் செயற்பாடு இழுத்தடிக்கப் பட்டது. இதனால் அரசாங்கத்தினால் இலங்கையில் இருந்த உதவி அரசாங்க அதிபர் உப அலுவலகங்கள் யாவும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகமாக தரமுயர்த்தப்பட்ட போதிலும் கல்முனைத் தமிழ் உப உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் மாத்திரம் அரசியல் அழுத்தம் காரணமாக இன்று வரையும் தரம் உயர்த்தப்படவில்லை.

இதன் காரணமாக இந்த அலுவலகம் தனியான ஓர் அலுவலகமாகச் செயற்பட்டாலும், நிதி சம்பந்தப்பட்ட எந்த அலுவல்களையும் இதனால் இன்று வரை கையாள முடியாதுள்ளது. காணி சம்பந்தமான நடவடிக்கைகள் எவற்றையும் மேற்கொள்ள முடியாது. இந்த செயற்பாடு களுக்காக முன்னைய பிரதேச செயலகத்தையே நாட வேண்டும். அந்த அலுவலகத்தைப் பொறுத்தவரையில் கல்முனைக்கு ஒரேயொரு பிரதேச செயலாளர் மாத்திரமே இருக்க முடியும். இருவர் இருக்க முடியாது. இதனால் கல்முனைத் தமிழ் பிரிவுக்கான பிரதேச செயலாளராக இருப்பவர் பிரதேச செயலாளரின் தரத்தைக் கொண்டவராக இருந்தாலும் உதவிப் பிரதேச செயலாளராகவே இருக்கின்றார் என்பதுதான் உண்மை. இதனால் இந்த அலுவலகத்தில் கடமையாற்றும் இலங்கை நிருவாக சேவையைச் சேர்ந்த பிரதேச செயலாளர்கள் மிகவும் மன உளைச்சலோடு கடமையாற்றுகின்றார்கள் என்பதை அவர்களோடு கலந்துரையாடும் போது உணர்ந்து கொள்ளலாம். இருந்தும் இதனைக் கல்முனைத் தமிழ் மக்களுக்கான ஒரு பிரதேச செயலகமாகவே அரசாங்கம் கருதுகின்றது. ஜனாதிபதி செயலகம், அமைச்சுக்கள், மாவட்ட செயலகம் போன்ற மத்திய அரச அலுவலகங்களும் மாகாணசபை அமைச்சுக்கள் திணைக்களங்கள் ஆகிய அலுவலகங்கள் தங்கள் தங்கள் அலுவலக வேலைகளைச் கவனித்துக் கொள்வதற்காக தனித்தனியாக உத்தியோகத்தர்களை நியமித்து கடமையாற்றி கவனித்துக் கொண்டிருக் கின்றனர். ஆனால் மத்திய அரசின் கணக்காளர் ஒருவர் நியமிக்கப்பட்டு நிதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதியில்லை. காணி நடவடிக்கையிலும் இதே போன்ற தடங்கல்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப் படும் வரையில் இந்தத் தடங்கல்கள் தொடர்ந்து கொண்டேயிருக்கும்

தனது சேவை, தனது தரத்தை ஒத்ததொரு பிரதேச செயலாளருக்குக் கீழ் சேவையாற்ற வேண்டிய நிலையை எந்தவொரு இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தரும் சகித்துக் கொள்ளமாட்டார்கள். இவ்வாறு இவர்கள் மன உளைச்சல்களுடன் தங்களுடைய சேவையைச் செய்கின்றார்கள் என்றால் அவர்களின் சகிப்புத்தன்மையைப் பாராட்டாமல் இருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எந்த அழுத்தங்கள் எப்படி வந்தாலும் கல்முனைத் தமிழ் மக்களது இந்த நீண்டகாலக் கோரிக்கையை ஏன் தமிழ் அரசியல் தலைமைகள் முக்கியமானதாக இது வரை கருதவில்லை என்பது புரியாத புதிர். இதனால் கல்முனை வாழ் தமிழ் மக்களது மனநிலையில் ஒருவிதமான விரக்தியும் வெறுப்புணர்வும் இருப்பதை உணர முடிகின்றது.**



முடியாது. இந்தக் கல்முனைத் தமிழ் பிரிவு பிரதேச அலுவலகத்தில் தற்போது இருநூறுக்கு மேற்பட்ட அரசாங்க அலுவலர்கள் கடமையாற்றுகின்றார்கள். கல்முனை வாழ் தமிழ் மக்களது நீண்ட கால கோரிக்கை, ஆசை நிறைவேறாமல் அவர்கள் இன்று வரை ஏக்கத்துடன் இருப்பதைக் காண முடிகின்றது.

பொது நிருவாக அமைச்சினால் நியமிக்கப்பட்ட இது சம்பந்தமான பல ஆணைக் குழுக்களுக்கும் இந்த விடயம் எடுத்துரைக்கப்பட்டது. பல தமிழ் அமைப்புகளும் இந்தக் கோரிக்கைகளை முன் வைத்தனர். ஆனால் அவற்றிற்கு எல்லாம் என்ன நடந்தது என்பதை அறிய முடியாதுள்ளது. இங்கே முக்கியமாகக் கருத வேண்டிய விடயம் கல்முனையில் இருக்கும் சகல அமைப்புகளும் மக்களும் ஒற்றுமையாக இக் கோரிக்கையை ஒருமித்த குரலுடன் முன்னெடுக்க வேண்டும்.

தரமுயர்த்தல் தொடர்பில் இப் பிரதேச பிரமுகர் களும் பிரதேச அரசியல் தலைவர்களும் காலத்துக்குக் காலம் தங்களால் இயன்ற முன்னெடுப்புகளை செய்து வருகின்றனர். இதற்காகத் தொடர்ந்தும் பாடுபட வேண்டும்

கல்முனையில் தமிழ் மக்களுக்கென தனியான ஓர் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் வழங்கக் கூடாது என உள்ளூர் அரசியல்வாதிகளின் அழுத்தம் அரச மட்டத்தில் இருப்பதால்தான் இந்த இழுபறி என அண்மையில் கொழும்பு பொதுநிருவாக அமைச் சிலிருந்து வந்த மேலதிகாரி ஒருவர் கல்முனையில் ஒரு கூட்டத்தில் குறிப்பிட்டார். 'கல்முனைத் தமிழ் பிரிவு அலுவலகத்தை பிரதேச செயலகத்துடன் இணைக்க வேண்டும்' என்ற கருத்துப்பட அவர் பேசியது சகலருக்கும் ஞாபகத்தில் இருக்கும். அரசியல் பலம் உள்ளவர்களால் அழுத்தங்கள் தொடர்வதாலேயே இவ்வாறன நிலை ஏற்பட்டுள்ளது.


எந்த அழுத்தங்கள் எப்படி வந்தாலும் கல்முனைத் தமிழ் மக்களது இந்த நீண்டகாலக் கோரிக்கையை ஏன் தமிழ் அரசியல் தலைமைகள் முக்கியமானதாக இது வரை கருதவில்லை என்பது புரியாத புதிர். இதனால் கல்முனை வாழ் தமிழ் மக்களது மனநிலையில் ஒருவிதமான விரக்தியும் வெறுப்புணர்வும் இருப்பதை உணர முடிகின்றது. கல்முனை வாழ் தமிழ் மக்களது நீண்டநாள் கோரிக்கையான 'கல்முனை வடக்கு பிரதேச செயலகம்' என்னும் பெயரில் ஓர் அலுவலகத்தை தமிழ் அரசியல்வாதிகள் இதுவரை பெற்றுக் கொடுக்கவில்லை என்பதுதான் கசப்பான உண்மை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்முனை நகரம்

## தமிழ் – முஸ்லிம் இன நல்லுறவைப் பூர்வீக வரலாறாகக் கொண்டது



**- ஏ.எல்.எம். ஷினாஸ்**

கல்முனை மாநகரம் இன்று தேசிய ரீதியில் பேசப்படுகின்ற ஒரு நகரமாக திகழ்கின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதியின் தலைநகர் என்றால் அது கல்முனையாகவே இருந்தது. தென் கிழக்கின் முகவெற்றிலையாகவும் அம்பாரை மாவட்டத்தின் முதலாவது மாநகரமாகவும் கல்முனை நகரம் காணப்படுகின்றது.

புவியியல் ரீதியில் இயற்கை வளங்களையும் மக்கள் வாழ்வதற்கு பொருத்தமான நில அமைப்பையும் கொண்ட கல்முனை மாநகரம் வர்த்தகம், கல்வி மற்றும் அரசியல் துறைகளில் இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றது.

தமிழர்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், சிங்களவர்கள் என்று பல்லின மக்களும் வாழும் இங்கு மத பேதங்கள் பிரதேச, வாதங்களுக்கு அப்பால் "பிட்டும் தேங்காய்ப் பூவும்" போல தமிழ்-முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாய் வாழ்ந்து வந்துள்ளனர்.

கல்முனை மாநகர சபையின் நிருவாகத்தினுள் காணப்படும் துறைவந்தியமேடு, பெரியநீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு, சேனைக் குடியிருப்பு, நற்பிட்டிமுனை, கல்முனை, சாய்ந்தமருது ஆகிய ஒவ்வொரு ஊரும், சமூகமும் ஒவ்வொரு வகையில் சீரும் சிறப்பும் கொண்டதாக காணப்படுகின்றது. இந்த ஊர்கள் ஒவ்வொன்றினதும் வரலாறுகளைப் புரட்டிப் பார்க்கும் போது தமிழ்-முஸ்லிம் சமூகங்களின் இன நல்லுறவை அறிய முடிகிறது.

1992ஆம் ஆண்டு 58ம் இலக்க அதிகாரப் பரவலாக்கச் சட்டத்தின் மூலம் பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட்டு அதிகாரங்கள் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டது. இந்த அடிப்படையில் சிவில் நிருவாகத்தில் பல படித் தரங்களைக் கடந்து வந்த 'கல்முனை' ஒரு பிரதேச செயலகமாக மாற்றம் பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



1989 ஆம் ஆண்டு கல்முனைப் பிரதேச நிருவாகத்தின் கீழ் இருந்து வந்த 75 கிராம சேவகர் பிரிவுகளுள் தமிழ் மக்கள் செறிந்துவாழும் 29 கிராம சேவகப் பிரிவுகளை ஒன்றிணைத்து கல்முனை (தமிழ்ப் பிரிவு) பிரதேச செயலகம் தனியாகப் பிரிக்கப்பட்டது. ஏனைய 46 கிராம சேவகப் பிரிவுகளும் கல்முனை பிரதேச செயலகத்தின் நிருவாகத்திற்குள்ளேயே காணப்பட்டது. முஸ்லிம் மக்களும், தமிழ் மக்களும் கலந்து வாழும் இப்பிரதேசத்தில் இந்தப் பிரிப்பின் மூலம் எவ்வித பிளவும் ஏற்பட்டதாக தெரியவில்லை.

இதன் பின்னர் கல்முனை பிரதேச செயலக நிருவாகத்திற்கு உட்பட்டதாக இருந்த சாய்ந்தமருது பிரதேச செயலகம் 1984 ஆம் ஆண்டு ஏற்பட்ட வன்செயல்கள் காரணமாக 1999.12.19 ஆம் திகதி கல்முனை பிரதேச செயலகத்தின் உப அலுவலகமாக பிரகடனப் படுத்தப்பட்டு பின்னர் 2001.02.04 ம் திகதி பொது நிருவாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் றிச்சட் பத்திரனவினால் சாய்ந்தமருது தனியான பிரதேச செயலகமாக பிரகடனப் படுத்தப்பட்டது. 17 கிராம சேவகர் பிரிவுகளை கொண்ட சாய்ந்தமருதின் மொத்த சனத்தொகை 26,813 ஆகும்.

கல்முனை பிரதேச செயலகம் தற்போது 29 கிராம சேவகர் பிரிவுகளில் 49,682 சனத்தொகையை உள்ளடக்கியதாக இயங்கி வருகின்றது. இவ்வாறு கல்முனை நகரத்தின் சிவில் நிருவாக சேவை கல்முனை பிரதேச செயலகம், கல்முனை (தமிழ்ப் பிரிவு), சாய்ந்தமருது என மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1989.04.12ல் கல்முனை(தமிழ்ப் பிரிவு) பிரதேச செயலகம் அமைக்கப்பட்டு உதவி அரசாங்க அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டார். தமிழ் மக்கள் செறிவாக வாழும் பெரிய நீலாவணை, பாண்டிருப்பு, மணற் சேனை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, துறைவந்தியமேடு, கல்முனை ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கி 29 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்டதாக கல்முனை(தமிழ்ப் பிரிவு) காணப்படுகின்றது. இதன் மொத்த சனத்தொகை 35,526 ஆகும்.

தமிழ்-முஸ்லிம் இன நல்லுறவை அறிவதற்கு முன்னர் சிவில் நிருவாக வரலாற்றை ஓரளவிற்காவது தெரிந்திருப்பது அவசியமானதாகும். விரிவாக அறிவதற்கும் ஆராய்வதற்கும் பக்க அளவு போதுமானதல்ல.

புவியியல் நிலத் தொடர்பில் முஸ்லிம்கள், தமிழர்கள், கிறிஸ்தவர்கள், சிங்களவர்கள் என பல்லின மக்களும் இவர்களது இருப்பிடங்களும் பின்னிப் பிணைந்து ஒற்றுமையாகவும் அந்நியோன்னியமாகவும் வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாக இங்கு வாழும் தமிழ்-முஸ்லிம் மக்களுக்குள் பிரிக்க முடியாத ஒரு நெருக்கம் பல்லாண்டு காலமாகக் காணப்படுகின்றது.

கல்முனையில் போர்த்துக்கேயரின் வருகைக்கு முன்பிருந்தே மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்ததாக வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். அரேபியர்கள் வர்த்தக நோக்கம் கருதி மட்டக்களப்பு வாவி-கிட்டங்கி துறைமுகம் ஊடாக வருகை தந்ததையும் இவர்களை சிங்கள மன்னர்கள் குடியேற்றி நல்லுறவோடு வாழ்ந்த வரலாற்றையும் வி.சி.கந்தையா, கவிக்கோ வெல்லவூர்க் கோபால் ஆகியோர் தமது வரலாற்று நூல்களில் பதிவு செய்துள்ளனர். இந்தியாவிலே இருந்து வந்த தாதன், கவுத்தன் ஆகியோர் பெரியநீலாவணையில் வாழ்ந்தபோது துலுக்கர்கள் (முஸ்லிம்கள்) மத


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வேறுபாடுகள் பாராமல் தலுக்கர்களுடன் (தமிழர்களுடன்) உறவு கொண்டு வாழ்ந்த வரலாற்றையும் 'மட்டக்களப்பு தமிழகம்' எனும் நூலில் வி.சி.கந்தையா பதிவு செய்துள்ளார். இதன்மூலம் இங்கு தமிழ்-முஸ்லிம் உறவு மிகவும் தொன்மை வாய்ந்தது என்பதை அறியமுடியும்.

பின்னரான காலப்பகுதியில், துறைநீலாவணை எனும் பழம் பெரும் கிராமத்தில் குடியமர்ந்து வாழ்ந்த முஸ்லிம்கள் மருதமுனை கிராமத்தின் ஆதிக்குடிகளான சீர்பாத குலத்துடன் ஒத்து மாறிய ஒரு முஸ்லிம் குழுவினரையே மருதமுனையின் பூர்வீக முஸ்லிம்களாக கொள்ளப்படுகின்றது என்பதை புலவர்மணி ஆ.மு.சரிபுத்தீன் தனது 'மருதமுனை வரலாறு' என்ற நூலில் கூறி யுள்ளார். இவ்வாறு வாழந்த முஸ்லிம்களின் ஜீவனோபாயத் தொழிலாக நெசவு காணப்பட்டது. முஸ்லிம்களின் வர்த்தக நடவடிக்கைகளுக்கு தமிழர்கள் தொழிலாளர்களாகப் பணியாற்றி ஒற்றுமையாக வழ்ந்து வந்துள்ளனர்.

ஆங்கிலயரின் காலப்பகுதியில் கிறிஸ்தவ கத்தோலிக்க மெதடிஸ்த மிஷன் பாதிரிமார்கள் கல்விக் கூடங்களை நிறுவி இன,மத,மொழி வேறுபாடுகள் இல்லாமல் கல்வி அறிவைப் போதித்தனர். தமிழ்-முஸ்லிம் பிள்ளைகள் ஒன்றாகக் கல்வி கற்றனர். தமிழ்-முஸ்லிம் கலவன் பாடசாலைகள் உருவாக்கப் பட்ட போது இன நல்லுறவு மேலும் வளர்ச்சியடைந்தே சென்றது.

இனத்தால் மதத்தால் வேறுபட்ட போதிலும் பெயர்களில் சீனித்தம்பி-சின்னத் தம்பி, தங்கராசா-வெள்ளைத்தம்பி, பிச்சையம்மா-வெள்ளையம்மா போன்ற பெயர்கள் இரு சமூகத்திற்கும் பொது வானதாகப் பயன் படுத்தப்படுவதைக் காணுகிறோம். திருமண நடை முறையிலும் மோதிரம் இடல், கால் கழுவி மாப்பிள்ளை கூட்டி, கட்டியம் கூறி, தாலி கட்டி, ஆலாத்தி எடுத்து, பால்-பழம் கொடுக்கும் சம்பிரதாயங்களைக் கடைப் பிடிக்கும் பழக்கம் முஸ்லிம் சமூகத்தின் மத்தியிலும் இருந்து வருகிறது. வீடு கட்டுவதற்கு நாள் சாஸ்திரம் பார்த்து நிலம் எடுப்பதை இன்றும் முஸ்லிம் சகோதரர்கள் சம்பிரதாயம் என்ற பெயரில் செய்து வருகின்றமை அன்றைய இன நல்லுறவின் தொடர்ச்சியான வெளிப்பாடுகளாகும்.

இலக்கியத்திலும் தமிழ்-முஸ்லிம் இன நல்லுறவும், இலக்கிய பாரம்பரியமும் துளிர்விட்டு வளர்ந்திருக்கிறது. தமிழ்-முஸ்லிம் மக்களிடமிருந்து புலவர் பரம்பரை உருவாகியிருக்கிறது. தமிழ்-முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்த வரலாற்றுப் பின்புலத்திலிருந்து பல காத்திரமான இலக்கியப் படைப்புகள் வெளிவந்திருக்கின்றன.

நவீன கவிதையின் தோற்றத்திற்கு வித்திட்ட கவிஞர் நீலாவணன் தொட்டு பத்திரிகைத் துறை வரை பலர் தமிழ் - முஸ்லிம் இன நல்லுறவு பாரம்பரியத்திற்கு பங்களிப்பு செய்திருக்கிறார்கள். இவர்களுள் கல்முனைப் பிரதேசத்தில் நீலாவணன், மு.சடாட்சரன், பாவலர் பஸீல் காரியப்பர், மருதூர்க் கொத்தன், எம்.ஏ.நு.்.மான், புலவர்மணி ஆ.மு.சரிபுத்தீன், சண்முகம் சிவலிங்கம், மருதூர்க்கனி, எம்.எச்.எம். அஷ்ரப், அ.ஸ. அப்துஸ் சமது, வீ.ஆனந்தன், உமா வரதராஜன், சோலைக் கிளி, எஸ்.முத்துமீரான், அன்புடீன் எனப் பட்டியல் நீண்டு கொண்டு செல்கிறது. இவற்றுள் எம்.ஏ.நு.்.மான் - சண்முகம் சிவலிங்கம் ஆகியோர் இணைந்து இலக்கியத் துறைக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை தந்திருக்கிறார்கள். அதே போன்று நீலாவணன், மருதூர்க்கொத்தன், மருதூர்க்கனி போன்றோர் ஒற்றுமையோடு வாழ்ந்து இலக்கியப் பணியை முன்னெடுத்துள்ளார்கள். இது இன்றும் தொடர்வது வரவேற்கத் தக்கதாகும்.

அரசியலிலும் கல்முனையில் தமிழ்-முஸ்லிம் மக்கள் ஒற்றுமையுடனும் இன நல்லுறவோடும் செயற் பட்டிருக்கிறார்கள். கோல்புறாக் ஆணைக்குழுவில் இந்த ஒற்றுமை மதிக்கப்பட்டிருக்கிறது. செல்லையா வன்னிமை, சத்துருக்கப் போடி வன்னிமை, கே.ஏ.மஜீட் வன்னிமை, கேட் முதலியார் எம்.எஸ் காரியப்பர் வன்னிமை போன்றோரது காலத்தில் இன, மத முரண் பாடுகள் இல்லாமல் நல்லுறவோடு மக்கள் வாழ்ந்தனர்.

1946 ஆம் ஆண்டு முதலாவது பட்டினசபை தேர்தல் நடைபெற்ற போது அதன் முதல் தவிசாளராக பெரும்பாலான உறுப்பினர்களின் ஆதரவோடு எம். எம்.இஸ்மாயில் காரியப்பர் தெரிவு செய்யப்பட்டார். இவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களின் பெரிய தந்தையாவார். உப தவிசாளராக எஸ்.தங்கராசா மாஸ்டர் தெரிவு செய்யப்பட்டார்.

1949 இறுதிப் பகுதியில் கேட் முதலியார் எம்.எஸ் காரியப்பர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது கல்முனை-03 ஆம் குறிச்சியில் வடிகான் அபிவிருத்தி செய்யப்பட்டது இதன் திறப்பு விழாவிலே பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.காரியப்பர் உரையாற்றும் போது, இந்தப் பிரச்சினைக்கு துயர் தீர்த்த பிரதேச இறைவரி உத்தியோகத்தர் எம். நடராஜாவின் பெயரால் 'நடராஜா வாய்க்கால்' என நாமம் சூட்டினார். முஸ்லிம் பிரதேசத்தில் காணப்படும் இவ் வாய்க்கால் இன்றும் நடராஜா வாய்க்கால் என்றே மக்களால் அழைக்கப் படுகிறது. இதனை 'கல்முனை மாநகரம்' என்ற நூலில் ஏ.எம்.பறக்கத்துல்லாஹ் பதிவு செய்துள்ளார். பிற்பட்ட காலப் பகுதிகளில் - 1962ல் திரு தம்பிப்பிள்ளை என்ற தமிழரும் கல்முனை பட்டினசபைத் தலைவராக இருந்ததாக வரலாற்றுக் குறிப்புகள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. எஸ்.இஸட்.எம்.மசூர்மௌலானா, எம்.சி. அஹமது, ஏ.ஆர்.மன்சூர் போன்றோர்களும் முஸ்லிம்கள் மத்தியில் பெரும் தலைவர் என மதிக்கப்பட்ட மர்ஹூம் எம்.எச். எம்.அஷ்ரபும் தமிழ் அரசியல் தலைவர்களோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இணக்க அரசியல் செய்திருக்கிறார்கள்.

இவ்வாறு தமிழ்-முஸ்லிம் மக்களின் வாழ்வியல் பண்பாடு, சமூக, பொருளாதார, அரசியல், சமய விடயங்களில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப் போடும் ஒற்றுமையோடும் வாழ்ந்து வந்துள்ளனர். இதனால் தமிழ் மக்களது சமய சமூக பண்பாட்டு விழுமியங்கள் சகோதர முஸ்லிம் மக்களது வாழ்க்கை முறையிலும் முஸ்லிம் மக்களது சமூக பண்பாட்டு விழுமியங்கள் தமிழ் மக்களது வாழ்க்கை முறையிலும் காணப்படுகின்றன.

தமிழர்களின் தைத்திருநாளில் முஸ்லிம் சகோதரர்கள் பொங்கல் உண்டு மகிழ்வதும், முஸ்லிம்களின் பெருநாள் பலகாரங்களை தமிழர்கள் உண்டு மகிழ்வதும் நோன்புக் கஞ்சி அருந்துவதும் நடைமுறையில் இருந்து வருகின்றன. மருமுனையின் நெசவுத் தொழிலில் பெரியநீலாவணை, பாண்டிருப்பு தமிழ் சகோதரர்கள் ஈடுபடுவதும் தமிழ்ப் பிரதேசங்களில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகள் முஸ்லிம் ஊர்களுக்குள் அதிக கிராக்கியோடு விற்பனை செய்யப் படுவதும் என சகல வர்த்தக நடவடிக்கைகளிலும் தமிழ் - முஸ்லிம் இன நல்லுறவு பின்னிப்பிணைந்து செல்கிறது. பள்ளிவாசல் அதான் ஓசையும் கோயில் மணியோசையும் ஒன்றாக சங்கமித்து ஒற்றுமையை வலியுறுத்துகிறது.

பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயத்தின் பிரசித்தி பெற்ற தீப்பள்ளய உற்சவத்திற்கு முஸ்லிம்கள் செல்வதையும், கல்முனை கடற்கரை பள்ளிவாசல் கொடியேற்ற நிகழ்வுக்குத் தமிழர்கள் செல்வதையும் இன்றும் கூட நாம் காணலாம். தமிழ் மக்கள் மாமிச உணவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு முஸ்லிம் பிரதேசங்களை இன்றும் நாடிச் செல்கின்றனர்.


முருகேசப்பிள்ளையிடம் மூத்தம்மா மருந்து எடுக்கப் போனதையும் சீனித்தம்பியிடம் பக்கத்தூர் பாண்டிருப்பு பாக்கியவதி நோய் தீர்த்ததையும் மருதமுனை தாத்தா சொத்தியன் பரிசாரியிடம் தூள் வாங்கிச் சாப்பிட்டதையும் இன்றுள்ள இளைஞர்கள் தெரிந்திருப்பார்களா? என முன்னோர் முணு முணுக்கின்றனர்.

1980க்குப் பின்னர் உக்கிரமடைந்த யுத்த சூழல் மற்றும் 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலை காரணமாக உயிர்களையும், உறவுகளையும், சொத்துக் களையும் இழந்து நிர்கதியாகி நின்றோம். பட்டாம்பூச்சி விட்ட காலம் தொட்டுத் தொடர்ந்த உறவு சில காலம் இடைவெளியாகிக் கிடந்தது.

இன்று கல்முனை நகரில் தமிழ்-முஸ்லிம் இன நல்லுறவைப் புது மலர்களாக மீண்டும் பூக்கச் செய்வது அவசியமான ஒன்று. இந்த மலர்களின் வாசம் நேசத்தோடு தேசம் பூராகவும் வீசட்டும்...

இங்கு ஒரு சமூகத்தின் உதவியின்றி மறு சமூகத்தினர் வாழ முடியாது என்ற உண்மை நிதரிசனமாகிக் கிடக்கும் இன்றைய சூழ்நிலையில், கல்முனை நகரில் வாழும் பல்லின சமூகத்தவர்களும் தங்களது சமய சமூக விழுமியங்களோடு நல்லிணக்கம், விட்டுக் கொடுப்பு, புரிந்துணர்வு போன்ற மானிடப் பண்புகளை கடைப்பிடித்து நல்லுறவோடு வாழ்வது காலத்தின் கட்டாயமாகட்டும். ●


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கவிஞர் பாண்டியூரனின் இயற்பெயர் கணபதிப்பிள்ளை. 1935 ல் பாண்டிருப்பில் பிறந்த இவர் தமிழ்ப்பற்றும், தமிழ்த் திறனும் கொண்ட கவிஞர். கிராமத்தின் மண்வாசனையை, வர்க்க ரீதியிலான சுரண்டலின் கொடுமையை ,தமிழ்த் தேசியத்தை, சுதந்திர வேட்கையை, ஏழ்மையின் அவஸ்தையை ,காதலை,ஆன்மீகத்தை மரபு வழி நின்று கவிதைகளில் படைத்தவர். அவரது கவிதைகளின் எண்ணிக்கை, பாடுபொருட்கள், தொடர்ச்சியாக அவர் எழுதிய கவிதைகள், கவிதை வடிவில் படைப்பாளிகளுடன் அவர் பரிமாறிக் கொண்ட கடிதங்கள் போன்றவை அவருக்கும் கவிதைக்குமிடையேயிருந்த 'தீராக் காதலைப்' பறை சாற்றுவன. 1990 ல் அவர் 'காணாமல் ஆக்கப்' பட்டார். இந்தத் துன்பகரமான, அநீதியான நிகழ்வுக்கு அவருடைய அரசியல் சார்பு நிலைகள் காரணமாக அமைந்தது. அவருடைய படைப்புகள் நூல் வடிவம் பெறாத போதும் இங்குள்ளோர் மனதில் என்றும் வாழும் கவிஞர் அவர்.



# நிலவில் ஒரு வாரம்

'கறையிருளை நீக்கக்
கருதா துலகின்
நிறையிருளை நீக்கும் 'நிலவில்
ஒரு வாரம் !

ஊர்தியிலே ஏறி
ஒரு நொடியில் போய்ச் சேர்ந்தோம்!
தேரில்லை, ஓடும் தெருவில்லை,
ஆளில்லை !

வெப்பம் மிகுந்த
வெளியாய்க் கிடந்ததந்த
அப்பம் நிகர்த்த அழகுநிலா,
அப்பமில்லை !

குன்றும் குழியும் குடல்நடுங்கு
பூழ்தியுமாய்
மண்டிக் கிடந்தந்த வண்ணநிலா !
கண்டவுடன்,
காதல் வறண்டு
கருகிய ஓர் மல்லிகை போல்
சீத முகத்தின் செழிப்பிழந்தாள்
காதலியாள் !

'உங்கள் அணைப்பில்
உலகில்,
ஒரு குடிலில்
சங்கமிக்கும் இன்பம் இச்
சந்திரனில் இல்லையென்பேன்,
தேன் நிலவு என்றும்
தெவிட்டாது என்றழைத்து
வான்கடந்து வந்த
வழிப்பயணம் வீண் அத்தான் !

எங்கள் உலகின் எழிலுக் கிணையாக
திங்கள் இராத
தெளிவை அறிந்துள்ளேன்.

காவியத்தில் கண்ட
கவின்நிலவு இஃதாமோ ?
ஆவியுடன் இங்கே
அரைநொடிதான் வாழ்வதற்கும்
காற்றை விலைக்குக் கடைசென்று
வாங்குவதோ ?

போற்றுதற்கு முன்னே
புழங்கி அனுபவித்தால்...
உண்மை தெளியுமென்ற
உண்மையினைக் கண்டுள்ளேன் !

கண்ணே !
அதிகம் கதைக்காதே ....
கன்னந்தா,
வண்ணான் வெளுத்த ஒரு
மல்வேட்டி போலானாய்,

பூமி ! அதோ பார்
புடம் போட்ட தங்கநிலா !

நாமிங் கிருந்து
நமதுலகின் பேரழகைப்
பார்த்தலொன்றே இந்த
பயணத்தின் பேறடியே !

வார்த்த தயிர் அண்டா
வட்டம் அவ் வண்ணநிலா !
போர்த்த எழில் வர்ணம்
பூவை உனதுடலே !

வார்த்தைகளே இல்லை
வருணிக்கப் பூமகளை !
வார்த்தைகளே இல்லை
மணிக்கவிதை கோப்பதற்கும்!

அந்த உலகின்
அழகை நுகராதார்
இந்த நிலவில்
எப்புதுமை நாட்டினும் என் ?

உந்துங்கள் நம்முடைய
ஊர்தியினை,
என்றவளை
பந்தாகத் தூக்கி...
பயணத்தை மேற்கொண்டோம்.
கஞ்ச மலராள், என்
கைக்குள் ஓர் மெட்டாகி
மஞ்சத்தில் பூத்தாள் மலர்ந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1931 ல் பெரியநீலாவணையில் பிறந்த நீலாவணனின் இயற்பெயர் சின்னத்துரை. 44 வருடங்களே வாழ்ந்த போதிலும் ஈழத்தின் கவிதை உலகில் அழுத்தமான தன் முத்திரையைப் பதித்துச் சென்றவர். கல்முனைப் பிரதேசத்தில் ஓர் 'இலக்கிய இயக்கமாக' விளங்கியவர். 1948 இல் இருந்து எழுதத் தொடங்கிய இவர் கவிதை, காவியம், சிறுகதை, நாடகம் எனப் பல பிரிவுகளில் சுறுசுறுப்பாக இயங்கியவர்..

மட்டக்களப்பில் வழங்கும் கிராமியச் சொற்களை நீலாவணன் தன் கவிதைகளில் நிறையக் கையாண்டுள்ளார். மட்டக்களப்பு மக்களின் வாழ்வுமுறை, சடங்குகள், பழக்கவழக்கங்களை நீலாவணன் தன் கவிதைகள் வாயிலாக பதிவு செய்திருக்கிறார். 1967 இல் கல்முனை தமிழ் இலக்கியக் கழகத்தை ஆரம்பித்து, 'பாடும் மீன்' என்னும் இலக்கிய இதழை நடத்தினார். இது வரை வெளிவந்த அவருடைய நூல்கள்:

- வழி (கவிதைத் தொகுதி - சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது),
- வேளாண்மை (காவியம்)
- ஒத்திகை (கவிதைத் தொகுதி)
- ஒட்டுறவு (கதைத் தொகுதி)
- நீலாவணன் பா நாடகங்கள் (பா நாடகங்கள்)
- நீலாவணன் காவியங்கள் (காவியங்கள்)

# போகிறேன் என்றோ சொன்னாய்



மண்ணிடை இரவுக் கன்னியின் ஆட்சி
இன்னும் தேயவிலை - இளம்
தென்னையின் ஓலை பண்ணிய இன்பப்
பாட்டுகள் ஓயவிலை
என் கடை வாயில் உன்னிதழ் ஊட்டிய
ஈரம் காயவிலை- எழில்
மின்னிடும் என்றன் மென்முலை தானும்
பின்னே சாயவிலை !


குறு மணல் மீது கொண்டல் தவழ்ந்த
சுவடும் மாறவிலை
புறவுகள் வந்து குறுநடை கொண்டு
கோலம் கீறவிலை
இரவின் 'அம்மிக் குருவிகள்' இன்னும்
இல்லம் சேரவிலை- என்னை
இடை வெளி இன்றி இறுக அணைத்த
இதமும் தூரவில்லை.

பருவப் பெண்ணாம் இரவுக்
கன்னி தவறிப் பெற்ற பயல் —அந்தப்
பரிதிக் குஞ்சைக் ககனத் தெருவின்
முடிவில் போட, அவன்
உருவப் பொலிவின் உதயத் தொனியில்
உறவை வெட்டுகிறாய் பொல்லா
உதிரக் கடலின் நடுவில் படகில்
நடையைக் கட்டுகிறாய் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தயவுசெய்து சிரியாதே



தளிருடலை நெளியாதே
தயவு செய்து சிரியாதே
மேலாடை
கிழி யுமெனின் எறிவாய், என்
ஹிருதயமும் அது போலா ...?
நிமிராதே!

விழி கணையின் விசையினில் விண்
வெளியிலெனை எறியாதே
மறுகாலும்
தளிருடலை நெளியாதே
தயவு செய்து சிரியாதே !
உபகாரம்.
விரல் நுனிகள் சுவையாதே
வெகுளி எனக் குழையாதே

புயலூடோர்
சிறு படகை நுழையாதே
சுழியில் விழ நகையாதே

சுனையூறல் பருக எனை அழையாதே
பகடிகளும் மொழியாதே
விதியோடும்
பொருத எனை பணியாதே..

பொறு... உயிரைத் திருகாதே!
உபகாரம்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



1936 ல் பாண்டிருப்பில் பிறந்த சண்முகம் சிவலிங்கம் ஈழத்தின் முக்கிய கவிஞர்களில் ஒருவர். இவரது கிராமத்தில் இவர் ஸ்டீவன் மாஸ்டர் என்றே அழைக்கப்பட்டார். கல்முனைப் பிரதேசத்தின் நவீன இலக்கியப் போக்குகளின் முன்னோடியாக இவரைக் குறிப்பிடலாம் . மரபுடன் தேங்கி விடாமல் அடுத்த கட்டங்களை உள்வாங்கி முன்னோக்கி நகர்ந்தவர் இவர். இவருடைய விமர்சனக் கட்டுரைகளும், சிறுகதைகளும்,நாடகங்களும் மொழிபெயர்ப்புகளும் மிகுந்த கவனிப்புக்குரியவை. தன்னைத் தானே பறை சாற்றும் இயல்பற்ற சண்முகம் சிவலிங்கம் அவர்கள் அடக்கமாக இறுதி வரை செயற்பட்டவர். காத்திரமான படைப்புகள் வழியாகவே ஆழமான வாசகர்களாலும், விமர்சகர்களாலும், படைப்பாளிகளாலும் மதிக்கப் பட்டவர்.

- நீர் வளையங்கள் - கவிதைத் தொகுதி, தமிழியல் வெளியீடு.
- சிதைந்துபோன தேசமும் தூர்ந்துபோன மனக்குகையும், தமிழியல் - காலச்சுவடு வெளியீடு, 2011.
- "காண்டாவனம்" சிறுகதைத் தொகுதி

இவர் 2013 ல் காலமானார்.

# நீர் வளையங்கள்



இன்று மிகத் துயர் உற்றேன்
என் இனிய அன்பே,
இவ் இரவின் நிலவொளியில்
என்னுடன் நீ இருந்தால்
வெண் பனியின் துளி சொட்டும்
பூங் கொத்தைப் போன்று விம்முகின்ற
என் நெஞ்சில்
ஆறுதல்கள் தருவாய்,

"இன்று,
இந்த மிகச் சிறிய சம்பவத்திற்காக
இவ் விதமோ துயர் உறுதல்"
என்று நினைப்பாயோ?"
இன்றளவும் வாழ்ந்துள்ளேன்.
எனினும் எனதன்பே,
எனது மனம் பூஞ் சிட்டின்
மென் சிறகுத் தூவல்.
என் பாதம்
இடர் கல்லில் அழுந்தாத ரோஜா.
என் நண்பர் மிக இனியர்
சுடு சொல்லை அறியார்
கண்ணீரின் துளி போல
காலம் எனும் நதியில் கலப்பதற்கே
உயிர் செய்த காதல் உரு ஆனார்...



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

போகட்டும்
இன்று முதல் கசப்புகளை
வாங்கிப் புசிக்கின்றேன்.
அதற்கென்ன,!
என் மனதை, என்றும்
நோகாது வைத்திருக்க
வேண்டுமென எண்ணினேன்.
நொந்தவர்தான் வாழ்க்கையிலே
சாதனைகள் செய்தார்.
ஆதலினால்
என் மனதைக்
கல்லாக்கிக் கொள்வேன்.
அம்பு வரும்
அது முறியும்
நான் நடந்து செல்வேன்.

ஏகமும் தாம் என்று
எண்ணுபவர் மாள்வார்
இப் பெரிய உலகினிலே
எத்தனை பேர் உள்ளார்
ஆகாய வீதியிலே
என் நெஞ்சைக் கிள்ளி
அத்தனையும் இட்டது போல்
மின்னுகிற
வெள்ளிப் பூ அனந்தம்-
அதைப் போல
தினம் மேதை பூப்பார்
பூச் சிவந்த சேவல்
ஒரு நாள் இரவு கூவும்.

என் இதயம்
இப் பரந்த வான் முழுதும்
ஆகி இருப்பதனை
ஆர் அறிவார் என் இதய ஊற்றே?
என் எதிரில் தெரிகின்ற வான் முழுதும்,
இந்த இரவெல்லாம் ஒளிர்கின்ற
கற்கண்டுத் தூளும்
பொன்னிதயம் என்னுள்ளே
நெடுஞ் சுரங்கமாகிப்
பூக்கின்ற அழகைத்தான்
ஆர் கண்டார் அன்பே?
விண்வெளியில்
உதிர்ந்துள்ள
இவ் வெள்ளிப் பூக்கள் மீது யான்
அடி வைத்து நடக்கின்ற போதில்
"என்ன இவன் அழகு"
என்று இவர் வியந்து கொள்ளும்
இனிய பொற்காலம் ஒன்று வந்திடுமோ....
அல்லால்
இன்றிரவு
இதோ வெளியில்
எம் கிணற்று வாழை இலைகளிலே
நிலவினிலே
பனித் துளிகள் பட்டு
"இச்"
என்ற முத்தத்தின் ஒலியுடனே
அவைகள் இழிந்து
நிலம் சொட்டுவதைப் போல் மறைத்து போமோ ..

அச் செயலும்
எனக்கு மிக உவப்புளதே-- ஆஹா
அலை கடலும்
புவி முழுதும்
அருமை உயிர்ச் சிட்டும்
சப்திக்கும் ஒருங்கமைந்த ஓசையில்
என் குரலும் சங்கமிக்க
என் இயல்பை நான் பாடுகின்றேன்
இச்சை மிகு சுருதியினை
இதனின்று வேறாய் எழுப்புகிற நரம்புகளை
நாம் முறித்து வைப்போம்
எச் சிறிய புல்லும்
அதன் இயல்பினிலே முழுமை
இடு காட்டில் முளைக்கின்ற கழனியும் ஓர் அருமை!

அப்படியே நாம் ஆனோம்
அதோ இந்த நிலவில்
அகன்ற இலை வாழையிலே பனி சொட்டும் கீதம்
"இச்"
என்ற ஒலியுடனே எழுகிறது மீண்டும்
இனி என்ன !
போய் துயில்வேன், என் உயிரின் கண்ணே.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கல்முனை ஆதார வைத்தியசாலை சில குறிப்புகள்

அருட்சகோதரர்.
S.A.I. மத்தியூ அடிகளார்

**1880** களில் குறிப்பாக 1882 காலப்பகுதிகளில், ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் இது ஆரம்பிக்கப் பட்டிருக்கலாம் என்பதற்கு ஆதாரங்கள் காண முடியும்.

இக் காலப் பகுதியில் இவ் வைத்தியசாலையின் முதல் மருத்துவராக யாழ்ப்பாணம் உடுவிலைச் சேர்ந்த டாக்டர் முருகேசு செல்லப்பா *R.M.P.* அர்ப்பணிப் புடன் சேவையாற்றினார் . அவர் மெதடிஸ்த மிஷனரி மார்களுடன் தொடர்புடைய ஒருவர் என்ற தகவலை எனக்கு வழங்கியவர் இந்த வைத்திய சாலையின் ஆண் தாதியர்களுள் ஒருவரான திரு. நடேசன் ஐயா அவர்கள் . வைத்தியசாலை வரலாற்றில் ஒரு முக்கிய சம்பவம் நிகழ்ந்ததற்கு அடையாளமாக, கொங்கிரீற்றி னாலான,1919 எனக் குறிக்கப் பட்ட அடிக்கல் நினைவுச் சின்னமொன்று இன்றளவும் நிலைத்து நிற்கிறது.

மேற்படி டாக்டர் காலமான போது பொதுமக்கள் அவரது சடலத்தை யாழ்ப்பாணம் கொண்டு செல்ல விடாது மணற்சேனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்தனர். மக்கள் சிலர் மேலும் ஆர்ப்பாட்டம் செய்து வைத்தியசாலையின் முன்னால் பிரதான வீதிக்கு அருகாமையில் உள்ள வைத்தியசாலைக்குச் சொந்த மான வளவில் மிகுந்த மரியாதையுடன் நல்லடக்கம் செய்து கல்லறையும் கட்டினர். அக் கல்லறை காலவெள்ளத்தில் அழிந்து, நிலத்திற்கு மேல் சிறிது தலையை நீட்டிக் கொண்டு நின்றது.

19 ம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து 20 ம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையான காலத்தில் கல்முனை வைத்தியசாலையே அம்பாறை, தீகவாவி பிரதேசம் முதல் தெற்கே பொத்துவிலிலிருந்து வடக்கே குருக்கள்மடம் வரையும் மண்டூர் மத்திய முகாம், சொறிக்கல்முனை முதலான பிரதேசங்களி லிருந்தும் வந்த சகல இன நோயாளிகளுக்கும் வைத்திய உதவியை அளித்து வந்த பழம்பெரும் வைத்தியசாலை இதுவெனக் குறிப்பிடலாம்.

1962 ம் ஆண்டு இவ் வைத்தியசாலை ஆதார வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப் பட்டது. ஆனால் கடந்த 48 வருடங்களாக அல்லது அரை நூற்றாண்டு காலமாக ஆதார வைத்தியசாலை என்ற நாமப் பலகையைத் தாங்கி வருவது அரசியலாளர்களுக்கு ஏற்புடையதா என்று மக்கள் வினாவுகிறார்கள். இதனால் இந்த ஆதார வைத்தியசாலை 1962 ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு பெயர்ப் பலகையைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எனினும் அம்பாறை மாவட்ட அமைச்சர் பி.தயாரத்ன சுகாதார அமைச்சராக இருந்தவேளை கல்முனை ஆதார வைத்திய சாலைக்கு கட்டிடங்களைக் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடுகளை செய்திருந்தார் .

தற்காலத்தில் *M.O.H* ஸ்தாபனம் வைத்திய சாலைக்கு சமாந்தரமாக நோய்த் தடுப்புப் பிரிவாக இயங்கி வருகிறது. இதே போன்று 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் ஒரு ஸ்தாபனம் இயங்கி வந்துள்ளது .1889 ல் சிறிய டிஸ்பென்சரி இயங்கியது . அதை ஒரு ஓவசியர் *(Overseer)* பரிபாலனம் செய்தார். வீடு வீடாகச் சென்றும் *(Field work)* சேவையாற்றினார். அக்காலத்தில் மகப் பேற்று உதவிக்காக மருத்து விச்சிகள் வெளியிலிருந்து வருவார்கள்.

முதலாவது ஓவசியர் திரு. பத்தலோமியஸ் ஆவார். இவர் பறங்கி இனத்தைச் சேர்ந்த ஒருவராக இருந்திருத்தல் வேண்டும். துறைநீலாவணைப் பெண்ணொருவரைத் திருமணம் செய்து இங்கு வாழ்ந்தார். அம்மைப் பால் தடுப்பு மருந்து மூலம் அம்மை நோயைக் கட்டுப் படுத்தும் பணி இவரின் முக்கிய மக்கள் சேவையாகும். திரு.பத்தலோமியஸ் டாக்டர் வில்லியம் தோமஸின் அப்பம்மாவின் அப்பாவாவார்.

1882 ல் தற்போதைய கல்முனை ஆதார வைத்தியசாலை குஷ்டரோக வைத்திய சாலையாகவும் இருந்தது. கிறிஸ்தவ சமய கன்னியாஸ்திரிகள் மட்டக்களப்பிலிருந்து இங்கு வந்து பணியாற்றியுள்ளனர். பிரான்ஸ் நாட்டை சேர்ந்த பிரான்சிஸ்கன் கன்னியர்கள் 1886 ல் இலங்கை வந்தனர். 1927ல் அவர்களது சேவை மட்டக்களப்புக்குக் கிடைக்கப் பெற்றது. அதற்கு முன்னரே கொழும்பிலிருந்து கல்முனைக்கு வருகை தந்து கல்முனை ஆதார வைத்தியசாலை அமைந்திருக்கும் இடத்தில் தொழுநோயாளர்களைக் கவனித்து வந்தனர். பின்னர் அவ் வைத்திய சேவை மட்டக்களப்பு மாந்தீவுக்கு மாற்றம் பெற்றது.

1907 லிலிருந்து இந்த வைத்தியசாலை பரிணாம வளர்ச்சி கண்டது. வைத்திய சாலையின் முன்னைய முகப்பில் உள்ள 1909 ஐக் காட்டும் நடுகல் அங்கு நிகழ்ந்த ஒரு முக்கிய நிகழ்வைக் குறிப்பதாக இருக்கலாம்.

1943 காலப் பகுதியில் இடைத் தேர்தலில் திருகோணமலை-மட்டக்களப்பு பகுதியில் போட்டியிட்டு வெற்றியடைந்து இரண்டாவது தேசிய சபைக்குத் தேர்வான மட்டக்களப்பைச் சேர்ந்த திரு .நல்லையா ஆசிரியர் டி .எஸ். சேனநாயக்கவின் அமைச் சரவையில் சுகாதார ஸ்தல ஸ்தாபன அமைச் சராக இருந்த எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவின் பாராளுமன்றச் செயலாளராக (அக் காலத்தில் துணை அமைச்சர்) விளங்கினார். இந்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி திரு. நல்லையா எம்.பி. அவர்கள் கல்முனை



வைத்தியசாலையின் பிரதான கட்டிடங்களை அமைத்தார். கல்முனை ஆதார வைத்தியசாலையின் தற்போதைய 1 மற்றும் 4ம் வார்ட் 1947- 1952 காலப்பகுதியில் கட்டப்பட்டவையாக இருக்கலாம். அப்போதைய *O.P.D.* இன்று *E.T.U.* வாக உள்ளது. மேற்கூறிய கட்டிடங்களை நிர்மாணித்தவர் திரு. நல்லையா என்பதில் சந்தேகமில்லை. (பாண்டிருப்பைச் சேர்ந்த திருமதி. கமலாம்பிகை லோகிதராஜாவின் கணவருடைய தாய் மாமா திரு.நல்லையா என்பது இங்கே நினைவு கூரத்தக்கது.)

கல்முனை வைத்தியசாலை ஆதார வைத்திய சாலையாக (1962) தரமுயர்வதற்கு முன்னர் அங்கு பணியாற்றிய ஓடலி மருந்துக் கலவையாளர்களில் ஒருவர் (தற்காலத்தின் *Pharmacist* களைப் போன்றவர்கள்.) பாண்டிருப்பை சேர்ந்த வைரமுத்து ராமக்குட்டி. 1896ல் பிறந்த இவர் 1955 ல் ஓய்வு பெற்று 1972 ல் இறைபதம் அடைந்தவர். இவர் பாண்டிருப்பின் பிரபல்யம் மிக்க திருமதி.கே.லோகிதராஜா, திரு .கதிர்காமநாதன் ஆகியோரின் அம்மப்பா ஆவார் .

இந்த வரிசையிலே நற்பிட்டிமுனை தமிழ்ப் பிரிவைச் சேர்ந்த திரு.தம்பிராசா, கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்ட பெரியதம்பி ஆகியோரும் குறிப்பிடப் பட வேண்டியவர்கள் .மருந்து கலப்பதும், விநியோகிப்பதும் இவர்கள் பணிகளாக இருந்தன.

இங்கு சிறப்பாகப் பணியாற்றிய *D.M.O.* மார்களில் முக்கியமானவர்களாக பின் வருவோரைக் குறிப்பிடலாம்.

டாக்டர்கள் முருகேசபிள்ளை, நல்லையா, லூதர், குலேந்திரன், அருளானந்தம், சஹீட், ஜெகநாதன், சலாக்கியநாதன், (திருமதி) சிவநாதன் ஆகியோர். டாக்டர் மார்களின் சேவை வரிசைப் பெயர்கள் இவை. டாக்டர்கள் எம்,செல்லப்பா, அருணாசலம், லூதர், அருளானந்தம், நவநீதராஜா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலாக்கியநாதன், (திருமதி) சிவநாதன், பொன்னுசாமி, மகேந்திரலிங்கம் (பதில்), முருகானந்தன், பரமானந்தம், அகிலன் V.P. (பதில்), எம்.பகவான், சசிதரன் (பதில்), ராஜேந்திரன் (பதில்), ஜ.ஃபர், லங்காதிலக ஜயசிங்ஹ (பதில்) இங்கு பணியாற்றிய பணியாளர்களில் நற்பிட்டிமுனையைச் சேர்ந்த ஜனாப் சீனித்தம்பி அலியார் என்பவரும் குறிப்பிடப் பட வேண்டியவர்.

கல்முனை ஆதார வைத்தியசாலை சேவை மூலம் மக்கள் மனங்களில் தம்மை முதன்மைப் படுத்தியவர்களில் முக்கியமானவர் டாக்டர் ஏ. ஜெகநாதன் அவர்கள் என்பதில் எவருக்கும் சந்தேகம் தேவையில்லை.டாக்டர் ஏ. ஜெகநாதன் அவர்களுக்கு உதவியாக டாக்டர் சஹீட், டாக்டர் சிவ அன்பு (RMP) இயங்கினார். மிக மிக சிறப்பான சேவை. இனம், மதம், மொழி என்ற எந்தப் பாகுபாடும் இல்லை. இவர்கள் மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்கள். டாக்டர் ஏ. ஜெகநாதன் தன் நிர்வாகத் திறமை காரணமாகப் பின்னாட்களில் சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகமாகவும், ஆலோசகராகவும் பணி புரிந்தார் என்பது குறிப்பிடத் தகுந்த விடயம். அவருக்குப் பின் டாக்டர் சலாக்கியநாதன் DMO வின் காலத்திலும் நிர்வாகம் உயர்நிலை பெற்றிருந்தது .

இங்கு பணியாற்றிய வைத்தியர்கள் காலவரிசை சரிவரத் தெரியாது. பெருமாட்டி டாக்டர் க்லெக் (கிளர்க்கம்மா என்று அழைப்பார்களாம்), டாக்டர்கள் ஹன்ட், அருணாசலம், நைல்ஸ், மீராலெப்பை (RMP-சம்மாந் துறையைச் சேர்ந்தவர்), கந்தையா, சீனித் தம்பி, எம்.முருகேசுப் பிள்ளை போன்றவர்கள் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

அண்மைக்காலத்தில் டாக்டர்கள் திருமதிகள் ஏ. சிவநாதன், T.குமுதினி, வி. ஞானகுமார், கே. பரமானந்தம், கே ஆர்.சசீந்திரன், எம் .பகவான், எம். அகிலன், கே.முருகானந்தம், ஆர்.பாலசுப்ரமணியம், எஸ்.ராஜேந்திரா ஆகியோர் மிகவும் கஷ்டமான காலங்களில் வைத்திய அதிகாரிகளாகப் பணி புரிந்தமை கண்கூடு. உள்நாட்டு யுத்தம், அதனோடு தொடர்புடைய அச்சுறுத்தல் மத்தியில் இவ் வைத்திய சேவையை ஆற்றியமையை மறந்து விடலாகாது. தற்போதைய அதிகாரி (MS) டாக்டர் எம்.எஸ்.எம். ஜாபீர் அவர்களாவார்.

குறிப்பிடக் கூடிய வைத்திய பணியாற்றிய ஆண் தாதிகளுள் சுப்பிரமணியம், நடராசா , செல்வம் (1978 க்குப் பின்பு), அழகையா பேரின்பராஜா (தற்போது அவுஸ்த்ரேலியாவில்), ஆண்கள் பரிசாரகராக பணியாற்றிய பாண்டிருப்பு திரு.என்.நாகலிங்கம், திருமதி. சிவஅன்பு, திருமதி. மாணிக்கவாசகர் ஆகியோர் மக்கள் மனங்களில் இடம் பிடித்துள்ளனர்.

மலேரியாத் தடுப்பு கள உதவியாளர்களாகப் பணியாற்றிய டாக்டர் வில்லியம் தோமஸ், திரு. பி.சண்முகம் சிறந்த சேவையாற்றியுள்ளனர். வைத்தியசாலையின் அபிவிருத்தி சபை செயலாளராகப் பணியாற்றிய திரு. இராமகிருஷ்ணன் சிறந்த பணிகளை ஆற்றியுள்ளார்.




கல்முனை ஆதார வைத்தியசாலை முன்றலில் பெரியதோர் ஆலமரம் சுமார் 100 ஆண்டுகளைக் கண்டது மட்டுமின்றி தனது விழுதுகளோடு வேர்களை பிரதான வீதி வரை சென்று கட்டிடங்களுள் சென்று தன் நீர்ப்பசியைப் போக்கிக் கொண்டது. நிலமட்டத்திலிருந்து 20 அடிகளுக்குக் கீழே தன்னை அத்திவாரமிட்டுக் கொண்டது. அதன் பிரயோசனமற்ற தற்போதைய நிலையைப் பொறியியலாளர்களுடன் நன்கு ஆலோசித்து பல லட்ச ரூபாக்கள் செலவு செய்து மரத்தை அப்புறப் படுத்தி வேரோடு பிடுங்கியது பாராட்டக் கூடிய விடயமாகும். இந்த மரம் இருந்த இடத்தில் புதியதோர் நிர்வாகக் கட்டிடம் சீக்கிரம் உருவாகப் போகிறது. கல்முனை ஆதார வைத்திய சாலை தரமுயரப் போகிறது. நோயாளர் சேவை உயர்வடையப் போகிறது.

குறிப்பு : அருட்சகோதரரின் 'கல்முனை ஆதார வைத்தியசாலை - வரலாற்றில் சில குறிப்புகள்' என்ற 20 பக்கங்கள் கொண்ட சிறு நூலின் சுருக்கப் பட்ட வடிவமே இந்தக் கட்டுரை. இந் நூல் 2013 டிசெம்பர் 15 இல் வெளியானதென்பதையும், இந் நூலின் ஆதார சுருதிக்குப் பங்கம் வராத வகையில் இக்கட்டுரை சுருக்கப் பட்டுள்ளதென்பதையும், இம் மூல நூலாதை சில பெயர்களையும், தகவல்களையும் தவற விட்டமையையும் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம். நூலாசிரியர் தற்போது உயிரோடு இல்லாததால் திருத்தங்கள் எவையுமின்றி இக் கட்டுரை பிரசுரிக்கப் படுகின்றது.

**–தொகுப்பாசிரியர்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் இன்றைய நிலை

**புவிநேசராசா கேதீஸ்**

அம்பாறை மாவட்டத்தில் மிகவும் தொன்மை யான வரலாற்றையுடைய கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை 200 வருடங்களைத் தாண்டி, இன மத மொழி வேறுபாடின்றி வைத்திய சேவையை வழங்கி வருகிறது.

கல்முனை பிராந்தியம் மட்டுமல்லாது, அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேச மக்களும், மட்டக்களப்பு மாவட்ட எல்லைக் கிராம மக்களும் கூட இந்த வைத்தியசாலையூடாகப் பயனடைகின்றனர். எனினும் முக்கியத்துவம் மிக்க இந்த வைத்தியசாலை கடந்தகால அசாதாரண சூழ்நிலை யாலும், குறுகிய நோக்கம் கொண்ட அரசியல்வாதிகள் சிலரின் சதிகளினாலும் அபிவிருத்தி மற்றும் தேவைகளைப் பொறுத்த மட்டில் பல இடர்களை எதிர் கொள்ள வேண்டியிருந்தது. ஆனாலும் வைத்தியசாலை ஊழியர்களினதும் நிருவாகத்தினரதும் அர்ப்பணிப்பால் மக்களுக்கான வைத்திய சேவையை முடிந்தவரை சிறப்பாகவே செய்து வந்தது.

இங்கு வைத்திய அத்தியட்சகராக வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரன் அவர்கள் கடமையேற்றதன் பின் அனைவரது கவனத்தையும் ஈர்க்குமளவுக்கு அபிவிருத்திகளுடன், சிறந்த நிருவாக கட்டமைப்புடன் இது காணப்படுகிறது எனலாம். சிறந்த முகாமைத்துவம் காரணமாக தேசியரீதியில் விருதுகளைப் பெற்று வருவதுடன், தேசிய ரீதியில் சுகாதாரத் துறை மற்றும் இலங்கை மத்திய அரசினதும் கவனத்தையும் இது ஈர்த்துள்ளது. பாராட்டுக்களையும் பெற்றுள்ளது. இதனாலேயே பல தடைகளையும் தாண்டி இவ் வைத்தியசாலைக்கான அபிவிருத்திகள், தேவைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன .

வைத்தியசாலையின் நிருவாக செயற்பாடுகள், வைத்தியசாலை சூழல் மற்றும் வைத்திய சேவைகள் தொடர்பாக அவதானித்த சுகாதார சேவைகள் பணிப் பாளர் நாயகம் அவர்கள் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையானது இலங்கையில் முன்மாதிரி வைத்தியசாலையாக திகழ்கிறது என வெளிப்படை யாகவே கருத்துத் தெரிவித்துப் பாராட்டியமை குறிப்பிடத் தக்க ஒன்றாகும்.

இருபத்தி இரண்டாவது வருடாந்த விஞ்ஞான நிபுணத்துவ செயலமர்வுடன் கூடிய சர்வேதேச மாநாட்டில், வைத்தியசாலை முகாமைத்துவம் தொடர்பிலான ஆய்வுக்கட்டுரை சமர்ப்பணத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போது, இலங்கையில் முதலிடத்தைப்பெற்ற சிறந்த வைத்திய நிருவாகியாக கல்முனை வடக்கு ஆதார வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் இரா முரளீஸ்வரன் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அத்தோடு 2014 ஆம் ஆண்டு கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை தேசிய உற்பத்தி திறன் விருதினையும் பெற்றிருந்தது. இவைகளும் இந்த வைத்தியசாலை மீது பலரின் கவனத்தை ஈர்க்க செய்ததால் பல சவால்களையும் தாண்டி வைத்திய சாலையை அபிவிருத்தி நோக்கியதாக நகர்த்தும் வாய்ப்புக்களை ஏற்படுத்த இலகுவாக அமைந்தது எனலாம்.

2014 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கல்முனை ஆதார வைத்திய சாலையில் அபிவிருத்தி, பௌதீக வளம் மற்று நிருவாக செயற்பாடுகள், வைத்திய சேவைகள், செயற்பாடுகளில் முன்னேற்றமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன .

இங்கு குழந்தைகளுக்கு பாலூட்டல் தொடர்பான அறிவூட்டல்கள் விளக்கங்களை வழங்குவதற்காக தாய்ப்பாலூட்டுவதற்கான முகாமைத்துவ பிரிவு, வைத்தியசாலை பராமரிப்பு பிரிவு, தர நிருவாகப் பிரிவு, திட்டமிடல் பிரிவு, வைத்திய சாலைக்கு வருகை தரும் நோயாளர்களுக்கு சுகாதார நோய் தொடர்பான விளக்கமளிப்பதற்காக சுகாதாரப் பிரிவு, மது போதை தடுப்பு பிரிவு என்பன உருவாக்கப் பட்டு சிறப்பாக இயங்குகின்றது.

விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் சிறுவர்களுக்காக உள நல விருத்திக்கான சிறுவர் பூங்கா, வைத்தியசாலைக்கு வருகை தரும் நோயாளர்களின் உறவினர்களின் பதட்டமான நிலையைப் போக்கி மன நிலையயை ஒழுங்கு படுத்தும் வகையில் இரு பாலாருக்கும் தனித்தனியாக அமைக்கப் பட்ட அமைதியான சூழ்நிலை நிறைந்த தரிப்பிடம், சுகாதாரத்தை உறுதிப் படுத்தும் வகையில் நல்ல சூழலில் அமைந்த சிற்றுண்டிச்சாலை, வைத்திய சாலையின் அழகிய முகப்பு தோற்றம், பெயர்ப்பலகை என வைத்தியசாலை இன்று பொலிவுடன் விளங்குகின்றது.

அவசர சிகிச்சை பிரிவு விசாலமான இடத்தில் சிறப்பாக இயக்கப்படுவதுடன் சகல பிரிவுக்குமான வெளி நோயாளர் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டு நோயாளர்களுக்கு சுகாதார கல்விப்பிரிவால் விழிப்பூட்டல் விளக்கங்கள் வழங்கப்படுகின்றன..

உடற் குழாய் உள் நோக்கல் கருவி இங்கு பொருத்தப் பட்டதால் நோயாளர்களைத் தூர இட வைத்திய சாலைகளுக்கு அனுப்ப வேண்டிய அசௌகரிய நிலைமை மாறியுள்ளது.

கடந்த 2016 ஆம் ஆண்டு மயக்க மருந்து மற்றும் தோல் வைத்திய நிபுணர்கள் நிரந்தரமாக நியமிக்கப்பட்டதுடன், நான்காக இருந்த வைத்திய நிபுணர்களின் எண்ணிக்கை பன்னிரண்டாக அதிகரிக்கப் பட்டதுடன், பொதுக் களஞ்சியசாலை, மருந்துக் களஞ்சியசாலை, சமையலறைக் கூடம் அடங்கிய மூன்று மாடிக் கட்டிடத் தொகுதியும் அமைக்கப் பட்டுள்ளதுடன் கழிவு முகாமைத்துவ பிரிவும் உருவாக்கப்பட்டிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2017 ஆண்டில் இந்த வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களும் நம் கவனத்துக் குரியவை.

இவ் வைத்தியசாலையின் 200 வருடகால வரலாற்றில் முதல் தடவையாக அதிதீவிர சிகிச்சை பிரிவு, குருதி சுத்திகரிப்பு பிரிவு முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவிற்கான *metamizer* அமைக்கப் பட்டமை, கல வேதியல் பிரிவு, மார்பக X–கதிர் சிகிச்சை பிரிவு (*Mammogram*), புதிய சத்திர சிகிச்சை கூடம், கதிரியக்கவியல் நிலையம், இதய சிகிச்சைப் பிரிவு, மருத்துவ வாயு தொகுதி என்பன புதிதாக ஆரம்பிக் கப்பட்டுள்ளதுடன் வைத்தியசாலையில் நிரந்தர இருதய சத்திர சிகிச்சை நிபுணரும் நியமிக்கப் பட்டுள்ளார்.

அத்துடன் 630*KVA* மின் பிறப்பாக்கி இணைப்புகள் பொருத்தப்பட்டுள்ளது. சத்திர சிகிச்சைக் கூடத்திற்காக (*Operation Theater*) அமைக்கப் பட்டுள்ள புதிய கட்டிடமும் விரைவில் திறந்து வைக்கப் படவுள்ளது.

'உற்பத்தித்திறன்' நிகழ்ச்சி நிரலில் கல்முனை ஆதாரவைத்தியசாலையின் சுகாதார கல்விப் பிரிவினூடாக வைத்தியம், சிகிச்சை முறை சார்ந்த விழிப்புணர்வு கருத்தரங்குகளும், தெளிவுபடுத்தல் கலந்துரையாடல்களும் வைத்தியசாலை ஊழியர்களுக்காக நடாத்தப்பட்டு வருகின்றமையும் ஒரு ஆரோக்கியமான விடயமாக உள்ளது.

இவ்வாறு கடந்த மூன்று வருடங்களில் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்தி வளங்கள் மற்றும் வைத்திய சேவை யிலும் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. வைத்திய அத்தியட்சகர் முரளீஸ்வரன் அவர்களது முயற்சியும், வைத்திய சாலை ஊழியர்களது அர்ப்பணிப்பும், வைத்தியசாலை நலன் விரும்பிகளின் அக்கறையும் இதில் முக்கிய பங்குகளை வகிக்கின்றன..

இவ்வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்துடன் நோக்குகையில் இந்த தேவைகள் அபிவிருத்திகள் பல வருடங்களுக்கு முன்னர் நிறைவு பெற்றிருக்க வேண்டியவை, இருந்தாலும் காலம் தாமதித்தாவது படிப்படியாக நிறைவுறுகிறதே 'எனும் மகிழ்ச்சி இப்பிரதேச மக்களுக்கு உண்டு. ஆனாலும் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை பொது வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட வேண்டும் என்பதே எல்லோருடைய எதிர்பார்ப்பும், அவாவும்.

சிறந்த முகாமைத்துவம், அர்ப்பணிப்புடன் சேவை செய்யும் ஊழியர்கள், வைத்தியசாலையில் அக்கறை உள்ள இப் பிரதேசத்தின் நலன் விரும்பிகள் எனப் பல தரப்பினரினதும் ஒன்று பட்ட உழைப்பு தொடர்ந்தால் இந்த எதிர்பார்ப்பும் விரைவில் கைகூடும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்வையாளர் நேரங்கள்

குறுக்கறுக்கும் முகங்கள் விலக்கி
கண்களுக்குள் சோகம் பொருத்தி
விடுதி தேடி
பின் கட்டில் தேடி
உறவு காண்கையில் வரும் சிலிர்ப்பில்
ஆரம்பமாகும் பார்வையாளர் நேரம்

நோய்ப்பயம் ஆழம் புதைந்து
மேற்பரப்பில்
நம்பிக்கை வார்த்தைகள் விதைத்து
வாழ்க்கையைக் கடக்கும்
வழி கூறும் உறவுகளின் நேரமது.

அந்த வைத்தியரைத் தெரியும்
இந்த தாதியரைத் தெரியும்
என்ற சமாளித்தல்களில்
நோயின் முடிவு மட்டும் தெரியாமல் தவிக்கும்
கடினமான நேரங்கள்
நோயாளியின் வலியின் வேதனையும்
பார்வையாளர்களின் வாழ்க்கையின்
வேதனையும்
ஒன்றையொன்று முட்டிக்கொள்ளும் நேரமது

பார்க்க வராத உறவுகளுக்காய்
வாழ்ந்த வாழ்க்கையை பரிசீலனை செய்யும்
சில நோயாளர்களின் ஏக்க நேரங்கள்

பழங்களும் உணவுகளும்
குவியும்
அயல் கட்டிலின் மேல்
கொஞ்சம் பொறாமை கொள்ளும்
மனித மனங்கள்

நேரம் முடிந்ததென்று
உரத்த குரலில் கூறி வரும்
பாதுகாப்பு உத்தியோகத்தர்
மிரட்டலில்
முடிந்து போகின்றன
பார்வையாளர் நேரங்கள்.

நேரமும் முடிந்து உறவு பிரிந்து
மருத்துவமனை அகல்கையில் விடை தேடி
மனதில் வந்து போகும் சிறுபயத்தின் கேள்வி
இந்தப் பிரிவு
தற்காலிகமா? நிரந்தரமா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அந்த அறை

மனம் சஞ்சலப் பட்டுக் கொண்டிருக்கின்றாய்
விநாடிகளில் சப்த இடைவெளி கேட்கிற அளவு
நிசப்தமாய் கவலைகளை
மீட்டிக் கொண்டிருக்கின்றாய்

என்றாலும்
அந்த அறையை எட்டிப்பார்க்காதே
நீ ஏற நினைத்த படியில் ஏறமுடியாமல்
உன் கால்கள் சோர்ந்து விட
உனக்கான சிகரம்
பனி மூடிப் பார்க்க முடியாதளவு
மறைந்துபோக
விரக்தியின் விளிம்பிலிருக்கின்றாய்
என்றாலும்

அந்த அறையை எட்டிப்பார்க்காதே
கனவுகள் நிஜமாகவில்லை
கஷ்டத்திற்கு பலனில்லை
உன்வாய் முணுமுணுப்பது கேட்கிறது
அதற்காக

அந்த அறையை எட்டிப்பார்க்காதே
அந்த அறையில்
தூக்கமாத்திரைகள் விழித்துக்கொண்டிருக்கின்றன
பூச்சிநாசினிகள் மனிதர்களை
நாசம் செய்யக் காத்திருக்கின்ற
முழுக்கயிறு கழுத்தை எதிர்நோக்கி
காத்திருக்கின்றது
அந்த அறையை எட்டிப் பார்க்க
எனக்கு விருப்பமாக இருந்த காலம் உண்டு
எல்லோருக்கும் விருப்பமாகவிருக்கின்ற
காலம்
வாழ்வில் வந்து போனதுண்டு
ஆனால் கடைசி விநாடியில்
மீண்டிருக்கின்றார்கள்

இது உன்முறை
உனது முடிவு எதுதென்று
எனக்குத் தெரியாது
ஏனெனில்
கவிதைகள் மட்டும் என் வசம்
முடிவுகள் அல்ல.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கவரிமான்

**- முகில்வண்ணன்**



**பொ**லிஸ் நிலையத்திலிருந்து வந்ததில் இருந்து அந்த வீடு அமர்க்களப்பட்டது. கோபால் மாஸ்டர் படு கோபத்தில் இருந்தார். வீட்டுச் சாமான்களை எல்லாம் போட்டு உடைத்தார். என்னவெல்லாமோ சொல்லிப் பேசிக் கொண்டிருந்தார்.

குழந்தைகள் மூவரும் அரவிந், பிருந்தா, திவ்யா ஒவ்வோர் மூலையில் "உம்" என்று உட்கார்ந்து இருந்தனர். அவருடைய பேச்சுக்கு குழந்தைகள் என்ன செய்ய முடியும்? பருந்தைக் கண்ட கோழிக் குஞ்சைப் போன்று ஆகிவிட்டனர்.

"கொம்மா உங்களைத் தன்னிட்டத் தரட்டாம் என்று பொலிஸில் முறைப்பாடு கொடுத்திருக்கிறாள். உங்கட விருப்பம் இல்லாம நான் உங்களத் தடுத்து வைத்து இருக்கிறேனாம். நாளைக்கே உங்களை எல்லாம் கொண்டு ஒப்படைத்து விட்டு நானும் எங்காவது போறன். உங்களுக்காக குருவி மாதிரி சேர்த்து வீடு கட்டினன். பொருட்கள் எல்லாம் தேடினன். இதெல்லாம் இனி எதற்காக? நீங்க இல்லாம இது யாருக்குப் பயன்படப்போகுது?" என்று கூறிக் கூறித்தான் கோபால் மாஸ்டர் சாமான்களை எல்லாம் உடைத்துக் கொண்டு இருந்தார். அவருக்கு அவளில் அத்தனை கோபம்.

ஆத்திரம் சற்று அடங்கிய போது சிந்திக்கலானார். "சே...... வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு கண்ணி வெடி வெடிச்சா நல்லது. படையினர் வீட்டை தரைமட்டமாக்கிப் போகட்டும். என்னையும் அழிச்சாலும் பரவாயில்லை. இனி நான் வாழ்ந்து என்ன பயன்? யாருக்காகப் பயன்படப் போகிறேன்? அந்தக் கால கட்டத்தை கடந்து விட்டேனே... இல்லாவிட்டால் ஒரு 'கிறனைட்டை' வைத்து விட்டால்... இத்தனை காலமாக கட்டிக் காத்து வந்த மானம் மரியாதை இன்று பொலிஸ் நிலையம் சென்று வந்ததும் போய்விட்டதே. இனி என்ன செய்தால் தான் என்ன? எப்படிப் போனால்தான் என்ன?"

"ஒவ்வொருத்தனும் கேட்கிறானே, என்ன மாஸ்டர் இஞ்சாலப் பக்கம்? பொலிஸில ஏதும் கேஸா என்று ஒவ்வொருத்தனும் ஒரு மாதிரிப் பார்க்கிறானுகள்? நான் இவனுகளுக்கெல்லாம் பதில் சொல்ல வேணுமா?...."

பிருந்தா அவரது செல்லம். வீட்டில் கடைக்குட்டி. மெல்ல மெல்லக் கிட்டே வந்தாள்.... ஏறிட்டுப் பார்த்தார்.....

"நான் உங்கள விட்டுத்துப் போக மாட்டன். எனக்கு நீங்க இல்லாம நித்திரை வராது......" அவளுடைய கன்னங்களில் கண்ணீர் கோடிட்டது.

இதுவரை அடக்கி வைத்திருந்த பாசம் அவரை உசுப்பி விட்டது. அவளை அள்ளி மடியில் இருத்தி அணைத்துக் கொண்டு அழுதார்.

"எனக்கு என்ன உரிமை இருக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களை வைத்திருக்க? பொலிஸ் சொல்லிப் போட்டாங்க.... 'உங்கட அம்மாட்டக் கொடுக்கட்டுமாம்......' என்று. நீங்க இல்லாம நான் எதுக்கு? உங்களுக்குப் பணிவிடை செய்யாம நான் மட்டும் தூங்குவேனா? அது தான் நிரந்தர தூக்கத்துக்கு வழி தேடுறன்......" என்று சொல்லி அழுதார் கோபால் மாஸ்டர்.



சகோதரிகளுடன் கூடப் பிறந்த குற்றத்திற்காக - தந்தை இல்லாததால் அவர்களை வாழ வைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு முப்பத்தைந்து வயதைக் கடத்தி விட்டான் கோபால். ஏற்கனவே மணம் முடித்து விட்ட அக்காவோடு இரு தங்கைகளுக்கும் மணவாழ்வு கண்டுவிட்ட மகிழ்ச்சியில் தனக்கு ஒரு மணவாழ்வு வேண்டும் என்ற எண்ணத்தை மறந்திருந்தான். மற்றவர்களுக்கும் அந்த எண்ணம் வரவேயில்லை அவன் எப்படி வாய்விட்டுக் கேட்பான்? எனக்கொரு கல்யாணம் வேண்டும் என்று.

ஐந்து வருடங்கள் முடிந்த பின்னர் கடைசித் தங்கை மூன்று குழந்தைகளோடு வீட்டுக்கு வந்திருந்தாள், கண்ணைக் கசக்கிக் கொண்டு.

அவன் சொல்லி விட்டான் "உங்களுக்கு எத்தனை நாள் வேண்டுமானாலும் நான் சாப்பாடு போடுறன். நீங்க இங்கே இருக்கலாம். ஆனா உங்கட குடும்ப விசயத்தில் நான் தலையிட மாட்டன். பெண்களைப் பத்தி எனக்கு நல்லாத் தெரியும். புருஷனுக்கு எதிரா நடவடிக்கை எடுத்தால், புருஷன் பக்கம் நின்று அண்ணனைத் தான் எதிர்ப்பாங்க... இதை எத்தின சினிமாவில பார்த்திட்டம்...."

"என்னண்ணா நீங்க சொல்றது? இத்தனை வருஷமா என்னைத் துன்புறுத்தினார்.... நீங்க கொடுத்த சீதனம் எல்லாத் தையும் அழித்தார்.... நான் வந்தனானா? இப்போது அவர் வேறு ஒருத்தியையும் கூட்டித்துப் போய் குடும்பம் நடத்துறார்.... இன்னும் அவருடன் வாழ்வேன் என்று நம்புறீங்களா அண்ணா?....."

"இந்தப் பெண்களை நம்பவே முடியாது. அவன் நாளைக்கு வந்து நான் அவளை விட்டுத்தன் என்று கெஞ்சினதும் நீயும் அவனுடன் போய் வாழத்தான் போகிறாய்...."

"இல்லண்ணா சத்தியமா இல்ல..... இனி அவரிடம் இருந்து பிரிஞ்சி வாழப்போறன். 'டைவோர்ஸ்' எடுக்கிற முடிவோட தான் வந்திருக்கிறன். இனி நான் அந்த வீட்டு வாசற்படி மிதிக்க மாட்டன்." என்றாள்.

"இப்ப ஆத்திரத்தில் இப்படிச் சொல்கிறாய். இன்னும் ஒரு வருசம் சுணங்க.... பிறகு பாப்பமே....." அவன்.

"இல்லண்ணா இனி நான் எந்தக் காலத்திலும் சேர்ந்து வாழப் போறதில்லை."

"சரி. அப்படி என்டா நீ இங்க நிற்கலாம். உன்னையும் குழந்தைகளையும் காப்பாற்றுவது எனக்குக் கஷ்டம் இல்லை. எனக்கென்று குடும்பமா குழந்தை குட்டிகளா? இனி எனக்கு எல்லாம் நீயும் உன்ர குழந்தைகளும் தான்" என்றான்.

அன்றிலிருந்து இன்றுவரை அவளையும் குழந்தைகளையும் பாதுகாத்து வந்தான். தங்கைக்கும் குழந்தைகளுக்காகவுமே தன் வாழ்க்கை முழுவதையுமே அர்ப்பணித்தான்.

தங்கையின் கணவன் அவள் வாழ்க்கையில் தலையீடு எதுவும் செய்யாததில், விவாகரத்து செய்ய வேண்டும் என்ற எண்ணம் மழுங்கிப் போய் விட்டது. செலவுக்கு பணம் தேவை என்ற நிலையும் இருக்கவில்லை. இல்லையேல் ஜீவனாம்சம் கோரியிருப்பாள்.

மற்றும்படி குழந்தைகளுக்கு தகப்பனாக, மாமனாக பணிவிடைகள் செய்தான் கோபால். தனது உழைப்பைச் சேர்த்து திவ்யாவுக்கு ஒரு வீட்டைக் கட்டி முடித்தான். அந்த வளவில் பாதி பிருந்தாவுக்கு வீடு கட்டத் தயார் நிலையில் இருந்தது.

மணம் முடிக்காத அண்ணாவின் உழைப்பில் தங்களுக்கும் பங்கிருக்கிறது என்று வந்த மற்றச் சகோதரிகள் ஏமாற்றத்துடன் சண்டையிட்டுப் பிரிந்து விட்டார்கள்.

"உங்களுக்கு கணவன்மார் இருக்கிறார்கள். உங்களைப் பாதுகாக்க துணை இருக்கிறது. பானுவுக்கு இனி எல்லாம் நான் தானே? அவளுடைய குழந்தைகளின் எதிர்காலம் என் பொறுப்பு. ஆகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் எவரும் என்னிடம் எதையும் எதிர்ப்பார்க்கக் கூடாது" என்று கூறிவிட்டான்.

போனவர்கள் போனதுதான்.

பத்து வருடங்களுக்குப் பிறகு தாய் இறந்ததற்கு ஒன்று சோர்ந்தார்கள். தங்கை பானு அண்ணாவின் உழைப்பை அபகரிக்கப் பாசாங்கு செய்கிறாள் என்று எண்ணியவர்கள் தங்கையின் பாழான வாழ்வைக் கண்டு பரிவுடன் அன்பு செலுத்தினார்கள். மீண்டும் ஒட்டி உறவாடினார்கள்.

கடைக்குட்டி பிருந்தாவுக்கு இப்போது பத்து வயது ஆகிவிட்டாலும் அவள் மாமாவின் செல்லம் தான். அவள் தன்னை 'மாமா' என்று அழைத்தாலும், அவன் தன்னை ஒரு தகப்பனாகவே கணித்துக் கொண்டு செயல்பட்டான். அவள் தந்தையின் பாசம் அறியாதவள்.

அதன் பிரதிபலிப்பே இந்த வீடும், இத்தனை தேட்டமும், பிருந்தாவுக்கு மாமாவே சோறு ஊட்ட வேண்டும். மாமாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டு படுத்தால்தான் தூக்கம் வரும். அவனுக்கும் அப்படிப் பழகிவிட்டது. அவன் இல்லாமல் அவளால் ஒரு கணமும் இருக்க முடியுமா என்பது சந்தேகமே.

மூத்தவள் திவ்யா பெரிசாகியதும் சடங்கு வைத்ததில் ஒரு சிறு பிரச்சினை. இதற்கே வரிந்து கட்டிக் கொண்டு அக்கா வீட்டுக்குச் சென்று விட்டாள் பானு. எங்கே செல்லப் போகிறாள். இன்றல்லது நாளை வந்து விடுவாள் என்று இருந்து விட்டான்.

"எனக்கு அந்த வீட்டில் எந்த உரிமையும் இல்ல. அண்ணா வைச்சதுதான் சட்டம். பிள்ளைகள் எல்லாம் சிறையில் இருப்பது போலதான் இருக்கிறாங்க. எங்களுக்கு எந்தச் சுதந்திரமும் இல்ல. எங்க போறது என்றாலும் அவர் விரும்பிக் கூட்டிச் சென்றாத் தான்." என்று அவள் சிணுங்கியதில் மற்றவர்களும் மனமிரங்கி சேர்த்துக் கொண்டார்கள்.

மூன்று மாதம் கடந்து விட்டது.

இதுவரை அவள் பிள்ளைகளைப் பார்க்கவும் வரவில்லை. "சரி வாற நேரம் வரட்டும்" என்று விட்டு விட்டான்.

இப்போது அவளுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. பொலிஸ் ஜீப்பில் வந்த பொலிஸ் காரர்கள் "நாளை பொலிஸ் நிலையம் வரும்படி" கூறிவிட்டுச் சென்றனர்.

என்ன ஏது என்று விளங்காமல் சென்ற கோபாலை பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி வரவேற்றார். அவர் சிங்களவர்தான் என்றாலும் தமிழ் பேசத் தெரியும்.

"ஆ..... மாஸ்டர் நீங்களா..... உங்களுக்கு எதிராக ஒரு "கொம்ப்ளைண்ட்" வந்து இருக்கிறது..... உட்காருங்க...." ஒரு தமிழ் பொலிஸ்காரரை அழைத்து அதை வாசித்துக் காட்டச் சொன்னார்.

"செல்லையா பானுமதி. வயது 45. பிள்ளையார் கோவில் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட நான் தரும் முறைப்பாடாவது, எனது அண்ணன் செல்லையா கோபால் மாஸ்டர் என்பவர் என்னை எனது கணவரிடம் இருந்து பலவந்தமாகப் பிரித்து என்னையும் எனது குழந்தைகளையும் சட்டவிரோதமாக தடுத்து வைத்திருக்கிறார். அவரிடம் இருந்து நான் தப்பித்து வந்து விட்டேன். அவரிடம் இருந்து எனது குழந்தைகள் மூவரையும் விடுவித்து என்னிடம் ஒப்படைக்குமாறு மன்றாட்டமாக வேண்டுகிறேன்....." என்றிருந்தது.

அதற்கு மேல் கோபால் மாஸ்டரால் கேட்க முடியவில்லை. வியர்வையில் சேர்ட் நனைந்து கொண்டிருந்து. கைகளால் கதிரையைப் பிடித்துக் கொண்டார். முகத்தைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. கூனிக் குறுகிப் போயிருந்தார். ஊரில் கூட்டப்படும் கூட்டங்களுக்கு கோபால் வந்திருக்கிறார். அதனால் பொலிஸ் அதிகாரிக்கு அவரை நன்றாகத் தெரிந்திருந்தது. பொதுமக்களிடம் நல்ல பெயரும் அபிப்பிராயமும் உள்ளவர் மாஸ்டர் என்பதும் தெரிந்திருந்தது.

"உங்கட தங்கச்சி பிள்ளைகளை அவங்கட்ட விடுற நல்லங் தானே...." என்றார் அவர்.

"ஓம் சேர். அவங்கள நான் தடுத்து வைக்கல்ல. பத்து வருஷமா வளர்த்து வாறன். சோறு தண்ணி கொடுத்து வளர்த்த தங்கச்சியே மார்பில் உதைத்து விட்டாள். இனி மற்றவங்க எதுக்கு.....?"

"நாளைக்கு கொண்டு வாங்க. நாங்க தாயாரிடம் ஒப்படைக்கிறம்......"

"சரி சேர். ஆனா நான் இஞ்ச வரும் போது அவள் இஞ்ச இருக்கக்கூடாது. கண்டா என்ன செய்வேனோ தெரியாது."

"சரி மன்னிக்க வேணும். நாங்க எங்கட கடமையைத்தான் செய்யிறம்" என்று அனுப்பி வைத்தார்.

அங்கிருந்து வந்தவன்தான் ஆத்திரத்தில் இப்படி அட்டகாசம் செய்து கொண்டிருந்தான். இப்போது பிருந்தா அவனைத் திசை திருப்பி விட்டாள்.

அப்போது ஆள் அரவம் கேட்டு எட்டிப் பார்த்தார். மற்றத் தங்கைகள் வந்திருந்தனர். அவர்கள்தான் பானுவுக்கு இப்போது இடம் கொடுத்துக் கொண்டிருப்பவர்கள்.

"என்ன வந்த நீங்க? இனி இங்கே யாரும் வரக் கூடாது. ஏன் இன்னும் சாகாமல் இருக்கிறேன் என்று பார்க்க வந்த நீங்களா? உங்களாலதான் அவள் இந்தளவுக்குப் போய் இருக்கிறாள். அவளைக் கொலை செய்தால்தான் என் நெஞ்சுக்கு நிம்மதி கிடைக்கும். எல்லோரும் போங்க வெளியே....." என்று கத்தினான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லண்ணா... நாங்க அவளுக்கு இடம் கொடுத்தது பிழைதான். அவள் இப்படிச் செய்வாள் என்று எங்களுக்குத் தெரியாது. யார் இப்படிப் புத்தி சொல்லிக் கொடுத்ததோ தெரியல்ல....."

"எனக்கு எந்த விளக்கமும் தேவை யில்லை. நீங்கள் போகலாம்....." என்று கொஞ்சம் இறங்கினார்.

ஐம்பது வயதைக் கடந்த பின்னும் ஆத்திரம், கோபத்தை அவரால் அடக்க முடியவில்லை. அவர் திருமணம் செய்யாதது தான் காரணம் என்றனர் சிலர். அவர் தங்கைகள் மீது கொண்டிருந்த அளவுக்கதிகமான பாசம் என்றனர் சிலர். நல்ல உள்ளம் என்றும் நீதிக்கும் நேர்மைக்கும் குரல் எழுப்பக் கொதித்து எழும் என்று இவர்கள் அறியவில்லை.

இப்போது அவரது இரத்தம் கொதித்துக் கொண்டிருந்தது. நெஞ்சு நிம்மதி இழந்து தவித்தது. அவருக்கு ப்ரஷர் ஏறியிருக்க வேண்டும்.

அன்று இரவு இரு குழந்தைகளை இருபக்கத் திலும் பிருந்தாவை மடியிலும் வைத்துக் கொண்டு கதைத்துக் கொண்டிருந்தார். அவர்கள் வந்ததிலிருந்து அவர்களுக்காகத் தான் வாழ்ந்த வாழ்க்கையை எல்லாம் எடுத்துச் சொன்னார். ஒவ்வொருவரது பெயரிலும் வைப்புச் செய்திருந்த புத்தகத்தை எடுத்துக் கொடுத்தார். மாதம் நூறு ரூபாய் போடப்பட்டிருந்தது. 'மைனர் கணக்குப்' புத்தகம் அவை. அவரது சேமிப்புப் புத்தகத்தை பிருந்தாவிடம் கொடுத்தார்.

"பிருந்தாக் குட்டி இதில் இருப்பது உனக்கு வீடு கட்டச் சேர்த்திருக்கும் பணம். நீதான் பின் உரித்தாளி. எனக்கு ஏதும் நடந்தா நீதான் இதற்குச் சொந்தக்காரி." என்றார். இதை எல்லாம் ஏன் செய்கிறோம் என்று அவருக்கே தெரியவில்லை

"மாமா..... உங்களுக்கு....." என்றாள் பிருந்தாக்குட்டி.

"எனக்கு இருந்த செல்வமே நீங்க தானே. நீங்க போன பிறகு எனக்கு எல்லாமே போய்விடும். எனக்கெதுக்கு இதெல்லாம்? எனக்கென்று நான் எதுவும் சேர்க்க வில்லையடா....." என்றவருக்கு ஒரு சின்ன ஆசை எழுந்தது. 'இந்தக் குழந்தைகள் நாளைக்குப் போய்விடுவார்கள். இவர்கள் அணைப்பிலே எனது உயிர் பிரிந்து விடதா?' என்ற எண்ணம் எழுந்தது. பிள்ளைகளை அணைத்துக் கொண்டார். விடிந்தால் போய் விடுவார்களே என்ற ஏக்கம். நல்ல உள்ளங்கள் நினைப்பது சில வேளை நடந்து விடுவதும் உண்டல்லவா?

நெஞ்சுக்குள் குத்துவது போன்ற ஓர் உணர்வு. மாலை பொலிஸ் நிலையம் சென்று வந்ததிலிருந்து தண்ணீர் கூடக் குடிக்கவில்லை. இரவு பத்து மணிக்கு மேலாகிவிட்டது. எவரும் சாப்பிடவும் இல்லை.

நெஞ்சு வலி கூடக் கூட அவருக்கு ஆலய மணி அடிப்பது போன்று ஆனந்தமாக இருந்தது. அழைப்போசை காதில் விழுவது போன்ற ஆனந்தம். பிள்ளைகளை அணைத்திருந்த கைகள் சோர்ந்து விழுந்தன. அவர் சரிந்தார். அப்போதுதான் பிள்ளைகள் "மாமா மாமா" என்று கதறினர்.

"எனக்கு ஒன்றுமில்லை..... நெஞ்ச.... வலிக்குது...." என்று சொல்வதற்கே பாடாய்ப் போய்விட்டது. அரவிந்த் விக்ஸ் எடுத்து நெஞ்சில் தேய்த்து விட்டான்.

"பிருந்தாக் குட்டி பக்கத்தில் வாம்மா....." குழந்தை பயந்து போய் நின்றிருந்தாள். திடீரென அவளுக்கு ஒரு மின்னல் கீற்று. தேவர் மகன் படம் பார்த்த போது மாமா சொன்ன ஞாபகம். அது போல் மாமா இப்போது துடிக்கிறார்.

சுவாமி படத்துக்கு முன்னால் சென்று "கடவுளே! மாமாவை அமைதிப்படுத்து. அவரை நிம்மதியாகத் தூங்க விடு." என்று வேண்டிக் கொண்டவள் பக்கத்தில் வந்தமர்ந்து மாமாவின் தலையை எடுத்து மடியில் வைத்துக் கொண்டாள்.

"மாமா..... போற்றிப் பாடடி பெண்ணே....." என்றாள். அவளுக்கு...... எப்படி இத்தனை...... தைரியம்........? ஆண்டவன் கொடுத்ததோ...?

அவருடைய நெஞ்சைத் தடவியபடி 'போற்றிப் பாடடி பெண்ணே' பாட்டைப் பாடினாள். பிள்ளைகள் பயந்து விடக்கூடாது என்று கண்களை மூடினார்.

அவர் தூங்கி விட்டார் என்று பிள்ளைகள் எண்ணினார்கள். பாடல் முடிந்ததும் அவருடைய தலையைக் கீழே தூக்கி வைத்த போது மரத்துப் போய் இருந்தது. அவளால் தூக்க முடியவில்ல. அரவிந் வந்து தூக்கினான். அவர் மீளாத் துயிலில் ஆழ்ந்து விட்டார் என்று தெரிந்தது.

"மாமா.....!" என்று மூன்று குழந்தைகளின் சத்தம் கேட்டும் அயலவர் யாரும் வரவில்லை. 'யாரோ மண்டையைப் போட்டு விட்டார்கள் காலையில் பார்க்கலாம்' என்று லைட்டை அணைத்து விட்டு தூங்கச் சென்று விட்டார்கள்.


மாமா நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்ட பிள்ளைகள் இரவு முழுவதும் தூங்காமல் அழுது கொண்டிருந்தனர்.

"அண்ணா உனக்கு நானே எமனாக வந்து விட்டேனே" என்று நாளை வந்து ஒருத்தி ஒப்பாரி வைக்கப்போகிறாள் என்ன பயன்? போன உயிர் திரும்பி வரப் போகிறதா?

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கிராமங்களின் சிறப்புக்கள்




அகரம். செ. துஜியந்தன்

**க**ல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகப் பிரிவில் கல்முனை, பாண்டிருப்பு, பெரியநீலாவணை, சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை, துறைவந்தியமேடு ஆகிய கிராமங்கள் உள்ளடங்குகின்றன. இவற்றுள் துறைவந்தியமேடு, மணற்சேனை ஆகிய இரு கிராமங்களும் சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை ஆகிய கிராமசேவகர் பிரிவிற்குள் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

கல்முனை தமிழ்ப் பிரிவில் 29 கிராமசேவகர் பிரிவுகளில் 9673 குடும்பங்களைச் சேர்ந்த 36103 பேர் வசிக்கின்றனர். இந்து, கிறிஸ்தவம், பௌத்தம், இஸ்லாம் ஆகிய நான்கு மதங்களைச் சேர்ந்த இரு மொழி பேசுகின்ற மக்கள் மிகவும் அன்னியோன்னியமாக வாழ்கின்றனர். மூவின மக்களையும் கொண்ட தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகமானது இந்நாட்டின் இன நல்லுறவுக்கு எடுத்துக் காட்டான பிரதேச செயலகமாகத் திகழ்கின்றது. இவ்வாறான ஒரு பிரதேச செயலகம் இன்றுவரை தரம் உயர்த்தப்படாமல் இருப்பது இப் பிரதேச மக்களிடையே மிகுந்த கவலையைத் தோற்றுவித்துள்ளது.

கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகம் ஆரம்பிக்கப் பட்டு 29 வருடங்கள் கழிகின்ற நிலையில் முதன் முறையாக கலாசார நிகழ்வும் மற்றும் கலாசார மலர் ஒன்றும் வெளிகின்றது. இம் மலரில் எமது பிரதேசத்தின் கிராமங்களின் பழைமையையும், பெருமையினையும் ஆவணப்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

இதற்கமைய இங்குள்ள கிராமங்களின் தோற்றம் பற்றி சுருக்கமான விளக்கத்தினை இங்கே பதிவிட்டுள்ளேன். ஒவ்வொரு கிராமத்தைப் பற்றியும் ஆராய்ந்து அதனை விரிவாக வெளியிடுவதற்கு இம் மலரின் பக்கங்கள் போதாதுள்ளது. குறிப்பிட்ட சில பக்கங்களுக்குள் கிராமங்களின் சிறப்பையும் தொன்மையையும் எடுத்துக் கூறியுள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்முனை

**"ஆழக் கடலும் அழகு வயல் வெளியும்**
**வாழத் துணைபுரியும் வற்றாக் கல்முனை"**

கல்முனை என்பது தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து வரும் பழம்பெரும் கிராமமாகும். கல்முனை தமிழ்ப் பிரிவின் இதயமாக கல்முனை அமைந்துள்ளது. தமிழரின் இதயமாக கல்முனை கல்வி, கலை, இலக்கியம், விளையாட்டு, வைத்தியம், வர்த்தகம் எனப் பல துறைகளிலும் சிறந்து விளங்கும் கிராமமாகும். இயல்பாகவே இயற்கை வளம் கொண்டமைந்த பிரதேசமாக கல்முனை அமைந்துள்ளது. இவ் இயற்கை வளங்கள் தற்காலத்தில் நவீன அபிவிருத்தி என்ற போர்வையில் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகின்றது. நினைவு கூர்கின்றனர். இதன் போது கார்மேல் பற்றிமா அமைந்துள்ள பகுதியில் மட்டுமே வெள்ளம் பிடிக்கவில்லை. இதனை வைத்தே கல்முனையின் உயரமான பகுதியாக இவ் இடத்தை கருதுகின்றனர்.

கல்முனைக் கிராமம் 11 கிராமசேவகர் பிரிவு களைக் கொண்டமைந்துள்ளது. 2489 குடும்பங்களைச் சேர்ந்த 10203 பேர் வசிக்கின்றனர். இங்கு 14 இந்துக் கோவில்களும், 07 கிறிஸ்த்தவ தேவாலயங்களும் உள்ளடங்குகின்றன. 2004 இல் ஏற்பட்ட கடற்கோள் அனர்த்தத்தின் போது மிகுந்த பாதிப்புக்களை எதிர்நோக்கிய கிராமமாகும். இங்கு அறநெறிப் பாடசா லைக்குச் சென்ற மாணவர்களும் ஆசிரியர்களுமாக



கடலில் இயல்பாக நீண்டிருக்கும் ஒரு பகுதி முனையாகும். கல்முனையும் கடலுக்குள் முனையேற்று நீண்டு அமைந்துள்ளது. அத்துடன் இங்கு கற்பாறைகளும் இருப்பதினால் கல்முனை என்கின்றனர். அக்காலங்களில் கடல் மார்க்கமாக வரும் கப்பல்கள் பல கற்பாறைகளில் மோதுண்டு விபத்துக்குள்ளான சம்பவங்களும் நடந்தேறி யுள்ளன. 70 வருடங்களுக்கு முன்னர் கல்முனை கடல் பகுதியில் பாறை ஒன்றுடன் வெளிநாட்டுக் கப்பல் மோதியதில் அதில் பயணம் செய்த சிலர் உயிரிழந்தும், பலர் காப்பாற்றப்பட்டும் இருந்தனர்.

கல்வியில் கொடி கட்டிப் பறக்கும் 'கல்விக்கடல் கல்முனை' என சிறப்பித்துக் கூறுவதுண்டு, கல்முனையின் உயரமான இடமாக கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலை அமைந்துள்ள பகுதியினைக் கூறலாம். 1956 இல் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் போது கல்முனையே வெள்ளக் காடாக காட்சியளித்தது. அன்று கல்முனை நாற்சந்தியில் தோணி ஓடியதை இப்போதும் பலர் 65 பேர் பலியாகிய பெரும் துயரம் நடைபெற்றிருந்தது. அன்று இச் சம்பவம் பலராலும் பெரிதும் பேசப் பட்டிருந்தது.

கிழக்கே கடல் வளமும் மேற்கே கரவாகு வயல் வெளியும் அமையப்பெற்று கல்வியின் கலங்கரை விளக்கமாகவும் கல்முனையுள்ளது. இங்கு கல்முனை வாழ் தமிழ் மக்களின் இருப்பை பறைசாற்றும் வகையில் பிரதான வீதியின் எல்லையில் இற்றைக்கு 400 வருடங்கள் பழமை வாய்ந்த ஸ்ரீ தரவைச் சித்தி விநாயகர் ஆலயம் கம்பீரமாக புதுப் பொலிவுடன் காட்சியளிக்கின்றது. இவ் ஆலயம் கல்முனை தமிழர்களின் இருப்பின் அடையாளமாக இருப்பது பெருமைக்குரியதாகும். இதே போன்று கல்முனையில் அமைந்துள்ள ஒவ்வொரு ஆலயங்களும், தேவாலயங்களும் பழைமை வாய்ந்தவையாகும்.

கல்முனைத் தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு இங்கு அமைந்துள்ள பாடசாலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தும் பெரிதும் பங்களிப்புச் செய்து வருகின்றன. அதிலும் கல்முனைப் பிரதேச மாணவர்களின் மாபெரும் கல்வி வளர்ச்சிக்கு இரு கண்களைப் போன்று கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலை, உவெஸ்லி உயர்தர பாடசாலை ஆகியவை திகழ்கின்றன. இவ் இரு பாடசாலைகளின் வரலாறும் தொன்மையும் இங்குள்ள தமிழர்களின் இருப்பைப் பறைசாற்றி நிற்கின்றன. கல்முனையின் கல்விக்கு சான்றாதாரமாகத் திகழும் இவற்றைப் பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும்.

கல்முனை பழங் காலத்தில் வைத்தியத் துறைக்குப் பேர் போன பிரதேசமாக இருந்துள்ளது. இங்கு சித்தவைத்தியம், ஆயுர்வேத வைத்தியம், விஷவைத்தியம், முறிவு வைத்தியம் போன்ற நாட்டு வைத்தியங்கள் பிரபல்யமாக இருந்துள்ளன. இதற்கென வைத்திய பாரம்பரியத்தைக் கொண்டவர்கள் இருந்துள்ளனர். நாகமணி வைத்தியர், கிருஷ்ணபிள்ளை வைத்தியர், தம்பிராசா வைத்தியர் போன்ற பலரைக் குறிப்பிடலாம்.

அவர்களது வழித் தோன்றல்கள் இன்றும் இவ்வாறான வைத்திய துறைகளில் ஈடுபட்டு வருவதைக் காணலாம். இன்று எவ்வளவுதான் நவீன வைத்தியங்கள் சிகிச்சைகள் வந்து விட்ட போதிலும் மக்கள் மத்தியில் நாடி பிடித்துப் பார்த்து நாட்டு வைத்தியம் செய்யும் முறைக்கு இன்னும் மவுசு குறைந்து விடவில்லை.

கல்முனையில் 300 வருடங்கள் பழைமைவாய்ந்த கல்முனை ஆதார வைத்தியசாலையும் கல்முனையின் பெருமையினைக் கூறும் ஒன்றாகும். அம்பாறை மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் பழைமை வாய்ந்த 'தாய்' வைத்தியசாலை என்ற பெருமை இதற்கு உண்டு. தற்போது இவ் வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா. முரளீஸ்வரன் தலைமையில் மிகச் சிறப்பான சேவையை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

கல்முனை எப்போதும் கலை, இலக்கிய, பண்பாட்டு அம்சங்களை சிறப்பாக பேணுகின்ற கிராமமாகும். பல கலை இலக்கிய ஜாம்பவான்களை கல்முனை தந்துள்ளது. இதில் கவிஞர் மு. சடாட்சரன் குறிப்பிட்டு சொல்லக் கூடியவர் எனலாம். இம் மண்ணின் பெருமையினை அழகு தமிழில் கவி வடித்துள்ளனர். கல் முனையில் கூத்துக் கலை பிரபல் யமாக இருந்துள்ளது. இக்கலையை பயிற்றுவிப்பதற்கென்றே அண்ணாவிமார் இருந்துள்ளனர். இவர்களில் ஆறுமுகம் அண்ணாவியார், வள்ளியம் பிள்ளை அண்ணாவியர்களைக் குறிப்பிடலாம்.

கல்முனை கடற்கரைப் பகுதி கடல்படு திரவியங்கள் ஒதுங்குகின்ற இடமாகும். காலை, மாலை வேளைகளில் கடற்கரை ஓரங்களில் முத்து, மாணிக்கம், வைரம், அம்பர் போன்றவைகள் அடைந்து கிடக்கின்ற இடமாக இருந்துள்ளது. இவ்வாறு பல திரவியங்களை கண்டெடுத்த பலர் கல்முனையில் கோடீஸ்வரர்களாக உருவான வரலாறும் இருக்கின்றது.

தற்போது கல்முனை நகரில் நான்கு சமயங் களைச் சார்ந்தவர்களது வணக்கஸ்தலங்களும் அருகருகே அமைந்திருப்பது சிறப்பாகும் இங்குள்ள இந்து ஆலயங்களில் இருந்து ஒலிக்கும் காண்டாமணி ஓசையும், தேவார, திருவாசக, பக்திப்பாடல்களும், கிறிஸ்தவ தேவாலயங்களில் ஒலிக்கும் மணி ஓசையும், பள்ளிவாசலில் ஒலிக்கும் பாங்கோசையும், பௌத்த விகாரையில் ஒலிக்கும் பிரித்ஓதும் ஓசையும் கல்முனையின் இன ஒற்றுமைக்கான அடித்தளம் என்றே கூறவேண்டும்.

கல்முனை வாழ் தமிழ் மக்களின் இதய பூமியாக விளங்கும் கல்முனைப் பிரதேசத்தில் 1967 ல் ஏற்பட்ட இனங்களுக்கு இடையிலான அசாதாரண நிலைமையினைத் தொடர்ந்து தொடர்ச்சியாக ஏற் பட்டு வரும் பரஸ்பர சந்தேகங்கள் இரு இனங்களுக்கு மிடையேயான விரிசலை அதிகரிக்கச் செய்கின்றன கல்முனை வாழ் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஒருமித்த கருத்துடன் காரியங்களை ஆற்றுகின்ற போதே கல்முனையை சகல வழிகளிலும் வளம்மிக்க பூமியாக மாற்றமுடியும்.


## பாண்டிருப்பு

**"பாண்டவர் பெருமை கூறும் பாண்டிருப்பு"**

**"நிடாழி உலகத்து மறை நான்கோடு**
**ஐந்தென்று நிலை நிக்கவே"**

இந்துக்களின் ஐந்தாம் வேதம் எனப் போற்றப்படும் மகாபாரதம் எனும் இதிகாசத்தோடு தொடர்புபட்ட பழைமையும் இயற்கையும் இணைந்து எழில் கொஞ்சும் அழகிய கிராமம் பாண்டிருப்பு.

கொக்கட்டி, நாவல், மருதம், வம்மி ஆலை,





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அரசு, வாகை, பாலை, வேம்பு எனப் பயனுள்ள பல்வகை இனிய நறுஞ்சோலைகள் நிறைந்த இடமாகவும் பாண்டிருப்பு காட்சியளித்துள்ளது. இற்றைக்கு 15 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட அருள் மிகு ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலயம் இங்கு அமைந்துள்ளது. இவ் ஆலயத்தில் பழைமையும், பெருமையும், மகிமையும், வாய்ந்த மகாசக்தியான திரௌபதை அம்மன் வீற்றிருப்பதால் இக் கிராமத்தின் புகழ் அகில உலக ரீதியில் எங்கும் பரவியுள்ளது.


நீர்வளம், நிலவளம், வயல்வளம் என இயற்கை வளம் சூழப் பெற்ற பாண்டிருப்பின் எட்டு கிராம சேவகர் பிரிவுகளிலும் 2540 குடும்பங்களைச் சேர்ந்த 8715 பேர் வசிக்கின்றனர். இங்கு 09 இந்து ஆலயங்களும் ஒரு கிறிஸ்தவ தேவாலயமும் அமைந்துள்ளன. அத்துடன் மரபு வழி வந்த 12 குடிகளும் 4 சாகியங்களும் (சமூகம்) ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்றனர். இக் கிராம மாணவர்களது கல்வி வளர்ச்சியில் பாாண்டிருப்பு இந்து மகா வித்தியாலயம், நாவலர் வித்தியாலயம், மகாவிஷ்ணு வித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளும் அக்கறை செலுத்தி வருகின்றன.

சமூக, கல்வி, அரசியல், விளையாட்டு, கலை, இலக்கியத் துறைகளில் சாதனை படைத்த பலரை உருவாக்கிய கிராமம் இது. குறிப்பாக தமிழ் கலை, இலக்கியத்துறையில் உலகளவில் பேசப்படும் கவிஞர் பாண்டியூரன், சண்முகம் சிவலிங்கம், உமாவரதராஜன் போன்ற இலக்கிய ஜாம்பவனான்களை தந்த மண் பாண்டிருப்பு.

இது தவிர அரசியலில் இம்மக்களை விழிப்படையச் செய்து பிரதேச மக்களுக்கு நேர்மையான ஒரு அரசியல்வாதியாக வாழ்ந்தவர் மறைந்த வேல் முருகு மாஸ்டர். இன்றும் இம் மக்களால் இவர் நினைவு கூரப் படுகின்றார். இதே போன்று தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு அதிகளவு பங்களிப்புச் செய்த குடும்பங்களைக் கொண்ட வீரம் விளைந்த மண்ணாகவும் பாண்டிருப்பு இருந்துள்ளது.

கடந்தகால யுத்தத்தில் அம்பாறை மாவட்டத்தில் கணவனை இழந்த விதவைப் பெண்களை அதிகளவில் கொண்ட கிராமமாகவும் பாண்டிருப்பு பேசப்பட்டுள்ளது. பாண்டிருப்பில்தான் 1991 காலப்பகுதியில் யுத்தத்தில் கணவனை இழந்த பெண்களுக்கான விதவைச் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இச் சங்கத்தில் அப்போது 200 இற்கும் மேற்பட்ட விதவைப் பெண்கள் அங்கத்துவம் பெற்றிருந்தனர்.

2004 இல் ஏற்பட்ட ஆழிப் பேரலை அனர்த்தத்தின் போது அதிகளவிலான உயிரிழப்புக்களை சந்தித்த கிராமம் இது. இங்கு 476 பேர் உயிரிழந்தும், 20 இற்கும் மேற்பட்டோர் அங்கவீனமாகியும் 5 பேர் காணாமல் போயுமிருந்தனர். இவ் அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட கடற்கரையை அண்டிய பகுதிகளில் வசித்த 75 குடும்பங்கள் பாண்டிருப்பு மேட்டுவட்டை



பகுதியில் அமைக்கப்பட்ட வீடுகளில் குடியேறி வசித்து வருகின்றனர். ஆழிப்பேரலையில் உயிர் நீத்தவர்களின் நினைவாக பாண்டிருப்பு சவக்காலைப் பகுதியில் நினைவுதூபி அமைக்கப்பட்டுள்ளது. இத் தூபிதான் இலங்கையில் உயிரிழந்தவர்களின் நினைவாக கட்டப்பட்ட மிக உயரமான தூபி என்பது குறிப்பிடத்தக்கது.

பாண்டிருப்புக் கிராமம் அக்காலத்தில் தென்னைமரவாடி, ஆலஞ்சோலை போன்ற பேர்களினால் அழைக்கப்பட்டு வந்துள்ளது. இந்தியாவில் இருந்து 15 ஆம் நூற்றாண்டில் இங்கு வருகை தந்த தாதன் என்பவனினால் திரௌபதை அம்மனுக்கும் பாண்டவர் களுக்கும் ஆலயம் அமைக்கப்பட்டது. தாதன் பாண்டவர் களுடைய உறுப்புகளை வைத்து வழிபாடு செய்து வந்ததனால் "பாண்டிருப்பு" எனப் பேர் பெற்றதாகவும் இவ் பாண்டுறுப்பு பின்னர் மருவி பாண்டிருப்பு என அழைக்கப்படலாயிற்று எனவும் கூறுகின்றனர்.

இக்கிராமத்தின் திரௌபதை அம்மன் ஆலயத்தில் வழங்கப்படுகின்ற மஞ்சள் திலகமான "பாண்டாரம்" எனும் வாசனைத் திரவியம் தெய்வீகத் தன்மை வாய்ந்ததும் பிணிகள் பலவும் போக்க வல்லதுமாகும்.

பாண்டிருப்பு கிராம மக்கள் பல்வேறு தொழில் களையும் தமது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். விவசாயம், மீன், தோட்டம், பொற்றொழில், மட்பாண்டம் எனப் பல்வேறு வகையான தொழில்களைச் செய்து வருகின்றனர். இங்குள்ள மக்கள் செய்துவந்த தொழில்களில் மிகப் பிரபல்யமானதாக ஒரு காலத்தில் மட்பாண்ட கைத்தொழில் இருந்துள்ளது.

பாண்டிருப்பில் உற்பத்தி செய்யப்படும் மட்பாண்டப் பொருட்களுக்கு நாட்டின் நாலாபாகங்களிலும் நல்ல வரவேற்பும் கிராக்கியும் இருந்துள்ளது.

அக்காலத்தில் மண்சட்டியில் சோறு, கறி சமைத்து வாய்க்கு ருசியாக சாப்பிட்டு நோயற்ற வாழ்க்கையை அம் மக்கள் வாழ்ந்தார்கள். மண்சட்டியில் சோறு கறி சமைத்து சாப்பிடும் ருசியே தனி. உணவு பழுதடைந்து விடாது, பக்கவிளைவுகள் இல்லை. இப்போது எல்லாம் மண்பாத்திரத்தை பயன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

படுத்துவதில்லை. இங்கு உற்பத்தி செய்யப்படும் சட்டி, பானை, முட்டி என்பன நேர்த்தியாகவும், தரமானதாகவும் இருப்பதே காரணமாகும். மட்பாண்டத் தொழில் செய்பவர்களை ஒன்றிணைத்து "மட்பாண்டச் சங்கம்" என்ற ஒன்று ஆரம்பிக்கப்பட்டதும் முதன் முதலில் பாண்டிருப்பில்தான் நடைபெற்றது.

இன்று இத்தொழில் அருகிவரும் தொழிலாக மாறியுள்ளது. குறிப்பிட்ட சில குடும்பங்களே தற்போது



இப் பாரம்பரிய தொழிலைச் செய்து வருகின்றன. இத்தொழிலுக்குப் புத்துயிர் அளிக்கப்படவேண்டும். என்பதே அனைவரதும் கோரிக்கையாகும்.

அனல் மங்கை திரௌபதைக்கு ஆலயம் அமைத்து மகாபாரத இதிகாசத்தை மங்காது பாதுகாக்கும் பாண்டிருப்புக் கிராமத்தை அபிவிருத்திப் பாதையில் கட்டியெழுப்ப வேண்டியது அனைவரதும் கடமையாகும்.

## பெரிய நீலாவணை

### "புல் பூண்டும் கவிபாடும் நீலாவணை"

அம்பாறை மாவட்டத்தின் வடக்கு எல்லைக் கிராமமாக பெரிய நீலாவணை அமைந்துள்ளது. இயற்கை வளம் கொழிக்கும் இறைவனின் அருட் கொடையைக் கொண்ட கிராமம் இவ் உலகை காத்து ரட்சிக்கும் பரந்தாமன் பள்ளி கொள்ளும் புண்ணிய திருத்தலம் இங்குதான் அமைந்துள்ளது. இந்தியாவில் இருந்து வருகை தந்த தாதனின் தம்பி கவுத்தன் என்பவனால் அமைக்கப்பட்ட பழம் பெரும் ஆலயமாக விஷ்ணு ஆலயம் உள்ளது. இங்குள்ள நீலவண்ணக் கண்ணனை நெஞ்சார அணைத்தால் வாழ்வில் ஏற்படும் துன்பங்கள் நீங்கி இன்பங்கள் மேலோங்கும் என்பது நம்பிக்கையாகும்.

இங்கு விஷ்ணுவுக்கு ஆலயம் அமைத்த கவுத்தன் "மக்களே இங்கு வாருங்கள் என் நீலவண்ணக் கண்ணனைப் பாருங்கள். உங்கள் அகக்கண் திறந்து அவனை அணையுங்கள். துன்பங்கள் நீங்கி வாழ்வில் இன்பங்கள் பெறுவீர்கள்" என்று விஷ்ணு வழிபாட்டை பிரபல்யப் படுத்தியுள்ளான். நீலவண்ணக் கண்ணனை அணைத்தால் துன்பங்கள் நீங்கும் என்பதால் நீலாவணை என்ற பெயர் கிட்டிற்று என்று கூறப்படுகின்றது.

இதே போன்று இப்பகுதியைப் பெரிய நீலன் என்கிற சிற்றரசன் ஆட்சி செய்து வந்துள்ளான். விவசாயத்திற்குப் பேர்போன இக் கிராமத்தில் பெரிய நீலன் எனும் சிற்றரசனால் பெரியதொரு அணைக்கட்டு ஒன்றும் இங்கு அக்காலத்தில் கட்டப்பட்டுள்ளது.

இவ் அணைக்கட்டை பெரிய நீலன் கட்டிய காரணத்தினால் பெரிய நீலாவணை என இக்கிராமம் அழைக்கப் படலாயிற்று எனவும் அறிய முடிகின்றது. ஆனாலும் கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகப் பிரிவில் பெரியதொரு நிலப்பரப்பை இக் கிராமம் கொண்டுள் ளமையும் குறிப்பிடத்தக்கது.

இக் கிராமத்தை உலகறியச் செய்த பெருமை கவிஞர் நீலாவணனையே சேரும். தனது கவி ஆற்றலால் தமிழ் இலக்கியத் துறையில் தனக்கெனத் தனி முத்திரை பதித்துச் சென்றவர் கவிஞர் நீலாவணன் சின்னத்துரை என்ற இயற்பெயரைக் கொண்ட இவர் தான் பிறந்த கிராமத்தின் பெரையே தனது புனை பெயராகக் கொண்டு கிராமத்தைப் பெருமைப் படுத்தியுள்ளார்.

பெரிய நீலாவணைக் கிராமம் பற்றியும் கவிஞர் நீலாவணன் பற்றியும் உலகளவிலும் பாடப்புத்தகங்களிலும் சிலாகித்துக் கூறும் அளவிற்கு இக்கிராமம் சிறந்து விளங்குகின்றது. அன்று தொடக்கம் இன்று வரை கலை, இலக்கிய, பாரம்பரிய, பண்பாட்டம்சங்களுக்கு முன்னுரிமை கொடுத்து அதனை வளர்க்கின்ற கிராம மாக பெரிய நீலாவணை அமைந்துள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய நீலாவணை நான்கு கிராமசேவகர் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இங்கு 2115 குடும்பங்களைச் சேர்ந்த 9142 பேர் வசிக்கின்றனர் பெரும்பாலும் பெரிய நீலாவணைக் கிராமம் தோட்டச் செய்கைக்கு பேர்போன கிராமமாகும். இங்கு உற்பத்தி செய்யப்படும் நஞ்சற்ற மரக்கறி வகைகளுக்கு சந்தையில் நல்ல கிராக்கி உண்டு.

ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு சிறப்புப் பொருட்கள் இருப்பதைப்போல 'நீலாவணை கத்தரிக்காய்' என்றால் அதற்கென்று தனிச்சுவையுண்டு. பெரிய நீலாவணைக்குச் செல்பவர்கள் கத்தரிக்காய் வாங்க மறப்பதில்லை. சிறந்த உழைப்பாளிகளையும், நல்ல படைப்பாளிகளையும் கொண்டமைந்த அழகிய கிராமம் பெரியநீலாவணை என்று கூறலாம். விவசாய செய்கையை பரம்பரை பரம்பரையாகச் செய்து வந்த பல போடிமார்கள் இங்கு இருந்துள்ளனர். சேனைப் பயிர்ச் செய்கையிலும் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டு வந்த கிராமமாகவும் பெரிய நீலாவணையுள்ளது.

2004 டிசம்பர் 26 ல் ஏற்பட்ட ஆழிப் பேரலையில் கல்முனை தமிழ்ப்பிரிவில் பாதிக்கப்பட்ட மக்கள் இருக்க இடம் இன்றி தத்தளித்துத் திரிந்த போது இக் கிராமமே இருக்க இடம் கொடுத்தது. இன்று சுனாமி தொடர்மாடி குடியிருப்புக்கள் பல அமைந்த இடமாக விளங்குகின்றது. இத் தொடர்மாடி குடியிருப்புகளில் கல்முனை, பாண்டிருப்பு, பெரிய நீலாவணையைச் சேர்ந்த 800 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றன.

பல்வேறு குறைபாடுகளுக்கு மத்தியில் தொடர்மாடிக் குடியிருப்பில் வசிக்கும் இம்மக்களின் குறைபாடுகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதே இம் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

அம்பாரை மாவட்டத்தின் எல்லைக் கிராமமான பெரியநீலாவணையின் எல்லைகள் பாதுகாக்கப்பட்டு அதன் அபிவிருத்திக்கும், வளர்ச்சிக்கும் அனைவரும் ஒன்று பட்டு உழைக்க வேண்டும்.

## சேனைக்குடியிருப்பு

**"சேனை கட்டி ஆண்ட ஊர்"**

சேனைக்குடியிருப்பு கிராமமானது சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் ஆட்சிக்காலத்தோடு தொடர்பு பட்ட பழம் பெரும் கிராமமாகும். இந்தியாவில் இருந்து இலங்கைக்கு காலத்துக்குக் காலம் பல மன்னர்களின் படையெடுப்புகள் நிகழ்ந்துள்ளன. அவ்வாறு வருகை தந்த படைகளும், அதன் தளபதிகளும் இங்குள்ள பல இடங்களில் தரித்துச் சென்றுள்ளனர்.

அந்தவகையில் பாண்டிய மன்னனுடைய சேனைப்படைகள் சில தரித்து நின்று சென்ற கிராமமாக இருந்ததினால் சேனைப் படைக் கிராமம் என்றும் ஒரு காலத்தில் காடாக காட்சியளித்த இவ் இடத்தை மக்கள் ஒன்று கூடி சேனைகள் வெட்டி குடியிருப்புக்களை அமைத்து வாழ்ந்ததினால் சேனைக் குடியிருப்பு என்று அழைக்கப்பட்டதாகவும் கூறுகின்றனர்.

அது மட்டுமல்ல கிட்டங்கி ஆற்றை ஒட்டியதாக செழிப்புமிக்க, வயல் வளம் நிறைந்த இடமாக இருந்த தினால் செந்நெல் குடியிருப்பு என்றும் இக்கிராமம் அழைக்கப் பட்டதாகவும் வரலாற்று தகவல்களின் படி அறியக் கிடைக்கின்றது.

இங்கு மூன்று கிராமசேவகர் பிரிவுகள் உள்ளன. இதில் 1130 குடும்பங்களைச் சேர்ந்த 4336 பேர் வசிக்கின்றனர். இங்குள்ள கிட்டங்கி ஆறு துறைமுகமாக செயற்பட்டதன் காரணமாக வணிகம், விவசாயம் ஆகிய துறைகளில் கொடிகட்டிப் பறந்த கிராமம் என்ற பெருமை சேனைக்குடியிருப்புக்குள்ளது.

ஒரு காலத்தில் இந்தியாவின் தூத்துக்குடி, கேரளா போன்ற இடங்களில் இருந்து வரும் வணிகக் கப்பல்கள் திருமலை, கொழும்பு துறைமுகங்களை வந்தடைந்து அங்கிருந்து கிழக்குக் கரைவழியே பயணம் செய்து பொத்துவிலைச் சென்றடைவது வழக்கமாக இருந்துள்ளது. அவ்வாறு பயணிக்கின்ற கப்பல்கள் கிட்டங்கி துறைமுகத்தில் தரித்து நின்று இங்கு அரிசி, கடலை போன்றவற்றை ஏற்றிக் கொண்டு பொத்துவில் பகுதி நோக்கிச் செல்லுமாம். அதன்பின் பொத்துவிலிலிருந்து புறப்படும் கப்பல்கள் கொப்புறாத் தேங்காய்களை ஏற்றிக்கொண்டு இவ் வழியாகக் கொழும்பு நோக்கிப் பயணித்த வரலாறுகள் இருக்கின்றன.

இங்கு 08 இந்துக் கோவில்கள் அமைந்துள்ளன. சக்தி வழிபாட்டுக்குப் பேர்போன ஒரு கிராமமாக சேனைக்குடியிருப்பு காணப்படுகின்றது. இங்குள்ள காளி, மாரி ஆகிய அம்மன் ஆலயங்களில் நடைபெறு கின்ற மரபு சார்ந்த பூசை வழிபாடுகள் அதற்குக் கட்டியம் கூறுகின்றன.

தெய்வம் ஆடுதல், அருள்வாக்குச் சொல்லுதல், மந்திர உச்சாடனங்கள் மூலம் தெய்வத்தை வரவழைத்து பக்தர்களின் குறைகளை தீர்த்து வைப்பது போன்ற அற்புதங்களை இங்கு காணலாம். இங்கிருந்த பூசாரி மார்கள் தெய்வ சக்தி மூலம் கும்பத்தை மேல் எழுப்பி பார்ப்போரை வியக்க வைப்பார்கள். பிரபல்யம் மிக்க பூசாரிகளாக ஆண்டிப் பூசாரி, சேதுப்பிள்ளை பூசாரி, அழகையா பூசாரி போன்றவர்கள் இருந்தனர்.

தெய்வ சக்தி மேலோங்கி நிற்கும் கிராமம் என்ற சிறப்பை சேனைக்குடியிருப்பு கொண்டுள்ளது. இக்கிராமத்தில் பழங்காலக் கட்டிடக்கலையுடன் கூடிய வகையில் அநாதியான ஆலயமாக சித்தி விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. இவ் ஆலயத்தின் நிலைகள், கதவுகள் என்பன கருங்கற்களினால் பொழியப்பட்டதாக இருந்துள்ளதுன. தற்போது ஆலயம் புனரமைப்பு செய்யப்பட்டபோது காலப்போக்கில் அவை சிதைவடைந்து விட்டமை கவலை தரும் விடயமாகும்.

சேனைக்குடியிருப்பு கிராமத்தில் பாரம்பரிய வீர விளையாட்டுகளான மல்யுத்தம், வாள்வீச்சு, கம்படி,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிலம்படி போன்ற கலையம்சங்கள் இருந்துள்ளன. இக்கலைகளைப் பயிற்றுவிக்கின்ற இடமாகவும், இவற்றுக்குப் பேர்போன கிராமமாகவும் சேனைக் குடியிருப்பு காணப்பட்டுள்ளது. இவ்வாறான வீரவிளையாட்டுகள் இருந்த காரணத்தினாலோ என்னவோ கராத்தே, யோகக்கலை ஆகியவற்றில் பேர்போனவர்கள் இன்றும் இங்கு இருக்கின்றனர். ஆரம்ப காலத்தில் கராத்தே, மற்றும் யோகக்கலையில் சேனைக்குடியிருப்பு கிராமத்தை பலரின் பால் திரும்பிப் பார்க்கவைத்த



பெருமை யோகாசனக் கலாநிதி ஓய்வு நிலை அதிபர் கா. சந்திரலிங்கம் அவர்களைச் சாரும்.

தற்போது சேனைக்குடியிருப்பையும், கல்முனை தமிழ்ப் பிரிவையும் உலகறியச் செய்து சர்வதேச ரீதியில் கராத்தே நிலையில் தங்கப் பதக்கங்களை பெற்று குவிக்கின்ற இளம் வீரர் எஸ். பாலுராஜ் குறிப்பிடத்தக்கவர். சேனைக்குடியிருப்பின் பெருமைக்கு இவரும் ஒரு காரணம் ஆவார்.

1962 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இக்கிராமத்தில் முருகு நல்லதம்பி குருக்கள் தலைமையில் தோற்றம் பெற்ற சைவ மறுமலர்ச்சி மன்றம் மூலம் இங்கு சமய, சமூக, கலை இலக்கிய நிகழ்வுகள் உத்வேகம் பெற ஆரம்பித்தமையும் குறிப்பிடத்தக்கது.

சேனைக்குடியிருப்பில் சிறந்த மேளவாத்திய அண்ணாவிமார் இருந்துள்ளார்கள் இங்கிருந்துதான் கூத்துக் கலைக்கு மேளவாத்திய அண்ணாவிமார் சென்றுள்ளனர். இங்கு அக்காலத்தில் கீசகன்போர், பாரதப்போர் போன்ற கூத்துக்களும் மற்றும் புராண இதிகாச நாடகங்களும் அரங்கேற்றப்பட்டுள்ளன. இது தொடர்ச்சியாக இடம்பெற்று வந்துள்ளது. கூத்து, நாடகங்களில் நடித்தவர்கள் அக்கதா பாத்திரங்களின் பேர்கொண்டே அழைக்கப்பட்டுள்ளனர். இதற்கமைய அருச்சுனன், குயலவன், சகுனிமாமா எனப் பலர் இருந்துள்ளனர்.

கலை, இலக்கியம், சமயம், சமூகம், விளையாட்டு எனப் பல துறைகளிலும் கொடிகட்டிப் பறந்த சேனைக் குடியிருப்புக் கிராமம் கல்முனைப் பிரதேசத்திலுள்ள பழம் பெரும் கிராமம் என்பது பெருமைக்குரிய விடய மாகும். இக் கிராமத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் பல செய்யப்பட வேண்டும். அதற்கு அரசியல் பிரமுகர்களும் அதிகாரிகளும் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

துரைவந்தியமேடு சேனைக்குடியிருப்பு கிராம சேவகர் பிரிவிற்குள் உள்ளடங்குகின்ற மிகச் சிறிய கிராமமாகும். தென்றல் காற்றும், பறவைகளின் ஒலிகளும் மனதை வருடும் இதமான இயற்கை ரம்மியம் மிக்க அழகியதொரு கிராமமாக துரைவந்தியமேடு காட்சியளிக்கின்றது.

கிட்டங்கி ஆற்றை அண்டிய பகுதியின் மேட்டு நிலப் பகுதியாக இக்கிராமம் இருக்கின்றது. அக்காலத்தில் அரசியல், சமூக, பொருளாதார, சமய நோக்கமாக கப்பல்களில் பயணம் செய்தவர்கள் இங்கு காணப்பட்ட மேட்டுநிலப் பகுதியில் இறங்கி இங்கே தங்கி சென்றுள்ளனர். அத்தோடு வாவியூடாக வரும் பாதிரிமார்களும் வெள்ளைக்கார துரைமார்களும் இந்த இடத்தில் வந்து இறங்கியே பல இடங்களுக்கும் பிரிந்து சென்றுள்ளனர்.

அதிகமாக வெள்ளைக்கார துரைமார்களின் பயணங்களுக்கு இம் மேட்டு நிலப் பகுதி பயன் பட்டுள்ளது. முதன் முதலில் இப்பிரதேசத்திற்கு துரைமார்கள் வந்து இறங்கிய இடம் என்பதால் துரைவந்தியமேடு என்று அழைக்கப்படலாயிற்று. இன்று அது மருவி துறைவந்தியமேடு என ஆயிற்று.

கல்முனை தமிழ்ப் பிரிவில் இன்று அபிவிருத்தி யடையாத ஓர் இருண்ட கிராமமாக துரைவந்தியமேடு உள்ளது. இக்கிராமம் நகர அபிவிருத்தி என்ற பெயரில் அதன் சுயத்தை இழக்கும் வகையிலான செயற்றிட்டங்கள் ஆலோசனையில் உள்ளதாக செய்திகள் கசிகின்றன. இது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி தமிழரின் பாரம்பரிய துரைவந்தியமேடு கிராமத்தை தக்கவைப்பது இங்குள்ளோரின் கடமையாகும்.


## நற்பிட்டிமுனை

*"நாற்றிசையும் அரசாண்ட நாப்புட்டி முனை"*



கல்முனை தமிழ்ப் பிரிவில் முதன் முதலில் குடியேற்றம் நடைபெற்ற பிரதேசமாக நற்பிட்டி முனைக் கிராமம் இருந்துள்ளதாக வரலாற்றுத் தகவல்கள் மூலம் தெரிய வருகின்றது. இக் கிராமம் ஆரம்பத்தில் 'நாப்புட்டி' என்ற பேரிலே அழைக்கப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'மட்டக்களப்பு' மாண்மியம் நூலிலும் 'நாப்புட்டி' முனையின் பழைமை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

'நாப்புட்டி' முனை, நாப்படை முனை, நெற்புட்டி முனை எனப் பல்வேறு பெயர் களால் இக்கிராமம் அழைக்கப் பட்டுள்ளது. நாக்குப்போன்ற வடிவத்தைக் கொண்டமைந்துள்ள நிலப் பகுதியாகவும் காட்சியளிப் பதால் நாப்புட்டி என அழைக்கப்படுகின்றது. இக் கிராமத்தை மையமாக வைத்துதான் பிரதேசத்தில் குடியேற்றங்கள் விரிவடையத் தொடங்கியுள்ளன. அரசாண்ட பரம்பரையான வன்னிமை கோத்திரம் ஆட்சி செய்துள்ளது. நற்பிட்டி முனையில் வன்னிமைக் குரிய ஒரு நீதி மன்றம் இருந்துள்ளது. அதற்கான தடயங்கள் இன்றும் இருக்கின்றன.

மட்டக்களப்பு பகுதியை ஆட்சி செய்த சிற்றரசர்கள் காலத்திற்கு காலம் இக்கிராமத்திற்கு வருகை தந்து நீதி பரிபாலனம் செய்துள்ளனர். மன்னர் களும் திக்கதிபர்களை நியமித்து தங்களது கடமைகளை சரிவரச் செய்துள்ளனர். அரசாண்ட பரம்பரையினரே நாப்புட்டி முனையில் வாழ்ந்துள்ளனர். அவர்களின் வழித் தோன்றல்களே இப்போதும் இங்கிருக்கின்றனர் என்பதற்கு பல சான்றுகளுள்ளன.

அக்காலத்தில் இங்கு பிரசித்தி பெற்ற புனித திருத்தலங்களாக விளங்கிய திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயம், சேனைக்குடியிருப்பு பத்திரகாளி அம்மன் ஆகிய ஆலயங்களின் தலைமைப் பொறுப்புகள் இவர்களிடமே இருந்துள்ளன. வன்னிமையின் ஆட்சி கொடிகட்டிப் பறந்த காலத்தில் நாப்புட்டி முனையே நீதி பரிபாலன திட்டங்களைத் தீட்டும் இடமாக விளங்கியுள்ளது என்று குறிப்பிடலாம்.

தற்போது நற்பிட்டிமுனைக் கிராமம் மூன்று கிராமசேவகர் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இங்கு 1059 குடும்பங்களைச் சேர்ந்த 3707 பேர் வசிக்கின்றனர். இங்கு எட்டு இந்து ஆலயங்களும் ஒரு கிறிஸ்தவ தேவாலயமும் அமைந்துள்ளன.

இம் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் சிவ சக்தி மகா வித்தியாலயம், விபுலானந்தா வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளும் அக்கறை செலுத்தி வருகின்றன. வயல் நிலங்கள் சூழப்பெற்ற ஒரு நெற்களஞ்சியமாகவும் நற்பிட்டிமுனை இருந்துள்ளது.

நற்பிட்டிமுனைக் கிராமத்தில் தேக்குமரம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இங்கு பயனுள்ள பல மரங்கள் சூழ்ந்திருந்ததினால் அம் மரங்களை வெட்டி தளபாடங்கள், செய்யப் பட்டுள்ளது. மரத்தளபாடங்களுக்கு பிரசித்தி பெற்ற கிராமமாக நற்பிட்டிமுனை இருந்துள்ளது.

உழவுத்தொழிலுக்கு உயர்வு கொடுத்த கிராமம் என்பதனால் நெற்புட்டி என்று கூறப்பட்டுள்ளது. நற்பிட்டி முனையில் வசதி படைத்த வன்னிமைகள் வாழ்ந்ததினால் இக் கிராமம் வறுமையின் பிடியில் சிக்கியது கிடையாது. விவசாயம், மீன்பிடி, மரவேலை, குடிசைக் கைத்தொழில்கள் என்பன இம் மக்களின் வாழ்வாதாரமாக இருந்துள்ளன.

நற்பிட்டி முனையில் கூத்துக்கலை மிகப் பிரபல்யமாக இருந்துள்ளது. இங்கு கூத்து மேடைகள் அமைக்கப்பட்டதற்கான சான்றுகளும் உள்ளன. மண்ணி னால் நிரப்பப்பட்ட கூத்து மேடை அமைக்கப்பட்டு அம் மேடையில் விடிய விடியக் கூத்து ஆடப்பட்டுள்ளது. இங்கு ஆடப்படும் கூத்தைப் பார்த்து ரசிப்பதற்கென்று பல ஊர்களில் இருந்து வண்டில் மாடு கட்டி வந்து மக்கள் கூத்துப் பார்த்துச் சென்றுள்ளனர்.

ஆரிய மாலா என்கிற கூத்து மிகப் பிரபல்யமாக இருந்துள்ளது. இங்கு கலைக்கதிர் மன்றம், முத்தமிழ் மன்றம் ஆகிய இரண்டுமே ஆரம்பகால கலா மன்றங்களாக இருந்து கலைச் சேவைகளை செய்து வந்துள்ளமையைக் குறிப்பிடலாம்.

பாரம்பரிய வரலாற்றுப் பின்னணியையும் பதிவையும் தன்னகத்தே கொண்டுள்ள நற்பிட்டி முனைக் கிராமம் கல்முனைப் பிரதேசத்தின் தொன்மை வாய்ந்த கிராமமாகும். இக் கிராமமும் சகல வழிகளிலும் மீளக் கட்டியெழுப்பப் பட வேண்டும் என்பதே இம் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

மணல்சேனை நற்பிட்டிமுனை கிராமசேவகர் பிரிவிற்குள் உள்ளடங்கும் சிறியதொரு கிராமமாகும். இங்கு கிறிஸ்தவ மக்கள் பெரும்பான்மையாக வசிக்கின் றனர். இந்து கிறிஸ்தவ மக்கள் பாலும் தேனும் போல் இரண்டறக் கலந்து வாழும் அழகிய கிராமமாக இது அமைந்துள்ளது.

ஒரு காலத்தில் இப் பகுதி மணல் திட்டியாக இருந்துள்ளது. அத்துடன் இப்பகுதிகளில் மக்கள் புதிதாக சேனை வெட்டி குடியிருப்புகளையும் அமைத்ததினால் மணல்சேனை எனப் பெயர்வந்ததாக கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். ●

குறிப்பு : கல்முனைப்பிரதேசத்திலுள்ள தமிழ்க்கிராமங்களின் சிறப்புக்களை என்னால் முடிந்த வரை தேடித்தந்துள்ளேன். இதைவிட இன்னும் பல காரணங்களும், சிறப்புகளும் இருக்கக் கூடும் அவைபற்றி தெரிந்தவர்கள் கூறினால் எதிர்வரும் காலங்களில் சேர்த்துக் கொள்ள முடியும். இதில் தெரிவிக்கப்பட்டுள்ள சனத்தொகை புள்ளிவிபரங்கள் 2016 இன் கணக்கெடுப்புக்கு அமைவானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் ஊர்

- நாகமணி விநாயகமூர்த்தி

கிழக்கிலங்கை மட்டுமாநகர் தென் கோடி
கிளைவிடும் ஆற்றடுத்து
இருபத்தாறு கல் தொலைவில்
இருப்பதுதான் எமது ஊர் சேனையூர்

முன்னொருகால் சேனைப்படைத்தலைவனுக்கு
மூதாதை குடி நாமம் மாறாதூரே
பின்னாளில் சேனைப்படையூர் மாறி
சேனைக்குடி சென்னல்குடி

சேனைக்குடியிருப்பு மாச்சி
கிழக்கினிலே வங்காளவிரிகுடாவும்
கிரணகிக்கும் கல்முனைப்பட்டினமும்
மேற்கினிலே கிட்டங்கி ஆற்றல்கள்
மோதலிட்டு கரைதாவும் மூசிகற்கு
வளமுற்ற ஆலயம் வருந்துவோர்க்கு
வரம் கொடுக்கும் கிட்டங்கி பிள்ளையாரே
மறுபக்கம் தோணி நிரை வலை வீச்சாளர்
மட்டுநகர் வாவியிலே மீன் பிடிப்பார்

முன்னொருகால ஆற்றுவழிப்பாதை இருந்ததனால்
அழைக்கிறார் கிட்டங்கி துறையுமென்று
போட்டெனும் மரக்கலமும் மட்டூர் வாவி
முறையாக ஒரு நாள் விட்டுப் பயணமாகும்
வள்ளங்கள் கல் ஏற்றி பாயின் னோடி
வந்து நிற்கும் கிட்டங்கி துறையினூடே
குடிவகையும் பொருள்பலவும் கொப்பிறாவும்
கொண்டு வரும் ஆனை வண்டில் இங்கு நிற்கும்
ஏற்றுதற்கு இறக்குவதற்கு களஞ்சியங்கள்
இருந்ததற்கு வரலாறு இங்கு உண்டு

வடக்கு துறை வந்திய மேடு வளம் கொழிக்கும்
வயல் வெளியும் மேற்கு வட்டைக் காணியாமே
தெற்கினிலே சென்னல் விளை அனேக காணி
சேர்ந்திங்கிருப்பதனால் சென்னல் குடியூர் என்பர்
புல்வெளியும் கிரான் வெளியும் தாமரையும்
பூத்திருக்கும் அல்லி மலர் ஆம்பலெங்கும்
பாய்ந்தோடும் கயல் மடியில் விரால் இடித்தால்
பால்சுரந்து எருமை இனம் கன்றைத்தேடும்
நெற்கதிர்கள் தென்றலுக்காய் அசையும் காட்சி
நீங்காது எம் விவசாயி மனதை விட்டே
மாவடி ஆறு நல்பிட்டி ஆறு மங்கைபுனல்ஆறு
கிரான்வெளியும் ஆறு
சிறாறு வில்லாறு கரையும் ஆறு
சேர்ந்து வீடும் கிட்டங்கி ஆறும் உண்டு

வற்றாத வாவி சூழ் இக்கிராமத்தில்
வாழ்கின்ற மக்கள் எல்லாம் மொழிப் பற்றுள்ளோர்
தொழிலாளி விவசாயி, மேசன், தச்சு
தொண்டரோடு கவிஞர் கணேச வித்தியாலயமும்
கருணை கொடு மாரியம்மன் உறையும் ஊரே
சித்தியருள் விநாயகனார் சிவனார் கோயில்
சிறப்புற்ற கல்வி மான்களைப் பெற்ற ஊரே
வைத்தியர்கள், மாந்திரீகம், சாஸ்த்திரத்தில்
வல்லவர்கள் விளையாட்டு வீரர் வாழு மூரே
காளியம்மன், காமாட்சி, கும்பக்காட்சி
காணுகின்ற எமது ஊர் சேனைக்குடியிருப்பாமே
இக்கிராமம் மண் மறவா இளையோர் நீங்கள்
ஏன் தயக்கம் கூறிடுவீர் எமது ஊரை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்போதே தமிழ்மொழி செம்மொழிதான்

**- கலைக்கொழுந்தன்**

பூவேந்திக் கலைமகளை நாட்காலம்
பூசித்துப் பாடும் பொன் மொழி
நாவேந்தர்கள் - நல்லாசான்கள்
நாளும் நனி நேசிக்கும் நன்மொழி
மூவேந்தர்களாட்சியில் அரசு மொழி
முச்சங்கம் வைத்தாய்ந்த மொழி
பாவேந்தர்கள் - ஆன்ற பேரறிஞர்கள்
பாதுகாத் தெடுத்த தாய்மொழி

மொழிகளில் மூத்த மொழி தமிழ் மொழி
முக்கனிச் சுவைதனைத் தரும் மொழி
மொழிகளில் சொற்பஞ்ச மில்லா மொழி
முழுமையில் செழுந்தும் வெள்ளமொழி
மொழிகளில் தனிமரபைக் கொண்ட மொழி
முற்காலமே செல்வாக்கைக் கண்ட மொழி
மொழிகளில் நூலதிகம் தந்த மொழி,
மாட்சிக்கு மறுமைக்கும் சொந்த மொழி

எத்தனையோ மொழிகள் ஏறுதலையடைய
எஞ்ஞான்றும் ஒத்திசைவா யுள்ளமொழி
எத்தனையோ சொற்களைக் கொடையாக
ஈந்தபெரும் பரோபகார மொழி
அத்தனை மொழிகளுக்கும் அண்டத்தில்
ஆணிவேராயமைந்திட்ட மூத்த மொழி
எத்துகத்தோரழித்த பொழுதிலும்
வல்லோனாய்ப் பிரகாசிக்கும் மொழி
சேர்ந்த மொழிகள் பதின்நான்கைச்
செப்பமாய் மொழிபெயர்த் தெடுக்கவும்
வார்த்தைகள் சிலதுக் கேற்றதான
வாகுசொல் லெந்தமொழியிலிருப்பினும்
அர்த்தம் சேர்தனிச் சொல்லாயின்
அந்தச் சொல்லைத் தேர்ந்து
பார்த்து உபயோகப்படுத்துவது
பற்றி முடிவொன்றினை யெடுக்கவும்
இந்திய மத்திய அரசு புது
டில்லியின் சிறப்புக் கூட்டத்தைச்
செந்திறத்தோரை யழைத்து நடத்தச்
செவ்வையேற்பாடு செய்திருந்தது
சுந்தரத் தமிழ் மொழி சார்பில்
ரா.பி. சேதுப்பிள்ளையவர்கள்
செந்தமிழக மிருந்து போயிருந்தார்.
சீராகக் கூட்டம் நடைபெற்றது

அங்கே 'Custom', 'Tax'
'Assessment, 'Duty" என்ற
ஆங்கில வார்த்தைகளுக் கிணையான
அழகான தனிச் சொற்களுக்காக
பொங்கி யெழும் விவாதம் நடந்தது
இந்தி மொழியில் 'சூர்க்கா' வென்று
சங்கைக்கா யொருசொல் மட்டுமே
சொல்லினர், நாலுவார்த்தைகளுக்கும்


மற்ற மொழிக் காரர்களிடமிருந்து
மௌனமொழி மாத்திரமே கிடைத்தது
ஏற்றநற் சொற்களை யாருமங்கே
எதிர்பார்த்தளவு சொல்லவில்லை.
ஈற்றில் கூட்டத் தலைவர்
ரா.பி.சேதுப்பிள்ளை யவர்களை
உற்றுப் பார்த்தபடி "தமிழில்
இருந்தால் சொல்லுங்கள்!" என்றார்.

மங்காத் தமிழ் மொழி வாழ்த்தி
மணிமகுடம் சூடச் சென்ற
தங்கத் தமிழ் பேராசிரியர்
தயக்கமேதுமின்றி உடனந்த
ஆங்கில வார்த்தைகள் நான்கிற்கும்
அமைவான வார்த்தைகளாகச்
சுங்கம், கடமை, தீர்வை
வரி' யென்று வடிவாகச் சொன்னார்.

இப்போது நடந்த நிகழ்வல்ல
இது கடந்த நூற்றாண்டில் நடந்தது
அப்போதே தமிழ் மொழி
செம்மொழிதான்
என்பதச் சொட்டாய் உறுதியாயிற்று...!
எப்போதோ அதிகார பூர்வமாக
அறிவிக்க வேண்டிய விடயமிது
இப்போதுதானிதற்கான நேரகாலம்
இயைந்து வர விரும்பின போலும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# விபுலானந்த வணக்கம்



சங்கத்திலே நின்று தமிழாய்ந்தானென்பார்கள்
தனியேறு மயில் வாகனன்
தமிழிசையே வென்று யாழ்நூலையே இங்கு
தந்தானோர் மயில் வாகனன்
வெங்கொடிய மார்பிளந் தங்கமரர் சிறை மீட்டு
வென்றவன் வேலாயுதம்
வித்தகர் புகழ்ந்து தொழ மற்றவர் மகிழ்ந்துகொள
விதித்த திவன் பேனா யுதம்
புங்கவர் துயர் தீரச் சரவணப் பொய்கையில்
பிறந்தவன் மயில் வாகனன்
புனிதவதி கண்ணம்மை நனிமகிழ் காரைநகர்
பூத்தவன் விபுலானந்தன்
மங்கையுமை பாலநிகர் எங்கள் குல மேம்பட
மலர்ந்த நற்றமிழ்க் கொண்டலே
மன்னுவிபுலானந்த மணியே நின் மலரடிகள்
வாழ்த்தி வணங்குகிறேன் ....

மண்ணில் தருமநெறி மாய்ந்தால் அதர்மமே
வாளேந்தி அரசு புரிந்தால்
வருவேன் நான் நிச்சயம் அவதார ரூபமாய்
மக்களை வாழ்த்த என்ற
கண்ணனின் மொழிக்கேற்ப விண்ணோர் புகழ்கின்ற
காரைதீவில் பிறந்து
கமழ்கின்ற பேரெண்ணேன் கலையெலாங் கற்று மேற்
கலையிற் சிறந்து நனிசீர்
தண்ணென்ற முத்தமிழ்ச் சலதியற் கரைகண்டு
தத்துவப் பிரகாசனாய்
சர்வனற் கலாசாலை அதிபராய்த் தமிழன்னை
தரணிக் களித்த சுதனாய்
உண்ணிகழு மன்பாலே ஒளியற்று விழியற்று
உறங்கிக் கிடந்த நாட்டை
ஓயாது வாடாது உறங்காது காத்தவனை
உன்னிப் பணிந் தேத்துவேன்.

**- அக்கரை மாணிக்கம்**



# ஏற்றம் மலரும்

பளிச் செனமுகம் காட்டும்
சருவக்குடம் அரசிலை வட்டா
வட்டில் சேவரக்கால்
கட்டிக்காப்பு அட்டியல் சிமிக்கி
எல்லாவற்றையும் இழந்து நிற்கிறோம்!
எங்கள் முதிசங்களைப் பறிகொடுத்து
பச்சை நீலம் சிவப்பு பிளாஸ்ரிக்கை வாங்கினோம்!

வட்டிலில் வைத்து தாயூட்டிய அறுசுவை உணவே
தளம்பா உடலும் தைரியமும் தந்தது!
தனித்துவமான சிந்தனையும் செயலும் வளர்ந்தது!

தன் நிகர் இல்லாத் தனிப்பெருந் தூணாய்
நிமிர்ந்து நின்றோம்! நினைத்ததை வென்றோம்!
நேற்றை மறந்தோம் நிலத்தை இழந்தோம்!

நேற்றைய வாழ்வே இன்றைய உயர்வாம்!
நேற்றொடு இன்றும் இணைய முயன்றால்,
நமக்கு இன்றும் நாளையும் ஏற்றம் மலரும்!
நம் அடுத்த தலைமுறை ஆளும் உலகை!

**- எம்.கே. வேல்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மியில அரைக்கையில

பொன் செத்தல் நாலு வச்சி
புளியோடும் உப்பும் சேர்த்து
வெண்ணிறத்து தேங்காய்ப்பூ
வெள்ளைப்பூண்டு ரெண்டு துண்டு
அம்மியில அள்ளி வச்சி
அரைக்கிற வேளையிலே...

தேகமெல்லாம் எச்சில் ஊறும்
தேகமெல்லாம் வாசம் ஏறும்
தேங்காய்ப் பூ நெய் வடிஞ்சி
தேனாட்டம் குழைஞ்சிருக்கும்

அயிரை மீன் குழம்பு வச்சி
அரைக் கொதி கொதிக்க வச்சி
அள்ளித் திங்கையில
ஆகாசம் போல ருசி
அடி நாக்கில் தொக்கி நிற்கும்

துறையடி நண்டெடுத்து
துண்டுப் பல்லாய் தேங்காய் போட்டு
தூக்கலா மிளகு தூவி
தின்னுறது என்ன சுகம் !
அம்மியில அரைச்ச கறி

அடுத்த வீடு மணக்குமடி
அத விட்டு இண்டைக்கெல்லாம்
அரைச்ச பவுடர் போடுதுக
என்ன சொல்ல அப்பத்தா
இதெல்லாம் பழசாத்தா
அம்மிக் கல்லு குழவியெல்லாம்
ஆரறிவார் பட்டணத்தில்

எங்க நாக்கு செத்துத்தான்
இருபது வருசமாச்சி
எனக்கு வாச்ச சிறுக்கிக்கு
இதெல்லாம் எக்ஸிபிசனாச்சி

இதுக்கு மேல் எழுதவில்ல
இரவைக்கு சோறு வேணும்
என்றதால முடிக்கிறன்
இதுவும் பயந்திட்டுத்தான்.

-சே. இந்திரா



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாண்டிருப்பு வனவாசம்

## உச்சமான ஒரு உலா அரங்கு

- சஞ்சீவி சிவகுமார்

கிழக்கிலங்கையின் வரலாறு மற்றும் பண்பாட்டுப் பாரம்பரியங்களில் பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயத்துக்கு முக்கிய பங்குண்டு. இந்தியாவிலிருந்து மகாபாரதக் கலாசாரத்தை உலகெங்கும் கொண்டு செல்லும் நோக்கில் இங்கு வருகை தந்த தாதன் எனும் மாமுனிவனின் வழி காட்டுகையில் எழுச்சி பெற்று, இப்பிரதேச மக்களின் பண்பாட்டுடன் இரண்டறக் கலந்து, சடங்காற்றுகையுடனான வழிபாட்டு முறைகளை தன்னகப்படுத்தி மக்களின் நம்பிக்கையுடனான வழிபாட்டுக் கூறாக நிற்பதுவே இந்த முக்கியத்துவத்தின் அடிப்படை.

பதினைந்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அரசாண்மை செய்த எதிர்மன்னசிங்கனின் விருப்புடன் இவ்வாலயம் அமைக்கப்பட்டது. தீயவர்களின் வன்மங்களுக்கும் கொடுமைகளுக்குக்கும் எதிராக எடுக்கப்படும் சபதம், ஆழ்ந்த பக்தி மூலம் தருமம் நிலை நாட்டப்படுவது என யுகங் கடந்து நிலைத்து நிற்கும் இதிகாசம் மக்களின் பக்திப் பிரவாகத்துடன் நிகழ்த்தப்படும் முறைமையாகவும் இதனைப் பார்க்கலாம். காலப் பழமை மிக்க பண்பாட்டை அதன் சாரம் மாறாமல் மக்கள் இன்னும் கடைப் பிடித்து வருவது இதன் மற்றொரு சிறப்பு.

பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயச் சடங்கு வழிபாட்டினை குருச்சேத்திரத்தில் நடைபெற்ற 18 நாள் போர் குறித்த போதனைகளை காட்சிப் புலமாகக் கொண்ட ஒரு பெண் தெய்வ வழிபாடு என மேலோட்டமாகக் கூறலாம். ஆயினும் இந்த கூற்றைவிட பன்மடங்கு உறுதி மிக்க பயபக்தியும் நம்பிக்கையும் ஈடுபாடும் இவ்வாலயச் சடங்காற்றுகையின் பால் மக்களிடையே காணப்படுவது முக்கியத்துவம் கொடுத்து நோக்கத்தக்கது.

பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயச் சடங்குகளில் முதன்மை மிக்க நாட்களாக காணப் படுபவை அதன் நிறைவு மூன்று நாட்களான வனவாசம், தவநிலை, தீப்பள்ளயம் ஆகியவையாகும். இந்த மூன்று நிகழ்வுகளும் பாரதப் போரின் முக்கிய கதை யுறுப்புகளை நிகழ்த்திக் காட்டுவனவாக அமைவன. இதில் தவநிலை அருட்சுனன் சிவபெருமானை நோக்கி பாசுபதம் பெறுவதற்காக ஆற்றிய கடும் தவத்தினைக் காண்பிக்கின்றது. பல்வேறு தடைகளைத் தாண்டியும் இலக்கு மாறாத தவத்தின் உச்சமாக, அருட்சுனன் தவநிலை கொள்ளப் படுகின்றது. ஏலகண்ணி மறித்தல், பேருண்டி மறித்தல், பன்றி மறித்தல் எனப் பல்வேறு இடையூறுகள் வருகின்றன. இவற்றையெல்லாம் தாண்டி, சிவபெருமான் வேடுவனாக வந்து தவத்தினைச் சோதிக்கின்றார். இறுதியில் பாசுபதம் பெறும் நேர்வைச் செய்து காட்டும் நிகழ்வாக ஒரு பின்னிரவு தாண்டிய வேளையில் தவநிலை நடந்தேறுகின்றது.

மறு நாளான பதினெட்டாம் நாள் தீப்பள்ளயம். ஒரே நாளில் 18 தடவைகள் கட்டு நிறுத்தல் மேற் கொள்ளப்பட்டு, வழி பாடாற்றப்படும். பிற்பகலில் மஞ்சள் குளித்தல், தீ மிதித்தல் என்பன நிகழும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு மார்க்கமின்றி இனி யுத்தந்தான் முடிவாகும் என்ற நிலையில் நிகழ்ந்த குருச்சேத்திரம் போரின் முடிவில் 'தர்மம் மறுபடியும் வென்றதாக' ஐவர் கொலு யாகத்தீயில் புகுந்து வெளிப்பட்டு அஸ்தினாபுரத்தில் மீண்டும் முடி சூட்டுகின்றனர் எனும் முடிவு அது.

திரௌபதி அம்மன் ஆலயச் சடங்கு விளக்கு கின்ற சடங்காடல் யாவுமே ஒரு கரு நகர்வு கொண்ட நிகழ்த்துகையாக திகழ்ந்தாலும் வனவாசம் ஒரு முழுமையான உலா அரங்கமாக மேம்பட்டு நிற்கின்றது.

பகடையாட்டத்தில் தோற்றுப் போன தர்மர் ஆதியோர் ஏற்றுக் கொண்டபடி 12 ஆண்டுகள் வனவாசம் செய்ய வேண்டும். அடுத்துவரும் 13 ஆம் ஆண்டு யாரும் காணாதபடி மறைந்து வாழ வேண்டும். காட்டு வாழ்க்கையின் பல்வேறு பரிமாணக் கூறுகளையும் காட்டுவதாகவும் மத்சய (விராட) தேசத்தில் மறைந்து வாழ்ந்ததைச் சுட்டுவதாகவும் இந்த வனவாசம், அஞ்சாதவாசம் என்பன அமைகின்றன. சடங்கு சார்ந்த பக்தி பூர்வமான இந்த நிகழ்த்துகை பகுதியளவு பங்கு பற்றுகை அரங்காகவும் காணப்படுகின்றது. கட்டுப் பாடின்றி இணைதலும் தவிர்த்தலும் சாத்தியமாவதே அது.

காவடி எடுப்போர், தீச்சட்டி தூக்குவோர், வாயலகு போடுவோர் என ஆயிரக் கணக்கானோர் புடை சூழ தேவாதிகளோடு உற்சவத்தின் 16ஆம் நாள் பயணிக்கும் பாண்டவர் கொலு மகாபாரதம் கூறும் வனவாசத்தை நிகழ்த்தும். அயல் கிராமங்களினூ டாக தோராயமாக 6 இலிருந்து 7 கிலோ மீற்றர் பயணிக்கும் வனவாசம் ஓர் உச்சமான உலா நிகழ்த்து கையாகக் *(Processional Performance)* கொள்ளக்கூடியது.

உலா அரங்கு அல்லது பவனி அரங்கு *(Processional Theatre)* என்பது ஸ்பெயின் நாட்டினைத் தளமாகக் கொண்டு 14 ஆம் 15 ஆம் நூற்றாண்டுகளில் வளர்ச்சி பெற்ற ஒரு சடங்கு சார் அரங்கமாகவே ஆய்வாளர்கள் காட்டுவர். மேற்கத்தேயத்தில் காணப்பட்ட மத்திய காலத்துக்குரிய*(Medieval)* அரங்காக இது வகைப் படுத்தப்படும். அரங்கியல் வரலாற்று ஆய்வாளரான டேவிட் வெல்ஸ் உலா அரங்கு நான்கு செயற்பாட்டுக் கூறுகளைக் கொண்டமைவதாக கொள்வார். அவை தலயாத்திரை *(pilgrimage)*, அணி ஊர்வலம் *(parade)*, பண்பாட்டுப் பொருந்துகை *(mapping)*, மற்றும் விபரிப்பு *(narrative)* என்பனவாகும். இவற்றில் ஒன்று அல்லது பல செயற்பாட்டுக் காரணங்களைக் கொண்டதான உலா அரங்க நிகழ்த்துகைகளையும் அவர் உதாரணங் காட்டுவார். போர்த்துக்கல்லின் நகரத் தேவாலயமான சயோ கிளமெண்ட்டிலிருந்து வீதி வலமாக கன்னி மாதாவின் திருச்சொரூபம் மலையிலுள்ள சயோ பிரன்சிஸ்கோ தேவாலயத்திற்கு பவனியாக கொண்டு வரப்படுவதை ஆதாரமாகக் கூறுவார். ஆனால் பாண்டிருப்பு வனவாசம் இந்த நான்கு செயற்பாட்டுக் கூறுகளையும் ஒருங்கே காட்டுவனவாக அமைவது அரங்கியல் ஆய் வாளர்கள் மிக ஆழமாக நோக்கவேண்டியவொன்றாகும்.

ஆலயத்தில் இருந்து ஆரம்பிக்கும் பாண்டவர் கொலுவின் வனவாசம் பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை, மணல்சேனை, சேனைக்குடியிருப்பு, உப்புத்தண்ணிக் கட்டு வயல்பகுதி ஆகியவற்றினூடு செல்லும். காவடிகள், கற்பூரச் சட்டிகள், கரகங்கள் புடைசூழ பக்தர்கள் திரள் திரளாக அணி கூட்ட இந்தப் பவனி நிகழும். மக்கள் வழிநெடுகிலும் வரவேற்று ஆசி பெறுவர். அங்குள்ள ஆலயங்களில் பாண்டவர்தாம் கூடவே கொண்டுவந்த கட்டுச்சோற்றினைக் கொண்டு பந்தியிருப்பர். பசியாறுவதாகப் பாவனை செய்வர். பின் அது குடிவழி கூறப்பட்டு பகரப்படும். வீமன் தனது வாளினால் எதிர்ப்படும் காய்கறிகளைப் பறித்துக் கொண்டு செல்வார். அதைத் தாண்டி உப்புத் தண்ணிக்கட்டு எனும் வயல் பகுதியினூடாக செல்லும்போது எந்தவொரு சந்தடியுமின்றி பயணிப்பர். இது மட்சய தேசத்தில் மேற் கொண்ட அஞ்ஞாத வாசத்தைக் குறிப்பதாகும். பின் அங்கிருந்து ஐவர் கொலு ஆலயத்தினைச் சென்றடையும். இறுதியாக படையுறக்கம் ஆலயத்தில் நிகழும். இது தான் வனவாசத்தின் சுருக்கமான உள்ளடக்கம்.


இங்கு டேவிட் வெல்ஸ் கூறுகின்ற தலயாத்திரை, ஊர்வலம், பண்பாட்டுப் பொருந்துகை, விபரிப்பு நோக்கம் என்பவற்றில் ஒன்றோ பலதோ ஒரு உலா அரங்கின் செயற்பாட்டுக் காரணமாக அமைதல் என்பதற்கு மேலாக ஒரே சடங்கு நிகழ்த்துகை இந்த நான்கு கூறுகளையும் உள்ளடக்கியதாக முழுமையான ஓர் உலா அரங்காக அமைவதை நோக்கலாம். அயல் கிராமங்களிலுள்ள பல ஆலயங்களுக்கு ஐவர் கொலு யாத்திரை செய்வதும், இறை வணக்கத்தில் ஈடுபடுவதும், அங்கு பந்தியிருந்து பசியாறுவதும், அந்த அன்னத்தை மக்களுக்கு பிரசாதமாக வழங்குவதும் பல ஆலயங்களை இணைக்கும் தல யாத்திரையாக அமைகின்றது. பாண்டவர் அணியின் ஊர்வலம் சிறப்புமிக்க ஒரு கொலு வரிசையாக பல்வேறு அலங்காரங்களுடன் இதிகாச நாயகர்களின் தனிப்பண்புகளை வெளிப் படுத்துவதாக அமையும். தர்மத்தின் அடையாளமாக உதிஸ்டிரன், புஜ பராக்கிரமத்தின் குறியீடாக நிற்கும் வீமன், வில்வீரனான அருட்சுனன், சாத்திர சம்பிரதா யங்களின் பேணலுடனான நகுல, சகாதேவர்கள், ஐவரின் பத்தினியான திரௌபதி.... இப்படி அமையும் பாண்டவர் வரிசையுடன் ஏனைய தேவாதியோரின் வரிசை என்பன இவற்றை அணி செய்யும்.

உலா அரங்கின் மூன்றாவது செயற் பாட்டுக் கூறான பண்பாட்டுப் பொருந்துகை மேலைத்தேயத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வந்த காலங்களில் அவர்களின் நகர அமைப்பு, கட்டட முறைமை ஆகியவற்றையே அதிகம் பேணிக் கொண்டன. ஆனால் கல்முனையில் ஏற்கனவே வேரூன்றிக் காணப்படும் குடிவழி முறைமைகள், குலக் கட்டமைப்பு, சமூக நிலப் பண்பாடுகளுக்குப் பொருந்துவனவாக அமையும் நிகழ்வுக் கட்டமைப்பு ஆகியவற்றைக் காட்டுவனவாக இன்றுவரை காணப் படுகின்றது. டேவிட் வெல்ஸ் காட்டும் உலா அரங்கின் நான்காவது செயற்பாட்டுக் கூறான நோக்குடனான விபரிப்பு 'தர்மம் மறுபடியும் வெல்லும்' என்ற செய்தியைத் தாங்கி விரிகின்றது.

உலா அரங்கு கொள்ளக் கூடிய செயற்பாட்டுக் காரணிகள் அனைத்தையும் சிறப்புறக் கொண்டமையும் ஓர் அரங்கச் செயற்பாடாக வனவாசம் கட்டமைக்கப் பட்டுள்ளமை வியப்பளிக்கும் விடயமாகும். உலா அரங்கின் மூலமாகக் கொள்ளப்படும் ஸ்பெயின் நாட்டில் அது ஊற்றுப் பெற்ற ஏறக்குறைய அதே காலப் பகுதியில் ஈழத்திலும் அது விருத்தி பெற்றுள்ளது. தொடர் சடங்காக அது பின்பற்றப் பட்டும் வந்துள்ளது. ஈழத் தமிழரிடையே ஓர் ஆழமிக்க உலா அரங்கச் செயற்பாடு வேரூன்றிக் காணப் பட்டமைக்கு இன்னும் தொடரும் வனவாசம் மிக முக்கிய சான்றாதாரமாகும். ●




உண்மைகளை சுமந்து பிறந்த உலகம்
இன்று ஊமையாக நிற்குது பார்
மனித அறிவின் வளர்ச்சியில்
கடவுள் காத்த கண்ணியமும்
கருணை கொண்ட
புண்ணியமும் அற்று
புகழுக்காக பூக்கும் மனிதனின்
நிகழ்வின் வளர்ச்சி கண்டு
கடவுள் கூட அஞ்சி நிற்கும்
மனிதமற்ற கொடுமை கண்டு.....

பணிகளுக்கு நிறைவாகவும்
பண வரவு மேம்பாட்டுக்காகவும்
பகட்டான வாழ்வுக்காகவும்
உண்மைகளை ஊனமாக்கி
உத்தமர் போல் வேஷமிடும்
இப்பூமியில் நாச பயிர்
மனிதர்கள் நாமானோம்.

நீதிநெறி அறிந்திருந்தும்
தன் வாழ்வின் தேவைக்காக
பிறரை நோக வைத்து
குள்ளநரி வேசமிட்டு
குடும்பிகளை அறுத்தெறிந்து
குளித்து மூழ்கி விட்டு
கடவுளுக்கு மரியாதை
செலுத்தும் வரிசையில்
முதல்வராக
ஓடி நிற்கும்
மனிதரானோம்.
ஐந்தறிவு படைத்த ஜீவன்கள்
அறம் அறிந்து போகையிலே
ஆறறிவு படைத்த மனிதனோ
அநீதியைக் கையேற்று
அரோகரா பாடுகிறான்.

ஆலயத்தின் சிறப்புக்காக
அலங்கார ஆடையணிந்து
ஆனந்தக் கூத்தாடியாக
அடையாளம் காட்டுகிறான்.

ஆன்மீகம் தெரியத் தேவையில்லை
அன்புகள் நிறையத் தேவையில்லை
அறநெறி மறந்து வந்து
பொய்யை மறைத்து
மெய் போல் காட்டுகிறான்.

புண்ணியம் அற்று பாவம் தேடும்
கண்ணியமற்று காரியம் முடிக்கும்
உயர்வுக்கு அடிபணிந்து
தாழ்வுக்கு உயர்வாகும்
மனித மாமிசத்தை விழுங்கும்
உலகமொன்றை நாம்
காண்கிறோம்

கடவுள் கூட மனிதனுக்குப் பயந்து
பொய்யான வாழ்வுக்கு
மெய்யாக நிற்கிறது
பாவ புண்ணியத்தை மறந்து
புகழே முதன்மை என்பதால்
இதற்கு முத்திரை குத்த
மனிதன் முந்துகிறான்

**- வீ. தவராஜா (கமலன்)**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பின்நகர் காலம்

**-செ.இன்பராஜா**



**நா**ன் பாண்டிருப்பிலிருந்து கல்முனைப் பக்கமாக நடந்து கொண்டிருந்தேன். அரசடியம்மன் கோயில் ஒலிபெருக்கியில் பக்திப் பாடல் ஒலிக்கத் தொடங்கியிருந்தது. சூரியன் உச்சியை நோக்கி ஏறத் தொடங்கியிருந்தது.

வாகனங்கள் 'புழுத்து வழியும்' அந்த வீதியில் நடப்பது ஒரு சாகசப் பயணத்தை ஒத்திருந்தது. விதம் விதமான ஹோர்ன் சத்தங்களுடன் வாகனங்கள் மூர்க்கமான விலங்குகளைப் போல் முன்னாலும் பின்னாலும் வந்து கடந்து கொண்டிருந்தன.

நடைபாதையில் என் காலில் ஏதோ வொரு பொருள் தட்டுப் பட்டது. சின்னதொரு திரையுடன் கைக்கடிகாரம் போன்றதொரு பொருள். கையில் அணியக் கூடிய விதத்தில் ஒரு வித்தியாசமான உலோகப் பட்டியுடன் அது இருந்தது. எடுத்துப் பார்த்த போது எவ்வித அசைவுமில்லாத ஒரு சடலம் போல் அது தென் பட்டது. மீண்டும் அதைக் கீழே வீசி விடலாமா என ஒரு கணம் நினைத்தேன். ஆனால் மறுகணமே அந்த நினைப்பை விலக்கிக் கொண்டு ஒரு வித ஆர்வத்துடன் அதைக் கையில் அணிந்து கொண்டேன். இப்போது ஒரு ஓசை கேட்டது. அதன் திரை உயிர் பெற்றது போலிருந்தது. அதில் 1960என்ற இலக்கங்கள் மின்னிக் கொண் டிருந்தன. என்ன அதிசயம்! ஒரு கணத்தில் நான் நிகழ்காலத்திலிருந்து நழுவிக் கொண்டி ருந்தேன். ஒரே நொடியில் இலைகள் உதிர்ந்து பட்டமரமாவதைப் போலவும், கண் மூடிக் கண் திறப்பதற்குள் உலகின் பகலைக் கிரஹணம் விழுங்கியதைப் போலவும் சூழல் அப்படியே மாற்றமடையத் தொடங்கியது.

குட்டையான கிளையுடன் நின்றிருந்த அரசமரம் உயர்ந்தெழுந்தது. பக்க வாட்டி லெல்லாம் கைகளைப் போல் முளைத்த கிளைகள் நீண்டு சென்றன. வீதியருகே இருந்த அரசடியம்மன் கோயில் சற்றுப் பின்னகர்ந்து சிறிதானது. தன்னை ஒடுக்கி சிறிதானது. வாகனங்களின் நெரிசல் வடிந்து வீதி ஒடுங்கிப் போயிருந்தது. ஒரே பாய்ச்சலில் வீதியின் மறு பக்கத்துக்குச் சென்று விடலாம் போலிருந்தது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வீதியில் சொற்பமான மனிதர்களே தென் பட்டனர். சாறன், வேஷ்டி, அரைக்காற்சட்டை ஆண்களே அதிகமாக இருந்தனர். இறந்தவர் களையும் மறுபடி அங்கே காண்பது எனக்கு வியப்பை அளித்தது .

அங்கேயிருந்த சைக்கிள் கடையில் மெக்கானிக் பரதண்ணன் டியூப் ஒன்றைத் தண்ணீர் நிரம்பிய பேசின் ஒன்றில் வைத்து அமுக்கிக் கொண்டிருக்கிறார். குபுக் குபுக்கென்று நீர்க்குமிழிகள் மேலெழுந்து கொண்டிருந்தன. பக்கத்தில் ஒருவன் கீச்சான் குருவிகளைப் பிடித்து வந்து கட்டுக் கட்டாய் விற்பனை செய்து கொண்டிருக்கிறான்.

டியூபுக்கு ஒட்டுப் போட்டு விட்டு, அது காயும் வரைக்குமான அவகாசத்தில் 'றிம்' ஒன்றைத் தடவிப் பார்த்து சுற்றச் செய்து கொண்டு கீச்சான் வியாபாரியிடம் பேச்சுக் கொடுக்கிறார்.

"பாண்டிருப்பையும், பெரிய நீலா வணையையும் பிரிச்சு, இஞ்சால எடுத்தாச்சு. இனி நாம தலைகீழா நிண்டாலும் ஒண்டும் நடக்கப் போறதில்ல. ஆவெண்டு பார்த்திற்று இருக்க வேண்டியதுதான்..."

"அப்பிடியா அண்ண? இது எப்பிடி உங்களுக்குத் தெரிஞ்சுது?"

"இப்ப சைக்கிள் சரிக் கட்டிட்டுப் போன கிளாக்கர் எனக்கு எல்லாத்தையும் விளங்கப் படுத்திச் சொன்னவர்.."

எப்போதோ ஒரு தடவை பஸ்களும் கார்களும் அபூர்வமாகத் தோன்றிக் கடக் கின்றன. அவற்றில் *EN, EY, 3 ஸ்ரீ, 4 ஸ்ரீ* என்ற இலக்கத் தகடுகள் தொங்குகின்றன. யானைக்கு முந்திய மணியோசையைப் போல் ஒவ்வொரு பஸ்ஸுக்கும் முன்புறத்தில் எஞ்ஜின் தன் கரி மூக்கை நீட்டிக் கொண்டி ருப்பதைப் போலிருந்தது. அவற்றில் இ.போ.ச. என்று எழுதப்பட்டிருக்கின்றன. பெரிய ஓசையுடன் கடக்கும் ஜுக்லிட் கனரக வாகனங்களில் 'கல்லோயா ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தி சபை' என மும்மொழிகளிலும் எழுதப் பட்டுள்ளன.

அக்கம் பக்கம் பார்த்த படி நடந்து கொண்டிருந்தேன். பாண்டிருப்பு சந்தையும், புதிதாக வந்த திரையரங்கும் காணாமல் போயிருந்தன. அங்கே புதர்கள் மண்டியிருந்தன. புற்கள் அசையும் போது பின்னால் குளம் தூரத்தே தெரிந்தது .

கொஞ்சம் தள்ளி 'கல்முனை' பெயர்ப் பலகை கொக்குப் போல் தலையை நீட்டிக் கொண்டிருக்கும் பழைய 'னை' யன்னா எழுத்துடன் நின்று கொண்டிருந்தது. வீதியின் இடது பக்கத்திலிருந்த எல்லாக் கட்டிடங்களுமே மாயமாக மறைந்து போக அந்த இடத்தில் ஒரு சின்ன கராஜ் தெரிந்தது. அதன் வாசலில் ஒரு செம்பாட்டான் மாமரம். இடுப்புக்கு மேல் சட்டையில்லாமல் எண்ணெய், மசி கறை மிகுந்த சாறனொன்றை அணிந்திருக்கும் கராஜ் முதலாளி வீமாப் போடி அதட்டலான குரலில் வேலை பார்க்கும் பையனுக்குச் சொல்லுகிறார் .

'டேய் ! அவ்வளவு தூரமில்லடா... மருதமுனை முடக்குத் தாண்டினா பள்ளிவாசல். அதில இருந்து கொஞ்சத் தூரம்தான் தவறணை. தவறணைக்குப் பக்கத்தில நாட்டோடு போட்ட உடையார்ர வீடு. பழைய வில்லுத் தகடை ஆரிட்டையாவது குடுத்தனுப்பு எண்டவன்.... நீ போனா பத்து ரூபாயைத் தூக்கித் தருவான். தவறணையில அதைக் குடுத்து எண்ட பேரைச் சொல்லு. அப்பத்தான் கலக்காத திறம் சாமான் தருவான்... நேத்து கணபதிட கடையில புகையிலைத் தண்ணி கலந்ததைக் குடிச்சு....தலையெல்லாம் இன்னும் சரி வரல்ல...''

கராஜ்ஜைத் தாண்டியதும் வீதியில் ஒரு வளைவு. வளைவை ஒட்டியதாக இடது புறம் ஒரு பெரிய விளம்பரப் பலகையொன்று நடப்பட்டிருக்கின்றது. பச்சை வர்ணப் பின்னணியில் ரோலேக்ஸ் கைக்கடிகாரம், பிலிப்ஸ் ரேடியோ, நாலைந்து புத்தகங்களின் அடுக்கு, ஒலிபெருக்கி ஆகியவற்றின் படங்களைக் கொண்ட சிசிலியா புத்தக சாலையின் விளம்பரம் அது. ஒலிபெருக்கியின் படத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே அது ஊர் முழுவதுக்குமாக அலறுவது போன்ற சத்தம் காதில் கேட்டது. வீட்டில் ஏதாவது விசேஷம் என்றால் ஒலி பெருக்கியை மரத்தில்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கட்டி, அலற விட்டு மூன்று நாள் கொண்டாடித் தீர்த்து விடுவார்கள். அந்த மூன்று நாளும் கத்திக் கத்திப் பேசுவதில் அக்கம் பக்கத்தாரின் தொண்டைக் குழியில் ஈரம் வற்றிப் போயிருக்கும்.

கொஞ்சம் தள்ளி தாழவெட்டுவான் சந்தி. அங்கே வட கிழக்கு மூலையில் தனியார் வீடொன்றில் 'தொழில் வாய்ப்பு அலுவலகம்' இருந்தது. உள்ளே உத்தியோகத்தர்கள் முன்னால் உள்ள மேசைகளில் கோப்புகள் ஒன்றன் மேல் ஒன்றாக உறங்கிக் கொண்டிருக்கின்றன. தாள்கள் காற்றுக்குப் படபடக்கின்றன. ஒருவருடைய விபரங்கள் மற்றும் கல்வித் தகைமைகள் பற்றிய தகவல்களைச் சேகரித்து வைத்திருக்கும் இந்த அலுவலகம்தான் பொருத்தமான வேலைகளுக்கு ஆட்களைத் தேர்வு செய்து நேர்முகப் பரீட்சைக்கு அனுப்பிக் கொண்டிருந்தது. எட்டுப் பாடங்களிலும் சித்தியடைந்தவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். ஐந்தாறு பேர்களே தேறுவார்கள். உயர்தரம் படிக்க விரும்புபவர்கள் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் என்று சென்று கொண்டிருந்தார்கள். இங்குள்ளோருக்குப் போதிய கல்வித் தகைமை இல்லாததால் யாழ்ப்பாணத் தமிழர்களால் இங்குள்ள வெற்றிடங்கள் -ஆசிரியர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் என நிரப்பப்பட்டுக் கொண்டிருந்தன.

''மிஸ்டர் கந்தசாமி! இதைப் பார்த்தீங்களா? ஆஸ்பத்திரி கங்காணி வேலைக்கு 15 பேருக்குக் கடிதம் அனுப்பினோம். ஆனால் கடைசியில் ரெண்டே ரெண்டு பேர்தான் வந்திருக்கினம்.' என்று ஓர் எழுது வினைஞர் சக உத்தியோகத்தரிடம் அலுத்துக் கொள்வதுண்டு.

கொஞ்சம் தள்ளி தென் கிழக்கு மூலையில் ராசையாவின் சாப்பாட்டுக் கடை. கடையின் மேற்குச் சுவரில்,பிரதான வீதியைப் பார்த்துக் கொண்டிருக்கும் வண்ணம் மிகப் பெரிய அளவில் சினிமா சுவரொட்டி ஒட்டப் பட்டிருக்கிறது. மட்டக்களப்பு விஜயா தியேட்டர் காரர்கள் வந்து ஒட்டி விட்டுப் போயிருக்கிறார்கள். ஜெமினி கணேசன் – சரோஜாதேவி நடித்த 'கைராசி' படம். இது இந்த ஊருக்கு வர இன்னும் இரண்டு,மூன்று மாதங்கள் ஆகலாம். அதற்குள் பார்த்து விட வேண்டுமென்று நினைப்பவர்கள் மட்டக்களப் புக்குக் கிளம்பி விடுவார்கள்.சிலர் குடும்பத் துடன் வாடகைக் காரில் போவதுமுண்டு. ஆனாலும் இந்த ஊரில் எம்.ஜி.ஆருக்குத்தான் மவுசு. ஜெமினி தலைகீழாக நின்று நடித்தாலும் கூட அவரை எட்ட முடியாது. அதிலும் தாஜ்மஹால் தியேட்டரில் எம்.ஜி.ஆர். படங்கள் பந்தயக் குதிரை போல் பிய்த்துக் கொண்டு ஓடும். அது கல்முனை தெற்கில் கல்முனைக் குடி தொடங்கும் இடத்துக்கு சமீபமாக இருக்கிறது..

இன்னொரு தியேட்டர் வாடிவீட்டுத் தெருவில் இருந்த 'ஹரிசன்'.அதன் வாசலில் சின்னதொரு தாமரைத் தடாகம் .அதன் நடுவில் ஒரு பெண் சிலை. தியேட்டர் முகப்புச் சுவரில் சிற்ப வேலைப்பாடுகள். நீச்சலுடையுடன் படுத்துக் கிடக்கும் ஒரு வெள்ளைக் காரியின் விளம்பரத் தட்டி உயரத்தில் தொங்குகிறது. அதன் உரிமையாளரான சைமன் முதலாளி என்ற சிங்களவர் குறுக்கும் நெடுக்குமாக உலாத்திக் கொண்டிருக்கிறார். பள்ளிக் கூடப் பையன்களெல்லாம் வகுப்புக்குக் 'கட்' அடித்து விட்டுப் பதுங்கிப் பதுங்கி வந்து தியேட்டருக்குள் நுழைவதைப் புன்ன கையுடன் பார்க்கிறார். இதை விட 'ரத்தமும் சதையுமான' எவ்வளவு அடல்ட்ஸ் ஒன்லி படங்களை அவர் பார்த்திருப்பார்.

ஹூம்! மனிதர்களுக்குதான் எவ்வளவு ரசனை! 'கைராசி'யும் தேவைப் படுகின்றது. 'மெய் ராசியும்' தேவையாய் உள்ளது .

நான் தொடர்ந்து நடக்கிறேன்.

ராசையாவின் கடையைத் தாண்டியதும் வருவது 'கந்தவாசா' என்ற பெயரைக் கொண்ட ஒரு மாடிவீடு. டி. ஆர். ஓ. அலுவலகம் அங்கேதான் இயங்கிக் கொண்டிருந்தது . பரந்த இந்தப் பிரதேசத்தையே நிர்வகிக்கும் அலுவலகம் இது. வெளியே பொதுமக்கள் ஆங்காங்கே கூடிக் கதைத்துக் கொண்டு நிற்கின்றனர் . உள்ளே டைப் ரைட்டர்கள் விட்டு விட்டு ஒலி எழுப்பிக் கொண்டிருக் கின்றன .

அதிகாரிகளும் எழுதுவினைஞர்களும் இயந்திரங்கள் போல் உள்ளே இயங்கிக் கொண்டிருந்தனர். வெளியே பொதுசனங்கள்.

''மருமகன் பாம்பு கடிச்சுச் செத்து ஒன்பது நாள். அவர்ர கூப்பனை இஞ்ச கொண்டு உடனே குடுக்கட்டாம் எண்டு எங்கட விதானையார் விடுறாரில்ல. அதோட மிச்சம் பதினாலு கூப்பன்களையும் கொண்டு காட்டச் சொன்னாங்க. இப்ப கூப்பிடும் வரை கொஞ்சம் வெளியில இருக்கட்டாம்.. '

'நீங்க எந்த ஊர் ? '

'நிந்தவூர் ....நீங்க ?'

'நான் காரைதீவு... துவக்குக்கு தோட்டா லைசென்ஸ் எடுக்க வந்தன்...''

'உங்கட காரைதீவு விதானையார் தானே எங்களுக்கும்..... புடிச்ச புடியில கூப்பனைக் கொண்டு வர வேணுமெண்டு சொல்லிப் போட்டார்..''

கூப்பன் கார்ட் இருந்தால்தான் அரிசியை இலவசமாகப் பெறலாம். 52 வாரங்களுக்குமாக இலக்கங்கள் இடப்பட்ட அட்டை அது. ஒவ்வொரு ஊரிலும் உள்ள கூப்பன் கடைகளில் அதைக் காட்டிப் பெறுவதற்கு சனங்கள் கூடிக் கொண்டு நிற்பதுண்டு.

மின்கம்பத்தை நெருங்கிக் கொண்டி ருந்தேன். அதுதான் வடக்குப் பக்கமாக நடப் பட்ட கடைசி மின்கம்பம். அதற்கு இந்தப் பக்கம் மின்சார விநியோகம் கிடையாது . நகரத்தில் மின்சார விளக்குகள் எரிந்து கொண்டிருக்கும் போது எங்கள் வீடுகளில் எல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிம்னி விளக்கின் அல்லது ஹரிக்கேன் விளக்குகளின் திரிகள் மண்ணெண் ணையைக் குடித்தவாறு மெல்லிய ஒளியைக் கசிய விட்டுக் கொண்டிருக்கும் .

எதிரே ஆஸ்பத்திரி. காவி வர்ணம் பூசப் பட்ட ஒரு பழைய கட்டிடம். முன்னால் வரிசையாக செவ்வரளி மரங்கள். போகன் வில்லாக்கள் . நிமிர்ந்தும், சாய்ந்தும் நிற்கும் சீமெந்து தூண்களை துருப் பிடித்த முட் கம்பிகள் வேலி என்ற பெயரில் தாங்கிப் பிடித்துக் கொண்டு நிற்கின்றன. பெயருக்குத் தான் வைத்திய சாலைக்கு ஒரு பிரதான நுழைவாயில் இருந்தது . பருமனான ஒருவர் கூட கம்பியை விரும்பிய இடத்தால் உயர்த்திப் பிடித்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்குள் நுழைந்து விடலாம். மயானத்துக்கான நேரடி வாகனம் போல் அங்கு நின்ற 'அம்பியுலன்ஸி'ன் வடிவமைப்பு தோன்றுகிறது.

இந்தப் பக்கம் கல்லாறு,அந்தப் பக்கம் நிந்தவூர் வரையுள்ள மக்களுக்கு இதுதான் பெரியாஸ்பத்திரி.

அங்கு நிற்கும் இருவர் பேசிக் கொள்கிறார்கள்.

"ரெண்டு நாளைக்கு முதல் ராத்திரியில பெண்சாதிக்கு வயிறு நோகத் தொடங்கிட்டு.... அயருக்குக் கார் பிடிப்ப மெண்டா அதுக்கு சைக்கிளும் கிடைக்கல்ல.. ஓட்டமும் நடையுமா மருதமுனையில இருந்து பாண்ட்ருப்புக்கு வந்து காரைப் பிடிச்செடுத் திற்றுப் போனா அதுக்குள்ள வீட்டிலேயே புள்ள பொறந்திட்டுது..... பதிவைக் குடுக்கிறதுக்குத்தான் இப்ப ஆஸ்பத்திரிக்கு வந்த நான்.... நீ... என்ன வந்த?"

"என்ட இடது கால்ல வீக்கம்... வாட்டில இருக்கச் சொல்றாங்க... எதுக்கும் வீட்ட போய்த்தான் வரோணும்....."

வீதியோரத்தில் நின்ற இரண்டு ஆலமரங்களும், நிழல்வாகை மரங்களும் ஆஸ்பத்திரிக் கட்டிடத்தை விடப் பிரமாண்ட மாகத் தெரிகின்றன .

அங்கிருந்த மரநிழல்களில் இருந்த வியாபாரிகள் வெவ்வேறு வர்ணங்களிலும் அளவுகளிலும் இருந்த வெற்றுப் போத்தல்களை விற்றுக் கொண்டிருக் கிறார்கள். மருந்தை ஊற்றியெடுத்துக் கொள்ள போத்தல்கள் தேவை. நோய்க்கு வெளிநாட்டி லெல்லாம் மருந்து மாத்திரமில்லாமல் மாத்திரைகளும் கொடுக்கிறார்களாம் என்று கேள்விப் பட்டதுண்டு.

ஆஸ்பத்திரி முன்னால் தேநீர்க் கடைகள் இரண்டு. அவற்றில் பெரிய கடையிலிருந்து வானொலிச் சத்தம் கேட்கிறது.

'இலங்கை வானொலி வர்த்தக சேவை... நேரம் காலை பத்து மணி முப்பது நிமிடம்...ஜோடி மாற்றத்தில் அடுத்து... பி.லீலா வுடன் இணைவது ஏ.எம்.ராஜா....'

சிறிய தேநீர்க் கடைக்கும், மணற் சேனை செம்மண் வீதிக்கும் நடுவே பற்றை களால் நிரம்பிய ஒரு பாழ் வளவு. அங்கே ஓரளவு வளர்ந்த மஞ்சவணா மரத்துக்குப் பக்கத்தில் பழங்கால சமாதிக் கட்டிடம் ஒன்று. தனியாக இப்படித் துயில்வதற்குப் பின்னால் ஏதேனும் வரலாறு இருக்கக் கூடும்.

பக்கத்தில் செங்கற்கள் பாசி படிந்த தோற்றத் தில் தெரியும், பூசப் படாத பெரு மதில்களை நாலா புறமும் கொண்ட ஒரு கட்டிடம். 'கள்வர்கள்' நுழையா திருக்க கன்னியர் மாடங்கள் இப்படித்தான் அமையும் போலும். 'கார்மெல் கொன்வென்ட்' என அதனை அழைத்தனர். அநேகமான பொழுதுகளில் அதன் கதவுகள் மூடியே இருந்தன. உள்ளேயிருந்து ஓசையெ ழுப்பி அசையும் சவுக்கு மரங்களும், குங்கும நிறப் பூக்களைக் காற்றில் பறக்க விடும் போகன்வில்லா மரங்களும் ஏதேதோ ரகசியங்களைக் கிசுகிசுப்பது போலிருக்கும்.

உள்ளே நுழைபவர்கள் நீள் அங்கியும் முக்காடும் கழுத்தில் தொங்கும் சிலுவையும் கொண்ட அருட் சகோதரிகளையும் சாவி கொடுத்த பொம்மைகள் போல் இயங்கும் மாணவிகளையும் காண்பார்கள். அல்லி ராஜ்யத்துக்குள் ஓர் அர்ஜுனன் போல் அங்கு சுழன்று திரியும் சிற்றூழியன் குரூஸையும்தான்.

உள்ளே சீரான இடைவெளியுடன் குரோட்டன்கள் நின்றன. மஞ்சள் பூக்களை வாரியிறைக்கும் வாகை மரமொன்று நின்றது.கொத்துக் கொத்தான வெள்ளைப் பூக்களுடன் ஒரு புறமாக அலரி மரங்கள் நின்றன. மாதாவின் கற்குகைத் தேவாலயமொன்றிருந்தது. அருட்சகோதரி பாடிக் காட்டுகிறார். எதிரே இரட்டைப் பின்னல், கறுத்த ரிப்பன், வெள்ளைச் சப்பாத்துகளுடன் மாணவிகள். பியானோ இசை காற்றை மென்மையாக்கி அயலெங்கும் பரப்புகின்றது .

கன்னியர் மாடத்தின் எதிரே அரசியல் வாதிகள், முதலாளிகள், அரசாங்க உயர் அதிகாரிகள், சட்ட வல்லுநர்கள் தங்கள் பிள்ளைகளை இறக்கி விட்டுப் போயிருந்த கார் டயர் தடங்கள்.

வாகை மரநிழலில் உட்கார்ந்து ஒரு பெண் பொரித்த கடலை, கச்சான்கொட்டை, அல்வா விற்றுக் கொண்டிருக்கிறாள். பக்கத்திலிருக்கும் ஒருவர் குடை திருத்திக் கொண்டிருக்கிறார். இன்னொருவர், தான் வாங்கிப் படித்த மர்ம நாவல்களைக் குறைந்த விலை யில் மறுபடியும் விற்றுக் கொண்டிருக்கிறார்.

இன்னும் கொஞ்சம் நடந்ததும் 'டீசல் மோட்டோர்ஸ்' எதிர்ப்படுகிறது. ஸ்ப்ரே பெயிண்டின் வாசம் மூக்கை ஊடறுக்கிறது. வாகனங்களை லொட்டு லொட்டென்று தட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு அப்பால் குளம். மாரியில் பெய்த மழைநீர் அசைய விருப்பமில்லாமல் அப்படியே தேங்கி நின்றிருக்க வேண்டும்.

என்ன வேடிக்கை ! எனக்கு முன்னால் ஓர் "உயர்ந்த மனிதர்' கோமாளிகளின் குல்லா அணிந்த படி நோட்டிஸ்களை விநியோகித்த படி வந்து கொண்டிருக்கிறார். பத்தடி உயரம் இருப்பார். அண்ணாந்து பார்த்த நான் பார்வையைக் கீழிறக்கி அவர் பாதங்களைப் பார்த்தேன் . அங்கே கோல்கள்தான்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இருந்தன. அவற்றின் மேல் தன் பாதங்களை வைத்து நடந்து செல்லும் வித்தையைக் கற்றிருக்கிறான் அந்தப் 'பொய்க்கால் மனிதன்'

அவன் வீசிய நோட்டீஸ் ஒன்றை எடுத்து வாசிக்க ஆரம்பித்தேன். 'மல்யுத்தம். இன்றிரவு கிங் கொங்குடன் தாராசிங் மோதுகிறார். தலைமை: கல்முனை பட்டின சபைத் தலைவர் திரு.தம்பித்துரை. நடன நிகழ்ச்சிகளும் உண்டு. இந்த அரிய நிகழ்ச்சியைத் தவற விடாதீர்கள். டிக்கெட்டுகள் 1 ரூபா, 3 ரூபா, 5 ரூபா. இடம் : பாத்திமா கல்லூரி மைதான அரங்கு..'

பாத்திமாக் கல்லூரி பல விடயங் களுக்குப் பெயர் போன ஓர் இடம். மல் யுத்தப் போட்டிகள் நாட்கணக்கில் நடந்திருக்கின்றன. புகழ் பெற்ற சர்க்கஸ் கொம்பனிகள் மாதக்கணக்கில் முகாமிட்டு நிகழ்ச்சிகள் நடத்தியிருக்கிறார்கள். வலம்புரி என்பவர் சைக்கிளோட்டத்தில் பல சாகசங்கள் புரிந்த இடம். பின் பக்கம் பார்த்த படி அவர் சைக் கிளைச் செலுத்தி வட்டங்கள் போட்டிருக்கிறார்.சைக்கிளை விட்டு இறங்காமல் நாட்கணக்கில் இரவு பகலாக அவர் அந்த மைதானத்தில் சைக்கிளோட்டி சாதனை புரிந்தவர். 1957ம் ஆண்டு பெரு வெள்ளத்தின் போது நிவாரணப் பொருட்களை ஏற்றி வந்த ஹெலிகாப்டர் ஒன்று எதிர்பாராத விதமாக விபத்துக்குள்ளாகி இந்த மைதானத்தின் அகன்ற வாய் கொண்ட கிணறொன்றுக் குப் பக்கத்தில் வீழ்ந்திருக்கிறது. அதன் உடைந்த கோலம் நீண்ட காலத்துக்குக் கண்காட்சியாக இருந்தது.

பிரதான வீதியில் குளம் முடிந்ததும் ஜக்வலின் கராஜ் வீட்டுடன் சேர்ந்த மாதிரி இருக்கிறது. முன்னால் அந்த விநோதமான கார் நிற்கிறது. ஐஸ்கிறீம் வியாபாரி வீதியில் ஒலிபெருப்பிச் செல்லும் ஹோர்ன் போலொன்று அந்தக் காரின் பக்கவாட்டில் இருந்தது. அது வீதியால் போகும் போது, 'தங்கரதத்தைப்' பார்ப்பது போல் எல்லோரும் பார்த்து ஒரு கணம் புன்னகைப்பார்கள்.

பின் வெலிகம, வெஸ்லி உயர்தர பாடசாலை மேற்கு வாசல், பாபுஜீஸ், விஜயராஜா மோட்டோர்ஸ், பிஸ்கால் ஓ∴பீஸ் எல்லாம் தாண்டி இப்போது நாற்சந்திக்கு வந்து விட்டேன்.

கண்களைக் கவரும் வகையில் இரண்டு பெரிய சினிமா விளம்பரத் தட்டிகள். ஒன்று 'தாஜ்மஹாலில் இன்றிரவு முல்லை வனம்' மற்றையதில் 'ஹரிசனில் இன்றிரவு கலைவாணன் '

∴பேன்சி ஹவுஸ் வீதி மூலையில் தெரிகிறது. உள்ளே பகட்டான பல சாமான்கள். பாடசாலை உபகரணங்கள். காகிதப்பூ மாலைகள்.

மஞ்சள் மேனியும், தடித்த மீசையும் கொண்ட ஒருவர் முகத்தில் வியர்வை கொட்டிக் கொண்டிருப் பதையும் பொருட் படுத்தாமல் 'இது மேட் இன் ஜப்பான்' என்று கூறி ஒரு பேனாவை விற்கப் பெரும் பாடு பட்டுக் கொண்டிருந்தார் .

வாங்க வந்தவர்'ஜப்பான் சாமான் சரியில்லை. மேட் இன் இங்லேண்ட் இருந்தால் தாங்க' என்று கூறி விட்டு நகர்ந்தார்.

நாற்சந்தியின் தென் கிழக்கு மூலையில் முருகன் ஸ்டோர்ஸ். புகையிலை, சுருட்டு மணம் சூழ்ந்திருக்க பத்திரிகைகள் பல அங்கே தொங்குகின்றன. வீரகேசரி, தினகரன், தீப்பொறி, சுதந்திரன், அம்புலிமாமா, கலைப் பொன்னி, இந்து நேசன், திருமகள், அம்மா, கலை, பேசும்படம், கதம்பம்.....

ஓரிரு ஹோட்டல்களையும், நகைக் கடைகளின் வரிசையையும் தாண்டி தெற்குப் பக்கமாக நடந்து கொண்டிருந்தேன்.

தாஜ்மஹால் தியேட்டர் அருகே நிற்கிறேன். பக்கத்தில் 'எக்ஸெல்ஸியா' ஹோட்டல் இருக்கிறது. அண்மையில்தான் அதைத்திறந்திருந்தார்கள். 'பிறதேசக் குடிவகைகள் கிடைக்குமிடம் 'என்றொரு விளம்பரப் பலகை முன்னால் தொங்கிக் கொண்டிருந்தது. கிடைப்பது மட்டுமல்லாமல் அங்கேயிருந்து குடிப்ப தற்கும் வசதி செய்து கொடுத்திருந்தார்கள். இது குடிகாரர்களை உருவாக்கி சமூகத்தை சீரழித்து விடுமென்று பலரும் கத்திப் பார்த்தார்கள் . அதெல்லாம் எடுபடவில்லை. அப்படி அழிவதையே சிலர் விரும்பியது போலிருந்தது.

அதற்குள் இருந்து வெளிப்பட்ட ஒரு குடிமகன் தள்ளாடிய படி வந்து கொண்டிருந் தார். என்னைக் கடந்து போகும் போது வலது முஷ்டியை உயர்த்தி நாக் குழறிய படி 'உரிமை... உரிமை... உரிமை...' என்று கோஷமிட்டார். தன் கையை ஆக்ரோஷத்துடன் உயர்த்தும் போது அது என் மீது படும் என்று அவர் எண்ணியிருக்க மாட்டார். அவர் கை என் மீது வேகமாகப் பட்டதில் கையில் நான் கட்டியிருந்த அந்த விசித்திரமான பொருள் நழுவிக் கீழே விழுந்தது அதை எடுத்து மீண்டும் அணிந்து கொண்டேன். ஊஹும்! அதில் எந்த அசைவும் இல்லை.பலூன் வெடித்தது போல் அதன் கதை முடிந்திருந்தது .

விதம் விதமான ஹோர்ன் சத்தங்களுடன் வாகனங்கள் மூர்க்கமான விலங்குகளைப் போல் முன்னா லும் பின்னாலும் தாறுமாறாகக் கடந்து கொண்டிருந்தன.

வீதியைக் கடந்து மறுபக்கம் செல்ல வருடக் கணக்கில் காத்திருக்க வேண்டும் போலிருந்தது. எல்லா மனிதர்களுக்கும், வாகனங்களுக்கும் தலை போகின்ற அவசரம்.யாருக்கும் இடம் கொடுக்கக் கூடாதென்ற வைராக்கியம். நான்கைந்து மோட்டோர் சைக்கிள்களில் சமாந்தரமாக, படு வேகத்துடன் வந்த இளைஞர்கள் என்னைக் கடந்து போகும் போது ஆக்ஸிலேட்டர்களை மேலும் முறுக்கிக் கொண்டு கத்திய படி போனார்கள். உன்னிப்பாகக் கேட்டதில் அவர்கள் ஆக்ரோஷத்துடன் சொல்லிச் சென்ற வார்த்தைகள் இவையெனப் புரிந்தன.

'உரிமை....உரிமை...உரிமை... !

ஐம்பத்தெட்டு வருடங்களுக்கு முன்னால் ஒருவர் சொல்லிச் சென்ற அதே வார்த்தைகள்!

●



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மூடப்படுவதற்கு முன்பாக

பிடரியில் குதி அடிபட
நான் இளைத்து இளைத்து
துரத்திக் கொண்டு ஓடுவது எதனை?
அவைகள் வெறும் நிழல்களாக
என்னோடு இருந்து
என்னோடு சிரித்து
என்னோடு மகிழ்ந்தவர்கள்.

நான் அழும் பொழுது மட்டும்
நடு உச்சியில் சூரியன் வந்து விடுகிறது.
சரிந்து சூரியன் விழும் வரை
நான் காத்திருக்க வேண்டுமாம்
மீண்டும் அந் நிழல்களை
துரத்திக் கொண்டு ஓடுவதற்கு.

நாலு கைகளும் கால்களும்
படைத்து வைத்திருக்கிறது
எனக்கு இந்த நகரத்து வனாந்தரம்
யாரும் உமிழ்ந்து விட்டுப் போகட்டும்.

இப்பொழுது மூடப்படாத
சவக்கிடங்குள் எனது பிணம்
வெறும் ஊதுபத்திகளில்
மணத்துக் கொண்டிருக்கின்றேன்
காகிதப் பூக்களில்
அவ்வப்பொழுது அஞ்சலிகள்
மரணத்தில் கதறி அழுவதற்கு மட்டும் உறவினர்கள்

காக்கைகள் காத்திருக்கட்டும்
என் கண்களைப் பிடுங்கிக் கொள்வதற்கு
நாய்களும்தான்
புதைத்ததும் இழுத்துக் குதறுவதற்கு

ஆயினும் என்ன!
அதோ நிலாவிலிருந்து வடிகிறது
என் துயரம் கடலுக்குள்
அவற்றைக் காற்றோடு கலந்து
கவிதைகளாக்கி ஆர்ப்பரிக்கின்றன
கடலலைகள்!




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சவப்பெட்டிக்குள் ஒரு பார்சல்

எங்கேயோ அனுப்புவதற்காய் பொதி செய்யப்பட்ட
பார்சலாகிக் கிடந்தேன் நான்
திடீரென என் கனவில்
ஏதோ முகவரி எழுதுப்படுவது போல் இருந்தது
எனினும்
எங்கு எடுத்துச் செல்லப்படுவேன்
நான் குழம்பினேன்
ஏனெனில்,
எழுந்து பார்க்க முடியாதபடி,
உள்ளடக்கங்களுடன்
நான் அடைத்து வைக்கப் பட்டிருந்தேன்.

நான் கூச்சலிட்டுக் கத்தினேன்.
யாருக்கும் கேட்கவில்லை.

ஒரு பார்சலுக்குள்
தடுத்து வைக்கப்பட்டு
நான் ஏன் சிறை
வைக்கப்பட்டிருக்கிறேன்?
எனது சூழலிருந்து
என்னைப் பிடுங்கி எடுத்து
காணாமல் செய்தது
என்ன குற்றத்திற்காக?

மீண்டும் கூச்சலிட்டுக் கத்தினேன்
யாருக்கும் கேட்கவில்லை.

நான் அங்கும் இங்கும்
தள்ளாடியபடி
ஒரு சவப்பெட்டிக்குள்
நால்வரின் தோள்களில்தான்.

இருவர் என் கால்மாட்டில்
இருவர் என் தலைமாட்டில்
என்னை சுமந்து சென்றனர்.

இறுதியில்
எவராலும் எந்த முகவரியிலும்
ஏற்கப்படாமல்
எங்கும் ஒப்படைக்கப்படாமல்
எனது முகவரிக்கே நான் திருப்பி அனுப்பப்பட்டிருந்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தைக்
# காற்றில் தூக்கிப் பறப்பவள்

டாக்டர். (திருமதி) **பு.லோகநாதன்** (மலரா)



சேர்த்து வைத்துள்ளேன்
என் பத்திரங்களில்
பிடித்தமானதை

அப்பாவின் ஆளுமைக்குள்
விரித்த சிறகுகள்
பரந்த வெளிக்குள்
இன்னமும் ஊடுருவியபடி
காலத்தின்
எனக்கான கணங்களைக்
காற்று
தூக்கிச் செல்கிறது

கைகளில் மீந்திருக்கும்
எஞ்சிய வாழ்வு
அழகுறவே - நழுவுகிறது
தனித்தலையும் போதுகள்
கம்பீரத்துள் அமிழ்கிறது

பள்ளயக் கோயிலில்
ஆண்டுக்கொரு முறை
உற்சவம் கண்டாலும்
அம்பாளின் ஆட்சி
நிதமும் நடக்கிறது
பனி அணிந்திருக்கும்
அதிகாலைப் போதுகளின்
ஈரலிப்பு
சாசுவதங்களைச் சொந்தமாக்கும்

நேர்மைக்கும்
அநீதிக்குமான கலவைகளில்
வாழ்வு
நொடிகளைக் கடக்கிறது

விரியும் தெருக்களில்
பனி ஈரலித்தாலும்
தூசு படிந்தாலும்
பயணமொன்று தொடர்கிறது

பெண்ணான அழகியலோடு
என் முற்றத்து மல்லிகை
கிளைகளை வியாபிக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கவிதைகள்
## ஒரு நோக்கு

- கலாநிதி. பரதன் கந்தசாமி

**மொ**ழியின் அழகிய குழந்தை கவிதை. கவித்துவத்துடன் எழுதப் பெறும் கவிதைகள் எந்த மொழியில் அமைந்தாலும், அவை மனித உள்ளங்களை மகிழ்விப்பதனாலும், மனித சமூகத்தை மாற்றும் சக்தி படைத்ததினாலும் "கலைகளுக்கெல்லாம் அரசி கவிதை" எனப் போற்றப் படுகிறது.

தமிழ்க் கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், சங்க காலம் முதல், தற்காலம் வரை பல்வேறு பரிமாணங்களைக் கொண்டது. பனையோலைக் காலத்தில் செய்யுட்களாக தோற்றம் பெற்ற கவிதைகள், காகித காலத்தில் உருவத்திலும், உள்ளடக்கத்திலும் பல்வேறு மாற்றங்களை உள்வாங்கி வளர்ச்சியடைந் துள்ளன. இதனால் செய்யுட்கள் எல்லாம் கவிதையாகி விடாது. அதுபோல் வசனங்களும், வார்த்தைகளும் கவிதையாக முடியாது என்ற வரைவிலக்கணங்களையும், கட்டுக்கோப்புக்களையும் கவிதை பெற்றுக்கொண்டது.

சங்கப் புலவர்கள் பாடு பொருளை அகமென் றும், புறமென்றும் இண்டாக வகுத்தனர். காதற் சுவை நிறைந்த, வீரச்சுவை மலிந்த செய்யுட்களை இயற்றினார். பின்வந்த புலவர்கள் பாடுபொருளை, அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு புருட்டாந்தங்களையும் இணைத்து, மேற்கணக்கு, கீழ்க்கணக்கு வரிசையில் அடங்கும் நூல்களை இயற்றினர்.

அகத்தியர், புலத்தியர், தொல்காப்பியர், அதங் கோட்டாசிரியர், காக்கை பாடினியர், ஆதி மந்தியர், நக்கீரர், கணியன் பூங்குன்றன், வான்மீகி, கம்பர், காளிதாசர், காளமேகம், ஓட்டக்கூத்தர், ஜெயம் கொண்டார், கச்சியப்பர், வள்ளுவர், இளங்கோ எனப் பல புலவர்கள் காவியம், பிரபந்தம், கோவை உலா, அந்தாதி, சிந்து, சிலேடை, தூது, கண்ணி, பிள்ளைத் தமிழ் எனப் பல்வெறு கவிவடிவங்களை உருவாக் கினார். இதனால் தமிழ்ப் புலம் வளமுற்று கவிப்புலம் செழித்தது.

கவிதைக்கென்றொரு மரபும், யாப்பும் தோற்றம் பெற்றது என்பதைப் பின்வரும் கூற்றுக்கள் வாயிலாக உணரலாம்.


"விருந்தே தானும்
புதுவது கிளர்ந்த
யாப்பின மேற்றே"
- தொல்காப்பியம்

"எழுத்தசை, சீர்தளை, அடிதொடை தூக்கொடு
இழுக்கா நடையது யாப்பெனப் படுமே"
- யாப் பருங்கலம்


"சொல்லுக சொல்லை அச்சொல் பிறிதோர் சொல்
வெல்லும் சொல் இன்மை அறிந்து"
-திருக்குறள்


என மரபுக் கவிதைக்கு எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பவற்றோடு ஓசையும் பா வகையும் முக்கியமாக்கப் பட்டது. ஓசைகளை செப்பலோசை, அகவலோசை, துள்ளலோசை, தூங்க லோசை என்ற வகையில் வெண்பா, அகவற்பா, கலிப்பா, வஞ்சிப்பா என நால்வகைப் பாவினங் களையும், யாப்பிலக்கணம் வலியுறுத்தியது.

அத்தோடு மரபுக் கவிதைத் தத்துவமானது புரிதலுக்கானதல்ல, மாறாக உணர்தலுக்கானது. எனவே உணர்வைச் சிலிர்க்க வைப்பதற்கான உவமைகளும், உருவகங்களும் மரபுக் கவிதைகளில் நிரம்பியிருக்க வேண்டும் என்ற கட்டுக் கோப்புகளும் ஏற்படுத்தப் பட்டமையால், கவிதைகளில் ஓர் இறுக்கம் கடைப்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





பிடிக்கப்பட்டது. இதனால், இலக்கண தேர்ச்சியும், மொழியாற்றலும் உள்ள படித்த பண்டிதர்களைத் தவிர பாமர மக்களால் இத்தகைய கவிதை வடிவங்களை இயற்றவோ, இரசிக்கவோ முடியாத வித்துவச் செருக்கும், தத்துவச் செறிவும் கொண்டதாக மரபுக் கவிதைகள் மாறின.

இக்கால கட்டத்தில்தான், எட்டயபுரத்தில் பிறந்த மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஒரு சிறந்த மரபுக் கவிஞராய் இருந்தும், யாப்பை உடைத்து, அதன் கட்டுக்கோப்புக்களை மீறி குயிற்பாட்டு என்னும் கவிதைத் தொகுதியொன்றை உருவாக்கினார். இதுவே புதுக் கவிதைகளின் வரவுக்கு கட்டியமாகவும் திருப்பு முனையாகவும் அமைந்தது. இதைத் தொடர்ந்து அவரால் எழுதப்பட்ட கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்ற ஆயிரமாயிரம் கவிதைகளை படிப்பறிவு குறைந்த, பாமர மக்களும் இரசித்தின்புறுவதைக் கண்டு, அஞ்சிய பண்டித மரபினர் அவரைக் "கஞ்சா கவிஞன்" எனப் பரிகாசம் செய்து, அவர் படைப்புகளை வெறுத்து ஒதுக்கினர். இந்த வேளை யிற்றான், அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறை முதற் பேராசிரியராக இருந்த எமது முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகள் பாரதியின் படைப்புகளை பயனுள்ள கவிவடிவங்களாகக் காட்ட முனைந்ததை யடுத்து, புதுக்கவிதை வடிவம் திசைமுகப் படுத்தப்பட்டு புதிய பாதையில் பயணிக்கத் தொடங்கியது.

உலக மொழிகளிலே, முதன் மொழிகளாக கருதப்படுகின்ற பலமொழிகளில் எழுதப்படும் கவிதை கள் எதிலும், எதுகை மோனையோ யாப்போ, உவமை, உருவக கோப்புக்களே கடைப்பிடிக்கப் படுவதில்லை என்பதை புதுக்கவிதையாளர்கள் உணர்ந்தனர்.

புத்தம் புதுக்கலைகள் - பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது - மேற்கே
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.

என்ற புரட்சிக் கவிஞரின் பாடலுக்கு சான்றாக சிலி நாட்டுக் கவிஞன் பப்லோ நெருடாவின் கவிதைகளும், சீன நாட்டுக் கவிஞன் மாவோவின் கவிதைகளும், அரபு நாட்டுக் கவிஞன் உமர் கையாமின் கவிதைகளும், அமெரிக்க கவிஞன் வோல்ட் விட்மன் (*WALT WHITMAN*) கவிதைகளும் இவ்வாறு அமைந்துள்ளமை தமிழ் புதுக்கவிதையாளர்களுக்கு (*NEW POETS*) வாய்ப்பாகவும் வழிகாட்டியாகவும் அமைந்தது.

மகாகவி சுப்பிரமணிய பாரதிக்குப் பின்னர், பிச்சமூர்த்தி ,பாரதிதாசன், தேசிகவிநாயகம் பிள்ளை, நாமக்கல் கவிஞர், சுத்தானந்த பாரதி, அழ.வள்ளியப்பா, பார்த்தசாரதி, வல்லிக் கண்ணன், மயன், புதுமைப்பித்தன் தமிழன்பன், சி.மணி, வைத்தீஸ்வரன் கவிஞர் மீரா, கண்ணதாசன், கம்பதாசன், வாலி, கருணாநிதி மேத்தா, முத்துலிங்கம், வைரமுத்து, தருமு சிவராமு, பசுவய்யா, நகுலன் கலாப்பிரியா போன்றோர் பல்வேறு கால கட்டங்களில் பல்சுவைக் கவிதைகளைப் படைத்தளித் தனர் என்பது இவ்விடத்தில் குறிப்பிடுவது பொருத்த மானதாகும்.

இவர்களிலே மணிக்கொடி காலத்தில் இருந்து மகத்தான கவிஞர்களாகக் கருதப்படும் மரபுத் துறை சார்ந்த கவிஞர்களும் புதுக்கவிதையின் பால் ஈர்க்கப் பட்டு, சிறப்புகள் செறிந்த புதுக்கவிதைகளை எழுதத் தொடங்கியமைக்கு, அக்காலத்தில் வாழ்ந்த அறிஞரும், சிறந்த சிறுகதை எழுத்தாளருமான மகாகவி பிச்ச மூர்த்தி அவர்களே வழிகாட்டியாகக் கருதப்பட்டார். இவரையே புதுக்கவிதையின் முன்னோடி எனக் கூறுவாரும் உளர்.

"இன்னவைதான்
கவியெழுத ஏற்றபொருளென்று பிறர்
சொன்னவற்றை நீவிர், திருப்பிச் சொல்லாதீர்.
சோலை, கடல், மின்னல்,
முகில், தென்றலினை மறவுங்கள்
மீதிருக்கும் இன்னல், உழைப்பு, ஏழ்மை, உயர்வு,
என்பவற்றைப் பாடுங்கள்."
(மஹாகவி)

"சாதி மத பேதங்கள் மூட வழக்கங்கள்
தாங்கி நடைபெற்று வரும் சண்டை உலகிதனை
ஊத்தையில் துரும்புபோல் அலைக்கழிப்போம் -
பின்னர்
ஒழித்திடுவோம், புதியதோர் உலகம் செய்வோம்.
(பாரதிதாசன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"அரைத்த மாவையே குழைத்து உருட்டி
பழைய கல்வின் நடுவில் நிறுத்தி
யாப்பு உருளையால், எண் சீர் அளவுக்கு
இழுத்து தேய்த்து, உலர்ந்தத உவமை மாவைத் தூவி
எடுத்த சிலேடை எண்ணெய்யில் போட
பப்பென உப்பிச் சிதைந்ததை
ஆசையாய் எடுத்து, இலையில் போடும் வேளையில்,
ஒரு புதுக்காற்று குப்பென்று வீசிற்று
குனிந்து பார்த்தேன்.
உடைந்த அதற்குள் ஒன்றுமே இல்லை."

(புவிராசன்)

"மாற்றம் தொலைக்கோ,
மனிதருள்ள ஊருதாமோ
ஆற்றைக் கடக்கும்
அவதிகளும் உண்டோ"

(நீலாவணன்)

"ஈற்றிலொரு நாள்
எட்டு மாதத்தின் இறுதியில்
நீதவான் தீர்ப்பை
நூற்றிரண்டு வெள்ளைத் தாள் நிறைய
நுட்பமாய் எழுதி வைத்தார்.
காற்றிலே அவர்தம் குரல் மிகக் கறாராய்க்
கருமையாய், விபரமாய் ஒலிக்கும்.

(முருகையன்)

"அன்று எங்கள் அப்பாமார்
வன்னி மண்ணை கொத்தி கொத்தி
தம் வியர்வையாற்றில் சம்பா வளர்த்து
உங்கள் வீட்டு முகடுவரை அடுக்கி வைத்தும்
உங்கள் ரங்குப் பெட்டி நின்ற
எங்கள் உறுதிக்கு மூச்சு வரவில்லை"

(முல்லையூரான்)

"பேசினார் பேசும் போதே
பேசாத் தொழிலும் செய்தார்
ஆசையாய் விழி ஏர் பூட்டி
அழகனை உழுத வள்ளி
மீசைக்கும் பொசிந்ததங்கே
மென் மகள் இறைத்த வாய்நீர்."

(காசி ஆனந்தன்)

"கிழட்டு ஓநாய் துருத்திப் பார்க்கிறது
பத்மாசுரன் வடிவங்கள் மாற்றுகிறான்
பொட்டலங்கள் போட்டவர்கள்
கப்பலில் ஏறுகிறார்.
இராமனின் வஞ்சம், தீராத தென்னிலங்கை

(சண்முகம் சிவலிங்கம்)

"கடமையை மறந்து காலம் கழிந்ததும்
நெருப்பில் வேகும், மடையரில் ஒருவனாக
மதியிழந் தங்கே நின்றேன்.
படுவானில் நின்று வெய்யோன்
பனிவரை மஞ்சம் சேர நடக்கிறேன்
இதயம் நொந்து, நற்கனியொன்றும் காணேன்."

(மு.சடாட்சரன்)

வெள்ளை மனதில் விளக்கேற்றி நம்மவர்க்கே கள்ளூறும் இன்பக் கலையாகிய கவிதைகளை சாதாரண தமிழ் சொற்களையும் பேச்சு மொழியையும் கொண்டு, நேர்த்தியான உள்ளடக்கமாக மொழிவீச்சோடு கூறும் யாப்பமைந்த கவிஞர்கள் பின்னாடி வந்தவர்களில் பலர் பிரபலங்களாகியுள்ளமையும் குறிப்பிடக்கூடியது.

வேரற்ற பொருளன்று கவிதை - செய்யும்
வினையற்ற இடமன்று கவிஞர் வையம்
ஊரற்ற நாடோடி வாழ்க்கை வேறு
உலகத்தில் குடிமகனாய் உயர்தல்"

என்று நோக்கோடும், இலக்கோடும், சொல்ல வந்த கருத்தை சூடாகவும், சுவையாகவும், சுருக்கமாகவும், சூட்சுமமாகவும், சுருதி சுத்தமாகவும், சொல்ல வல்ல கவிஞர்கள், உலகளாவிய ரீதியில் இருந்தார்கள். இருக்கிறார்கள். இவர்கள் தமிழ் நாட்டில் மட்டுமல்ல, இதர நாடுகளிலும், முத்திரை பதித்தவர்கள்.


முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர், சோமசுந்தரப் புலவர், சின்னத் தம்பிப்புலவர், முத்துத்தம்பி பிள்ளை, கல்லடி வேலன், வேந்தனார், கவிஞர் நீலாவணன், மஹாகவி உருத்திரமூர்த்தி, இ. முருகையன் பாண்டியூரன், ஜீவா ஜீவரத்தினம், சண்முகம் சிவலிங்கம், எம். ஏ. நு ஃ மான், மு. சடாட்சரன், சில்லையூர் செல்வராஜன் காசி ஆனந்தன், புதுவை இரத்தினதுரை, சு.வில்வரத்தினம், காரை சுந்தரம்பிள்ளை, முல்லையூரான், முல்லை அமுதன், கவிஞர் கந்தவனம்,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



அகளங்கன், கணபதி கணேசன், சி .சிவசேகரம், சேரன், வ.ஐ.ச. ஜெயபாலன், ஆனந்தன், சாருமதி, ஏ.இக்பால், பாலமுனை பாறுக், அன்புடீன், வேலழகன், செ.குணரெத்தினம், பொன் சிவனந்தன், செங்கதிரோன், புரட்சிபாலன், வாகரைவாணன், சோலைக்கிளி, உமாவரதராஜன் போன்ற பலர் பல தரப்பட்ட கவிதைகளை எழுதியதனால் குறிப்பிடக் கூடியவர்கள்.

தமிழ்மொழி ஒரு வளமான செம்மொழி. செழுங்கலை நியமங்கள் நிறைந்தது மட்டுமல்ல, காலத்திற்கேற்ப மாற்றங்களை உள்வாங்கிக் கொள்ளும் சிறப்புத் தன்மையும் கொண்டது. எல்லாவித தமிழ் கவிதைகளுக்கும் கட்டுப் பாடுகள் உண்டு. கட்டுக்கோப்புகளுண்டு. சட்டத்திட்டங்கள் உண்டு. வரையறைகளும் உண்டு. கவிதை ஒருபோதும் ஒரு நேர்கோடாக இருக்க முடியாது. வளைந்தும் நெளிந்தும், நெகிழ்ந்தும் சுழன்றும், வீங்கியும் சுருங்கியும், செல்லுகின்ற ஒரு வித்தியாசமான வார்ப்பு.



கருத்தை மட்டும் வைத்து கவிதை எழுதக்கூடாது. கருத்து ஒரு செய்தியைத் தாங்கியதாக இருக்க வேண்டும். செய்தி தாங்கிய கருத்தோட்டத்தை, அனுபவத்தோடு மொழி ஆளுமைக்கு உட்படுத்தி, எழுதும் போதுதான் உயிரோட்டமுள்ள வீரியமான கவிதை பிறக்கும்.

"பூப்படையா பெண்களெல்லாம் பிள்ளை பெற வந்தது போல் யாப்பறியா பலபேர்கள் பாப்புனைய வந்து விட்டார்." என்று புலம்புகிறார் ஒரு கவிஞர். உண்மையில் கன்னா பின்னா என்று கவிதைப் புத்தகம் வெளியிடுவோர் எல்லாம் கவிஞர்கள் அல்ல. ஒரு கவிஞன் சமூகத்தின் தளபதிக்கு ஒப்பானவன். அவனை ஒளியுமிழும் வெப்பத்தின் மொத்த உருவமென்பர் மொழியியலாளர்கள். கவிதை எழுதுவோரிடம் ஆழ்ந்த சிந்தனைத் திறனும் ஊடுருவல் திறன் கொண்ட கூர்மையான பார்வையும் மொழியாற்றலும், வாழ்க்கை அனுபவங்களும் நிறைந்திருக்க வேண்டும்.


நல்ல சிறந்த கவிஞனிடம் யாப்புகள் பற்றி மேலோட்டமான அறிவாவது இருக்க வேண்டும். அத்துடன் நவீன கவித்துவத்தின் கட்டுக்கோப்பான படிமம், உருவகம், குறியீடு, மொழி வீச்சு, வண்ணம், வனப்பு, உள்ளடக்கம் போன்ற விடயங்களில் தெளிவும், தேர்ச்சியும், தேடலும் அவசியம். இத்தகைய கவிஞன் எழுதும் கவிதை ஒரு திராட்சைக் கனி திரளுக்கு (திராட்சைப்பழக்குலை) சமமானது. தரமான, சுவையான அழகான திரள்களைப் பெறவேண்டுமானால் அது உருவாகும் கிளைகளில் உள்ள வேண்டாத இலைகளையும், விரும்பாத கிளைகளையும் கத்தரித்து விடுவது போல வெற்று வார்த்தைகளையும், வேண்டாத சொல்லடுக்குகளையும் சுத்திகரிப்புச் செய்து சுருதியூட்டி எழுத வேண்டும். அப்போதுதான் அது எல்லா மக்களாலும் விரும்பி படிக்கக் கூடிய மனங்களை வெல்லும் ஆரோக்கியமான இறவாக் கவிதையாக இருக்கும்.

எனவே கவிஞனே, நீ உருவாக்கப் படுவதில்லை. உருவாகியிருக்கிறாய். உன்னுடைய படைப்புகள் மின்னலை மெருகேற்றும் இருளாகவும், இருளைத் துலக்குகின்ற மின்னலாகவும், எளிமையும், தெளிவும் குளிருமுள்ள பரிசுத்த நீராகவும் வெளி வரட்டும். சிறந்த ஆளுமையுள்ள கவிஞன் நீ. உன்னால் எழுதப்படும் எல்லாவித கவிதைகளும் கவிதையாகவே அமைய வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்வாய் கண்

S. விக்னேஸ்வரன்



சூத்திரமறிவாய் சாத்திரமறிவாய்
சூட்சும மறியாயே வாழ்வியலின்
பாத்திரமறியாய் பழந்தமிழர்
பகிர்ந்தவை வெறும் படிமங்களா?
காத்திரமான கன்மலையாமவை
கைதந்துனை காலூன்ற வளமீந்தும்
கோத்திரம் பார்த்து கோணலுற்றாய்
கொள்கையற்று மாய கோலம் கொண்டாய்.

உடல் வருத்தி வியர்வை சிந்தா
உழைப்பினில் ஏது உயர்வு கண்டாய்
திடல் திருத்தி குளம் திருப்பி நாற்
திசையெங்கும் பயிர் விதைத்து
மடல் விரித்து வீரம் கொண்டு
மகிழ்ந்தளித்த நிறைவாழ்வு இன்று
கடலமுகிச் சடலமென மதுக்
கூவத்தில் நொந்து மிதப்பதென்ன?

அடுக்களையிற் பூனை சாம்பல் குளிக்கும்
ஆறு பத்தாக அனல் தகித்து வேகும்
கடுப்பினில் எல்லாம் கருகிப் போகும்
கடமைகள் சுருங்க வேகஉணவில் மோகம்
வெடுக்கெனவே சுகங்கள் விட்டே ஓடும்
வெற்றுப் பேச்சுகள் பொழுதை ஆளும்
தொடுபேசிகள் இளஇரத்தம் உறிஞ்சும்
தொலைந்த இளமை இரத்த தானம் கேட்கும்.

பொறுப்புத் துறப்புகளால் வீணே
போக்கற்று போகாமல் தன் நிலைதனை
நிறுத்தி ஆள திரள்தோள் நிமிர்த்து
நிட்டூ ரமடமைத்தளை கொய்துவிடு
சிறுத்துப் போகாமற் சிதைந்த நம் சீர்
சிறப்புறவே சிலிர்த் தெழுக புதுவேகம் கொண்டு
உறுத்துகின்ற பகைமை தனை ஊறு செய்
உறக்கம் விடு மாட்சிதன் உச்சம் தொடு.

கொடுவாய் பட்டுக் கெடுவாயோ?
தொடுவாய் விட்டு எழுவாயோ?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிதறிய புன்னகை

சபா சபேஷன்



முன்பனிக்காலத்து கறுத்த இரவான்றில்
வெண்மையில் கரைந்துபோன
உன் காணாமல் ஆக்கியமை.

ஒரு கணம் ஸ்தம்பித்தோம்
உடைந்தோம்...உடைந்தே போனோம்.
அன்றைய வைகறையோ
பூபாளத்தை மறுதலித்து
முகாரிபாடி
வேறோர் உலகில் விடிந்தது.

வெறுமையுடனான மூச்சுக்காற்றின்
வெம்மையில் விடைகேட்கிறது உயிர்.

உனது சுவாசம் நிறைத்த வீட்டை
விஷக்காற்று ஆக்கிரமித்து நிற்க
நீ வளர்த்த பூக்கன்றுகளில்
அழுகல் வளரிகள் முளைத்தன.

தோற்றுப்போன தேடல்கள்...
நீ எங்கிருக்கிறாய்.
எங்கேதான் இருக்கிறாய்...?
இளமையின் சுகிப்புக்களைத்
தொலைத்து விட்ட
வயோதிபத்தின் வாசலிலா நிற்கிறாய்....நீ.

உந்தன் ஒரு புன்னகையில்
எங்களை குவிய வைத்தவன் நீ.
தலைப்பிள்ளை...
ஊருக்கும் உறவுகளுக்கும் முதற்பிள்ளை.
அவர்கள் வருகிறார்கள் ...பேசுகிறார்கள்
விசாரிப்புக்கள்...வாக்குறுதிகள்..
பத்திரங்கள்..ஊர்வலங்கள்..
உண்ணாநோன்புகள்.
கண்ணீர் நனைத்த வேண்டுதல்கள்.

உனது நினைவோ
நம்பிக்கையின் அடி இழையங்களில்
நுழைந்து
அத்திவாரங்களைத் தகர்க்கிறது.

உன்போல் இன்னும் பலர்.
சொந்தங்களோ
பொட்டுடனும்.. பூவுடனும்
வருகைக்கான காத்திருப்புக்கள்.
கிரியைகளில்.. பிண்டங்களில்
உன்னைக் குற்றி வைக்க
விரும்பவில்லை
நாங்கள்.

இருந்தும்.... இருந்தும்....
நீ வரவில்லை வரவேயில்லை.
மீண்டும் தோற்கிறோம்.
ஒன்றை மட்டும்
உள்ளுணர்வு சொல்கிறது..
ஆமாம்.... நீ போய்ச் சேர்ந்துதான்
விட்டாய் போலும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிந்தனை சின்னங்கள்

**பூவை சரவணன்**



யாரோ இவள் நம் தெருவில்
வெற்றிலைக் கறை படிய
வீதியெல்லாம் திரிகின்றாள்.

கட்டான உடல்வாகு
கதை பேச விரும்பாமல்
கை மட்டும் நீட்டுகின்றாள்

பொட்டில்லை பூவில்லை
சல்லடை போட்ட ஓர்
சட்டையும் சேலையும்தான்

கக்கத்தில் ஒன்றும் காலின்
பக்கத்தில் ஒன்றுமாய்
சோகம் தோய்ந்த நடமாட்டம்

அங்காடி ஓரமெல்லாம் இவளும்
ஓர் பங்காளி ஆனாளோ ?
விற்பனைப் பொருளல்ல இவள்
பெரிசுகளும் சிறிசுகளும் இங்கு
பேதமாய்ப் பார்க்கின்றார்
போதைதான் கண்களுக்குள்

சற்று அணுகி சரித்திரம் கேட்டால்
சங்கடம்தான் மனதுக்குள்
சராசரி மனிதனுக்கு,
சாக்கடைப் பெண்ணல்ல அன்னம்
பூக்கடை பொம்மைதான்-இனச்
சண்டையின் சின்னம்தான்

வெட்கத்தை மறந்து இவள்
வேல் விழியில் நீர் நிறைத்தாள்
வெறும் வயிறால் விரக்தியுற்றாள்

சொந்தங்கள் இழந்ததனால்
சோகத்தில் குடி புகுந்தாள்
பளிச்சிடும் பல்மறைக்க
வெற்றிலைக் கறை கொண்டாள்

போர் உலகு தந்த
பெண் பேதை ஒன்றும்
புரியாமல் விழிக்கும் பாவை இவள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொலை ஒரு மார்க்கம்



சுந்தர் நிதர்சன்

அவன் வயதை எப்படி சொல்வது?
வளரவில்லை என்பதா...?
வளரத் தயாராகிறவன் என்பதா..?
நடக்கவும் பேசவும்
நன்றாய் பரிணமிக்காவிட்டாலும்
அவன் வளர்ப்பு மீன்
வாங்கக்கேட்டதில் ஆனந்தமே
வாங்கி வந்த
தொட்டியில்
வளர்ந்த
மீன்களை
வளர்ப்பதற்காய்
விடுகிறேன்
தொட்டிச் சுவரெங்கும்
தட்டுப்பட்டு திரிந்த
மீனின் சிறை வாசத்தினை அவன்
வெறுத்திருக்கவேண்டும்
பிஞ்சுக்கையால் பிடித்து
சுதந்திரம் கொடுக்கிறான்
எனக்கு ஆத்திரம்தான்
ஆனாலும்......
செத்துக்கிடந்த
மீன்குஞ்சுகளின் வாயினருகே
பச்சை பச்சையாய் அவன்
நசித்துப்போட்ட தீன் துண்டங்கள்
பேசிய
மொழியை அறிந்து
மௌனித்துப் போனேன்...

# பணமிருந்தால் போதும்

வைரமுத்து கணேசன்


கண்ணான என் அண்ணா
காலத்தின் கோலத்தால்
என் பங்கு சொத்தெல்லாம்
இருந்த இடமும் இல்லை
மனைவி மக்களெல்லாம்
மகிழ்விழந்து விட்டார்கள்
உனை நம்பி வந்தேன் அண்ணா
உதவுவாய் பணம் கடனாக.

உடன் பிறந்த சகோதரனே
உளம் நிறைந்த என் தம்பி
கடனாகப் பணம் கொஞ்சம்
கருணை காட்டு என்றாயே!
அடமானப் பொருள் கொண்டு
ஆயிரம் பேர் வந்தார்கள்
கொடுத்து விட்டேன் வட்டிக்கு
குட்டியோடு திரும்பி வரும்.

எல்லோரையும் போலதான்
எனக்கும் ஒரு பங்கென்று
சொல்லித்தானே நீங்கள்
சொத்தெல்லாம் பிரித்தீர்கள்
அப்போது நீங்கள் என்னை
அலட்சியம் செய்து விட்டு
இப்போது வந்து நின்று
இரஞ்சுகின்றாய் பணம் கேட்டு

பணம் தேட நான்பட்ட
பாடுனக்குத் தெரியுமா
பசியாலே பாழ் வயிறு
பட்டபாட்டை யாரறிவார்
புசிப்பதற்குத் தீன்பண்டம்
புதிதுபுதிதாய் இருந்தாலும்
ஆசைதீர உண்ணவில்லை
அப்படித்தான் பணம் சேர்த்தேன்.
மனம் திறந்து சொல்லுகின்றேன்
மறு பேச்சுப் பேச வேண்டாம்
இனம் சனம் சாதி சனம்
இருக்கின்ற சொந்தமெல்லாம்
எனக்கு இனி வேண்டாம்
என் பணம்தான் எனக்குப் பெரிது
பணமிருந்தால் போதும்
பலதும் என்னைத் தேடிவரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசியும் அவையும்

-கமலினி சிவநாதன்

குறுநிலங்களின் மன்னர் சபைகளில் இராட்டினங்கள் வேகமாகச் சுழன்று கொண்டிருந்தன. முக்கிய தொழிலாளர்களின் விடுமுறைகள் இரத்துச் செய்யப் பட்டுவிட்டன. தைத்திங்கள் இறுதி நாளில் அரசியுடனான சந்திப்புக்கு அழைப்பாக வந்திருந்த ஓலையே இந்தப் பரபரப்புக்கு காரணமாக அமைந் திருந்தது.

அந்தச் சந்திப்பின்போது குறுநிலங்களின் மன்னர்கள் வரவு-செலவு விபரங்களைச் சமர்ப்பித்தாக வேண்டும். குறுநிலங்களில் குடிசைகள் அமைத்தது, தரிசு நிலங்களைச் செப்பனிட்டது, பயிர் நட்டது,நீர் பாய்ச்சியது, குடிசைப் பானைகளுக்கு ஓட்டை அடைத்தது முதல் வண்டிகளுக்குச் சில்லுப் பூட்டியது வரை ஒற்றை வெள்ளிக்காசுக்கும் கணக்குக் காட்டியாக வேண்டும்.

கணக்கு வைத்த மன்னர்களும் கணக் கெழுதிப் பழக்கமில்லாத மன்னர்களும் தத்தமது ஓலைச்சுவடிகளுடன் அரசியின் மண்டபத்தில் குவிந்த வண்ணமிருந்தனர்.

அரச மண்டபத்தில் முரசுகளுக்கு முன்வரிசையில் ஆசனங்கள் ஒதுக்கப் பட்டிருந்தன. காரணம் அரசியின் உதடுகள் சொல்லும் ஒவ்வொரு வார்த்தைக்கும் வடிவம் கொடுத்து மெருகூட்டி அதற்குப் பொலிவூட்டும் தலையாய தர்மத்தை முரசுகள்தான் பொறுப் பேற்றுள்ளன.

இரண்டாம் வரிசையில் கட்டுமானப் பணியாளர்களும் ஒப்பந்தகாரர்களும் ஆசனப் படுத்தப்பட்டிருந்தனர். அவர்கள்தான் அரசி யின் அபிவிருத்திக்குத் தோள் கொடுத்துத் துணைநிற்பவர்கள். அக்கடமைகளை அவர்கள் முறையாக ஆற்றுவதனால் அவர்கள் மீது அலாதிப்பிரியம் கொண்டிருந்தாள் அரசி.அதற்கு அடுத்தடுத்த வரிசைகளில் குறுநில மன்னர்களும் அவர்தம் கணக்கு வினைஞர்க ளும் வேண்டாவெறுப்பாக ஆசனப் படுத்தப் பட்டிருந்தனர்.

அரசியின் பிரசன்னத்துக்கு முன்னோட் டமாக அவளது ஆலோசகரும் அந்தரங்க மந்திரியும் அரசியைப் பற்றி மற்றவர்கள் கொண்டுள்ள அபிப்பிராயங்களை அறிந்து அவளுக்குக் கூட்டியும் குறைத்தும் கோள் சொல்லும் இன்னோரன்ன இதர வேலைகளைக் கவனித்துக் கொள்ளும் தலைமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றனுமான ஒள்ளுப்பலத்தான் அவையை நோட்டமிட்ட வண்ணம் அரசியின் சிம்மாசனத்துக்கு அருகிடப்பட்ட ஆசனத்தை தனதாக்கி அமர்ந்தான். அவனைத் தொடர்ந்து அரசியின் கஜானாப் பொறுப்பாளரும் மந்திரிமாரும் மண்டபத்துக்கு வருகை தந்தனர்.

இறுதியாக அரசி அவையை கண்களால் துழாவியபடி அவளுக்குரிய சிம்மாசனத்தில் வந்தமர்ந்தாள். முன்வரிசையில் ஆசனங் கொண்டிருந்த முரசாளர்களின் வதனங்கள் அப்போது பூத்த மலருக்கு ஒப்பாக காட்சியளிப்பது கண்டு அரசியின் முகத்திரை யின் கோடியில் குறுநகை இழையோடியது. தனக்குப் பக்கபலமாக இருக்கும் முரசுகளை எண்ணிப் பெருமை கொண்டவளாக அவைக்கு வணக்கங் கூறி உரைக்கத் தொடங்கினாள்.

" நான் சக்கரவர்த்தி அனுப்பிவைத்த அரசி. இந்த மாநிலமும் எனக்கே வழங்கப் பட்டுள்ளது. குறுநில மன்னர்கள் அனைவரும் என் அடிமைகள். என்னால் விரும்பப்படாத எவரும் இம்மாநிலத்துக்குள் வரமுடியாது. என்னை மீறி எவரேனும் வந்தால் அவர்கள் என்னாலும் என் படைகளாலும் துன்புறுத்தப் பட்டு விரட்டியடிக்கப்படுவார்கள்."

குறுநிலங்களின் மன்னர்கள் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டனர். பலருடைய கண்களில் பயம் படர்ந்துகிடந்தது. அரசியின் பேச்சுத் தொடர்ந்தது.

"என்னால் விரும்பப்படாத எவருடனும் தொடர்பு கொண்டுள்ள எவரையும் நான் தண்டிப்பேன். என்னால் விரும்பப்படாத உறவு பேணும் எவரும் எனக்கு எதிரியாவீர்கள். என்னை மீறி எவரும் அசையக்கூடாது. மீறி அசைந்தால் உங்களுடைய குறுநிலம் பறிமுதல் செய்யப்படும்".

வெஞ்சினம் பொங்க அரசி அவைக்குத் தன் ஆணையைப் பிறப்பித்தாள்.

அரசியின் உரையில் குறுநில மன்னர்கள் உறைந்து சர்வ நாடியும் அடங்க ஆசனங்கொண்டிருந் தனர். குறுநில மன்னர்களின் இந்த ஒடுங்கலைக் கவனித்த ஒள்ளுப்பலத்தான் மனதுக்குள் குதூ கலித்திருக்க வேண்டும். அவனது முகம் பூரண சந்திரனாக மிளிர்ந்தது.

அரசியின் பேச்சு தொடர்ந்தது.

"இந்த மாநிலம் வறுமையின் பிடியில் சிக்கிக் கிடக்கின்றது. இதை மாற்றுவதற்கு, அதாவது இம்மாநிலத்தை முன்னேற்றுவதற்கு அனைவரும் என்னோடு கைகோர்க்க வேண்டும்" என கோரிக்கை விடுக்கும் மொழியில் உரத்த குரலில் ஆணையிட்டாள்.

மாநிலத்தில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளுவதற்கு சக்கரவர்த்தியிடம் நிதி கேட்டிருப்பதாக அரசி தெரிவித்ததும் ஒப்பந்தகாரர் களுக்கும் கட்டுமானப் பணியாளர் களுக்கும் ஒரே கொண்டாட்டம். மாநிலத்தோடு சேர்ந்து அவர்களுடைய குடும்பங்களும் அபிவிருத்தியடையுமே. அவர்கள் தம் வாரிசுகள் சீமைக்குச் சென்று வித்தைகள் பயிலுமே. சக்கரவர்த்தி வழங்கப்போகும் நிதியில் ஒப்பந்த காரர்களும் அவர்களுக்கு ஒத்தாசை புரிவோரும் எட்டுச்சக்கரங்கள் பூட்டிய குதிரை வாகனங்களைக் கொள்வனவு செய்வார்கள். அவர்கள் தமது மகிழ்ச்சியை கரகோசமாக வெளிப்படுத்தினர். அரசிக்குச் சலாமிட்டபடி ஆசனங்களில் நெளிந்தனர்.

"மணல் ஒழுங்கைகள் செப்பனிடப் படும். நீரோடைகளுக்குப் பாலமிடப்படும். சின்னஞ் சிறுவர்கள் குதூகலிக்கப் பூங்கா அமைக்கப்படும். மொத்தத்தில் இந்த மாநிலம் அபிவிருத்தியடையும்."

கரவொலி முழங்க அரசியின் உரை முடிந்திருந்தது. அவளது கண்கள் ஒள்ளுப் பலத்தான் மீது பரவின. உடனே அதன் அர்த்தத்தை புரிந்துகொண்ட அவன், அரசியின் வெறுப்புக்குள்ளான வண்டிச்சோலைக் குறுநில மன்னன் வீரவர்மனை நோக்கி வண்டிச்சோலைக் குறுநிலத்தின் கஜானாக் கணக்கு வழக்குகளை அவையில் வாசிக்கும் படி தெரிவித்தான்.

வீரவர்மனின் முகம் கோபத்தில் செந்தணலாய் சிவந்துவிட்டது. தானறிந்த வித்தைகளில் எதையும் அறிந்திராத, தன்னைவிட தரங் குறைந்த ஒள்ளுப்பலத்தான் தன்னை நோக்கி ஆணையிட்டதை வீரவர்மனால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

வீரவர்மன் எப்போதும் சுதந்திரமாக இயங்குவதற்கே விருப்பங்கொண்டவன். அரசியின் பேச்சுக்கு "ஆமா" போடுவதையோ அவளுக்கு கூசா தூக்குவதையோ விரும்பாத வீரன் அவன். சத்தியத்துக்கு மட்டுமே கட்டுப்பட்டு ஆட்சி நடாத்தும் வீரவர்மனுக்கு அரசியின் பாசாங்குப் பிரச்சாரங்களில் பிடிப்பில்லை. அபிவிருத்தி என்ற பெயரில் ஒப்பந்த காரர்களுடனும் ஒள்ளுப்பலத்தானுடனும் அரசி கொண்டுள்ள கைமாறல்களை வீரவர்மன் முற்றாக வெறுத்தான். மண்குடிசைகளைச் சேர வேண்டிய மாமன்னரின் வெள்ளிக்காசுகள் ஒப்பந்தகாரர்களின் மெத்தை வீடுகளைச் சென்றடைவதை வீரவர்மன் பகிரங்கப்படுத்தியதன் விளைவே அரசியின் வெறுப்பாக மாறியுள்ளது. சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் வீரவர்மனை மட்டந் தட்டுவதிலே அரசி முனைப்பாக இருந்தாள்.

அரசியின் முந்தானைக் காற்றுக்குக் கூடப் பயந்திருந்த மந்திரிமாரும் கஜானாப் பொறுப்பாளரும் அரசி ஆட்சி தர்மத்தை தவறாக பயன்படுத்துவதை அறிந்திருந்தும் மௌனம் காத்தனர். அரசியைப் பகைத்துக் கொண்டு அவளுடைய தர்பாரில் பிழைப்பு நடாத்த முடியாது என்கின்ற உண்மையை அவர்கள் நன்கு அறிந்திருந்தனர்.

வீரவர்மன் தனது கணக்கு வழக்கு களை அவையில் வாசிக்கத் தொடங்கினான். ஒள்ளுப்பலத்தான் இடையில் குறுக்கிட்டு கணக்கு விபரங்களில் குறை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கண்டவண்ணமிருந்தான். அவனுக்கு விளக்கமளித்த வீரவர்மனுக்கு மட்டும் நெற்றிக்கண் இருந்திருந்தால் ஒள்ளுப்பலத்தான் அந்த இடத்திலேயே பஸ்பமாகி யிருப்பான்.

ஒள்ளுப்பலத்தான் வேண்டுமென்றே வீரவர்மன் மீது கண்ட குறைகளை முரசுகள் தவறாது பதிவுசெய்து கொண்டன. வீரவர்மன் அவமானத்தில் தலைகுனிந்து தன் வாசிப்பை முடித்து வேதனையாக அமர்ந்திருந்தான்.

இப்போது கூட்டம் வேறு திசையில் நகரத் தொடங்கியது. ஒப்பந்தகாரர் ஒருவருக்கு வழங்கப் பட்டிருந்த சக்கரவர்த்தி விருது பற்றி அரசி பிரசங்கம் செய்யத்தொடங்கினாள். அரசியின் சிபாரிசின் பேரிலேயே அவ்விருது அவருக்கு வழங்கப்பட்ட தென்பது வேறு கதை.

அரசி அந்த விருதுக்குரியவரைப் பாராட்டிக் கௌரவித்து ஓவியக்காரரை அழைத்து தன்னையும் விருது பெற்றவரையும் விருதையும் படமாக வரைய உத்தரவிட்டாள்.

விருது பெற்றவருக்கு அரசி புகழ்மாலை சூட்டி வாழ்த்தி வரங்கொடுத்தபோது அன்றைய பகல் முடிந்து அந்தி மலரத் தொடங்கி விட்டிருந்தது.

குறுநில மன்னர்களும் கணக்கு வினைஞர்களும் வயிற்றுப்பசி தாங்காது அல்வாக்களை உண்டு தண்ணீரைப் பருகினர்.

விருது பெறாத ஏனைய ஒப்பந்தகாரர்களுக்கும் எதிர்காலத்தில் இவ்வாறான விருதுகள் வழங்கப்படும் என்றும் இப்போது விருது பெற்றவருக்கு இன்னும் விருதுகள் வழங்கப் படுமென்றும் அரசி அறிவித்ததைத் தொடர்ந்து கூட்டம் நிறைவடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

வாசிக்கப்படாத ஓலைச்சுவடிகளுடன் குறுநில மன்னர்கள் ஆசனத்தை விட்டெழுந்தனர்.

"வாழ்க அரசி, வாழ்க அதிகாரம்"
"வாழ்க அரசி, வாழ்க அதிகாரம்"

முரசுகள் ஒலிக்கத் தொடங்கின.....

# நின்றுகொள்ளுங்கள் சென்றுவருகிறேன்...

**பாண்டியூர் - பொன். நவநீதன்**


தெருவினில் தேரொன்று
நிறுத்தப் படுகின்றது
'ஓடி வந்தேறும்' என்று
அழைப்பும் விடுக்கப் படுகின்றது.
"அழைப்பு ஆருக்கு" என்று கேட்கின்றேன்
"உனக்குத்தான் உடனே வந்தேறும்" என்றது
"இதை நான் எப்பவோ எதிர்பார்த்தது
இப்பதான் வந்திருக்கிறது" எனும்
சந்தோசத் துள்ளலிலே
சட்டையைக் கழற்றி விட்டு
ஓடிப் போய் ஏறுகின்றேன்
அதுவொரு விமானம் போல்
பறக்குந் தேர் போலும்
பயணிக்கத் தயாராகிறது...
இருந்தாலும் எனக்குள்ளே ஒரு
சந்தேகம் எழுகிறது
தேரோட்டியைப் பார்த்துக் கேட்கிறேன்
"இத் தேர் என்னை
எங்கு கொண்டு சேர்க்கும்?"


சுவர்க்கமா, நரகமா ?
தேரோட்டியின் பதில்
"இந்த நரகத்தில் கிடந்து நீ
அனுபவிக்க வேண்டிய
வேதனைகள் அனைத்தும்
அனுபவித்து முடிந்தமையால்தான்
அழைப்பு கிடைத்திருக்கிறது..."



"ஆஹா ! அப்படியா சந்தோசம் !
தேருக்கு வெளியே தலையை விட்டு
"நரக வாசிகளே – நீங்கள்
இங்கேயே நின்று கொள்ளுங்கள்....
நான் சென்று வருகிறேன்" என்றேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









# கல்முனைத் தமிழ் பிரதேசக் கவிதை முயற்சிகள்

**மு. சடாட்சரன்**

கல்முனைப் பிரதேசம் என்பது விரிவான பிராந்தியத்தைக் குறித்தாலும் கல்முனைத் தமிழ்ப் பிரதேச செயலகத்தின் கலாசாரவிழா மலரில் இக்கட்டுரை வெளிவருவதால் கல்முனைத் தமிழ்ப் பிரதேசத் திற்குட்பட்ட கவிதை முயற்சிகள் பற்றியே இங்கு கூற முயல்கிறேன்.

தமிழுக்குப் பெருமை சேர்த்ததும் தமிழை வாழச் செய்ததும் கவிதை இலக்கியப் படைப்புகளாகும். சங்க காலத்திலிருந்து இன்று வரை தமிழ்க் கவிதைப் பிரதிகளே மக்கள் இதயங்களைக் கொள்ளை கொண்டு செம்மொழியாக எமது தமிழ்மொழியை ஏற்றம் பெறச் செய்துள்ளது. ஆகவே தமிழ்க்கவிதை உயர்ந்த கலை வடிவமாகும். மனிதனின் நாகரிகம் மொழி என்றால் மொழியின் நாகரிகம் கவிதை எனலாம்.

இங்குள்ள கவிதை முயற்சிகளைப் பற்றிச் சிந்திக்கின்றபோது எமது முன்னோடியாக முதலில் முயன்று சாதனை புரிந்தவர் உயர்திரு விபுலாநந்த அடிகளே ஆவார். 1920களில் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர், விஞ்ஞான கலைமானி, பல்கலைக்கழக பேராசிரியர், இராமகிருஷ்ண விஜயம் (தமிழ்) வேதாந்த கேசரி (ஆங்கிலம்) பிரபுத்த பாரதம் (ஆங்கிலம்) ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர் பதவிகள் முதலியவற்றை ஏற்று நற்பணிகள் புரிந்த முதற் கவிஞராக இவர் திகழ்ந்துள் ளார். மேலும் உலகப் பிரசித்தி பெற்ற ஷேக்ஸ்பியர், மில்ற்றன், கீத்ஸ், ஷெல்லி, தெனிசன், றொபெட் போன்ற கவிஞர்களின் ஆங்கிலக் கவிதைப் படைப்புகளை தமிழ்க் கவிதையாக மொழி பெயர்ந்து தமிழுக்குத் தந்த முதுபெரும் கவிஞரும் முதல் வழிகாட்டியும் சுவாமி விபுலாநந்தர் என்பதே உண்மை. இவரின் வழியிலே நவீன கவிதையை கல்முனையில் நிலைநாட்டி வளர்த்தவர் எங்கள் கவிஞர் நீலாவணன் ஆவார்.

1931ல் பிறந்த இவர் 1953ல் கவிதை உலகில் பிரவேசித்தார். 1961ல் கல்முனையில் உள்ள எழுத்தாளர்களை ஒன்று சேர்த்து கல்முனை எழுத்தாளர் சங்கத்தை அமைத்தார். அதன் தலைவராகப் பல வருடங்கள் இருந்து கல்முனைப் பகுதியில் தமிழ் இலக்கிய விழிப்புணர்வை ஏற்படுத்தியதோடு நவீன கவிதை வளர்ச்சிக்கும் வழிகாட்டியாக விளங்கினார்.

மருதூர்க்கொத்தன், நு.்.மான், சடாட்சரன், மருதூர்க்கனி சி.பி. சத்தியநாதன், ஜீவா ஜீவரெத்தினம், சண்முகம் சிவலிங்கம் ஆகியோர் எழுத்தாளர் சங்கத்தில் இணைந்து செயற்பட்டனர். கவி அரங்குகள், விமர்சன அரங்குகள், நினைவு விழாக்கள், நூல் அறிமுகங்கள், எழுத்தாளர் சந்திப்புகள் என்பன அடிக்கடி நடைபெற்றன.

நீலாவணண் 1975ல் அமரத்துவம் அடைந்ததும் எழுத்தாளர் சங்கத்தில் மேலும் பலர் சேர்ந்து இயங்கி வந்தனர். நீலாவணன் எழுதிய 'வழி' 'ஒத்திகை' (கவிதை) 'ஒட்டுறவு' (சிறுகதை) 'வேளாண்மை' (காவியம்) கவிதை நாடகங்கள் என்னும் நூல்கள் பின்னாட்களில் வெளிவந்து தமிழ் கூறும் நல்லுலகில் அழியா இடத்தைப் பிடித்துக் கொண்டன.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



இதன்பின் உமாவரதராசன், நான், மன்சூர் ஏ.காதர், எச்.எம்.பாறுக் நற்பிட்டிமுனை பழீல், வி.ஆனந்தன், வே. ராஜேந்திரா ஆகியோர் சேர்ந்து வியூகம் என்னும் அமைப்பை 80களின் நடுப்பகுதியில் உருவாக்கி பல இலக்கிய முயற்சிகளைச் செய்ததோடு உமா வரதராசனை ஆசிரியராகக் கொண்டு வியூகம் என்னும் சஞ்சிகையையும் வெளியிட்டோம். அதன் பின் கலை இலக்கிய நண்பர்கள் அமைப்பை உருவாக்கி அதன்மூலமாகவும் கவிதை, சிறுகதை வளர்ச்சிக்காக முயன்று வந்ததும் நினைவு கூரத்தக்கதே.

பொதுவாகக் கவிதை முயற்சிகளை நோக்கும் போது கல்முனையில் நீலாவணனுக்குப்பின் பாண்டியூரன், சடாட்சரன், சண்முகம் சிவலிங்கம், கல்முனைப் பூபால், கல்லூரன், மலரா, முகில்வண்ணன், அரு. கணேஸ், சிவவரதராஜன், சபா.சபேசன், ம.புவிலக்ஷி, பூவைசரவணன், அக்கரைப் பாக்கியன், துஜியந்தன். டனீஷ்கரன், கவியன்னை, ஜெனிற்றா, மீரா சுந்தர், கன்னிமுத்து வெல்ல பதியான், கி.கிருபைராஜா ஆகியோர் எழுதி வருகின்றார்.



மூத்த பரம்பரையை நோக்கினால் பாண்டியூரன் பிரபல்யம் பெற்ற கவிஞராக இருந்தும் அவரின் படைப்புக்கள் இதுவரை நூலுருவாக வெளிவராததால் அவரைப்பற்றிய பரவலான விமர்சனங்கள் இடம் பெறவில்லை. என்றாலும் அவரும் கருத்தில் எடுக்க வேண்டிய கவிஞரே ஆவார்.

அடுத்ததாக எனது "பாதை புதிது" கவிதை நூல் 1912ல் வெளிவந்தது. அந் நூலுக்கு அரச சாகித்திய விருது, கொடகே தேசிய விருது, கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் விருது என்பன கிடைத்துள்ளன. ஒரு நூலுக்கு மூன்று பரிசுகள் கிடைத்தமை குறிப்பிடத் தக்கதாகும்.




சண்முகம் சிவலிங்கத்தை எடுத்துக் கொண்டால் இவருடைய 'நீர்வளையங்கள்' கவிதை நூல் 1988லும், சிதைந்து போன தேசமும் தூர்ந்து போன மனக்குகையும் 2010லும் வெளிவந்து எல்லாரது பாராட்டையும் பெற்றுள்ளன.

இவர் தமிழ் இலக்கியத்திலும் ஆங்கில இலக்கியத்திலும் ஆற்றல் மிகுந்தவர். மரபையும், நவீனப் போக்குகளையும் சரிவரப் புரிந்து கொண்டு இரு கவிதைத் தொகுதிகளைத் தந்து பெருமை சேர்த்திருக்கிறார். இரண்டாவது தொகுதியைப் புதுக்கவிதைப் போக்குக்கு உதாரணமாகக் கொள்ளலாம். இது தற்காலக் கவிதையுலகில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும் என்று கூறலாம்.



இன்றைய கவிதைப்போக்கு பல்வேறு பரிமாணங்களோடு வளர்ந்து பிரபல்யம் அடைந்தாலும் இலக்கியத் தரமான சுய அனுபவ வெளிப்பாட்டுப் படைப்பாக - வாழ்வியல் கூறுகளாக - அரசியல் சமூக அபிலாசைகளாக - அதன் பாதிப்புக்களைத் தொட்டுக்காட்டும் - உச்சமான அழகியல் படைப்புக்களாக மிளிரவில்லை என்பதும் உணரத்தக்கதே. இக் குறைகளை நிவர்த்தி செய்து கொள்ள சண்முகம் சிவலிங்கத் தின் கவிதைகள் வழிகாட்டும் என நினைக்கின்றேன்.

அடுத்ததாக கவிதாயினி மலராவுடைய 'இலைகளால் ஆதல்' புதுக்கவிதைத் தொகுதி 2008ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. இவர் பாண்டிருப்பைச் சேர்ந்தவர். இவரது இயற்பெயர் திருமதி.புஸ்பலதா லோகநாதன். நமது பெண் கவிஞர்களுள் மிக முக்கியமான ஒருவர். இவரின் கவிதைகள் இலாவகமான சொல் ஓவியங்களாக இருப்பது வரவேற்கப் பட வேண்டியதாகும்.



கல்லூரனின் 'வெளிக்குள் வெளி' கவிதைத் தொகுதி 1997ல் வியூகம் வெளியீடாக வந்துள்ளது. யாருக்காகவும் சோடித்துக் கொள்ளாமல் நிஜத்தைத் தரிசித்து சித்திரமாக்குவதில் வல்லவராக விளங்கும் இவரிடம் மேலும் எதிர்பார்க்கலாம் எனக் கருதுகிறேன்.

முகில்வண்ணன் பல்வேறு வகையான நூல்களை அதிகம் வெளியிட் டிருக்கும் ஒரு கவிஞர். இவருடைய 'ஒருதேடல்' என்னும் கவிதை நூல் 2014ல் வெளிவந்துள்ளது. ஆன்மீகத் தேடலாக அமைந்த இந்நூல் புதிய கவிதைப் பாங்கில் அமைந்திருப்பது சிறப்பானதே. இவரின் கற்பனைகளும் அலாதியானவை. மேலும் பல கவிதை நூல்களைத் தருவாரெனக் கருதக் கூடியதாய் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தவர் கல்முனைப் பூபால். இவர் இப்போது மலையகத்தில் வாழ்ந்தாலும் கல்முனைப் பூபால் என்னும் பெயரிலே இன்னும் இடைஇடையே எழுதி வருகிறார். 'இலந்தைப் பழத்துப் புழுக்கள்' 'கடலோரத் தென்னை மரம்' என்னும் இரு தொகுதிகளை கவிமணி நீலாபாலன் என்னும் பெயரில் வெளியிட்டுள்ளார். விரைவாகவும் ஓசைச் சிறப்போடும் நினைத்ததைக் கவிதையாக்குவதில் வல்லவர். மேலும் பல நூல்களை எதிர்பார்க்கலாம் என நினைக்கிறேன்.

பெரிய நீலாவணையைச் சேர்ந்த ம.புவிலக்ஷி எழுதிய "கரைதேடும் அலை" கவிதை நூல் 2011 வெளிவந்துள்ளது. ஒவ்வொரு கவிதைக்கும் ஒவ்வொரு புகைப்படம் போட்டு வெளியிட்டமை கவர்ச்சியாய் இருக்கிறது. ஒரு கவிதையின் படங்களை படிப்பவர் மனதில் எழுப்ப அழகிய தொடர்புகளைக் கொண்டு அமைப்பதே கவிதைக்குச் சிறப்புத் தரும். ஆயினும் அவரின் முயற்சி மேலும் சிறக்குமென நம்பலாம்.

அரு.கணேஸ், சிவவரதராசன், உமாவரதராசன் சபா சபேசன் ஆகியோர் நூல் வெளியிடாதிருப்பது நன்றாகாது. படைப்புக்கள் இருந்தும், மேலும் கவிதை படைக்கும் ஆற்றல் இருந்தும் சோர்வாய் இருப்பது, தவிர்க்கப்படல் வேண்டும். இவர்களின் நூல்கள் விரைவில் வெளிவருமென நினைக்கின்றேன்.

அடுத்த தலைமுறையைச் சேர்ந்தவர்களை நோக்கினால் துஜியந்தன் விருந்து என்னும் இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து மூன்று இதழ்களை வெளியிட்டுள்ளார். சகல பத்திரிகைகளிலும் கவிதை எழுதி வருகிறார். பல புதிய கவிஞர்களுக்கும் விருந்து இடம் கொடுத்து வெளிவருவது சிறப்பாகும்.

அக்கரைப் பாக்கியன் ஆற்றல் உள்ளவர். தொடர்ந்து புதிய போக்குகளை உள்வாங்கி எழுதினால் சிறப்பான இடத்தைப் பெறுவார். மேற்குறிப்பிட்ட எமது புதிய தலைமுறையைச் சேர்ந்த கவிஞர்கள் தேடலை அதிகரித்து தற்கால நிலைமைகளைப் புரிந்து வேகமாகவும் அதிகமாகவும் எழுதுவது நல்லதென நினைக்கிறேன்.

பூவை சரவணன் தனது மகளின் பிரிவுக்காக ஒரு கவிதை நூலை 2005ல் வெளியிட்டுள்ளார். அவர் மேலும் எழுதுவது நல்லது.

முடிவாக வெளிப்பாட்டு முறையை வைத்தே அது கவிதையா கட்டுரையா, செய்யுளா என்று கூறமுடியும். வசனம் விளக்குவது என்றும், கவிதை உணர்த்துவது; உணர்ச்சி மயமானது; அனுபவிக்கச் செய்வது, சிந்தித்து சிந்தித்து மகிழக்கூடியது என்றும் கூறலாம். மரபுக்கவிதை தராத வசதியை, வெளிப்பாட்டு முறைகளை புதுக்கவிதை தந்திருக்கிறது வரிவடிவம், படிமம், உவமை, உருவகம் பொருத்தமாக அமைந்த புதிய ஆக்கங்களை எமது பிரதேசக் கவிஞர்கள் தருவார்கள்.





மேலும் சில குறிப்புகள் :

1. கல்முனை வாசகர் சங்க வெளியீடாக காலாண்டுக் கவிதை இதழ் 1969ல் வெளிவந்தது. இதன் தொகுப்பாளராக எம்.ஏ.நு.ஃமான் நான்கு இதழ்களை வெளியிட்டு தமிழ்க் கவிதை உலகுக்குச் சேவை செய்துள்ளார். சண்முகம் சிவலிங்கமும் அவரோடு இணைந்து கவிதை எழுதி வெளியிட்டதோடு ஆங்கிலத்திலிருந்து கவிதைகளை மொழிபெயர்த்து அப்பத்திரிகையில் வெளியிட்டார். இன்றைய தமிழ்க் கவிதைகள் பற்றிச் சில அவதானங்கள்" என்று ஒரு தொடர் கட்டுரையும் எழுதினார். சடாட்சரன், பாண்டியூரன் ஆகியோரின் கவிதைகளும் ஈழத்தில் பிரபலம் பெற்ற பல கவிஞர்களின் கவிதைகளும் இதில் பிரசுரிக்கப்பட்டன. இரண்டாம் இதழில் 'கவியரங்கக் கவிதைகள்' பற்றி நு.ஃமான் எழுதிய கட்டுரையும் பாராட்டத்தக்கதும் பயனுள்ளதுமாகும்.
2. சண்முகம் சிவலிங்கம் தலைவராகவும் சடாட்சரன் செயலாளராகவும் கொண்டு தமிழ் இலக்கியக் கழகத்தை அமைத்து நீலாவணன் அவர்களை ஆசிரியராக ஏற்று 'பாடும்மீன்' என்னும் இலக்கிய சஞ்சிகையை இரு இதழ்கள் வெளியிட்டனர். இப்பத்திரிகை கல்முனைப் பிரதேசத்தின் முதலாவது இலக்கியப் பத்திரிகை ஆகும். இப்பத்திரிகையில் பல கவிஞர்களின் ஆக்கங்கள் வெளிவந்தன.
3. கல்முனையின் மூதறிஞராக விளங்கிய கே. ஆர். அருளையா *B.A.Hon.* இப்பத்திரிகையில் 'கல்லூர்ப் பித்தன்' என்னும் பெயரில் கவிதையும், இயற்பெயரில் 'மேலும் கீழும்' என்னும் தலைப்பில் உலகக் கவிஞர்களின் கவிதைகள் பற்றியும் விளக்கமாக எழுதியுள்ளார். 'பாடும்மீனின்' பணியும் நினைவு கூரத்தக்கது.
4. கலைக் கொழுந்தன் இலக்கிய ஆளுமை நிறைந்தவர். 1982ல் 'பொதுமக்கள் பூமி' சிறு சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து இரு இதழ்களை வெளியீட்டுள்ளார். அப்போது பிரபல்யம் பெற்றிருந்த நமது பல கவிஞர்களின் ஆக்கங்களை அவர் வெளியிட்டது வரவேற்கத்தக்கதே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை தமிழ்ப் பிரதேச
# சிறுகதை நாவல் முயற்சிகள்




**சிவ - வரதராஜன்**

கலை, இலக்கிய ரீதியாக கல்முனைப் பிரதேசம் என்பது இன்றுள்ள பிரதேச செயலக நிருவாகப் பிரிவல்ல. வடக்குத் தெற்காக அது பெரியநீலாவணை தொடங்கி காரைதீவு வரையான பிரதேசமாக இருந்து வந்துள்ளது. வாயு மூலையில் துறைநீலாவணையையும் இது இணைத்துள்ளது. சில நோக்கர்கள் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பகுதியே கல்முனை என்று வரையறுப்பதும் உண்டு. கல்முனையில் முன்னெடுக் கப்பட்டு வந்த இலக்கிய முயற்சிகள் கல்முனைக்கு வெளியில் இருந்த படைப்பாளிகளையும் ஈர்த்தபடி தமிழ், முஸ்லிம் இனங்கள் இணைந்த ஒரு இலக்கியச் சமூகத்தினால் நிகழ்த்தப்பட்டு வந்துள்ளது. இருப்பினும் கல்முனை தமிழ் பிரதேச செயலாளர் பிரிவினால் நடாத்தப்படவுள்ள கலை, கலாசார விழாவின், கலாசார மலருக்காக இக்கட்டுரை எழுதப்படுவதால், கல்முனை தமிழ் என்ற குறுகிய நிலப்பகுதிக்குள் இதுவரை இடம்பெற்ற சிறுகதை, நாவல் முயற்சிகளை மட்டுமே இது பதிவு செய்ய முனைகிறது.

ஏனைய கலை -இலக்கியப் படைப்புகளுக்கும் சிறுகதைக்குமிடையிலான நெருக்கத்தை விட சிறுகதைக்கும் நாவலுக்குமான நெருக்கம் அதிகம். அத்துடன் இப்பிரதேசத்தில் நாவல் முயற்சிகள் மிகவும் குறைவு. இந்த இரண்டு காரணங்களாலும் சிறுகதை, நாவல் என்ற இந்த இரண்டும் ஒரே கட்டுரையில் இங்கே ஒருங்கிணைத்துப் பார்க்கப் படுகின்றது.

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் சுந்தரராமசாமி, புதுமைப்பித்தன் போன்றவர்கள் கதை என்பது வேறு, சிறுகதை என்பது வேறு என்று வாதிட்ட போக்குகள் ஈழத்தில் பெரும் விடயமாகப் பார்க்கப்படவில்லை. சிறுகதை, நவீன சிறுகதை என்ற பதங்கள் பயன்படுத் தப்படுகின்றன. எனினும் பலரைப் பொறுத்தமட்டில் ஒருகாலத்தில் நவீனமாக பார்க்கப்பட்ட ஒரு கதை பின்னர் காலமாற்றத்திற்கேற்ப சாதாரண கதையாகக் கருதப்படுவதனால் இந்த வகை ஆய்வுகளும் தேவை யற்றவை என எண்ணக்கூடும்.

இவ்வகையில் இந்தப் பிரதேசத்தில் சிறுகதை முயற்சிகளில் ஈடுபட்ட படைப்பாளிகள் எனும்போது வகை, தொகைகளைக் கருத்தில் கொள்ளாமல், விருப்பு வெறுப்புகளுக்கு ஆளாகாமல் அனைவரையும் பதிவு செய்யவேண்டியது எனது கடமையாகின்றது. அதே வேளை சிறந்த படைப்புக்களுக்கும் அல்லது படைப்பாளிக்கும் முக்கியம் தந்து பேசவேண்டியதும் அசியமாகிறது. இதன்படி நீலாவணன், மு. சடாட்சரன், சண்முகம் சிவலிங்கம், உமா வரதராஜன், முகில்வண்ணன், எஸ். அரசரெத்தினம், சபா - சபேசன், சபா - தயாபரன், கல்லூரன், பைந்தமிழ் குமரன் (டேவிட்), சிவ –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரதராஜன், சஞ்சீவி சிவகுமார். கமலினி சிவநாதன், செ. திவாகரன், எஸ்.எஸ்.ராஜன், மலர்மன்னன், செ.துஷியந்தன், யௌவனா வசந்தன், பெரியநீலாவணை இந்திரா (மிதுஷன்) என்ற ஒரு நீண்ட பட்டியல் எமக்குக் கிடைக்கின்றது. எனினும் இவர்கள் எல்லோரும் தொடர்ந்து எழுதியவர்கள் அல்ல. சிறுகதையில் முத்திரை பதித்தவர்களும் அல்ல. ஒரு சிலர் ஓரிரு கதைகளை மட்டும் எழுதிவிட்டு நீண்டதுயில் கொள்கின்றனர். சிலர் "ச்சீ"..."ச்சீ" இந்தப் பழம் புளிக்கும் என்று ஒதுங்கி விட்டனர். எனினும் சிலர் மரதன் ஓட்டக்காரர் போல களைக்காமல் தொடர்ந்து ஓடிக்கொண்டிருக் கின்றனர். சிலர் எப்போதாவது ஒரு முறை மட்டுமே பூக்கும் அற்புத மலர்களை தருகின்றனர்.

மலர்மன்னன், எண்பதுகளில் ஓரிரு கதைகளை எழுதினார். பின்னர் இவர் ஐரோப்பிய தேசமொன்றுக்கு இடம்பெயர்ந்து போய்விட்டார். சபா- தயாபரன் - 04 கதைகளை எழுதியிருந்ததாக நினைவு, இவர் தற்போது அவுஸ்த்ரேலியாவில் வசிக்கின்றார். அவரது அண்ணன் சபா- சபேசன் - 04 கதைகள், சிவ- வரதராஜன் (நான்) - 06 சிறுகதைகள், சஞ்சீவி சிவகுமார் - 07 கதைகள், கல்லூரன் கவிதையில் குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்தியிருந்தாலும் - 02 சிறுகதைகளை மட்டுமே தந்திருக்கின்றார். இந்த ஆறு பேரின் கதைகளும் மிகச் சிறந்த கதைகள் இல்லை என்றாலும் ஓரளவுக் கேனும் கலை நுணுக்கங்களும் சுய அனுபவங்களின் வலிகளும் நிறைந்தவை. வேறு ஒரு விதத்தில் சொன்னால் "இவை காய்களும் அல்ல, பழங்களும் அல்ல, உதக்காய்கள்".

செ.திவாகரன் மித்திரன், தினமுரசு, வீரகேசரி போன்ற பத்திரிகைகளில் பல கதைகளை எழுதிய போதிலும் தொகுதிகள் எதனையும் இதுவரை வெளியிட வில்லை. நண்பன் எஸ்.எஸ்.ராஜனின் இரண்டு கதைகளைப் படித்திருக்கின்றேன். ஆனால் இன்று துரதிர்ஷ்ட்ட வசமாக அவர் எம்மிடையே இல்லை. இந்த இருவரின் கதைகளும் ஆரம்பநிலை வாசகர் களால் மறக்க முடியாத கதைகளாக இருக்கக்கூடும். காதல் தோல்விகள்/ஊடல்கள், கணவன் மனைவி பிரச்சினைகள், குடும்ப உறுப்பினர்களிடையே தோன் றும் பல்வேறு முரண்கள் போன்றவை கதையாக்கப் பட்டிருக்கும். இவர்கள் தங்கள் கதைகளில் வழமையான கதைசொல்லும் பாணியையும் மொழியையும் தவிர்த் திருப்பார்களாயின் கதைகள் மேலும் சிறப்பாக இருந்திருக்கும்.

செ.துஷியந்தன் - 03 கதைகள், டனிஸ்கரன் -04, பெரியநீலாவணை இந்திரா - 02 என்ற எண்ணிக்கையில் சிறுகதைகளை எழுதியுள்ளதாக அறிகின்றேன். எனினும் இந்த கட்டுரை எழுதப்படும் வரையிலும் இவர்களின் கதைகள் எனக்குப் படிக்கக் கிடைக்கவில்லை. குறுகிய கால எல்லைக்குள் நான் இந்த கட்டுரையை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் இவர்களின் கதைகளை வாங்கி படிக்கின்ற வாய்ப்பு கிட்டாது. இதற்காக மனம் வருந்து கின்றேன். எனினும் இவர்கள் தங்கள் முயற்சிகளைத் தொடரவேண்டும்.

எஸ்.அரசரெத்தினம் - 11 கதைகளைத் தந்து ள்ளார், பெரிதும் இவை தேசிய தமிழ் பத்திரிகை களில் வெளியானவை. இவற்றில்- 05 கதைகள் போரை எதிர்கொண்ட சமூகத்தின் பல்வேறுபட்ட வலிகளைச் சொல்லும் கதைகள். இவரது கதைகளுக் குள் உண்மையின் வலிகள் நிறைந்திருந்தாலும் இவரும் வலிந்து கதைகளை ஒரு கயிற்றின் புரிபோல் திரிக்க முயல்வது தெரிகின்றது. இதனாலோ என்னவோ சில இடங்களில் செயற்கைத் தனங்கள் வெளிப்படத் தொடங்குகின்றன. எனினும் இவரது கதைகளையும் சுமாரான கதைகள் எனக் கொள்ளலாம்.

உதிரியாக சில சிறுகதைகளை மட்டும் தந்தவர்கள் என்ற வகையில் அவர்களை முன்னே குறிப்பிட்டேன், இனி தமது சிறுகதைகளைத் தொகுதி களாக வெளிக் கொணர்ந்தவர்கள் என்ற வகையில் பின்வருவோர் முக்கியம் பெறுகின்றனர். நீலாவணன் (ஒட்டுறவு - 2003) மு. சடாட்சரன் (மேட்டுநிலம் - 2009), சண்முகம் சிவலிங்கம் (காண்டாவனம்-2014) உமா வரதராஜன் (உள்மன யாத்திரை-1988, பின்னர் மேலும் மூன்று கதைகள் சேர்த்து "உமா வரதராஜன் கதைகள்" - 2011) முகில் வண்ணன் - (அவள் ஒரு தமிழ்பெண் - 2006, இனியும்நான் இராமன்தான், நீறு பூத்த நெருப்பு - 2016) கமலினி சிவநாதன் தொலைவில் ஒரு கனவு -2005), பைந்தமிழ்க் குமரன் (கானல் வசந்தங்கள் - 2015) ஆகிய மொத்தம் பத்து சிறுகதை தொகுதிகளே இப் பிரதேசத்தின் இன்றுவரையான அறுவடைகளாக உள்ளன.

எமது பிரதேசத்தில் இந்தப் பட்டியலில் உள்ள படைப்பாளிகளில் நீலாவணனே முதல் கதையை எழுதியுள்ளார். இவர் எழுதிய "பிராயச்சித்தம்" என்ற கதை சுதந்திரனில் 1952இல் வெளிவந்துள்ளது. இதன்படி பார்த்தால் கல்முனை தமிழ்ப்பிரிவில் சிறுகதை முயற்சிக்கு 65 வயதாகிறது. இந்த 65 ஆண்டுகால சிறுகதை முயற்சியில் எமது பகுதியில் இருந்து வெளிவந்த சிறுகதைகள் போதுமானதல்ல. ஆனால் படைப்புக்களை காத்திர ரீதியாகப் பார்ப்போமானால் எமது பகுதியிலிருந்தும் உலகத்தரம் வாய்ந்த தமிழ் சிறுகதைகள் வெளிவந்துள்ளன. இந்தப் பெருமை எழுத்தாளர் உமா வரதராஜன், சண்முகம் சிவலிங்கம் ஆகியோரையே சாரும். இதன்படி எமது படைப்பாளிகளில் உமா வரதராஜன், சண்முகம் சிவலிங்கம் ஆகிய இருவரும் தமிழ் சிறுகதை எனும் பரந்த வானில் அண்ணாந்து பார்க்கும்படி உயரப் பறக்கும் வானம்பாடிகளாக உள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒரு படைப்பு அதிகம் முக்கியம் பெறுவதற்கு பல காரணங்கள் உள்ளன. எதைத் தேர்ந்தெடுத்து எழுத்தில் கொண்டு வருவது, அதற்குப் பொருத்தமான மொழியை கண்டடைவது /பயன்படுத்துவது , தேவை யற்ற தொய்வுகளை ஈவு இரக்கமின்றி நீக்கி, அதன் இறுக்கத்தைப் பேணுவது, எந்தப் புள்ளியிலிருந்து கதையை எந்தத் திசைநோக்கி நகர்த்துவது , அதன் மூலம் உருவத்தை அழகாக கட்டமைப்பது, அதன் ஆரம்பங்கள், முடிவுகள், முத்தாய்ப்புப் பெறும் தன்மை, காட்சியைக் கண்முன் கொண்டுவருதல், வருணனைகள், பாத்திரச் சித்தரிப்புக்கள், படைப்பாளி என்ற வகையில் அவனுக்கு இருக்க வேண்டிய துணிச்சலான சமூக விமர்சனப்பாங்கு, வாசகனை உணர்வால் படிக்கச் செய்கின்ற சூட்சும, படிம உத்திகள் எனப் பல விடயங்கள் உள்ளன.

எம்மிடையே இந்த அணிகலன்களை மிக அவதானமாக கையாண்டவர்கள் என்ற வகையில் சண்முகம் சிவலிங்கம் மற்றும் உமா வரதராஜன் ஆகிய இருவராலும் ஈழத்து தமிழ் இலக்கிய மரபில் புதிய திசை மாற்றங்களை ஏற்படுத்த முடிந்துள்ளது. சண்முகம் சிவலிங்கம் ஈழத்து நவீன கவிதையில் அதிகம் பேசப்படுபவர் என்றால், உமா வரதராஜன் நவீன சிறுகதையில் அதிகம் மதிக்கப்படுபவர். இருப்பினும் சண்முகம் சிலிங்கத்தின் காண்டாவனம்'' என்ற தொகுதிக்குப் பின்னர் ஈழத்தின் சிறுகதை வளர்ச்சியில் அவரது நுணுக்கமான உழைப்பையும் அவர் செய்த காலத்தின் பதிவையும் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கின்றது.

நாவல் என்பது ஒரு பெரிய களம், பல பாத்திரங்களும், பல முரண்பாடுகளும் சமாந்தரமாக மோதுகின்றதும், ஆரத்தழுவுவதுமான ஒரு இலக்கிய வடிவம். ஈழத்தின் பொதுவான அனுபவம் போன்றே எமது பிரதேசத்திலும் நாவலுக்கான முயற்சிகள் மிக மிகக்குறைவு. கடந்த ஆறு தசாப்த கால இடைவெளியில் எமது பிரதேசத்திலிருந்து ஆறு நால்கள் கூட வெளிவரவில்லை. இதுவரை நூல்வடிவில் நான்கு நாவல்கள் மட்டுமே வெளிந்துள்ளன.

ஒன்று - உமா வரதராஜனின் ''மூன்றாம் சிலுவை'', (2009) இரண்டு - எஸ்.அரசரெத்தினம் எழுதிய ''சாம்பல் பறவைகள் (2010), முகில்வண்ணனின் ''ஆனந்தக் கண்ணீர் (2006) செல்லக்கிளி (2011), முகில்வண்ணனின் ''இராசாத்தி'' வீரசேகரியில் தொடராக வெளிவந்தது எனினும் நூலுருப்பெறவில்லை. மற்றையது சண்முகம் சிவலிங்கத்தின் ''காண்டாவனம்'' சிறுகதைத் தொகுதியில் இடம்பெற்ற ''காலடி'' என்ற குறுநாவல். இவை தவிர ''மூன்றாவது மனிதன்'' சஞ்சிகை ஆசிரியர் ''பௌசர்'' வெளியிட்ட ''Eastern Times'' என்ற வாராந்தப் பத்திரிகையில் இந்தியப் படை ஈழத்தில் நிலை கொண் டிருந்த காலத்தினைப் பிரதிபலிக்கும் ''ஓநாய்கள்'' என்ற சண்முகம் சிவலிங்கத்தின் நாவலானது, பாதியிலே (பத்திரிகை நின்று போனதால்) நின்றுவிட்டது. அவர் எழுதியதாகச் சொல்லப்படும் ''நான்காண்டுகள்'' ''கோவில் பெருவெளி'' என்பன இன்னும் அச்சு வடிவில் வெளிவரவில்லை. உமா வரதராஜன் அண்மையில் தினக்குரல் பத்திரிகையில் எழுதிவந்த ''அவனும் நானும் அவளும்'' என்ற நாவல் கூட முற்றுப் பெறவில்லை. இந்த நாவல்களும் வெளிவருமானால் எமது பிரதேசத்திற்கு நாவல் முயற்சியிலும் முக்கிய இடமிருக்கும்.

நீலாவணன் ஒருகாலத்தில் கொடிகட்டிப் பறந்த ஒரு கவிஞன். அவரின் நாட்டம், கதை எழுதுவதிலும் இருந்திருக்கிறது. 2003ம் ஆண்டு வெளிவந்த ''ஒட்டுறவு'' என்ற கதைத்தொகுதியில் சிறுகதைகள், விருத்தாந்த சித்திரங்கள் ,குறும்புக் கதைகள், உருவகக் கதைகள் எனப் பலவற்றை அவர் எழுதியுள்ளார். எனினும் ஈழத்தில் கவிதையில் அவர் விதந்துரைக்கப் பட்ட அளவுக்கு சிறுகதையில் பேசப்படவில்லை. இவருடைய தொகுதியில் உள்ள கதைகளில் பெரும் பாலானவை எழுபதுகளுக்கு முன்னர் எழுதப்பட்டவை.

60கள் ஈழத்து இலக்கிய வரலாற்றில் முற்போக்குவாதம் ஆதிக்கம் செலுத்திய காலம் எனக் கூறப்படுகின்றது. இதன் நீட்சி 70களிலும் இருந்தது எனச் சொல்லப்படுகின்றது. இதனாலோ என்னவோ முற்போக்கு இலக்கிய முகாமுடன் தன்னை அடையாளப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படுத்தா விட்டாலுங் கூட இவரது கதைகளில் முற்போக்குச் சிந்தனைகள் அதிகம் வெளிப்படுவதைக் காணலாம். இக்கதைகள் அந்தக் காலத்தில், சூழலில் பல அதிர்வுகளை தந்திருக்கக்கூடும். இவர் ஆரம்ப காலத்திலிருந்தே சமூக யதார்த்தத்தில் காலுன்றி நின்றவர். சமூதாய உணர்வு மிக்கவராக வாழ்ந்தவர், இதனால் வர்க்க வேறுபாடு, பிரதேச வாதம், சுரண்டல், பொய்கள், போலித்தனங்கள், ஊழல்கள், வறுமை, சாதிப்பாகுபாடு போன்ற பிரச்சினைகள் இவரால் படைப்பாக்கப் பட்டுள்ளதுடன் தனது எதிர்ப்பினையும் படைப்பாளி என்ற வகையில் வெளிப்படுத்துகின்றார். இவரது "ஒட்டுறவு" சிறுகதைத் தொகுதிக்கு "மருதூர்க்கொத்தன்" எழுதிய "வாக்கு மூலத்"தில் நீலாவணனின் சிறுகதைகள் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார். **"மண்வளமும் மட்டக்களப்பு கிராமிய வழக்காற்றுச் சொற்களும், கிராமிய சமய சடங்கு சம்பிரதாயங்களும், சொத்துடமையின் அடிப்படையிலான சமூக உறவுகளும் முரண்பாடுகளும் என்று மட்டக்களப்பு தமிழர் வாழ்வியலை பிரதிபலிக்கும் காலத்தின் கண்ணாடியாய் அமைந்தவை. இயல்புத்தனம் குன்றாத யதார்த்தமான படைப்புகள், மட்டக்களப்பு பேச்சுவழக்கின் கம்பீரத்தையும் மொழி இனிமையையும் உரைக்கும் ஒலிநாடாக்கள்"**

60களில் ஈழத்து இலக்கிய வரலாற்றில் சண்முகம் சிவலிங்கம் என்ற கவிஞனின் பிரவேசம் முக்கியமானது. இவர் ஈழத்து கவிதைப் போக்கினை நெறிப்படுத்தும் அளவுக்கு செய்யுள் யாப்புக்களில் தொடங்கி அவருடைய "சிதைந்து போன தேசமும் தூர்ந்துபோன மனக்குகையும்" என்ற கவிதைத் தொகுதியில் உள்ள சாதாரண வார்த்தைகளாலான கவிதைகள் வரை மாற்றங்களைச் செய்தவர். சாதாரண வார்த்தைகள் மூலம் அசாதாரண உணர்வுகளை எழுப்பும் நுட்பம் இவரிடம் வாய்க்கப்பெற்றிருந்தது. இதனையே பேராசிரியர் நு்.மான் "ஏமாற்றும் எளிமை" என்று குறிப்பிடுகின்றார். இன்று பார்க்கையில் இவர் கவிதையில் மட்டுமன்றி சிறுகதைகளிலும் அவரது தலைமுறை எழுத்தாளர்களை விட சமகால மாற்றங்களை தயக்கமின்றி,துரித கதியில் உள்வாங்கியவர், வெளிப்படுத்திக் காட்டியவர் என்று தோன்றுகின்றது.

ஆரம்பத்தில் சோஷலிச இலக்கியக் கோட்பாட்டுக்கு உட்பட்டு எழுதிய 'வெற்றிலைப் பாத்தி சரிகின்றது' என்ற கதை தொடக்கம் போரை எதிர்கொள்ளல் என்ற தவிர்க்க முடியாத நிலைப்பாட்டுடன் இவர் எழுதிய 'காலடி' என்ற குறுநாவல் வரை கோட்பாட்டு மாற்றங்களிலும் சரி, சிறுகதை உத்தி மற்றும் அழகியல் மாற்றங்களிலும் சரி தன்னைப் புதுப்பித்துப் பயணித்தவர்.

இவரது பிற்பட்ட சிறுகதைகள் மிகவும் உணர்வுத் தளத்தில் அமைபவை, அகவயமானவை, மனதில் உள்ள நினைவுத் தடங்களை தூசுதட்டி எடுத்து அவற்றை ஏதோ ஒரு ஒழுங்கில் இணைக்க முயல்வதன் மூலம் சிறந்த சித்திரங்களை உருவாக்குபவர், கதையில் இறுக்கத்தை பேண முனைபவர். இவரின் முதலாவது கதை இவரின் காதல் பற்றிய அனுபவங்களைக் கொண்ட 'கசங்கிய மலர்கள்' ஆகும். தனது கதைகள் மூலம் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்த சிக்கலான உணர்வுகளைத் தனித்தனி நார்களாக இவர் பிரித்தெடுக்கும் நுட்பம் வாழ்வை விஞ்ஞானப் பாங்காக்குவன, கலைச் செழுமை பெறச் செய்வன, வாழ்வின் சுதந்திரத்தினை அவாவி நிற்பன. இவரது 'காண்டாவனம்' தொகுதியில் உள்ள பதினைந்து கதைகளும் ஈழத்தின் இனமுரண்பாட்டினதும் அது ஏற்படுத்திய போரினதும் வலி மிகுந்த பதிவுகளாக உள்ளன. அதிலும் குறிப்பாக இந்தியப்படையின் அட்டூழியங்களும் அதற்கெதிரான போரும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த தொகுதியில் உள்ள பல கதைகளைப் படித்து முடிக்கையில் அவை மனதில் இனம் தெரியாத துயரத்தை விதைக்கின்றன. கண்களை மூடி, நாற்காலியில் மெல்லச் சாய வைக்கின்றது ..

இவரது "காலடி" என்ற குறுநாவல் யுத்தகால பயங்கர நாட்களை குறியீட்டுக் காட்சிகளாக விபரிப்பது. வசனங்கள் அற்ற ஒரு ஊமைப் படத்தின் காட்சிகளாக அவை மாறி மாறிக் கோர்க்கப்பட்டுள்ளன. எமது பிரதேசத்தில் நிகழ்ந்த சில பயங்கர நிகழ்வுகள் முதல் சர்வதேச போராட்ட நீரோட்டம் வரை இதில் பனிப்புகாராகக் காட்சிப் படுத்தப்பட்டிருக்கின்றது. இந்தக் கதையை புரிந்து கொள்வதற்கு வாசகனுக்கு தேர்ந்த வாசிப்பின் அனுபவம் இருக்க வேண்டும். வாசகனே மௌன இடைவெளிகளை நிரப்ப வேண்டும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமான புள்ளிகளை பொருத்தமானவற்றுடன் இணைத்து தோன்றும் கோட்டுச் சித்திரத்தினை தரிசிக்க வேண்டும், பாத்திரங்களின் முக மறைப்புக்களை நீக்கி கதையின் ஆழத்தினைப் புரிந்துகொள்ள வேண்டும். புள்ளிகள் ஒவ்வொன்றும் பொருத்தமற்ற புள்ளிகளுடன் தொடுக்கப்படுமாயின் வேறு ஏதேனும் சித்திரம் அவனுக்குப் புலப்படக்கூடும். இது நாவல் முயற்சிக்கு முற்றிலும் புதுமையானது என்று கூறமுடியாது. கோணங்கியின் சிக்கலான படைப்புகளுக்குள் நுழைய வழி தெரியாத வாசகனாக நாம் பலமுறை தடுமாறியிருக்கின்றோம். சண்முகம் சிவலிங்கம் அவர்களே இந்தப் பாணியை 'கனவுக்குள் கனவான அந்தக் கதை அமைப்பின் புனைவுத் தருக்கத்தையும் அதன் கட்புல படிம ஊடகத்தையும் பல வாசகர்களும் விமர்சகர்களும் தவற விட்டிருக்கின்றார்கள்' என "காண்டாவனம் கதைகள்" பற்றிய குறிப்பில் சொல்லியிருக்கின்றார். இவர் எழுதிய வேறு பதினைந்திற்கு மேற்பட்ட கதைகளும் இவரால் எழுதப்பட்ட 'நான்காண்டுகள்', 'கோயில் பெருவெளி' போன்ற நாவல்களும் எதிர் காலத்தில் வெளிவருமானால் இவரின் படைப்புலகத்தினை எம் போன்ற வாசகர்கள் முழுமையாகத் தரிசிக்க முடியும்.

மு. சடாட்சரன் ஐயா அவர்கள் நீவாவணன் காலத்து இலக்கியச் சோலையில் நீண்ட காலமாக பூவும், காயும், கனிகளும் தந்த ஒரு வைரமரம். ஆனால் இலைகள் மறைய வகை தொகையாய் காய்த்துத் குலுங்கியவர் என்றும் குறிப்பிட முடியாது. இவரது கதைகள் ஈழத்தின் பிரபலமான பத்திரிகைளில் மட்டுமல்லாது தமிழகச் சஞ்சிகைகளான கணையாழி, கலைமகள் ஆகியவற்றிலும் வெளிவந்துள்ளன. இதுவரை இவர் எழுதிய சிறுகதைகள் "மேட்டு நிலம்" என்ற தொகுதியாக வெளிவந்துள்ளது. இதற்கு 2009ம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண சிறுகதை இலக்கியத் திற்கான சாகித்தியப் பரிசு கிடைத்துள்ளது. இத்தொகுதியில் மொத்தம் 11 கதைகள் மட்டுமே உள்ளன. இவரது முதலாவது கதையான பிடிப்பு 1967ல் எழுதப்பட்டது. 50 வருடங்களில் இவர் எழுதிய கதைகள் மிகவும் குறைவே. இக்கதைகள் எழுதப்பட்ட காலங்களுடன் தொடர்புபடுத்திப் பார்க்கப்படும் போது உச்சம் என்று தோன்றும். இவரது சிறுகதையில் ஒரு பண்பட்ட நேர்த்தியைக் காணமுடியும். எனினும் இத்தொகுதியில் உள்ள கதைகள் தற்காலத்தின் முக்கிய சிறுகதைகளுடன் ஒப்பிடும் போது பல அடிகள் பின்னுக்கு நகர்வன. இவரது 'அழியா ஓவியம்' எனக்குப் பிடித்தமான ஒரு கதையாகும்.

இவரது "மேட்டு நிலம்" என்ற சிறுகதைத் தொகுதியை மதிப்பிட்டு முன்னுரை தந்த கலாநிதி. செ.யோகராசா அவர்கள் '**சடாட்சரன் காலத்தில் எழுதியோர் பலரும் மட்டக்களப்பு சார்ந்த சிறுகதை களையே பெருமளவு எழுதி வந்துள்ளனர். அவை - வறுமை, கிராமியம், தொழிலாளர் வாழ்வு, குடும்பம், இலட்சியம், காதல் எனக் குறிப்பிட்ட சில விடயங் களையே சுற்றிப் படர்ந்திருந்தன. சில வேளைகளில் மண்வாசனை நிரம்பிய வர்க்கப்பார்வையும் இடம் பெற்றதுண்டு. ஆனால் சடாட்சரன் சிறுகதைகள் அந்தச் செல்நெறியில் இருந்து விலகி, புதிய களத்தை அறிமுகம் செய்கின்றன, புதிய அனுபவங்களை ஏற்படுத்துகின்றன, புதிய செய்திகளை வழங்குகின்றன.**' என்கிறார்.

அடுத்து உமா வரதராஜன். ஒரு சிறந்த நுண்மையான கலையுணர்வும், அதன் வெளிப்பாட்டுத்திறனும் கொண்ட ஒருவர் என்பது பலரும் அறிந்ததே. 1988ம் ஆண்டு "வியூகம்' வெளியீடாக வெளிவந்த அவரது "உள்மன யாத்திரை" என்ற 14 சிறுகதைகளைக் கொண்ட தொகுதி இலக்கிய உலகில் இன்றுவரை முக்கியமாகப் பேசப்பட்டுவரும் ஒரு கலைப் பொக்கிஷமாக உள்ளது. இதில் உள்ள எல்லாக் கதைகளும் நான் இதுவரை படித்த கதைகளில் என்றும் நினைவிருப்பவை. இத்தொகுதிக்கு பேராசிரியர் எம்.ஏ. நு்.மான் அவர்கள் எழுதிய முன்னுரையில் இவ்வாறு கூறுகின்றார் "**உமா வரதராஜன் வெளிப்படுத்தும் சமூக யதார்த்தம், அவை ஏற்படுத்தும் கலைப் பாதிப்புக்கள் ஆழமானது, சமூகத்தில் ஊடுருவியுள்ள பொய்களை, போலித்தனங் களை, முரண்களை அவை அம்பலப்படுத்துகின்றன. அவற்றோடு ஒத்தோட மறுக்கும், அவற்றுக்கிடையே அகப்பட்டு நசுங்கும் மனித உள்ளத்தின் அவஸ்தையை உணர்த்துகின்றன. இந்த அவஸ்தையை வாசகர்கள் மனதிலும் தொற்றவைக்கின்றன. இதுவே அவரது கலையின் வெற்றியாகும்**"

இந்தத் தொகுதிக்குப் பின்னர் இவர் "அரசனின் வருகை", "கள்ளிச் சொட்டு", "வெருட்டி", "மீனுக்குள் ஒளிந்திருக்கும் பாடல்", "சவுக்கம்" என்ற ஐந்து சிறு கதைகளைத் தந்துள்ளார். இவை அவரது ஆரம்பகால சிறுகதைகளின் வெளிப்பாட்டு முறையிலிருந்தும், பார்வையிலிருந்தும் முற்றிலும் வேறுபட்டவை. இவற்றில் முதல் இரு கதைகளும் "இந்தியா ருடே" யிலும் வீரகேசரியிலும் வெளிவந்தவை. "வெருட்டி" மூன்றாவது மனிதனிலும், "மீனுக்குள் ஒளிந்திருக்கும் பாடல்" காலச்சுவடிலும் வெளிவந்தவை. இந்த ஐந்து கதைகளில் அரசனின் வருகை, கள்ளிச் சொட்டு, சவுக்கம் முதலியன கொடிய போரின் பேய் நகங்களை எமக்கு காட்டுகின்றன. "மீனுக்குள் ஒளிந்திருக்கும் பாடல்" கவித்துவமான ஒரு மொழியினாலானது. காதலும் அரசியலும் கலந்தது. இவை தவிர உமா வரதராஜன் எழுதி அவரது தொகுதியில் இடம்பெறாத "அந்தப் பார்வை அப்படித்தானிருக்கும்", "இங்கேயும் ஒரு பூ

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலரும்", "ஒரு ஏணி சரிகின்றது" முதலிய கதைகளையும் சேர்த்துக் கணக்கிடும் போது அவர் இன்று வரை எழுதியது 22 கதைகள் மட்டுமே. இது இவர் எழுத்துலகில் இயங்கும் சுமார் 40 வருட காலத்தினைக் கணக்கிலெடுத்தால் போதுமானதல்லதான். ஆனால் இந்த கதைகள் மூலம் ஈழத்தின் சிறுகதையுலகில் இன்றும் ஸ்திரமான ஓர் இடத்திலுள்ளார்.

சிறுகதையில் அகவயமான பயணமே இவருடையது. இதனால் இவரின் மனச்சுவர் ஓவியங்களை தத்ரூபமாக வரைந்து காட்சிப் படுத்தியுள்ளார். கால மாற்றத்திற்கேற்ப கதை மொழியிலும் புனைவிலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என விரும்புபவர். இதனால் இவர் மிக நிதானமான பயணியாக உள்ளார். ஓர் உணர்வினை, காட்சியினை மிக கச்சிதமாக கண்முன் கொண்டுவருவதில் இவர் கை தேர்ந்தவர். இவரது ''கள்ளிச்சொட்டு'' கதையில் எமது திரௌபதையம்மன் கோவில் கடைத்தெருவினை அப்படியே கண்முன் கொண்டு வந்திருப்பார். காலத்தின் தேவைக்கேற்ப "அரசனின் வருகை" கதையில் ஒரு சூட்சுமமான குறியீட்டு மொழியைப் பயன்படுத்தியிருக்கின்றார். சம்பங்களைக் கோர்க்கும் விதம், உரையாடல்கள் , ஆலாபனைகள் அற்ற இயல்பான மொழி, ஒரு கலைஞனுக்குள்ள துணிச்சல், தேவைக் கேற்பத் தூவப்படும் நகைச்சுவைகள், தொடக்கப் புள்ளி, முத்தாய்ப்பு எல்லாமே அவரின் மீது பெரும் மதிப்பினை ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்த உமா வரதராஜன் என்ற படைப்பாளியே அண்மையில் பெரும் சர்ச்சைக்குள்ளான ஒரு நாவலினைத் தந்துள்ளார். காலச்சுவடு பதிப்பகத்தினால் தமிழ் நாட்டில் வெளிவந்த இந்நாவலின் பெயர் "மூன்றாவது சிலுவை". "இனி இவர் எங்கே எழுதப் போகின்றார் "என்று புதிய இலக்கிய மல்யுத்தக் காரர்கள் அறை கூவல்கள் விடுத்துக் கொண்டிருந்த காலத்தில் இந் நாவலினை எழுதி தனது இருப்பையும் வீச்செல்லையையும் உமா நிரூபித்திருக்கிறார் .

தன் கிண்டல் மொழியில் அவரே இதனை ஓர் அசைவ நாவல் எனக் கூறுகின்றார். இந்நாவல் பல அந்தரங்கங்கள் பற்றிப் பச்சையாகப் பேசினாலும் ஒரு இலக்கியக்காரனாக அவர் சொல்ல வந்த பல உப தரிசனங்களை அதில் காணலாம் . அது காரிய உலகு பற்றிய அவரது பட்டறிவாக இருக்கலாம். அதில் மறைந்து கிடக்கும் தனிப்பட்ட அரசியலை விட்டுப் பார்ப்போமானால் பல கலை நுட்பங்களையும், செழுமையான மொழியையும், தொய்வுகள் அற்ற சுவாரஸ்யமான கதைசொல்லலையும் அவர் மீண்டும் ஒருமுறை நிரூபித்திருக்கின்றார். அவர் அண்மையில் தினக்குரலில் எழுதிவந்த "அவனும் நானும் அவளும் "என்ற நாவல் இரண்டு பாகங்களுடன் நின்று போனமை கவலையளிக்கின்றது. இந்த நாவலும் இவரின் ஒரு அகவயமான பயணமே, ஆனால் மிக நீண்ட பயணம். இந்த நாவலில் எமது கல்முனைப் பகுதியில் நடந்த பல முக்கிய சம்பவங்கள் தத்ரூபமாக வந்துள்ளன. இது முழுமை பெற்றிருந்தால் அவரது இளமைக் கால சுய அனுபங்களையும் எமது பிரதேசத்தின் சமூக, அரசியல், பொருளாதார மாற்றங்களையும் யுத்த சாட்சியங்களையும் கலந்த ஒரு முக்கியமான படைப்பாக அமைந்திருக்கும்.

இவரின் ''எலியம்'' என்ற சிறுகதை கா.பொ.த. (சாதாரண தரம்) தமிழ் பாடப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. இதே கதை ஆங்கிலத்தில் (*Rattology*)) சண்முகம் சிவலிங்கத்தினால் மொழி பெயர்க்கப்பட்டு *Lanka Mosaic* எனும் ஆங்கிலத் தொகுப்பில் வெளிவந்துள்ளது. இவரின் "அரசனின் வருகை" என்ற கதை *The Advent King* என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு டெல்லியிலிருந்து வெளியாகும் *Little Magazine* லும், "கள்ளிச் சொட்டு" என்ற கதை பொன்.கணேசனினால் (கல்லூரன்) *Cactus Dribble* என்ற தலைப்பில் மொழிபெயர்க்கப்பட்டு *Daily News* லும் பிரசுரமானவை.

"அரசனின் வருகை "சிறுகதை ஒக்ஸ்/ போர்ட் யுனிவெர்சிட்டி பதிப்பகத்தால் வெளியிடப் பட்ட *"Uprooting the Pumpkin"* தொகுப்பில் *'The Advent of the King'* என்ற தலைப்பிலும், "முகங்கள்" என்ற சிறுகதை *'Tamil short stories from Sri Lanka'* என்ற தொகுப்பில் *'faces'* என்றதலைப்பில் கொடகே சகோதரர்களின் நிறுவனத்தாலும், "எலியம் "என்ற சிறுகதை "மீப்புர புராணய "என்ற தலைப்பில் சிங்கள மொழியில் "அசல் வெசி அ்பி "தொகுப்பிலும், "அரசனின் வருகை "சிறுகதை ஜேர்மன் மொழியில் "நுனவை "என்ற இலக்கிய சஞ்சிகையின் 50வது இதழில் 2009ம் ஆண்டும் வெளியாகின

அயலகத்தில் வெளியான சில தொகுப்புகளில் இவருடைய படைப்புகள் சேர்த்துக் கொள்ளப் பட்டிருக்கின்றன. (மாலை சூட்டிகள் -இந்திய சாகித்திய அகாடமி வெளியீடான "அயலகத் தமிழ் இலக்கியம் "(2004):தொகுப்பாளர்: சா .கந்தசாமி, அரசனின் வருகை - டிஸ்கவரி புக் பேலஸ் வெளியீடான "100 சிறந்த சிறுகதைகள் "(2014) : தொகுப்பாளர்: எஸ் .ராமகிருஷ்ணன், அரசனின் வருகை -இந்திய சாகித்திய அகாதமி வெளியீடான "கண்களுக்கு அப்பால் இதயத்துக்கு அருகில் ".தொகுப்பாளர் :மாலன்).

அடுத்து முகில் வண்ணனின் படைப்புகளை நோக்குவோம். இவரே எமது பிரதேசத்தில் அதிகூடிய சிறுகதைகளை எழுதியவர் என்று தோன்றுகின்றது. இவரின் "அவளும் ஒரு தமிழ்பெண்" என்ற சிறுகதைத் தொகுதியில் மொத்தம் 26 கதைகள் உள்ளன. இவை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அனைத்தும் தினமுரசு பத்திரிகையில் வெளிவந்தவை. "இனியும் நான் இராமன்தான்" என்ற தொகுதியில் சில கதைகளும் "நீறு பூத்த நெருப்பு" என்ற இவரின் மூன்றாவது தொகுதியில் 15 கதைகளும் உள்ளன. இவை அனைத்துமே மிகக் குறுகிய கதைகள். (இவற்றில் இரண்டாவது தொகுதி எனது பார்வைக்குக் கிடைக்கவில்லை) மூன்றாவது தொகுதியில் உள்ள பெரும்பாலானவை ராதா, மித்திரன் போன்ற பத்திரிகைகளில் வெளிவந்தவை.

தனது அனுபங்கள் சிலவற்றையும் தான் வாழும் சூழலிலிருந்து தேர்ந்தெடுத்த சில சம்பவங் களையும் கதைகளாகத் தந்துள்ளார். ஆரம்ப நிலை வாசகர்களுக்கு இக்கதைகள் தேன்போல் தித்திக்கக் கூடும். சிறுகதையில் கரு என்ற ஒன்றே இவருக்கு முக்கியம் என்று தோன்றுகின்றது. கூர்ப்படையாத ஒரேவித கதை சொல்லும் பாணியையும், சிக்கலற்ற மொழியையும் இவர் தொடர்ச்சியாக நம்பி வருகின்றார். தனது கதைகளுக்கூடாக சமூகத்திற்கு ஏதோ ஒரு செய்தியை சொல்லத் துடிக்கின்றார். பழக்கப்பட்ட ஒற்றையடிப் பாதையிலே மீண்டும் மீண்டும் பயணம் செய்வது இவருக்கு ஆறுதலளிக்கின்றது. வாசகனின் கைகளைப் பற்றிக் கொண்டு விறு விறுவென்று முன்வாசல் வழியாகக் கதைகளுக்குள் கூட்டிச் செல்கின்ற தன்மை இவருடையது. இவ்வாறான கதைகளை விரும்பும் வாசகர்களே எமது பகுதியில் அதிகமுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. இதனாலோ என்னவோ முகில்வண்ணன் இவர்களுக்கான மழையைப் பாட்டம் பாட்டமாகப் பெய்திருக்கின்றார். இன்று அழகியல், பின் நவீனத்துவம், கட்டுடைப்பு போன்ற கோட்பாடுகள் பற்றியெல்லாம் பேசுகின்ற, விவாதிக்கின்ற பரபரப்பு நிறைந்த சூழலில் எதைப் பற்றியும் கவலை கொள்ளாது தனது இயல்புக்கேற்ப கொத்துக் கொத்தாய் பூத்திருக்கின்றார் இவர்.

இவரின் நாவல் முயற்சிகளாக "செல்லக்கிளி" "இராசாத்தி" என்பவை உள்ளன. இதில் "செல்லக்கிளி" 2011 இல் நூலுருப் பெற்றபோதும் 1990 இல் தினகரனில் தொடராக வெளிவந்தது. இந்நாவலின் கதைக்களம் மட்டக்களப்பு மாநகரமாக உள்ளதுடன் இது 1980க்கு முற்பட்ட காலத்தினைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. இந்த நாவல் பற்றிக் குறிப்பிடும் முகில்வண்ணன் பின்ருமாறு சொல்கின்றார். **"அக்காலத்தில் மட்டுநகர் எவ்வாறு இருந்தது என்பதைக் காண விழையும் அன்பர்கள், நண்பர்கள் இக் கதையைப் படிப்பதன் மூலம் அதனை மனக்கண் முன் கொண்டுவந்து நிறுத்தலாம். இன யுத்தத்தின் காரணமாகவும், நவீன மயப்படுத்தலின் காரணமாகவும் மட்டுநகர் இப்போது உருமாறியுள்ளது."**

இந்த நாவல் சமூக நாவல் என்ற பகுதிக்குள் சேர்கின்றது. பாடசாலை காலத்தினையும், அக்கால இளைஞர்களின் வாலிபப் பருவத்துக் கோளாறுகளையும், காதல் உணர்வின் சிக்கல்களையும் இது எடுத்துச் சொல்கின்றது. இந்த நாவல் அது வெளிவந்த காலப் பகுதியோடு தொடர்புபடுத்திப் பார்க்கையில் மனநிறைவைத் தருவது.

இவரின் "ஆனந்தக் கண்ணீர்" 1971இல் மித்திரனில் தொடராக வெளி வந்து 2006இல் நூலுருப் பெற்றுள்ளது. 'இராசாத்தி' என்ற நாவல் வீரகேசரியில் தொடராக வெளிவந்துள்ளது. (வெளிவந்த ஆண்டு தெரியவில்லை) எவ்வாறு பார்க்கின்றபோதும், இவரது இந்தப் படைப்புகள் 1965க்கும் 1980க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டவையே. இக்காலத்தில் ஈழத்தில் நாவல் இலக்கியத்திற்குள் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட எஸ்.பொ, செங்கை ஆழியன் போன்றவர்களின் அளவுக்கு இவரது கதைகள் பரிணமிக்கவில்லை என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

கமலினி சிவநாதன் என்ற பெண் படைப்பாளி பாண்டிருப்பை பிறப்பிடமாகக் கொண்டவர். எனினும் திருமணம் மற்றும் தொழில் நிமித்தம் மட்டக்களப்பில் நிரந்தரமாக வசித்து வருகின்றார். இவர் வெளியிட்ட 'தொலைவில் ஒரு கனவு' என்ற சிறுகதைத் தொகுதி 2005ல் வெளிவந்தது. இதில் மிகச் சிறியதும், சிறியதுமாக 18 கதைகள் உள்ளன. பெரும்பாலானவை தினமுரசில் வெளிவந்தவை. ஒரு சில கதைகள் வீரகேசரி, தினக்குரல் முதலிய பத்திரிகைகளில் வெளிவந்தவை. 1995 முதல் 2004 வரை எழுதிய கதைகளாக இவை உள்ளன. இவர் மென்னுணர்வான எண்ணங்களையும், சம்பவங்களையும் குட்டிக் கதைகளாகத் தந்துள்ளார். பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் சிலவும் இவரது கதைகளின் மையமாக அமைந்துள்ளது. எனினும் பல பெண்ணியல் எழுத்தாளர்கள் போல கத்தியும், கோடாரியுமாய் களத்தில் இறங்குகின்ற போக்கை இவரிடத்தில் காணமுடிவதில்லை என்பது மகிழ்ச்சி தரும் விடயம். சமூக அவலங்களுக்கு மத்தியில் கண்களை மூடி தனக்குள் மெதுவாக விசும்பும் ஒருவராக இவர் உள்ளார். இவரது மென்மையான சுபாவம் போன்றே இவரது கதைகளும் மெல்லிய தொனியில் ஏதோ ஒரு திசையிலிருந்து காதில் விழும் ஒரு சோகப்பாடல் போல இதமளிப்பவை. இருப்பினும் பல பக்க வாசிப்பு அனுபவம் இவருக்கும் நிச்சயம் தேவை என்பது எனது பணிவான கருத்தாகும்.

அடுத்து எஸ். அரசரெத்தினம் அவர்களின் சிறுகதை முயற்சிகள் பற்றி முன்னர் பகிர்ந்து கொண்டோம். அவரின் நாவல் முயற்சி எனும்போது "சாம்பல் பறவைகள்" என்ற குறுநாவலை அவர் 2010 இல் தந்துள்ளார். சமகாலத்தில் இந்த நாவல் பேசும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விடயம் மிக முக்கியமானது. 2009 இல் நடந்த கொடூர யுத்தம் ஒரு காதலை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை மட்டுமன்றி, யுத்தத்தின் ஒரு சிறு பகுதியை எம் கண்முன் கொண்டு வர முயற்சித்திருக்கின்றது. அந்த நேரடி அனுபவம் எம்மைப் போன்றே கதாசிரியருக்கும் வாய்க்கப்பெறவில்லை என்பதால், மிக வேமாக கதை நகர்ந்து, முற்றுப் பெறுகின்றது. இதனால் இது ஒரு பெரும் நாவலின் சாராம்சக் கதையாக மட்டுமே அமைந்துள்ளது. அத்துடன் நாவலுக்கு வேண்டிய கிளைத்தல், மற்றும் அழகியல் ஆர்வங்களை அது இழந்திருக்கின்றது. எனினும் எமது பகுதியிலிருந்து இறுதி யுத்தத்தினை முதன்முதலாகப் பதிவு செய்த நாவல் இதுவே என்ற கவனிப்பைப் பெறுகின்றது. இவ் வகையில் இதற்குக் கிழக்கு மாகாண சாகித்திய பரிசு கிடைத்திருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது.

இறுதியாகப் பைந்தமிழ் குமரன் (திரு. டேவிட்) எனும் படைப்பாளி தனது சிறுகதை முயற்சிகளை 'கானல் வசந்தங்கள்' என்ற தொகுதி மூலம் தந்திருக்கின்றார். இதில் மொத்தம் 22 கதைகள் உள்ளன. இவை தொண்டன் என்ற கிறிஸ்தவ சமய இதழிலும், 'வெட்டாப்பு' என்ற சஞ்சிகையிலும், தேசியப் பத்திரிகைகளான தினக்குரல், தினகரன் ஆகியவற்றிலும் வெளிவந்தவை. பைந்தமிழ் குமரன் **மூன்று தசாப்தங்களுக்கு மேலாக முழங்கிய வேட்டொலிகள், அற்றின் அவலங்கள், என் சமூகத்தின் இருப்பை கேள்விக் குறியாக்கி, பல்லாண்டு அகதி வாழ்க்கை அத்தனைக் குள்ளும் எமதர்மனுடன் கிளித்தட்டு விளையாடிக் கொண்டு, உயர்கல்வி தேடிய காலங்கள் இன்னும் என் அடி மனதில் ரணங்களாய் கிடக்கின்றன. நான் பார்த்த, கேட்ட அறிந்த சம்பவங்களும் பாத்திரங்களும் கூட எனக்குள் வித்தாகிப் போயின. இவற்றின் அருட்டல்கள் என்னை நெருக்கும் போது என் பேனா அழும், அழுகைகளே இத்தொகுதியின் சிறுகதைகளாயிற்று**' என்று கூறுகின்றார்.

இவர் தனது கதைகள் மூலம் சமூகத்தின் ஒழுக்க நெறிகளை, சமூக நீதியினை போதனை செய்ய விழைகின்றார். சமூகத்தின் வறுமையை சீர்கேடுகளைப்பற்றி அதிகம் மார்பிலும் தலையிலும் அடித்துக்கொண்டு கவலை கொள்கின்றார். இதனால், இவரது எழுத்திலும் ஒரு செயற்கைத்தனம் தலைகாட்டுகின்றது. 'எந்தத் துயரும் மிக இயல்பான பாத்திரங்களினூடாக கதையில் கரையும்போது அதன் கலை அழகே தனி' என்பதை அவரும் அறிவார்.

இவரது கதைகள் பற்றி கலாநிதி. ரமீஸ் அப்துல்லா அவர்கள் பின்வருமாறு பதிவு செய்கின்றார். **"பைந்தமிழ் குமரனின் சிறுகதைகள் தன்னையும் தான் வாழும் சூழலையும் தன் தொழில் அனுபவங்களையும் தன் கலாசாரத்தினையும் சித்தரிப்பவையாக**



அமைகின்றன. ஒரு நல்ல இலக்கியவாதிக்கு உரிய பண்பு அவன் வாழ்வின் அனுபவங்களைப் படம் பிடிப்பது. அந்த அனுபவத்தின் வெளிப்பாடு அவனது பெரும்பாலான எல்லாக் கதைகளிலும் வெளிப்பட்டு நிற்கும். இத்தகைய பண்புகளைக் கொண்ட இவரது கதைகளில் கற்பனையும் காவியப்பாங்கும் எங்கும் வெளிப்படவில்லை'

இவ்வாறு தமிழ் பிரதேச செயலகப் பிரிவின் 65 வருட கால சிறுகதை மற்றும் நாவல் முயற்சிகள் அமைந்துள்ளன இந்த முயற்சிகளின் தரமும், தொகையும் தொடர்பில் திருப்திகரமான அடைவுகளை நாம் கண்டு ள்ளோமா? என்ற கேள்வி எம் மனதில் எழாமலில்லை.

எழுத்தாளர் உமா வரதராஜன் 1993இல் நடந்த 'கல்முனை பிரதேச சாகித்திய விழாவில்' வாசித்த 'கல்முனை பிரதேச சிறுகதை முயற்சிகள்' என்ற கட்டுரையிலிருந்து சில வரிகளை இங்கே நினைவு கூர்ந்து எனது இக்கட்டுரையை நிறைவு செய்கின்றேன். **"இத்தகைய சிற்சில சாதனைகள் - சாதனைகள் என்ற சொல்கூட காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு என்ற மனோபாவத்தில் பிறந்ததாக இருக்கவேண்டும்- கல்முனை பிரதேசத்தின் சிறுகதைப் பங்களிப்பு பற்றி கூற வருகையில் சந்தோசத்தினை அளிக்கின்றது. ஆனால் உலகச் சிறுகதை இலக்கியப்பரப்பில் எங்களுக்குள்ள இடம் என்ன? தமிழ்ச் சிறுகதை இலக்கிய உலகில் இன்றைய ஜெயமோகன், கோணங்கி, இரா.முருகன், ஷங்கண்ணா (எஸ்.ராமகிருணனின் அப்போதைய புனைபெயர்), ஆகியோர் அமர்ந்துள்ள சிம்மாசனங்களின் முன்னால் நமக்கு ஒதுக்கப் பட்டிருக்கும் இடங்கள் எத்தகையன என்ற கேள்விகள் நெஞ்சை நெருடாமலில்லை.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# கல்முனை பிரதேச சஞ்சிகைகள் பற்றிய ஒரு பார்வை

கலாபூஷணம் வித்தகர். **எஸ். அரசரெத்தினம்**

**ஊரினை நாட்டை இந்த**
**உலகினை ஒன்று சேர்க்கப்**
**பேரறிவாளர் நெஞ்சிற்**
**பிறந்த பத்திரிகைப் பெண்ணே....**

என்னும் பத்திரிகைகளைப் பற்றிய பாரதிதாசனின் இக்கூற்று சஞ்சிகைகள், சிற்றிதழ் களுக்கும் பொருந்துமென நாம் கொள்ளலாம். பத்திரிகைகளைப் போல சஞ்சிகைகளுக்கும், சிற்றிதழ்களுக்கும் இப்போதும் ஒரு தொகை வாசகர்கள் இருப்பதை நாம் மறுப்பதற்கில்லை.

தமிழ் சஞ்சிகைகளின் உருவாக்கம் தமிழ் நாட்டிலேயே ஆரம்பித்தது. சற்றுப் பிந்திய காலத்தில் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் சிறு எண்ணிக்கையிலான சஞ்சிகைகளும் சிற்றிதழ்களும் வெளிவந்ததையும் நம்மால் அறிய முடிகின்றது. இதற்கான காலப்பகுதி 1950 எனக் குறிப்பிட்ட போதும் இவை பற்றிய தகவல்கள் எவையும் முறையாக ஆவணப் படுத்தப் படாமையால் உறுதியான முடிவுகள் எவற்றையும் எம்மால் குறிப்பிட முடியவில்லை.


மட்டக்களப்பின் தென்பகுதியான கல்முனைப் பிரதேசத்தில் சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த பெருமைக்குரியவர் நீலாவணன் அவர்கள். இவருடைய இயற்பெயர் கேசகப்பிள்ளை சின்னத்துரை என்பதாகும். 1961 இல் இவர் இப்பிரதேசத்தைச் சேர்ந்த தமிழார்வம் கொண்ட தமிழ் முஸ்லிம் அறிஞர்கள் சிலரைத் தன்னுடன் இணைத்துக் கொண்டு தமிழ் எழுத்தாளர் சங்கத்தை உருவாக்கி தமிழ்ப்பணி புரிந்தார். கவிதைகள், கட்டுரைகள், காவியங்கள், சிறுகதைகள், நாடகங்கள் எனப் பல்வேறு துறைகளிலும் அவரும் அவருடைய குழாமும் மெச்சத்தக்க பணிகள் பல புரிந்துள்ளனர். இப்பிரதேசத்தின் சஞ்சிகை உருவாக்கத்திலும் இவரே முன்னோடியானவர் என்பதைக் குறிப்பிடமுடியும்.

1967இல் "பாடுமீன்" என்னும் பெயரில் வெளி வந்த சஞ்சிகையின் உருவாக்கத்தில் நீலாவணனுடன் பாண்டியூரன், சண்முகம் சிவலிங்கம், சடாட்சரன், எம்.ஏ.நு.்.மான் போன்ற பலர் பங்கேற்றிருந்தனர். சில இதழ்கள் மட்டுமே வெளிவந்த நிலையில் இது இடை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவில் காரணம் தெரியாம லேயே நின்று போயிற்று. ஆனாலும் எம்.ஏ.நு.ஃமான் அவர்களின் தொடர் முயற்சியினால் நண்பர்களின் ஆதரவுடன் 'கவிஞன்' என்னும் சஞ்சிகையின் சில இதழ்கள் மட்டும் 1968இல் வெளிவந்தன. பின்னர் அதுவும் வெளிவர வில்லை.





1974இல் இளைய தலைமுறையிலிருந்து மாணிக்கம் வரதராஜன் என்னும் இளைஞன் "காலரதம்" என்னும் சஞ்சிகையை உருவாக்கி வாசகர் மத்தியில் உலவ விட்டான். பாண்டிருப்பைச் சேர்ந்த அன்றைய வரதராஜன் இன்று இலக்கிய உலகில் பலராலும் அறியப் பட்ட புகழ் பெற்ற படைப்பாளியான உமா வரதராஜன் ஆவார். இவருடைய காலரதமும் காலவோட்டத்தில் காணாமல் போயிற்று.

இயல்பாகவே எழுத்துத் துறையில் ஈடுபாடுள்ள உமாவரதராஜன் 1988இல் "வியூகம்" சஞ்சிகையை மீண்டும் கொண்டு வந்தார். சஞ்சிகையொன்று இப்படித் தானிருக்க வேண்டுமென மற்றவர்களுக்கு உணர்த்தும் வகையில் "வியூகம்" அமைந்திருந்தது. தோற்றத்தில் தமிழக சிறு சஞ்சிகைகளை ஒத்திருந்த வியூகம் வாசகர் மத்தியில் பெரு வரவேற்பைப் பெற்றிருந்ததையும் மறுப்பதற்கில்லை. ஆனாலும் 4 இதழ்கள் மட்டும் வெளிவந்த நிலையில் அதுவும் இடைநடுவில் ஓடி ஒளிந்து கொண்டது. நாமறிந்த வகையில் அவர் புரிந்த தொழிலின் வேலைப்பளுவும் இதற்குக் காரணமாக இருக்கக் கூடும்.

1996 இல் இலக்கிய ஆர்வலர் வாரித்தம்பி அவர்களின் வெளியீடாக வந்த "களம்" சஞ்சிகையின் பிந்திய இதழ்கள் பலவற்றுடன் தொடர்புகளைப் பேணிவந்த உமா வரதராஜன் வாசர்களின் ரசனையை கண்டு அறிந்து வைத்திருப்பவர். ஏனோ தெரியவில்லை களமும் தொடர்ந்து வெளிவரவில்லை. அத்துடன் உமா வரதராஜனும் சஞ்சிகை வெளியிடும் முயற்சிகளில் இதுவரை மீண்டும் ஈடுபடவில்லை.

1976 காலப்பகுதியில் "தலைவன்" என்னும் பெயரில் கல்முனையைச் சேர்ந்தவர்களான நோ. மணிவாசகம், பொ.ஏகாம்பரம், பொன்.சிவானந்தம் ஆகிய இலக்கியவாதிகள் ஒரு சஞ்சிகையை வெளியிட்டனர். இவர்களில் நோ.மணிவாசகம் பிந்திய நாட்களில் மணிக்க விராயர் என்னும் புனை பெயரால் வாசகர்களால் அறியப்பட்டதுடன் பல விருதுகளையும் பெற்றவர். பொன்.சிவானந்தம் 'தலைவன்' வெளிவருவது நின்று போனதும் தனது இலக்கியப் பயணத்தை நிறுத்திக் கொள்ள பொ.ஏகாம்பரம் கலைக்கொழுந்தன் என்னும் புனைபெயரில் தனது பயணத்தைத் தொடர்ந்தார்.

'தலைவன்' நின்று போனதும் 1979 இல் கலைக்கொழுந்தன் 'நவயுகம்' என்னும் மற்றுமொரு பெயரில் ஒரு புதிய சஞ்சிகையை அறிமுகப் படுத்தினார். பொ. ஏகாம்பரம் "கல்முனைக் கவிராயர்" என்னும் இன்னுமொரு புனைபெயரையும் கொண்டிருந்தார். இப்பிரதேசத்தில் சிறந்த வாசகர்களிலொருவராக இனங்காணப்பட்ட இவர் இடது சாரிப் போக்கையுடையவர். இவருடைய கவிதைகளிலும் இதன் பாதிப்புக்களை நம்மால் அவதானிக்க முடியும் அப்போது ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளும் வேறு சில காரணிகளும் "நவயுகம்" வெளிவருவதில் தடைகளை ஏற்படுத்தின. ஆனாலும் மனச் சோர்வடையாத கலைக்கொழுந்தன் கல்முனையைச் சேர்நத கந்தப்பன் ஜெயநாதன் என்பவருடன் இணைந்து 'எழில்' என்னும் பெயரில் இன்னுமொரு சஞ்சிகையை வெளிக் கொணர்ந்தார். ஆனால் அம் முயற்சியும் அவருக்கு வெற்றியளிக்கவில்லை.

தன் முயற்சியிலிருந்து பின் வாங்க விரும்பாத 'கலைக்கொழுந்தன்' மீண்டும் 'பொதுமக்கள் பூமி' என்னும் பெயரில் 1982இல் ஒரு சிற்றிதழை வெளியிட்டார். அழகாக அச்சிடப்பட்டு பொங்கல் சிறப்பிதழாக வெளிவந்த 'பொது மக்கள் பூமி' அதே வருடத்தில் "பாரதி சிறப்பிதழாகவும் வெளிவந்து பலரது வரவேற்பையும் பெற்றது. ஆனாலும் திருஷ்டி பட்டது போல் இச் சிற்றிதழும் இடைநடுவில் நின்று போனது இப்பகுதி வாசகர்களுக்கு இழப்பாகவே கருதப்பட்டது. இதன் பின்னர் இம்முயற்சிகளிலிருந்து கலைக் கொழுந்தன்' தாமாகவே பின்வாங்க வேண்டிய நிலைக்குள்ளானார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1982இல் கல்முனையிலிருந்து 'கீற்று' என்னும் பெயரில் ஒரு சஞ்சிகை வெளி வந்தது. இதனை வெளியிட்டவர் "கல்லூரன்" என வாசகர்களால் அறியப்பட்ட பொன்னையா கணேசன் என்பவராவார். கவிஞர் கல்லூரன் தமிழில் மட்டுமின்றி ஆங்கிலத்திலும் கவிஎழுதும் புலமை பெற்றவர். தரமான ஆக்கங்களுடன் வெளிவந்த "கீற்று" சஞ்சிகையாலும் தொடர்ந்து பயணிக்க முடியவில்லை.




1978 இல் கல்முனையிலிருந்து சி.சங்கரப்பிள்ளை என்பவர் "தாரகை" என்னும் சஞ்சிகையை நடாத்தியதாக அறிய முடிகின்றது. இரண்டு இதழ்கள் மட்டுமே வெளிவந்த நிலையில் அதுவும் தனது இலக் கியப் பயணத்தை இடைநிறுத்திக் கொண்டது.

பாண்டிருப்பிலிருந்து சிவஸ்ரீ. யோகராசாக் குருக்கள் அவர்கள் "வானோசை" என்னும் சிற்றிதழை குறிப்பிட்ட காலம் வரை வெளியிட்டுள்ளார். அத்துடன் 'அர்ச்சனா' என்னும் சிற்றிதழில் பாண்டிருப்பு திரௌபதியம்மன் ஆலயம் பற்றிய தகவல்களை பதிவு செய்ததாகவும் அறியப்படுகிறது.



பாண்டிருப்பில் 'அகரம்' என்னும் அமைப்பை நிறுவி சமூகம் சார்ந்த பணிகளுடன் இலக்கியப் பணிகளையும் பல வருடங்களாகச் செய்து வருபவர் செ.துஷ்யந்தன் என்னும் இளைஞன். இவர் ஒரு ஊடகவியலாளருங் கூட. 2012இல் இவர் 'மணிப்புறா' என்னும் பெயரில் சஞ்சிகையொன்றை வெளியிட்டார். இதன் ஆசிரியராக அக்கரைப் பாக்கியன் இருந்தார். இரண்டு இதழ்கள் மட்டுமே வெளிவந்த நிலையில் தனது சுயவிருப்பில் துஷியந்தன் வெளியீட்டாளர் என்ற வகையில் 'மணிப்புறா'வை நிறுத்திக் கொண்டார். ஆனாலும் 5 வருடங்கள் கடந்த நிலையில் 2017 இல் "விருந்து" என்னும் இன்னுமொரு இலக்கியச் சிற்றதழை அவர் வெளியிட்டு வைத்தார். அதன் நான்கு இதழ்கள் இதுவரை வெளிவந்துள்ளன.



இரண்டு மாதங்களுக்கொரு முறை எதுவித இடையூறுகள் வந்த போதும் "விருந்தை"த் தொடர்ந்து வாசகர்களுக்குப் படைப்பதாக அவர் உறுதி கூறியிருக்கிறார்.


சஞ்சிகைகள் / சிற்றிதழ்களின் வெளியீடுகளைப் பொறுத்த வரை கல்முனைப் பிரதேசத்தில் தொடங்கப் பட்ட அனைத்து முயற்சிகளுமே தோல்வியில் முடிவடைந்துள்ளதாகவே நாம் கருத இடமுண்டு. எமது பிரதேசத் தில் மட்டுமல்ல, முழு இலங்கையிலும் இதுவே நிலைவரம். இம்முயற்சியில் ஈடுபட்டு தமது கைகளைச் சுட்டுக் கொண்டோர் பலர்.



சஞ்சிகைகள் / சிற்றிதழ்களின் வெளியீடுகள் தொடர் தோல்வியைத் தழுவியமைக்கு பின்வருவனவை காரணிகளாக இருக்கலாம்.

1. சஞ்சிகை / சிற்றிதழ் ஆசிரியர்களுக்கு போதிய நேரமின்மை.
2. விற்பனையில் ஏற்படும் பின்னடைவுகள்.
3. பொருளாதாரப் பிரச்சினைகள்.
4. தரமான ஆக்கங்கள் கிடைக்காமை.
5. கடந்த காலத்தில் உள்நாட்டில் நிலவிய அமைதியின்மை.
6. இனங்களுக்கிடையில் காணப் பட்ட முரண்பாடுகள்.

இனிவரும் காலங்களில் இச்சவால்கள் அனைத்திலும் வெற்றிபெற்றாலும் கூட, இவற்றின் எதிர்காலம் சிறப்பாக அமையுமென நாம் எதிர்வு கூறமுடியாது. தற்போதைய நவீன காலத்தில் கணணியில் சஞ்சிகைகள், சிற்றிதழ்களுக்கு ஈடான வெளியீடுகள் பலவற்றை நாம் பார்க்க முடியும். படிக்க முடியும். தவிர வானொலி, தொலைக்காட்சி என்பவற்றிலும் பயனுள்ள பல சஞ்சிகை நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன.



மாற்றம் ஒன்றே மாறாதது என்பதற்கேற்ப, எதிர் காலத்திற்குத்தக்கவாறு நம்மையும் நாம் தயார் படுத்திக் கொள்வதே இப்போது நமக்குள்ள ஒரே வழியாகும்

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்முனைப்பிரதேச அவைக்காற்றுக் கலைகள்

– கமலாம்பிகை லோகிதராஜா

இப்பிரதேசத்தின் அவைக்காற்றுக் கலைகளாக நாடகம், நாட்டுக்கூத்து, வசந்தன், நடனம், இசைக்குழு போன்றன பரவலாகப் பயிலப்படுகின்றன.

70 க்குப் பின் இலங்கையில் நாடகம் சிறப்பாக முன்னெடுத்துச் செல்லப்படும் கலையாகும். யாழ் பல்கலைக்கழகத்தில் பல பரிசோதனை நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. சிங்கள மக்களிடையே நாடகம் பற்றிய புதிய பரிமாணங்களும் புதிய சிந்தனைகளும் முகிழ்ந்துள்ளன. ஒப்பீட்டளவில் இப்பிரதேசத்தில் மேடையேற்றப்பட்ட நாடகங்கள் எத்தகையான என்பதை அறிய வேண்டியது அவசியம்.

இங்கு மேடையேறிய நாடகங்களில் ஒருவகை ஆங்கிலத்தில் *Farce* எனப்படும் களிக்கூத்துப் போன்றவை. திருவிழாக்களிலும், பண்டிகைகளின் போதும் நடிக்கப்படும் நாடகங்கள் இவையாகும்.

1976ல் கல்முனைக் கலாலயம் ஆரம்பிக்கப் பட்டதும் பல நாடகங்கள் மேடையேறின. கலாலய நடிகர்களாக E. சிவனந்தநாயகம், C.N செல்வராஜன், பூவை சரவணபவன், நமசிவாயம், சி. மனோகரன் ஆகியோர் நடித்தனர். இந்நாடகங்கள் மேடையமைப்பு, காட்சியமைப்பு, ஒப்பனை, அலங்காரம், திரை எதுவுமின்றி திறந்த அரங்கில் நடிக்கப்பட்டன. இவர்கள் நடித்த 'தம்பி வரட்டும்' என்ற முழுநீள நகைச்சுவை நாடகம் மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் வரை 16 தடவை மேடையேறிற்று. ஏழைபணக்காரத் தனத்தைக் கிண்டல் செய்வதும், சீதனம், சாதி போன்ற வற்றைச் சாடுவதும் இந்நாடகத்தில் காணப்பட்டாலும் மக்களைச் சிரிக்க வைப்பதே நோக்கமாயிருந்தது.

இப்பிரதேசத்திலுள்ள பாண்டிருப்பில், நகைச் சுவைக் கலைஞர் க. கந்தக்குட்டி 100க்கு மேற்பட்ட நாடகங்களை எழுதி மேடையேற்றியுள்ளார். இவருடைய வா கோட்டுக்குப் போக" என்ற நாடகம் அதிக தடவை பல ஊர்களிலும் மேடையேறியது. கந்தக்குட்டியோடு 'அப்பு' என்ற அற்புதராஜா, அன்பு, S. சந்திரலிங்கம் புவனராஜா போன்றோர் மேடையில் துணிச்சலாக 'நக்கல்' செய்து நடிப்பதில் வல்லவர்கள்.

இம்மாதிரி நாடகங்கள் கருத்தாழமோ, கணிக்கக்கூடிய முன்னேற்றமோ இல்லாமல் எந்த இலக்கிய தரத்தையும் எய்தாமல் பண்டிகை கொண்டாடும் மக்களின் மனோபாவத்திற்கேற்ப அவர்களைச் சும்மா சிரிக்க வைத்து மறைவன. இத் திடீர் நாடகங்களில் நகைச்சுவையானது புதிய வண்ணங்களில், குறியீடுகளில் மெய்ப்பாடுகளில் நவீன பாங்குடன் வளர்ந்ததாக இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகைச்சுவை நாடகங்கள் தவிர்ந்த ஓரளவு கனதி (Serious Play) கூடிய நாடகங்கள் இரண்டாவது வகையின. 1930 களில் கலைஞர் என்.எஸ். கிருஸ்ணன் போன்றாரின் தென்னிந்திய நாடகக் கம்பனிகள் நடத்திய நாடகங்கள் மக்களை ஈர்த்தன. தம்பிலுவில்லில் சதாரம்(1956) நாககன்னி (1963) கிருஸ்ணலீலை (1964) ஜெகதலப்பிரதாபன்(1964) போன்ற நாடகங்கள் மேடையேறின. கல்முனையில் 1939ல் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ சண்முக கான நாடக சபா சத்தியவான் சாவித்திரி (1950) பாமா விஜயம், காளிதாஸன், லவிதாங்கி, குலேபகாவலி ஆகியவற்றை மேடையேற்றியது. 1965ல் கல்முனை முத்தமிழ்க்கலாமன்றம் அமரர் இலங்கையர்கோனால் ஸ்தாபிக்கப்பட்டது. மு. சடாட்சரன் எழுதி நெறியாள்கை செய்த "பெற்றமனம்" இப்படியும் வாழ்வு" போன்ற நாடகங்கள் அரங்கேறின. இவற்றில் மணிவாசன், K. பீதாம்பரம் திருநாவுக்கரசு, சீ. மனோகரன், பொன், சிவானந்தன், K. பரராசசிங்கம் போன்றோர் நடித்தனர்.

கல்முனையில் ஆரம்பிக்கப்பட்ட "கலைக்குழு" அகக்கண் (1974), சந்தனச்சிலை, குலேபகாவலி போன்றவற்றை மேடையேற்றினர். இந்நாடகங்களை K.பாக்கியராசா எழுத K. பீதாம்பரம் நெறியாண்டார்.

புராண இதிகாசங்களையும், சமூகப் பிரச்சினைகளையும் அடியொற்றி எழுதப்பட்ட இந் நாடகங்கள் இடையிட்ட இசையுடையன. ஆண்களே பெண் பாத்திரங்களை ஏற்று நடித்தனர்.. ஆண்கள், பெண்களாக ஒப்பனை செய்து நடித்த போது, அந்த வேஷம் கேலிக்கு இலக்காகும் சமயங்களில், நாடகத்தின் Serious தன்மையை இழக்கச்செய்துவிடும். இந் நாடகங்களை மேடையேற்றும் செலவு, நடிக்கப் பெண்கள் முன்வராமை, ஒத்திகை பார்த்தல் ஒழுங்கின்மை போன்ற கஷ்டங்களால் இந் நாடகங்கள் முன்னெடுத்துச் செல்லப்படவில்லை.

**கல்முனைப்பிரதேசத்தில் நடைபெற்ற பல பரிசோதனை நாடகங்கள்**

இலங்கையர்கோன் "இராவணேஸ்வரன்" நாடகம் 1961ல் சக்தி நாடக சபாவுக்காகப் பாண்டிருப்பில் மேடையேற்றப்பட்டது. இதன் எழுத்துப் பிரதியாக் கத்தையும் இயக்கத்தையும் செய்தவர் திரு. சண்முகம் சிவலிங்கம் ஆவார். இராமாயணத்தில் எதிர்மைப் பாத்திரமான இராவணனை, சேக்ஸ்பியரின் துன்பியல் நாயகனான மக்பெத் (Macbeth)ன் சாயலில் உருவாக்க முனைந்தார். திரு. சண்முகம் சிலவிங்கம் இராவணேஸ் வரனாக நடித்து இந்நாடகத்திற்குச் சிறப்புச் சேர்த்தமையை இங்கு குறிப்பிடுவது அவசியமாகிறது. இரா. கிருஷ்ணபிள்ளை, சா. செல்வராஜா, இ. செல்வரெத்தினம், வேதாரணியம் ஆகியோர் இதில் நடித்தனர். மேடையை நடுத்திரை ஒன்றினால் பிரித்து அலங்காரமான ஒப்பனைக் கவர்ச்சியும், இடைநிறுத்தமோ, திரை விழுவதோ அல்லாமல் தொடர்ந்தேர்ச்சியாக நாடகத்தை நடத்தியது. 1960 களில் புதுமையே.

அமரர்.நீலாவணன் 'மழைக்கை' என்ற கவிதை நாடகத்தை இலங்கையர்கோன் நினைவு தினத்திற்காக மேடையேற்றினார். செஞ்சோற்றுக்கடன் தீர்த்த கர்ணன் கதையிது. இது அறுசீர் விருத்தப்பாவினால் மிகவும் நயமான பேச்சோசைப் பண்பில் அமைக்கப்பட்ட இலகு நடை மேடை நாடகமெனலாம். இப்பிரதேசத்திற்கு இந்நாடக முயற்சி ஒரு முன்னோடியாகும். சிறந்த ஒப்பனை, அலங்காரம், மேடையமைப்பு , ஒலி, ஒளியமைப்பு யாவும் அமைக்கப்பட்டிருந்தன.

இன்று இலக்கிய கர்த்தாக்களான மருதூர்க் கொத்தன் கண்ணனாகவும், கவிஞர் நீலாவணன் குந்தியாகவும், திரு மு. சடாட்சரன் கர்ணனாகவும், திரு. கே. பீதாம்பரம் இந்திரனாகவும் கலாநிதி நு.: மானும், மருதூர்க்கனியும் பிராமணர்களாகவும் பாகமேற்று நடித்து, நாங்கள் இன, மத பேதமற்ற கலைத் தொண்டாற்றுபவர்கள் எனச் சிறப்படைந்தனர்.

1968ல் தம்பிலுவில்லில், வங்கியாளரான எஸ். பொன்னுத்துரை சேக்ஸ்பியரின் "ஒத்தெலோ" (Othello) நாடகக் கதையை மொழிபெயர்த்து, வசனப்பிரதியாகத் தயாரித்து, எஸ். சீவரெத்தினத்துடன் இணைந்து 'முதற்பரிசு' என்ற நாடகத்தைத் தயாரித்தளித்தார். இந்நாடகத்தில் பேராதனைப் பல்கலைக்கழக நாடகங்களின் தாக்கத்தைக் காணக்கூடியதாக இருந்தது. திரைச்சீலை மூடப்படவில்லை. Lights on, Lights off என்று காட்சிகள் மாறின. அன்றைய சினிமாவினை (Benlten). ஒட்டி ஆங்கில பாணியில் உடை, ஒப்பனை, அலங்காரம் யாவும் அமைக்கப்பட்டிருந்தன. 3மணிநேரம் நடைபெற்ற இந்த நாடகத்தில் இரட்டையர் இருவர் முன்பாதியிலும், பின்பாதியிலும் ஆக மாறி மாறி நடித்தனர். சோ. சுந்தரமூர்த்தி, சோ. சுந்தரம்பிள்ளை, ஆகிய இவர்களில் சோ. சுந்தரமூர்த்தி சாகித்திய விழா நாடகத்தில் இன்று நடிக்கவிருக்கிறார்.

இப் பிரதேசத்தில் முதல் முதல் நடந்த மொழி பெயர்ப்பு நாடகம் இது எனவும், பெண்கள் பாத்திரமேற்று நடித்ததும் இந் நாடகத்தின் சிறப்பாகும்.

1974ல் நாடகக் கலையில் மிகுந்த ஆர்வமுடைய பாத்திமாக் கல்லூரி அதிபர் வண.சகோ.S.A.I.மத்தியு அவர்கள் பைபிளில் உள்ள இயேசுவின் திருப்பாடுகளை வசனத்தில் அமைத்து நாடகமாக நெறியாள்கை செய்தார். 'பாஸ்கா' எனப்படும் இப் Passion Play வழமையாக சிலைகளைக் கொண்டு செய்யப்படும் 'பஸ்கு' விலும் புதியது. இது 6 மாதகாலம் ஒத்திகையுடன் C.N செல்வராஜன் போன்றாரின் உதவியுடன் 50,000 ரூபா செலவில் மேடையேற்றப்பட்டது, பிரமாண்டமான 4 (25'x 40') மேடைகளும் 100' அடி நீளப்பாதையொன்றும் அமைக்கப்பட்டது. திறந்த இம் மேடைகளில் ஒரே நேரத்தில் பல காட்சிகள் சிறந்த ஒலி, ஒளி அமைப்புடன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடைபெற்றன. 250க்கும் மேற்பட்ட கலைஞர்கள் நடித்தனர். பல ஊர்களிலும் இருந்து 15,000த்திற்கு மேற்பட்ட ஜனங்கள் வந்திருந்தனர். இந்தப் பாரிய நாடகம் கத்தோலிக்கர், கிறிஸ்தவர். இந்துக்கள், இஸ்லாமியர் என்ற மதபேதமின்றிப் பார்த்தனுபவிக்கப்பட்டதெனலாம்.

புதுமோடிகளுக்காக உமா வரதராஜன் மணிக்கூட்டு மனிதர்கள்' என்ற நாடகத்தை எழுதித் தயாரித்து மேடையேற்றினார். வளவளா என்று வீணே பேசிக் காலத்தை விரயமாக்கும் ஒரு கவிஞனும், கால ஓட்டத்தை எண்ணி எண்ணிச் சாகும் ஒரு குமாஸ்தாவும் என இரு முரண்பட்ட பாத்திரங்களை 25 நிமிடத்திற்கு மேடையேற்றினார். கதை என்று ஒன்றில்லை . இழுத்து இழுத்து மூடும் திரையொன்றும் இல்லை இரண்டே காட்சிகளில் நாடகம் முடிவடைந்தது. இது நாடக முயற்சிகளில் புதிய பரிமாணங்களைக் தோற்றுவித்த தெனலாம். இது அபத்த நாடக வகையை எட்டியது. புதுமோடிகளில் இன்னுமொருவரான சபா. சபேசன் 'ஷகானம்' (மரணகீதம்) என்ற நாடகத்தை மேடையேற்றினார். தனக்கு மட்டும் தெரிந்தவளாக வாழ்ந்து இறந்துகிடக்கும் தன் மனைவியின் மரணவீட்டில் ஒலிக்கின்ற இழவுப் பறையில் சிக்கி அவள் மரணத்திற்கான காரணத்தை ஒருவன் ஐயத்தோடு அசைபோடுகிறான். அக்காரணங்களைப் பறை ஒலி அம்பலப்படுத்துவதாக எண்ணிக்கொள்கிறான். அலம்பல் சிலம்பல் இல்லாத கதை, கச்சிதமான ஒலி ஒளியமைப்புடையதாயிருந்தது. பொதுமக்களிடையே சலசலப்பையும், புருவத்தை உயர்த்திப் பார்க்கும்படியான எதிர்பார்ப்புக்களையும் உருவாக்கிய புதுமோடிகளுக்குக் கால அவகாசம், நாட்டின் சூழல் யாவும் தடையாயிற்று.

கலாநிதி மௌனகுரு எழுதிய "தப்பிப் பிழைத்த தாடி ஆடு" என்ற நாடகம் கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரியினால் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்டது. சிறுவர்களின் உளவியல், அனுபவம் ஆகியவற்றிற்கு ஏற்ற வகையில் இக்கதை அமைந்துள்ளது. ஆடம்பரமற்ற குறியீடு, மேடை அமைப்பு, பாத்திரங்கள், பாடுவோர் கூறுவோர் பாவனைக்கு முக்கியம் அமைத்தல், இனிய இசை, ஒப்பனை, கருத்தாழம் உள்ள வசனங்கள். அறிவுரைகள், யாவும் இந் நாடகத்தில் புதுமைகளாம்.

இதே கல்லூரி 'மாமன்னன் மனமாற்றம்' என்ற பைபிள் கதையை நாடகமாக்கி மேடையேற்றியது. நாடகமும் அல்லாத. நாட்டிய நாடகமும் அல்லாத புதிய பாங்கு இந் நாடகத்தில் காணப்பட்டது. நடனம், இசை, என்பன கூடி வசனங்கள் குறைவாகக் காணப்பட்டன. அலங்காரம், ஒப்பனை ஆடை, அணிகலன், ஒலி, ஒளி யாவும் நவீன பாணியில் ஆக்கப்பட்டிருந்தன.

## பாடசாலை நாடகங்கள்

பொழுது போக்கு நாடக மன்றங்களுக்கப்பால் பாடசாலைகளிலும் நாடகங்கள், கலைவிழா, தமிழ்த் தினப்போட்டி போன்றவற்றில் மேடையேற்றப்படுகின்றன. ஜனாப் சக்காப் மௌலானா மருதமுனை அல்மனாரில் ஆங்கில நாடகங்களை மொழிபெயர்த்தும், தாமே சரித்திர, சமூக நாடகங்களை எழுதியும், தயாரித்து மேடையேற்றினார். கல்முனை ஸாகிறாவில் சண்முகம் சிவலிங்கம் 'ஆக்காண்டி' என்ற நாடகத்தைத் தமது 'ஆக்காண்டி ஆக்காண்டி' கவிதையை மையமாக வைத்துத் தயாரித்துத் தமிழ்த்தினப் போட்டியில் வென்றெடுத்தார். ஆக்காண்டி நாடகம் இப்பிரதேசத்தில் முதன் முறையாக நாட்டிய நாடகப்பாவனையில் அமைந்ததெனலாம்.

1973 ல்'நெஞ்சே நீ சொல்' என்ற நாடகத்தைக் கார்மேல் பாத்திமா கல்லூரி மேடையேற்றியது. ஆண்களின் சபல புத்தியைக் காட்டும் வண்ணம் அரங்கேறிய இந் நாடகத்தில் ஆசிரியர்களும். மாணவர்களும் நடித்தனர். இதே நாடகம் C.N செல்வராஜனால் நெறியாளப்பட்டு தம்பிலுவில் மகாவித்தியாலயத்தினால் 1977ல் தமிழ்தின விழாவில் பரிசு பெற்றது.

1975 ல் 'பண்டா கல்முனைக்கு வருகிறார்' என்ற சிங்கள மொழிக் கலப்புடைய நாடகம் கார்மேல் பாத்திமாக் கல்லூரியில் அரங்கேறிற்று. இக்கல்லூரி 'ருந்தி' நாடகத்தைத் தமிழ்த்தின விழா (1974)ல் வென்றெடுத்தது.

பாடசாலை நாடக முயற்சிகள் வளர்ச்சிக்குரிய போக்கை அடையவில்லை.

சிறுவர் நாடகங்கள் நடிக்கப்படுவது குறைவு. மாணவர்களின் ரசனையை நடிப்பாற்லை வளர்க்கும் முயற்சிகளில் ஆசிரியர் மனங் கொள்ளல்வேண்டும். மாணவர் ரியுசன், ரியுசன் என்று நேரங்காணாமல் அலைகிறார்கள்.

தொடர்ச்சியாக நாடகங்களைத் தயாரித்து அவற்றில் மாறுபட்ட பரிசோதனைகளைச் செய்ய ஆசிரியர்கள் முன்வருவதில்லை. பாடப் புத்தகங்களில் நாடகம் பற்றிய விடயங்கள் குறைவு எனலாம்

பாடசாலைகளில் இலக்கிய மன்றங்கள் இயங்குவதில்லை சிறந்த நாடகாசிரியர்கள் நாடகங்களை எழுதித் தர மனம் வைப்பதில்லை

## நாட்டுக்கூத்து

நீண்டகாலமாக நமது பிரதேசத்தில் நாடகம் என்பது நாட்டுக்கூத்து வடிவத்தில் ஆடப்பட்டது. நவீன மயப் படுத்தப்பட்ட மக்கள் வாழ்க்கை, நாட்டுக்கூத்தின் சில மரபுகளை அழித்து விட்டது. விவசாயிகளான இம்மக்கள் வயல்வேலை முடிந்ததும் ஓய்வுநேரத்தில் கூத்துப் பயில்வது வழக்கம் பள்ளு, குறவஞ்சி போன்றன இக்கிராமங்களில் ஆடப்பட்டன. தம்பிலுவில்லில் " விலாசம்" என்றொரு கூத்து இன்றும் வழக்கில் உண்டு.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆட்டமும் இசையும் கொண்ட நாட்டுக்கூத்துக் கதைகள் மக்கள் மத்தியில் பிரபல்யமானவை. இதனால்தான் நவீன நாடகங்களைப்போல, சம்பவங் களில் எதிர்பார்ப்பு, திடீர்த் திருப்பம் போன்றன நாட்டுக்கூத்து உத்திகள் எனக் கையாளப் படுவதில்லை. வடமோடிக் கூத்துக்களிலும். தென்மோடிக் கூத்துக்கள் நுணுக்கம் கூடியன.

தம்பிலுவில்லில் அண்ணாவியார் க.வை. வைரமுத்து 'அலங்காரரூபன்' (1962) என்ற தென்மோடிக் கூத்தையும், 'சயிந்தவன்' (1976) எனும் வடமோடிக் கூத்தையும் மேடையேற்றினார். அண்ணாவி பெ. கந்தையா 'துரோபதை துகிலுரிதல்' (1955) வாளவீமன்(1956) போன்றவற்றை நெறிப்படுத்தினார். அண்ணாவி வேலுப்பிள்ளை ஸ்ரீவள்ளி (1964), வீரகுமாரன் (1978) ஆகிய கூத்துக்களை மேடையேற் றினார். இக்கூத்துக்களில் ஒப்பனை அலங்காரம் சினிமாவை ஒட்டி அமைந்திருந்தது.

அண்ணாவி சீதை சின்னத்தம்பி குருஷேத்திரப் போர்(1954), நச்சுப்பொய்கை (1955) போன்றவற்றை அரங்கேற்றினார். அமரர் சங்கீதபூசணம் எழுதிய 'காமதேனு பர்வதம்' என்பதை இவரே நெறியாண்டார்.

திருக்கோவிலில் திவ்வியாலயா கலாமன்றம் அமைத்து திகாமடுல்ல பாராளுமன்ற அங்கத்தவரும் பிரபல நாட்டுக்கூத்துக் கலைஞருமான கௌரவ ஜெ. திவ்வியயநாதன் இரு கூத்துக்களைத் தாமே எழுதி தயாரித்து அரங்கேற்றினார். 'வெற்றித் திருமணம்' என்ற கூத்து பனங்காடு, கோளாவில், கண்டி, திருமலை போன்ற இடங்களில் அரங்கேறியது. இனிய இசையுடையதாய் ஆண்களும் பெண்களும் ஆடிய இக்கூத்துக்களில் கலாநிதி.சு. வித்தியானந்தனின் நவீனம் படிந்திருந்ததைக் குறிப்பிடலாம்.

அக்கரைப்பற்றில் 'விராட பருவம்' (1052), சூரசம்ஹாரம் (1954)போன்ற கூத்துக்கள் அரங்கேற்றப் பட்டன. கண்டி நாடகம்(1956) ஆ. குஞ்சுத்தம்பி அண்ணாவியாராலும், இராம நாடகம் (1957) இராவணர் வேலுப்பிள்ளையாலும். 'மாடு பிடி சண்டை' (1967) முருகப்பன் அண்ணாவியாராலும் தயாரித்து ஆடப்பட்டன. 'அண்ணாவி மணி' எனப் போற்றப்பட்ட ஆசிரியர் வேலுப்பிள்ளை 'பாரிசாத புஸ்கரணம்' (1958) லவகுசன்(1961) 'புலந்திரன் களவு' போன்ற நாட்டுக்கூத்துகளை அரங்கேற்றினார். "புலந்திரன் களவு" அகில இலங்கை ரீதியில் புகழீட்டி யாழ்ப்பாணம், முருங்கன், கொழும்பு போன்ற இடங்களிலும் ஆடப் பட்டது. 'கவிஞர் அக்கரைமாணிக்கம்' போன்ற இளைஞர் கள் நாட்டுக்கூத்துக் கலைஞர்களாக இக்கூத்துகளில் ஆடிச் சிறப்புச் சேர்த்தனர்.

கல்முனையில் 1930 - 1955 வரை மு. கணபதிப்பிள்ளை அண்ணாவியார், க.வண்ணியாண்பிள்ளை அண்ணாவியார் இருவரும் வடமோடியில் 'புருவச்சக் கரவர்த்தி' வள்ளியம்மை' 'ஆரவள்ளி' 'சூரவள்ளி' 'குருக்ஷேத்திரப்போர்' போன்ற கூத்துக்களையும் 'அலங்கார ரூபன்' 'மதன சுதந்திரன்' 'வாளவீமன்' 'இராவண சம்ஹாரம்' 'சாம்பசந்திரன்' போன்ற கூத்துக்களை அரங்கேற்றினர். பாண்டிருப்பில் நீண்டகாலமாக "இராம நாடகம்" வாளவீமன் நாடகம் போன்றன அரங்கேற்றப் பட்டுள்ளன. இவற்றுடன் "உருத்திரசேனன்" 'குருக்ஷேத்திரப் போர்' போன்ற கூத்துக்களும் ஆடப்பட்டுள்ளன.

காரைதீவில் 1950 களில் கைலாயபிள்ளைக் கப்புகனார் 'ராமலக்குமணர்' 'வள்ளியம்மை' போன்ற வடமோடிக் கூத்துகளை அரங்கேற்றியுள்ளார். கல்முனைப் பிரதேசத்தில் உள்ள நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு போன்ற ஊர்களில் கூத்தாடுவது வழக்கமாகும்.

பாடசாலைகளிலும் மரபுவழி நாட்டுக்கூத்துகள் ஆடப்பட்டன. முன் முயற்சியாகக் கல்முனை உவெஸ்லி உயர் தர பாடசாலை அதிபர் யோகம் வேலுப்பிள்ளையின் அனுசரணையில் 'உத்தமன் பரதன்' என்ற நவீன நாட்டுக்கூத்தைத் திருமதி ரதினி செபஸ்தியான் நெறியாள்கை செய்தும், அவரே பரதனாக ஆடியும் மேடையேற்றினார். 1976 ல் கல்முனை ஸாஹிறாவில் நடைபெற்ற தமிழ்விழாவில் இக்கூத்து ஆடப்பட்டது. திருமதி திரவியம் இராமச்சந்திரன் எழுதியளித்த இக்கூத்தின் இசைநயமும், நவீன பாணியினாலான ஆடை அலங்காரமும் குறிப்பிடத்தக்கது.

அக்கரைப்பற்று R.K.M பாடசாலை 1990களில் 'பாமாருக்மணி' என்ற நாட்டுக்கூத்தை மத்தளம், ஹார்மோனியம், டோலக் போன்ற வாத்தியங்களைக் கையாண்டு புதிது படைத்தது. பாண்டிருப்பு இந்து மகா வித்தியாலயம் 'பாரிஜாதம்' கூத்தை (1993) தமிழ்த்தின விழாவில் ஆடியது.

ரூபவாஹினிக் கூத்துக்கள் என்ற புதிய மரபைப் பாடசாலைக் கூத்துகளுக்கு ஏற்படுத்தியவர் வண சகோ S.A.I மத்தியு அவர்களாவர். இதனையொட்டி 'கீசவன் வதை' கூத்தைக் காரமேல் பாத்திமாக் கல்லூரி 1982ல் ரூபவாஹினிக்கு அளித்தது. இதே கல்லூரி 'மண்டோதரி புலம்பல்' என்ற கூத்தையும்(1993) தமிழ்தின விழாவில் ஆடி வெற்றிபெற்றது.

உவெஸ்லி உயர்தர பாடசாலை அதிபர் B. வெங்கடாச்சலத்தின் முயற்சியால் 'உத்தமன் பரதன்' ரூபவாஹினியில் ஒளி பரப்பப்பட்டது. பல பாடசாலைகளில் நாட்டுக்கூத்துகளைத் தயாரிக்கும் முயற்சிகள் இப்பிரதேசத்தில் உண்டு எனலாம்.

**நாட்டிய நாடகங்களும், நடனங்களும்**

இப்பிரதேசத்தில் பரதநாட்டிய நிகழ்ச்சிகள் இப்போது காலெடுக்கின்றன. 1960ல் 'சிந்தூரன்' என்ற நாட்டிய நாடகம் தம்பிலுவில் தட்சணாமூர்த்தி ஐயரால்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மேடையேற்றப்பட்டது. 1970களில் சாகுந்தலம் என்ற நாட்டிய நாடகத்தைக் கல்முனை உவெஸ்லி பாடசாலையும், கார்மேல் பாத்திமாக் கல்லூரியும் இரு வேறு முயற்சிகளாய்த் தயாரித்து அளித்தன. 1980ல் 'அல்லி அர்ச்சுனா' நாட்டிய நாடகம் கார்மேல் பாத்திமாவில் அரங்கேறிற்று.

பரத நாட்டியம் பாடசாலைகளில் மட்டுமே தங்கியுள்ளது. பிரதேச உணர்வுள்ள புத்தாக்க நிகழ்ச்சிகளைப் பாடசாலைகள் படைத்து அளிப்பதில் பின் தங்கவில்லை. திருமதி. வசந்தி சபாநாதன், திருமதி. இராசகுமாரி சிதம்பரம் ஆகிய முன்னோடி ஆசிரியர்கள் தங்கள் நடன கலாலயங்களை அமைத்துள் ளனர். ஒப்பீட்டளவில் பரதநாட்டியம் இன்றுள்ள இளங் கலைஞர்கள், ஆசிரியர்கள் யாவராலும் முன்னெடுத்துச் செல்லப் பட வேண்டியதாகும். தனிநபர்களின் நாட்டிய அரங்கேற்றங்கள் நடைபெற ஏற்பாடுகள் பண்ண வேண்டும்.

**வசந்தன் கூத்து**

இப்பிரதேசத்திற்கே சொந்தமான இக்கலை வேளாண்குடி மக்களால் அறுவடை முடிந்ததும் ஆடப் படுகின்றது. ஆண்களும் பெண்களும் கூடிக் காலை முதல் மாலை வரையிலும் ஆடுவார்கள். மக்களைக் கெட்ட வழிகளில் செல்லாமல் நெறிப்படுத்தவே இக் கூத்து ஆடப்பட்டது. வசந்தன் கூத்துகள் நடைபெற்று முடிந்ததும், இக்கூத்துக் கலைஞர்கட்கு விரைவில் திருமண முயற்சிகள் நடைபெறும் என்று கூறுவர். கல்முனையில் உள்ள பல கிராமங்களிலும் வசந்தன் கூத்துக் கலைஞர்கள் வாழ்கின்றனர். காரைதீவைச் சேர்ந்த T. பரமலிங்கம் அதிபர் அவர்கள் மூத்ததம்பி ஆசிரியரின் உதவியுடன் கல்முனையில் வசந்தன் கூத்துகளை அரங்கேற்றியுள்ளார். கல்முனை வங்கியா ளரான அமரர் K. குழந்தைவேல் 'சிலம்பை' அடிப்படையாக வைத்து வசந்தன் கூத்தொன்றை அரங்கேற்றினார்.

பாண்டிருப்பில் 1950களில் வே. சண்முகம் அண்ணாவியார், மா.கு. சதாசிவம் குருக்கள் ஆகியோர் வசந்தன் கூத்துக்களைப் பயிற்றுவித்திருக்கிறார்கள்.

இப் பிரதேசத்ததில் முஸ்லிம்கள் வரவேற்புக் காகப் பாதையின் இருமருங்கிலும் வரிசையில் நின்று பொல்லடிக்கும் வழக்கம் உண்டு.

**இப்பிரதேச அவைக்காற்றுக்கலைகளின் இன்றைய நிலை**

நாடகங்கள் போடும் வசதிகள் இல்லை. லும்பினி. நவகலா போன்ற அரங்குகள் இப்பிரதேசத்தில் அமைக்கப் படவில்லை.

மேற்கு நாட்டவரின் நாடகங்களை மொழி பெயர்த்தோ, அந்நாடக உத்திகளை உள்வாங்கியோ புதிய பாணியொன்றைத் தமக்கென ஆக்கிய வளர்ச்சி



போக்கு இப்பிரதேச நாடகங்களில் சுவறவில்லை.

இதிகாசப் பண்பமைந்த நாடகங்களில் புதிய கோலங்கள் இல்லை. தத்துவங்களையும், சிந்தனை களையும், உருவகப்படுத்தும் அரூப நாடகக் கலை வளரவில்லை.

நாடகங்களை விமர்சன நோக்குடன் ரசிகர்கள் பார்ப்பதில்லை. வெறும் பாமரத்தனமாகவே இன்றும் பார்வையாளர் உள்ளனர். வெட்டவெளியில் தெரு நாடகங்களைப் போடும் முயற்சிகள் இல்லை.

முழுநீள நாடகம் போடுவதிலும், சிறிய அளவில் சிறு சிறு நாடகங்களைப் போட்டு வளர்ச்சியைக் கோடிட்டுக் காட்டும் நாடக முயற்சிகள் வேண்டும். சின்னச் சின்ன நாடகங்களில் நடிக்கும் கலைஞர்களை இனங் கண்டு மேலும் ஊக்குவிக்க வேண்டும்.

நீண்ட, செலவு கூடிய நாடகங்களைத் தயாரித்து அரங்கேற்றுகையில் அவற்றை மீண்டும் மேடையேற்ற முடியாமல் இருப்பதை உணர்ந்து கொண்டு, அவைகளை ஏற்ற முறையில் ஆக்கி அளிக்க வேண்டும்.

நாட்டுக்கூத்துக் கலைஞர்கள், அண்ணாவிமார் யாவரும் ஸ்தாபன ரீதியாக வளர முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். வாய்மொழிக் கூத்துகளை அச்சிலிடவேண்டும். நவீன நாட்டுக் கூத்துப்பாணி, கூத்துநர் வாழும் இடமெல்லாம் பரவவேண்டும். இக்கூத்துகள் ஒப்பனை, அலங்காரம், இசை, பேச்சோசைப் பண்பு யாவிலும் புதுமை பெறல் அவசியம்

புதிய கருக்கள், கருத்துக்கள் கொண்ட சமூகக் கதைகளை நாட்டுக்கூத்துக்களாக எழுதி அறிஞர்கள் உதவ வேண்டும்

மக்கள் வாழ்விற்குப் புத்தூக்கமும், புத்துணர்வும், நயமும் சேர்க்கும் இப் பிரதேசக் கலைகள் யாவற்றையும் பேணி அவற்றிற்குத் தொடர்ச்சியும் வளர்ச்சியும் அளிக்க யாவரும் முன் வரவேண்டும்.

*(04.07.1993 இல் கல்முனை சாகித்ய விழாவில் வாசிக்கப்பட்ட கட்டுரை இது. 2015ல் காலமான அவருடைய நினைவாக இக்கட்டுரை மீள்பிரசுரம் செய்யப்படுகின்றது.)*


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கல்முனை பிரதேசத்தில் குறும் படக்கலை

**சே . இந்திரா**

திறமையான கலைஞர்களின் தாயகமான கல்முனைப் பிரதேசமானது அண்மைக்காலமாகவே பல துறைகளிலும் கால்பதித்து வருகின்றது. சிறந்த கவிஞர்களும் இலக்கியவாதிகளும் உள்ள இந்தப் பிரதேசத்தில், இவர்களோடு இணைந்து குறும்படக் கலைஞர்களும் பாரிய வளர்ச்சி கண்டுள்ளனர் என்றால் அது மிகையாகாது. அப்படிப்பட்ட குறும்படக் கலையையும், அதில் கால் பதித்துள்ள இளம் சமுதாயத்தினரையும், இக்கலையில் இவர்கள் பெற்றுக்கொண்ட சாதனை பற்றியும், இக்கலை தொடர்பாக இவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளையும், இவ் வளர்ச்சி நிலையின் அடுத்த படிகள் பற்றியும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.


இன்றைய சமூகத்தில் சினிமாவின் தாக்கமானது தவிர்க்க முடியாத ஒன்றாக மாறிவிட்டது. ஒரு கருத்தை ஒரு படைப்பின் மூலம் வெளிப் படுத்தி எல்லோருடைய கவனத்தையும் அக் கருத்தை நோக்கி திசை திருப்ப சினிமா ஒன்றே இன்றளவில் சிறந்த ஊடகமாகும். அதன் அடிப்படையில் குறும்படக்கலையும் மிக முக்கியமானதொன்றாகும். சினிமாவின் வளர்ச்சி யோடு சின்னத்திரையும் அதன் தொடர்ச்சியாக குறும் படக்கலையும் வளர்ச்சி கண்டிருக்கிறது. இக்கலையின் தாக்கம் கடந்த தலைமுறையினருடன் ஒப்பிடுகையில் இன்றைய இளம் தலைமுறையினரிடையே மிகப் பெரியது. கல்முனைப் பகுதி கலைஞர்களும் விதிவிலக்கல்ல. இன்று ஒரு நிமிடத்திலிருந்து முப்பது, நாற்பது நிமிடங்கள் வரையிலான குறும்படங்கள் கல்முனைப் பகுதியில் வெளியாகி பலரது வரவேற்பையும் பெற்று வருகின்றன .

இக்கலைஞர்களை மற்றும் அவர்களது சாதனைகளை பற்றி அறிய முற்படுகையில் பாண்டிருப்பைச் சேர்ந்த அகரம் சமூக அமைப்பின் நிறுவனர் திரு.செல்லத்தம்பி துஜியந்தன் பல குறும்படங்களுக்கு காரணமாக அமைகிறார். இவர் விமோசனம், விரட்டியடி, வட்டி, யார் பிச்சைக்காரன் போன்ற குறும் படங்கள் வெளியாகக் காரணகர்த்தா. இதில் விரட்டியடி குறும் படமானது 2013ல் கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை பிரிவு நடாத்திய குறும்படப் போட்டியில் முதலிடத்தை பெற்றுக் கொண்டிருக்கிறது.

மேலும் பாண்டியூர் கலைஞர்களின் பட்டாளத்தோடு *alpha entertainment* நிறுவனத்தில் ஜோயல் அவர்களின் குழாம் குறும்படத்தில் பல சாதனைகளை நிகழ்த்தி வருகின்றது. 'அவளா நீ' என்ற குறும்படத்தில் தனது பயணத்தை ஆரம்பித்து ஜோயல் மற்றும் அவரது நண்பர்கள் இன்றுவரை தேவதை, வாஞ்சை, 2050, நான், *broken lader* போன்ற பல குறும் படங்களைத் தயாரித்து, வெற்றியடைந்து கல்முனைப் பகுதி இளம் குறும்படக்கலைஞர்களுக்கு முன்னோ டியாக திகழ்கிறார்கள். இவர்களின் '2050' குறும்படம் மகாவலி அபிவிருத்தி அமைச்சினால் நடத்தப்பட்ட "சோபா சலன சித்திரம்" குறும்படப்போட்டியில் 45 குறும்படங்களுள் இறுதியாகத் தெரிவான 8 குறும்படங்களில் ஒரேயொரு தமிழ்ப்படமாகும்.

மேலும் தேவதை படமானது 3 வெவ்வேறான அமைப்பினால் வழங்கப்பட்ட விருதில் அப்படத்திற்கு சிறந்த குழந்தை நட்சத்திரத்துக்கான விருது கிடைத்துள்ளது. "கடைசி விதை" எனும் திரைப்படம் உலக சுற்றாடல் தினத்துக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இன்றைய சமூகத்தில் சினிமாவின் தாக்கமானது தவிர்க்க முடியாத ஒன்றாக மாறிவிட்டது. ஒரு கருத்தை ஒரு படைப்பின் மூலம் வெளிப்படுத்தி எல்லோருடைய கவனத்தையும் அக்கருத்தை நோக்கி திசை திருப்ப சினிமா ஒன்றே இன்றளவில் சிறந்த ஊடகமாகும்.

எடுக்கப்பட்டு அகில இலங்கை ரீதியில் 3 ம் இடத்தையும் பெற்றுக்கொண்டுள்ளது. *broken lader* குறும்படமானது கொழும்பு தமிழ் சங்கத்தால் நடாத்தப்பட்ட போட்டியில் 2 ம் இடம் பெற்றதுடன் *AAA* விருதுகள் நிகழ்வில் சிறந்த நடிகர், சிறந்த இயக்குநர், சிறந்த குறும்படம் என 3 விருதுகளையும் பெற்றுக் கொண்டுள்ளது. இவர்கள் நிகழ்த்திய சாதனைகளை இன்னும் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.


மேலும் கல்முனையை சேர்ந்த *kisha film makers* நிறுவனமானது பல குறும் படங்களை அண்மைக் காலமாகத் தந்திருக்கிறார்கள். அதில் பெறுமதி, வானம்பாடி, தீர்ப்பு போன்ற குறும்படங்கள் அடங்குகின்றன. இதில் தீர்ப்பு என்ற குறும்படம் 48 மணிநேரத்தில் எடுக்கப்பட்டு *Dan tv* யால் நிகழ்த்தப் பட்ட போட்டியில் 1ம் இடத்தை பெற்றுக்கொண்ட படமாகும். இவர்கள் அண்மையில் பாண்டியூர் திரௌபதை அம்மன் ஆலயத்திற்காக இரு பக்திப் பாடல்களை வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இவர்களோடு பாண்டிருப்பைச் சேர்ந்த சஞ்சிவன் யோகநாதன் என்பவர் யார் நண்பன், மற்றும் சில நகைச்சுவை குறும் படங்களைத் தந்துள்ளார். இவ் வரிசையில் பாண்டிருப்பை சேர்ந்த தரணி என்பவர் கடுவன், தலைக்கவசம் போன்ற குறும் படங்களை இயக்கியுள்ளார். இவர்களோடு நற்பிட்டிமுனை இளைஞர்களும் இத்துறையில் கால்பதித்து புதிய குறும்படங்களைத் தந்து கொண்டிருக்கிறார்கள்.

இக் குறும்படக்கலை இன்று கண்டுள்ள வளர்ச்சி பற்றி இக்கலைஞர்களுடன் உரையாடுகையில் அவர்கள் பல உதாரணங்களை முன் வைக்கின்றனர். கடந்த காலங்களை விட இன்றுள்ள இளம் கலைஞர்கள் பலர் குறும் படக்கலையில் ஆர்வம் காட்டுகிறார்கள். இவர்கள் குறும்படக் கலைக்கான இலட்சணங் களை கற்றுக் கொள்வதாகவும், குறும்படக் கலையையும் அதன் பரிணாம வளர்ச்சி பற்றியும் சிந்திப்பதாகவும் கூறுகிறார்கள். இப்போது தங்கள் குறும்படங்களுக்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமூக மட்டத்தில் பல கல்விமான்கள் மற்றும் புத்திஜீவிகள் நிறை குறைகளைக் கூறி ஆதரிப்பதாகவும் சாதாரண மக்கள் முன்பைக் காட்டிலும் தங்களுடைய வளர்ச்சியையும் சாதனைகளையும் பார்த்து ஆதரவு நல்குவதாகவும் பெருமிதமடைகின்றனர். இவ் வளர்ச்சி நிலையானது கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் தற்சமயம் சரியான பாதையை நோக்கிப் பயணிப்பதாக வும் கூறுகின்றனர்.

இப்படிப் பட்ட சிறந்த குறும்படக் கலைஞர் களுக்கு தற்போதைய சூழலிலுள்ள பிரச்சினைகள் பற்றியும் அறியக் கூடியதாக இருந்தது. மிக முக்கியமாக பொருளாதாரப் பிரச்சினையைப் பலரும் சுட்டிக் காட்டுகின்றனர். சிறந்த கதை அமைந்தாலும் அதனைத் தயாரிக்க நல்லதொரு தயாரிப்பாளர் கிடைக்காத காரணத்தால் இவர்களே கூட்டாக இணைந்து குறைந்த செலவில் தயாரிக்க முற்படுகின்றனர். மேலும் இசைக்கலவை, ஒலியமைப்பு, படத்தொகுப்பு போன்ற தொழில் நுட்பக் கலைஞர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதாகவும் இனி வரும் காலங்களில் இக் கலைஞர்களை வெளியிடத்தில் தேடாமல் தாங்களே செயற்பட இத் துறைகள் சம்பந்தமாகப் பயின்று வருவதாகவும் கூறுகிறார்கள்.மேலும் ஒலிப்பதிவுக் கூடங்களிற்காகவும், பின்னணி இசை, பாடல்கள் உருவாக்கத்திற்காகவும் மட்டக்களப்பை சேர்ந்த கலைஞர்களை நாட வேண்டிய இக்கட்டான சூழலுக்குள் தாங்கள் தள்ளப்பட்டுள்ளதையும் குறிப்பிடுகின்றனர். கதைக்களத்திற்குப் பொருத்தமான நடிகர்களைப் பெறு வதிலும் இவர்கள் பிரச்சினையை எதிர்கொள்கின்றனர். எல்லா விதமான கலைஞர்களுக்கும் இருக்கும் தனிப் பட்ட இலட்சியத்திற்காக இந்தக் கலை முயற்சியை சமூகத்தில் முன்னெடுக்க முயன்றாலும் கூட இந்தப் பயணத்தில் பல சிக்கல்களை எதிர் கொள்வதாகவும் கூறுகின்றனர்.

இத்தோடு இவர்கள் அனைவரும் தமது அடுத்த கட்ட முயற்சியாக புதிய கதைக்களம் கொண்ட குறும் படங்களை இயக்குவதில் நாட்டம் காட்டுவதோடு முழுமையாக ஒரு முழு நீளத் திரைப்படம் எடுப்பதற் கான ஆரம்பக் கட்ட கற்றல் நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளனர். அத்துடன் சிலர் தமது குறும்படங்களை புலம்பெயர் தமிழர்களின் அமைப்புகளினூடாக வெளிநாடுகளில் திரையிடவும் தயாராகி வருவதுடன், இலங்கையைத் தாண்டியும் தமது குறும்படங்களை பல்வேறு போட்டிகளுக்கு அனுப்பவும் முடிவு செய்துள் ளனர். இவ்வாறான பல முயற்சிகளோடு இவர்கள் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பல வளங்களையும் கொண்ட இந்த மண் நல்ல கலைஞர்களையும் கொண்டுள்ளது. இவர்களின் முயற்சிகள் யாவும் வெற்றியளிக்கும் பட்சத்தில் கல்முனைப் பிரதேசம் குறும்படக்கலையில் தனது முத்திரையைப் பதித்து உலக அளவில் பிரபல மடையுமென்பது திண்ணம். இந்த நல்ல கலையூடாக பல நல்ல கருத்துகளை சமுதாயத்தில் விதைத்து பாரிய வளர்ச்சியைப் பெற சகலரும் துணை நிற்பார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்முனை தமிழ்ப் பிரதேசத்தின்

# மெல்லிசைக் குழுக்கள்

- ஞானக்குமார் சுகன்யா



இறைவனை அடைவதற்கான எளிய வழி இசை எனவும், கல்லையும் கரைய வைக்கும் இசையாலே வசமாகாத இதயமும் உண்டோ என இசை ரசிகர்கள் கருதுவதுண்டு. ஒரு மனிதனின் பிறப்புத் தொடக்கம் (தாலாட்டு), இறப்பு வரை (ஒப்பாரி) இசை நம் மக்களுடன் பின்னிப் பிணைந்தது.

இந்தப் பிரதேசத்தின் இசைக்கழகங்கள், கலைஞர்கள் பற்றிய நினைவு மீட்டல் இந்தக் கட்டுரை.

கல்முனையின் முன்னோடி இசைக் கழகமாக கதிரவன் இசைக்குழுவைக் குறிப்பிடலாம். 60களின் நடுப் பகுதியில் பல்வேறு வாத்திய இசைக் கலைஞர்கள் இந்தக் குழுவுடன் இணைந்து செயற்பட்டார்கள் நிகழ்ச்சிகளை மேடையேற்றினார்கள். இந்தக் கழகத்தின் ஸ்தாபகர் மூத்த கலைஞரான கலைக்கொழுந்தன் ஆவார். இக் கழகத்தில் இயங்கிய கணபதிப்பிள்ளை சோமசுந்தரம் ஹார்மோனியம், மோர்சிங், தபேலா போன்ற இசைக்கருவிகளைக் கையாள்வதில் தேர்ச்சி மிக்கவர். அத்துடன் அக் காலப் பகுதியில் கல்முனையில் மிகச் சிறந்த அண்ணாவியாராகவும் செயற்பட்டவர்.

பா. சீனித்தம்பி என்பவர் மிருதங்கம், தபேலா போன்ற வாத்தியங்களை இசைப்பதில் வல்லவர். வடிவேல் என்ற கலைஞரும் மிருதங்கம், தபேலா வாத்தியங்களை சிறப்பாகக் கையாண்டவர்.

இவர்களுடன் சீனித்தம்பி விதானையாரின் மகனான மோகன் என்பவர் பல்வேறு வாத்தியங்களையும் இசைப்பதில் வல்லவராக இருந்தார். மெண்டலின், மிருதங்கம், தபேலா எக்கோர்டியன், சிறப்பனா, மேளம் போன்ற வாத்தியங்களை அவர் கையாண்ட லாவகம் பலராலும் இன்று வரை நினைவு கூரப்படுவது. கல்முனை கோவில் வீதியில் அமைந்துள்ள இவரது தாய் வீட்டின் வளவிலேயே இந்தக் கலைக்கூடம் செயற் பட்டது.

இக் கழகத்தின் முக்கிய பாடகர்கள், ஈழத்து சௌந்தரராஜன் என அக்காலத்து ரசிகர்களால் அழைக்கப் பட்ட விவேகானந்தராஜா, இருகுரல் (ஆண்குரல் - பெண் குரல்) மன்னன் என அழைக்கப்பட்ட லோறன்ஸ், ஞானப்பிரகாசம் ஆகியோர்.

கதிரவன் இசைக்குழு போன்றே கல்முனையில் இயங்கிய மற்றொன்று சந்தியா இசைக் குழுவாகும். இந்த இசைக்குழுவில் எஸ்.வேந்தன், மதன், சஜீவன், மதுசூதனன் ஆகியோர் இயங்கினார்கள். பின்னாட்களில் கல்முனையில் இயங்கிய இசைக்குழுக்களில் முக்கியமானவையாக 'ஆதவன்' மற்றும் 'கீதம்' இசைக் குழுக்களைக் குறிப்பிடலாம்.

பாண்டிருப்பின் இசைக்குழுக்களில் முக்கிய மானவை சிவா இசைக்குழு, சந்திரன் இசைக்குழு என்பனவாகும். இவற்றுள் சிவா இசைக்குழு உள்ளூர் எல்லைகளைக் கடந்து தலைநகர் வரை சென்று இந் நாடெங்கும் தன் முத்திரையைப் பதித்துள்ளது. அது



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மட்டு மல்லாமல் கடல் கடந்து பிற நாடுகளுக்குச் சென்றும் தன் ஆற்றலை வெளிப்படுத்தியிருக்கிறது. கல்முனை சிவாவின் பிறப்பிடம் பாண்டிருப்பு. கிராமத்து ஆலயத்தில் அர்ச்சகராக இருந்த இவருடைய தந்தை இசைஞானமுள்ளவர். ஹார்மோனியம் வாசிக்கக் கூடியவர். தந்தையாருடன் சுலோகங்களை ஓதிப் பழக்கப்பட்டிருந்தமையால் இசை ஞானம் சிவாவிடம் இயல்பாகப் படர்ந்திருந்தது.

பாண்டிருப்பு இளைஞர்களின் கலை இலக்கிய முயற்சிகளுக்கு எப்போதும் உறுதுணை வழங்கும் இரத்தினவேல் ஆசிரியர் சிவாவையும் உற்சாகப் படுத்தினார் .அவரின் வழிகாட்டலில் அமல்ராஜ் போதகரிடம் ஆரம்ப இசையை சிவா கற்றார்.

1976ல் சித்திரை வருடப் பிறப்பு வைபவத்தன்று பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய முன்றலில் அறிமுகமானது அவருடைய 'சிவா இசைக்குழு. இந்த இசைக்குழுவில் குணசீலன், தில்லை நாதன், கோணேஸ், தேவராஜ் போன்றோர் இன்னிசை வழங்கினார்கள்.

தன்னுடைய உறவினரான பாடகி விநோதினியுடன் இணைந்து பாடிய 'காவியமா நெஞ்சில் ஓவியமா' பாடல் அன்று நல்ல வரவேற்பைப் பெற்றது. இந்நிகழ்ச்சி களை அன்றைய மாவட்ட வைத்திய அதிகாரியாகவிருந்த இசைப்பிரியர் ஜெகநாதன் தொகுத்தளித்தார்.

தன் இசை ஆற்றலை மேலும் வலுப்படுத்த இசைக் கருவிகளைக் கையாளும் பயிற்சியைப் பெற்றுக் கொண்டார். பாடசாலையைவிட்டு வெளியேறியதும் முழுநேரத் தொழிலாக இசைக் குழுவை இயக்கினார். இக்குழுவின் பாடகர்களாக சேகர், கபூர், தேவராஜ், ஏ. ஆர். எம். ஜிப்ரி, ரபீக் ஆகியோருடன் கிட்டார் வாசிப்பவர்களாக நெல்சன் ஜோன், ரவி ஆகியோரும் தபேலாவை கையாள்பவர்களாக வேதா, கிருஷ்ணா ஆகியோரும் ட்ரம் செட்டைக் கையாள்பவராக பரமானந்தனும் விளங்கினார்கள் .

1982ம் ஆண்டு சிவா கொழும்பிற்கு இடம் பெயர்ந்தார். தலைநகரிலும் தன் முத்திரையைப் பதிக்க அவர் தவறவில்லை.

தெரணியகல எஸ். தனபாலன் எழுதிய "ஓட சல சலக்க" என்ற பாடலுக்கு ஸ்ரீதர் பிச்சையப்பாவும் மொரீனும் குரல் கொடுக்க அவர் இசையமைத்திருந்தார். இலங்கை மெல்லிசைப் பாடல் வரிசையில் அதிக ஹிட்டான பாடல் அது. தொடர்ந்து ரூபவாஹினியில் யாக்கூப் தயாரித்தளித்த 'சங்கமம்' நிகழ்ச்சிக்கான இசையை வழங்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. வானொலி யிலும் 'சந்தன மேடை' மெல்லிசைப் பாடல் நிகழ்ச்சிக்கு இசையமைத்தார்.

1996ம் ஆண்டு நண்பர் வேந்தனின் ஏற்பாட்டில் முதன் முதலாக இவருடைய இசைக்குழு சுவிஸ்ஸி ற்கு சென்றது. ஏ. ஈ. மனோகரன், நிலுக்ஷி, மகேந்திரன் போன்ற பாடகர்களின் குரல் என இசை சங்கமத்தோடு நல்ல வரவேற்பை பெற்றது. அடுத்து பிரான்ஸ் நாட்டில் சுமார் எட்டு இசை நிகழ்ச்சிகளை வழங்கினார்.

தமிழக பிரபல பாடகர்களான ரி. எம். எஸ்ஸின் மகன் செல்வகுமார், சீர்காழி கோவிந்தராஜனின் மகன்



சிதம்பரம் மற்றும் எல். ஆர். ஈஸ்வரி போன்ற கலைஞர்கள் இவருடைய இசையமைப்பில் பாடியிருக்கிறார்கள்

இங்கு இப்போதும் இயங்கும் 'கீதம் இசைக்குழு' திரு.சி.புனிதன் ஆசிரியரின் தலைமையில் 1998ல் ஸ்தாபிக்கப்பட்ட ஒன்றாகும். இந்தக் குழுவை இயக்கி வருபவர் பாடகரும், அறிவிப்பாளருமான திரு.ம.திருக் குமரன் ஆவார் . ஆழிப் பேரலை அனர்த்தத்தின் பின் இவரால் இயற்றி இசையமைத்துப் பாடப்பட்ட '..வங்கக் கடலலையே நீ வந்து தாக்கினாயோ, சுனாமிப் பேரலையே எமைத் துன்பப்படுத்தினாயோ, தினந் தோறும் வந்து வணங்கும் சமுத்திரத் தாயே, எமை ஏன் அழித்தாய் சுனாமி அலைகளினாலே' என்ற பாடல் அக்காலத்தில் அகதி முகாம்களில் தஞ்சமடைந்தவர்களின் மனதுக்கு அருமருந்தாக ஆறுதல் படுத்தியது. இன்றும் இவருடைய இசைக் கச்சேரிகள் ஆலய உற்சவங்கள், இல்லங்களில் நிகழும் மங்கல வைபவங்களில் இடம் பெறுவதைக் காணலாம்.

இந்தப் பிரதேசத்தின் இன்னொரு சிறந்த இசைக் கலைஞர் எஸ். சேகர். சிவா இசைக்குழுவில் இணைந்து செயற்பட்ட இவர் தற்போது அங்கிருந்து பிரிந்து சுயாதீனமாக இயங்கிக் கொண்டிருக்கிறார். தேசியரீதியாகப் பெரிதும் புகழ் பெற்ற கிட்டாரிஸ்ட்டான திரு.நெல்சன் ஜோன் என்பவரும் கல்முனையைச் சேர்ந்தவரே. கீ போர்டைக் கையாள்வதில் மிகவும் தேர்ச்சி பெற்ற திரு.விமலேந்திரன், தபேலா இசைப்பதில் சிறந்த மதுசூதன் மற்றும் வேதா ஆகியோரும் கல்முனைப் பிரதேசத்தை சேர்ந்தவர்களே.

இந்தக் கட்டுரை குறுகிய கால அவகாசத்தில் எழுதப் பட்டதால் சில 'விடுபடல்கள்' நேர்ந்திருக்கலாம். அப்படி நேர்ந்திருந்தால் அதன் காரணம் ஞாபகப் பிசகேயன்றி, உள்நோக்கமல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனைப்பிரதேச தமிழ் மக்களிடையேயான

# மருத்துவ மாந்திரீகச் சடங்குகள்

**பைந்தமிழ்க்குமரன் (டேவிட்)**



கல்முனைப் பிரதேசத்தில் தமிழ்க் கிராமங்கள் தொன்மையான வரலாறுகள் கொண்டவை. இம்மக்களிடையே ஏராளமான நாட்டாரியல் வழக்காறுகள் மலிந்து கிடக்கின்றன. இவைகள் இம்மக்களது வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்தவைகளாக உள்ளன. இவற்றுள் மாந்திரீகச் சடங்குகளும் அவை தொடர்பான நம்பிக்கைகளும் புறந்தள்ளிவிட முடியாத அளவிற்கு ஊறியிருப்பதை குறிப்பிட்டுக் கூறலாம். ஆயினும் மருத்துவத்துடன் கூடியதான பல மாந்திரீகச் சடங்குகள் பரவலாக காணப்படுவதையும் அவை காலங் காலமாக தொடர்ந்து பின்பற்றப் பட்டு வருவதையும் நம்பிக்கைகளின் பின்புலங்களிலே அவை இயங்குவதையும் கூர்ந்து நோக்க முடிகின்றது. இக் காரியங்களை செய்யும் பூசாரிமார், மந்திரவாதி, காளியம்மா, குறிகாரர், சாத்திரகாரர், நிலையகாரர், தெரிப்புக்காரர்கள் மேல் முழு நம்பிக்கையும் ஒருவித பயத்தையும் மக்கள் கொண்டுள்ளனர். இவர்களைப் பகைத்துக் கொள்ளக்கூடாது. நமது குடிக்கே நாசம் பண்ணி விடுவார்கள் என்று கூறுகின்றார்கள். வணக்கத்திற்குரிய தெய்வங்கள் குடி கெடுக்கும் மாந்திரீகக்காரனுக்கு துணை செய்வதில்லை என்றும், பேய்கள் தீய ஆவிகள், பூதங்கள், கொள்ளி வாய்ப்பேய், குறளிப்பேய், வைரவன் போன்றனவே இத்தகையவர்களுக்கு வாலாயமானவை என்றும் இம் மக்கள் நம்புகின்றனர்.

இந்த வகையில் மருத்துவ மாந்திரீகச் சடங்குகள் செய்வதில் இந்து சமயத்தில் பல தரப்பட்டவர்களும் ஈடுபடுகின்றனர். கிறிஸ்தவ சமயத்தில் செபங்களூடாக நிகழ்த்தும் பாதிரி மார்களும், இஸ்லாத்தில் ஹஸ்ரத்ர்களும் சில நல்ல ஜின்கள் உள்வரப்பெற்றவர்களும் இத்தகைய சடங்குகளைச் செய்கின்றனர்.

**நோய்களும் அவற்றுக்கான காரணங்களும்,**

கல்முனைப் பிரதேச தமிழ் பேசும் மக்களில் பெரும்பாலானோர் பல நோய்கள் உண்டாவதற்கான காரணங்களாக பின்வருவனவற்றை நம்புகின்றனர்.

- தெய்வங்களின் சினம்
- ஆவிகளின் செயல்கள்
- மந்திரவாதிகள் அல்லது பூசாரிகளின் செயல்கள். (ஏவல்கள், சூனியம் செய்தல், படுக்கையில் போடுதல், பாடையில் அனுப்புதல் எனப் பல தரப்பட்டன.
- தீய பார்வைகள் / பார்வை கொள்ளுதல்

என்பனவற்றைக் கருதுகின்றனர். இக்காரணங்களுக்கு ஏற்பவே மருத்துவ மாந்திரீகச் சடங்குகளும் அமைகின்றன.

**தெய்வங்கள் சினம் கொள்ளுவதும், அதனால் ஏற்படும் நோய்களும்**

வழிபாட்டுக்குரிய தெய்வங்கள் மக்களது பொருத்தமற்ற நடவடிக்கைகளால் சினம் கொண்டு தண்டிக்கும் பொருட்டு பல நோய்ககளை அனுமதிப்பதாகவும் மக்கள் நம்புகின்றனர். சின்னம்மை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியம்மை, குன்னிருமல், பாலுண்ணிகள், வாத நோய்கள், வலிப்பு, சொறி சிரங்கு, மனநோய் போன்ற நோய்களுக்கு தெய்வங்களது சினம் தணிக்கும் சடங்குகளைச் செய்து மந்திரித்துக் கொள்கின்றனர். மாரியம்மன் எனும் தெய்வத்தின் கோபத்தாலே அம்மை நோய்கள் ஏற்படுவதாகவும் ஏதும் மருந்துகள் உட் கொண்டால் மாரியம்மா மேலும் உக்கிரமடைவாள் என்றும், வீட்டின் முன் கதவிலும் வாயிலிலும் வேப்பிலை கட்டித்தொங்க விடுவதும், நோயாளியை தனிமையாக வெள்ளை விரித்து அதில் வேப்பிலை தூவி படுக்க வைப்பதும் வழக்கம். மாரியம்மாவின் உக்கிரத்தை தணிப்பதற்கு இளநீர், தோடம்பழச்சாறு என்பன குடிக்கக் கொடுப்பார்கள்.

அத்தோடு அவர்கள் என்ன உணவுப் பண்டத்தை விரும்பிக் கேட்கிறார்களோ அதை மாரியம்மா விரும்பி கேட்பதாகவே கருதி அந்த உணவையோ கறியையோ தின்பண்டங்களையோ விரைவாகத் தயாரித்துக் கொடுக்கும் வழக்கமும் நிலவுகின்றது. இரவினில் பூசாரியார் வேப்பிலைக் கொத்தால் உச்சி முதல் உள்ளங் கால் வரை வருடி விட்ட படியே மாரியம்மனின் தாலாட்டுப் பாடுவார். இதனால் அம்மை குணமாகும் என்று நம்பப்படுகின்றது.

**குழந்தை நோய்கள்**

குழந்தைகளுக்கு சளி பிடித்து இருமல் காய்ச்சல் ஏற்பட்டால் மூச்சுவிட முடியாமலும் பால் குடிக்க முடியாமலும் அவதியுறுவார்கள். இதுவும் கூட மாரியம்மாவின் சின்னமே என்று கருதி பூசாரியைக் கொண்டு "பார்வை பார்க்கிறது" எனும் சடங்கு செய்வார்கள். பூசாரி வேப்பிலைக் கொத்தால் தடவி எண்ணெய் பூசுவார். அவர் உம், வங், தம், ஓங், றீங், நசி, மசி என்று தொடங்கி மத்திர உச்சாடனம் செய்வார். அத்தோடு குழந்தையின் தாயிடம் கண்டங்கத்தரி, வெள்ளைப்பூடு இவற்றை நல்லெண்ணெயில் வதக்கி எடுத்து வெள்ளைத்துணியில் வைத்து தலையில் பற்றுப் போடும்படி கூறுவார். அந்தக் கட்டளை உடனே நிறைவேற்றப்படும். குழந்தைகளுக்கு தொடர்ச்சியாக இருமல் ஏற்பட்டால் விரற்கடையளவு ஓலை நறுக்கில் அல்லது செப்புத் தகட்டுத் துண்டில் மாந்திரீகக் குறியிட்டு, மந்திரங்களை உச்சரித்தபடியே எழுதி ஊது வத்திப் புகையில் காட்டி அதைத் தாயத்தாகச் சுருட்டி குழந்தையின் கழுத்தில் அல்லது இடுப்பில் கட்டி விடுவார்கள்.

மேலும் சில வகையான கண் நோய்கள், முடக்கு வாதம் வருவதும் கூட காளியின் சீற்றம் என்றும் அதற்கு கண்மணி செய்து கொடுப்பது, காய் வெட்டுவது, கழிப்புச் செய்வது, கட்டுச் சொல்லி கழிப்புச் செய்வது என்ற சடங்குகள் ஊருக்கு ஊர் சற்று வேறுபட்டு காணப்படுகின்றன. மறையாத பருக்கள் பாலுண்ணிகள் உடலில் ஏற்பட்டால் அது நிறைவேற்றப்படாத நேர்த்திகளின் தண்டனை எனக் கருதி நேர்த்தி கொடுப்பார்கள் மேலும் உப்பு, மிளகு படைப்பதும் மந்திரித்த எண்ணெய் பூசிக் கொள்வதுமான சடங்குகள் மேற்கொள்வர் மேலும் நல்ல பாம்பின் தண்டனை காரணமாக நாகதோஷம் ஏற்பட்டு பாம்பு, தேள், பூரான் கடித்தலும் உடல் பாதிப்பும், மரணமும் நிகழ்வதாக இம் மக்கள் நம்புகின்றனர். விஷக்கடி நிகழ்ந்தவுடன் வேறொருவர் பூசாரி அல்லது நாட்டு வைத்தியரிடம் போய் இன்னாருக்கு பூச்சி குத்தி விட்டது என்றும் கடியுண்டவர் காட்டும் குணம் குறிகளையும் கூறுவார். இதைக் கேட்கும் போதே பூசாரி தூதன் குறிப்பாடலைப் பாடி கடித்தது என்ன பாம்பு என்பதை அறிந்து கொண்டு கடி பட்டவரை கூட்டிவரச் சொல்லி முதலில் வேப்பிலைக் கட்டால் உச்சந் தலையில் அடித்தபடியே மந்திரம் பொழிவார். பின் கடிபட்ட இடத்திற்கு சற்று மேலே சுண்ணாம்பு கொண்டு தவணை போடுவார். ஒன்றன்பின் ஒன்றாக மூன்று தவணைகள் போட்டதும் வாந்தியெடுக்க வைக்க பச்சிலைகள் உரலில் இடித்து, பிழிந்து குடிக்கக் கொடுப்பார்கள். பின்பு மற்றுமொரு சாற்றுக் கலவையை இரு காதுகள் கண்களுக்குள் துளிதுளியாக விடுவார்கள். இது கலிங்கம் என்றழைக்கப்படும். நிலைமை மோசமானால் புது மண் சட்டியெடுத்து வேம்பு விறகால் தீ மூட்டி வேப்பெண்ணெய் விட்டு எரியச் செய்து உச்சந்தலையைக் காயப்படுத்தி தீச்சட்டியை வைப்பார்கள். இச் செயல்களின் போது தொடர்ந்து மந்திரம் சொல்லப்படும். நோயாளி குணமடைந்து விட்டால் எதிர்காலத்தில் விஷக்கடிகள் ஏற்படாமலிருக்க தண்ணீர் ஓதிக் கொடுப்படும். அத்தோடு வெள்ளிக்கிழமைகளில் நாக பாம்புப் புற்றில் பால் ஊற்றும்படி பணிப்பது போன்ற நிகழ்வுகள் தொடரும்.

மேலும் உணவில் பிரியமின்மை, பயம், நித்திரையில் நாக்குழறுதல், குறட்டை விடல், நித்திரையில் நடத்தல், உடல் சோர்வு, கெட்ட கனவுகள் வருதல் இப்படியான பலவற்றிற்கு தண்ணீர் ஓதிக் கொடுத்தல், திருநீறு போடுதல் என்பன இப்பகுதிக் கிராமங்களில் பரவலாக நடைபெறுகின்றன. பூசாரியார் அல்லது நாட்டு வைத்தியரிடம் போய் உறவினரோ அன்றி வேண்டப்பட்டவர்களோ விடயத்தைக் கூறுவார்கள். அவரோ பெரிய செம்பில் நீர் எடுத்து விரல் நகம் படாமல் கொண்டு வரும்படி கூறுவார். அதற்கிடையே அவர் முகம் கைகால் கழுவி கையில் வேப்பிலை இணுக்கு மூன்று அல்லது பாக்கு வெட்டி எடுத்து வருவார். தனிமையாக இருந்து கிழக்கு நோக்கி பாக்குவெட்டிக் காம்பு அல்லது வேப்பிலை இணுக்கை நீருள் துழாவியபடியே மந்திரங்களை ஓதிக் கொண்டேயிருப்பார். முடிந்ததும் உரியவரிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து மூன்று மடங்கு குடிக்கச் செய்து முகம் கழுவி மீதியைக் கூரையில் ஊற்றுமாறு சொல்வார். கூடவே குறிப்பிட்டவருக்கு தண்ணீர் ஓதும்போது தனக்கு சில அறிகுறிகள் தென்பட்டதாகவும் சில பரிகாரங்கள் செய்யவேண்டுமென்றும் கூறுவார்.

கருவுற்ற பெண்களுக்கு சில சமயங்களில் கரு தங்காமல் கலைந்து விடும். இதனை நீக்கி குழந்தைப் பாக்கியம் பெற வேண்டி சில மருத்துவ மாந்திரீகச் சடங்குகள் செய்யப்படுகின்றன. பூசாரி இடது கையில் திருநீற்றைப் பரப்பி மந்திர மொழியை அதில் எழுதியபடியே மந்திரத்தை பதினாறு தடவை உச்சரிப்பார். 'அம் சிங்கிலி, ஓம் சிறி சிசு' எனத் தொடங்கும் இரு மந்திரங்களும் இந்தச் சடங்கில் பயன் படுத்தப்படும். தொடர்ந்து திரு நீற்றை வலது கை விரல்களின் இடுக்கில் எடுத்து அப்பெண்ணின் உச்சந் தலையில் தெளித்து மந்திரம் ஓதி தேனையும் முலைப் பாலையும் கலந்து கொடுப்பார்.

குழந்தைகள், சிறுவர்களை குளக்கரை ஆற்றங்கரை, சுடலைப்புறம், மயானம் உள்ள வீதிகள், பாழ்வளவுகள், காட்டுப்புறமாக உலாவ கொண்டு சென்றால் 'பார்வை கொள்ளுதல்' நிகழும் என்று நம்பப் படுகின்றது. அதாவது சிலகுறளிப் பேய்கள், கரையாக்கன், வைரவன், மற்றும் சில ஆவிகள் பிடித்துக் கொள்ளும் என்றும் நம்புகின்றார்கள். இதனை நீக்க பூசாரி திருநீறு போடுதல், ஓதி அடித்தல், கழிப்புச் செய்தல் போன்ற சடங்குகளைச் செய்வார். சிறுவர்களை முன்னே இருக்கச் செய்து வேகமாக மந்திர உச்சாடனங்களைப் பொழிந்தபடியே எதிர்பாராத சமயத்தில் நீரை முகத்திலடிப்பார். சிறுவர்கள் வீறிட்டுக் கத்துவார்கள். இதனால் அவர்களைப் பிடித்தவை விலகிப் போய் விட்டதாக மக்கள் நம்புகின்றனர்.

பெரியவர்கள் கூட இவற்றால் பார்வை கொள்ளுகின்றனர் என்றும் அதன் காரணமாக உடல் மெலிவு, பயம், தங்களை மறந்து பேசுதல், சிரித்தல், ஆடுதல், பாடுதல் இவற்றை மேற்கொள்வர். பேய்பிடித்து விட்டது என்று இதனை இம்மக்கள் நம்புகிறார்கள்.

கூடுதலாக ஆண்களை விடப் பெண்களே இத்தகைய நடத்தைகளைக் காட்டுகின்றனர். இதனை நீக்கும் பொருட்டு பேயோட்டும் சடங்கு இரவு வேளைகளில் மேற்கொள்ளப் படுகின்றது. பலவித பொருட்கள் மடையில் படைக்கப்படும். வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய் போன்றன படைத்து, ஊதுபத்தி கொளுத்திபேய் பிடித்தவர் என்று நம்பப் படுபவரை மடையின் முன்னால் அமர வைத்து உடுக்கு எனப்படும் தோற்கருவியை வேகமாக அடித்தபடியே மந்திரம் பொழியப்படும். பத்ரகாளி, ஜக்கம்மா, காட்டேறி, வைரவன் போன்ற பெயர்களைச் சொல்லியபடியே ஆடியசைந்து பூசாரி கூறும் மந்திர



உச்சாடனம், உடுக்கோசை என்பவற்றால் முன்னேயிருப் பவர்கள் சுழன்று ஆடத் தொடங்குவர். பெண்களா னால் தலைவிரி கோலமாய் கூய் என்று அலறியபடியே ஆடுவர். அவ்வேளை பூசாரி முதலில் பணிவாகவும் பின்பு அதிகாரத்துடனும் எதிரே ஆடிக்கொண்டிருக்கும் பெண்ணிடமிருந்து விலகி விடுமாறு பேய்க்குக் கட்டளையிடுவார். அதற்காக உனக்கு என்ன வேண்டும் என்று கேட்பார். பேய் தான் விரும்பும் பொருட்களைக் கூறி அவற்றைத் தந்து விட்டால் அப்பெண்ணிடமிருந்து விலகி விடுவதாகக் கூறும். கோழிச் சேவல் பலியிடுவது முதல் சாராயப்போத்தல் வரை இப்பொருட்களில் இடம் பெறும். கேட்கப்பட்ட பொருட்களை ஓலைப் பெட்டியிலிட்டு அப்பெண்ணின் தலையில் வைத்து உடுக்கடித்த படியே அவளை நடத்திச் செல்வர். ஒரு பால் மரத்தடியே அவள் வந்து சேர்வாள். அந்தப் பொருட்களை மரத்திலே கட்டித்தொங்க விட்டு ஓர் ஆணியை மரத்திலடித்து அவள் தலைமயிர்க் கற்றையை அந்த ஆணியில் முடிந்து விட்டு வெட்டப்பட்ட கூந்தலுடன் அவளைக் கூட்டிப் போய் ஆற்றில் முழுக வைத்து வீட்டிற்குக் கொண்டு வருவார்கள்.

மேலே நாம் பார்த்தவையெல்லாம் தெய்வங் களது சினத்தாலும் பேய்கள் பார்வை கொள்ளுவதாலும் ஏற்படும் நோய்களும் அதன் பொருட்டு மேற்கொள்ளப் படும் மருத்துவ மாந்திரீகச் சடங்குகளுமாகும். இவை தவிர குடி கெடுத்தல், குடியழித்தல், ஏவி விடுதல், சூனியம் செய்தல், கலிங்கம் விடுதல், பிரிவினைக்குச் செய்தல், படுக்கையில் போடல், பாடைக்கு அனுப்புதல் போன்ற பல தீய செயல்களையும் பகை காரணமாக செய்வோரும் உள்ளனர். இவர்கள் தீயன செய்யக்கூடிய பூசாரி அல்லது மந்திரவாதி யிடம் போய் இவற்றை சாதிக்க முயல்வர்

கல்முனைப் பிரதேசத்தை அண்டிய கிராமங் களில் குழந்தைகள் சிறுவர் சிறுமியர் ஏன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியவர்களுக்குக் கூட கண்படல் அல்லது கண்ணூறு படல், திருஷ்டி படல் நிகழ்வதாகவும் இதனால் சோர்வு, பசியின்மை, உடல் மெலிவு, தலையிடி, வாந்தி இப்படி ஏற்படுவதாகவும் நம்பப்படுகின்து. இது ஆணோ பெண்ணோ சிலர் அவாவோடு ஆசையோடு ஏக்கத்தோடு ஊன்றிப் பார்க்கும் அந்தப்பார்வையால் ஏற்படுவது. அந்தப் பார்வைக்கு இத்தகைய பாதிப்புகளை ஏற்படுத்தும் சக்தி இருப்பதாக இம்மக்கள் கூறுகின்றார்கள். கண்ணூறுக்கு இரும்பு போடும் வழக்கம் இன்று பரவலாக எல்லா வீடுகளிலும் காணப்படுகின்றது. அழகாக உடையணிந்து நகையணிந்து வெளியே சென்று வந்தாலோ, குழந்தைகள் பால், உணவு உண்பதை வேற்றோர் பார்த்து விட்டாலோ மழலை மொழியில் சிரித்துப் பேசும் குழந்தைகளை மற்றோர் பாராட்டினாலோ ஏதேனும் சாதனைகள் செய்து புகழ் பெற்றவர்கள் வீடு வந்தவுடனோ, இப்படியாக வயது வேறுபாடின்றி கண்ணூறுக்கு இரும்பு போட்டு திருஷ்டி கழிப்பது நடக்கும்.

வண்டில் மாடுகளது கால்களில் பொருத்தி ஒரு கட்டத்தில் கழற்றப்படும் லாடங்கள் இரண்டு அல்லது மூன்று ஒருமிக்கக் கட்டியிருக்கும். அதைக் கண்ணூறு பட்டவரின் தலையை மூன்று முறை சுற்றி உச்சி முதல் பாதம் வரை இறக்கி அவரை மூன்று முறை துப்பும்படி கூறி அந்த இரும்பு விறகடுப்பில் போடப்படும். இது செய்யும் போது "தாய் கண்ணூறு.... தகப்பன் கண்ணூறு போய் கண்ணூறு பெருநாட்டார் கண்ணூறு மாமி கண்ணூறு மாமன் கண்ணூறு பெரியம்மா கண்ணூறு........." இப்படியாக தொடர்ந்து எல்லோர் கண்ணூறும் விட்டுவிட்டு போகவே சுவாகா என்று சொல்வார்கள். கொஞ்ச நேரத்தில் ஒரு வாயகன்ற பாத்திரத்தில் நீர் எடுத்து உரியவரை முன்னிருத்தி சூடேறிய இரும்பை இதனுள் போடவே அது சுர்ரென்ற ஒலியுடன் நீராவியை எழும்பும். அந்த நீராவி உரியவரின் முகத்தில் படரும்படி பிடித்து மூன்று வாய் நீர் குடிக்கச் செய்து அந்த நீராலே முகம் கைகால் கழுவி மீதியைக் கூரை மீது ஊற்றுவார்கள்.

சில சமயம் முச்சந்தி மண் எடுத்து அல்லது குறிப்பிட்ட சிலர் குழந்தைகளைப் பார்த்து சென்றால் அவர்களுக்குத் தெரியாமலே காலடி மண் எடுத்து அதனோடு செத்தல் மிளகாய் உப்புச் சேர்த்து குழந்தையை மூன்று முறை சுற்றி உப்பை எரியும் விறகடுப்பில் கொட்டுவர். அவை வெடித்துப் பறக்கும். அது போலவே கண்ணூறும் பறந்து விடுவதாக கூறுகின்றனர். அந்தி பட்டால் குழந்தைகளின் கன்னத்தில் இலைத் துண்டை ஒட்டி விடுவதும் கருமை நிறப்பொட்டு வைப்பதும் கண்ணூறு படா திருப்பதற்காகவே. மேலும் கண்ணூறுபட்ட சிறுவர்களுக்கு நாகதாளி வேரை மந்திரித்து ஈயத் தகட்டில் சுற்றி கறுப்பு நாடாவால் கட்டி கையில் கழுத்தில் பூசாரிமார் கட்டுவது வழக்கம்.

இக்கிராமங்களில் நிலவும் மருத்துவ மாந்திரீகச் சடங்குகளின் பின்னணி அல்லது உட்பொருளை அறிந்து கொள்ள முயன்றால் பல சுவையான செய்திகள் கிடைக்கின்றன. இயற்கை நிகழ்வுகளது தாக்கங்களை சமாளிக்க முடியாத நிலையில் மனிதன் பலவித 'பாவனை மெய்ப்பாடுகளை' ஆதியில் வெளிக் காட்டினான். தமிழ் இலக்கியமான ஐங்குறுநூறு 251ம் சூத்திரம் பின்வருமாறு கூறும்.

'குன்றக் குறவன் ஆர்ப்பின் எழிலி
நுண்பல் அழிதுளி பொழியுநாட'

என்று கூறுவதன் மூலம் குறவர்கள் ஆரவாரம் செய்ததால் மழை பொழிந்தது என்ற செய்தியைத் தருகின்றது. இது மனிதனது செயல் இயற்கையை செயற்படத் தூண்டும் எனும் மந்திரத்தன்மையை உருவாக்குகின்றது. காலப்போக்கில் இயற்கையை அழைக்க வேண்டி சில பாவனைச் சடங்குகளை மனிதர் மேற்கொண்டனர். இவையே மந்திரங்களின் தோற்றுவாயாயிற்று.

பண்டைய காலத்தில் இயற்கைக்கு அஞ்சியது போலவே நோய்களுக்கும் பயந்து வாழ்ந்தனர். இதனாலேயே நோய்களின் பொருட்டு சில பாவனைச் சடங்குகளைச் செய்யத் தொடங்கினர். இவையே காலப்போக்கில் பல வடிவங்களைப் பெற்றன எனலாம். அறிவியல் உச்ச நிலையை அடைந்துள்ள தற்காலத்திலும் கூட மாந்திரீகச் சடங்குகளை மக்கள் நம்புகின்றனர். அறிவியல் வளர்ச்சியானது இன்னும் முற்று முழுதாக பாமர மக்களைச் சென்றடையவில்லை அல்லது அவர்களுக்கு எட்டச் செய்யப் படவில்லை. ஆளும் வர்க்கத்தினரும் புத்தி ஜீவிகளும் தமது நலன்களின் பொருட்டு கிராமப்புற மக்களை விழிப்படையச் செய்யவில்லை. மேலும் பத்திரிகைகள் வானொலி, தொலைக்காட்சி, சினிமா போன்ற வலிமையான ஊடகங்கள் பகுத்தறிவுக்கு ஒவ்வாத கருத்துப் பிரசாரங்களை செய்து வருகின்றன. தற்கால தொடர்பூடகங்கள் மூடத்தனங்களையும் மந்திரதந்திர நம்பிக்கைகளையும் மக்களிடம் மேலும் வலுவூட்டும் பணியையே செய்கின்றன. இதனால்தான் மருத்துவ அறிவியல் வளர்ச்சி அதி உன்னத நிலையை அடைந்துள்ள இன்றைய கால கட்டத்திலும் கூட மக்கள் மாந்திரீகத்தையும், மாந்திரீகச் சடங்குகளையும் இன்னும் நம்புகின்றனர். முழுமையான அரசியல் சமூக பொருளாதார மாற்றமும், விடிவும் ஏற்பட்டாலொழிய இந்த நிலை தொடரவே போகின்றது. இது தொடர்பான பரந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவது அவசியமாகும். ●

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்முனை தமிழ்ப் பிரதேசத்தின் இரு முக்கிய ஊடகவியலாளர்கள்

**செல்லையா பேரின்பராசா**



கந்தையா குணராசா

கல்முனையில் பிறந்து பாண்டிருப்பில் வாழ்பவர். கல்முனை விவேகானந்த வித்தியாலயம், இராமகிருஷ்ண மகா வித்தியாலயம், உவெஸ்லி உயர்தர பாடசாலை ஆகியவற்றில் கல்வி கற்றவர். உவெஸ்லி உயர்தர பாடசாலையில் பயின்ற காலம் வாழ்க்கையை அறிந்து கொள்ள ஒரு பல்கலைக்கழகம் போன்றும் இனஒற்றுமைக்கான தலமாகவும் தனக்குப் புலப் பட்டதாக கூறுகின்றார்.

'வாசிப்பு' மீது ஆர்வம் ஏற்படத் திரு. செல்லத்தம்பி ஆசிரியர் அவர்களே காரணம் எனக் குறிப்பிடும் திரு.குணராசா தான் மருத்துவத் துறைக்கு சென்றிருக்க வேண்டிய ஒருவன் எனவும் எழுத்துத் துறை தன்னை ஈர்த்துத் திசை மாற்றியது என்றும் கூறுகிறார். திரு.குணராசா கொழும்பு பல்கலைக் கழகத்தில் இதழியல் துறை டிப்ளோமாவையும்,. சென்னை- தாம்பரம் பல்கலைக் கழகத்தில் (எஸ்.ஆர்எம்) இதழியல் துறையில் பட்டப்படிப்பையும் பயின்றவர்

தமிழ்த் தேசிய உணர்வுடன் பிரபல பத்திரிகையாளர் தராக்கியுடன் சேர்ந்து ஒரு காலத்தில் இயங்கியவர். கால ஓட்டத்தில் கொழும்பு சென்று 1984 இல் தினபதியில் இணைந்தார்.

1984-1990 வரை செய்தியாளர், கட்டுரையாளர், பாராளுமன்ற செய்தியாளர்,சிறப்பு கட்டுரையாளர், அமைச்சரவையின் விசேட செய்தியாளர் எனப் பல்வேறு பணிகளில் இயங்கினார். இக் கால கட்டத்தில் ஒரு பத்திரிகையுலகத்தின் முற்று முழுதான செயற் பாடுகளையும், நிர்வாகக் கட்டமைப்பையும் கற்றறிய இந்த காலகட்டம் உதவியது.

ஜேர்மன் செய்தி நிறுவனமான டி.பி.ஏ (DPA) யின் செய்தி முகவராகப் பணியாற்றினார். 1995 ல் லேக் ஹவுஸில் செய்தியாளராக இணைந்தார். ஆர்.சிவகுருநாதன் ஓய்வு பெற்றுச் செல்ல எஸ் அருளானந்தம் ஆசிரியராகப் பதவியேற்ற காலம் இது. இவருடைய ஆற்றலைக் கண்ட ஆசிரியர் இவரை செய்தி ஆசிரியராகப் பதவியில் அமர்த்தினார். 17 வருடங்கள் இப் பதவியில் நீடித்த இவர் திட்டமிட்ட புறக்கணிப்புகளாலும், கழுத்தறுப்புகளாலும் மேலெழ முடியாமல் இருந்தது. எனினும் இவருடைய பொறுமையான தன்மையாலும், திறமையாலும் 2015 இல் பிரதம ஆசிரியர் பதவிக்கு உயர்ந்தார். இவருடைய வருகையின் பின் தினகரன் உருவம் உள்ளடக்கம் ரீதியாகப் புதுப் பொலிவு கண்டது. விற்பனையிலும் உயர்ச்சி கண்டது.


'வீடு தேடி வந்த கடல்' என்ற தலைப்பில் 24 வாரங்கள் சுனாமி அனுபவங்கள் பற்றி தொடர் கட்டுரை எழுதியுள்ளார். இது இன்னமும் நூலுரு பெறவில்லை.

புலமைப்பரிசில் ஒன்றினை பெற்ற இவர் இந்தியாவில் ஆறுமாத காலம் இதழியலிலும் இலத்திரனியலிலும் தலா மூன்று மாதங்கள் பயிற்சி பெற்றவர். 1991 இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் பகுதி நேர அறிவிப்பாளராகவும் பின்னர் செய்தி வாசிப்பாளராகவும் பணியாற்றினார்.

வெளிநாட்டு செய்தி விமர்சனம், விடுமுறை விருந்து (பிரதி சனிக்கிழமை தோறும் நேரடி ஒலி பரப்பு). ஆகிய வானொலி நிகழ்ச்சிகளை வழங்கினார்.

ரூபவாஹினியில் பல நிகழ்ச்சிகளின் தொகுப்பாளர். 2004-2017 வரை 'நாளேடுகளில் இன்று' என்ற தலைப்பில் செய்தித் தாள்கள் மீதான கண்ணோட்டத்தை செய்தார்.

அமெரிக்க தூதரகத்தின் இதழியல் துறை வளவாளராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். இத் துறை மீது கொண்ட தீராக் காதலால் அர்ப்பணிப்புடன் இன்று வரை செயற்பட்டு வருகின்றார்.



சின்னத்துரை எழில்வேந்தன்

1956 ல் பெரிய நீலாவணையில் பிறந்த எழில்வேந்தன் பெரிய நீலாவணை விஷ்ணு வித்தியாலயம், கல்லடி சிவானந்த வித்தியாலயம், மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்றார். இவருடைய தந்தை ஈழத்து இலக்கிய உலகில் முத்திரை பதித்த கவிஞர் நீலாவணன் ஆவார்.

ஒலிபரப்புத் துறையில் 35 வருடங்களுக்கு மேலான அனுபவம் கொண்ட எழில்வேந்தன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் 1982 -1996 காலப் பகுதியில் விளையாட்டு நிகழ்ச்சிகளின் நேர்முக வர்ணனையாளராகவும், நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும், நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும், நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்பவராகவும் விளங்கியவர்.பின்னர் 1996 லிருந்து 2006 வரை எம்.ரி,வி. அலைவரிசையில் நிகழ்ச்சி இயக்குனராகப்பணி புரிந்தார். 2010 ல் மீண்டும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் தயாரிப்பாளராகவும், ஒலிபரப் பாளராகவும் இணைந்து கொண்ட இவர் 2015 வரை அங்கு பணி புரிந்தார். அரச தொலைக்காட்சியில் கிரிக்கெட் டெஸ்ட் மேட்ச் ஒன்றின் நேர்முகவர்ணனையை தமிழில் முதன் முதலாக வழங்கிய அறிவிப்பாளர் என்ற பெருமையைப் பெற்றவர் .

ஐந்தாவது ஆறாவது ஏழாவது SAF விளையாட்டுப் போட்டிகள் முறையே கொழும்பு, டாக்கா, சென்னை ஆகியவற்றில் நடைபெற்ற போது நேர்முக வர்ணனையாளராகக் கலந்து கொண்டார்.

1989 ல் பொதுநலவாய நட்பு நம்பிக்கை நிதியம் வழங்கிய பரிசின் மூலம் லண்டன் சென்ற இவர் அங்கு நான்கரை மாதங்கள் தங்கியிருந்து ஒலிபரப்பு அனுபவங்களைப் பெற்றார். 2004 ல் பிறிதொரு திட்டத்தின் கீழ் ஜெர்மனிக்கும் சென்று பயிற்சி பெற்றார்.

1995ல் 'சிறந்த செய்தி நிகழ்ச்சித் தயாரிப்புக்கான ஜனாதிபதி விருதினையும் , 1996 ல் 'வானொலியின் சிறந்த தமிழ் நிகழ்ச்சித் தயாரிப்புக்கான விருதினை UNDA சர்வதேச அமைப்பிடம் இருந்தும் பெற்றிருக்கிறார். சபரிமலை சாஸ்தா பீடம் ஒலிபரப்புத் துறையில் இவருடைய பங்களிப்பை கௌரவித்து 1995 ல் 'கலை ஞானமணி' பட்டம் வழங்கி கௌரவித்தது. 1977ல் ஸ்ரீலங்கா கலாசார அமைச்சு ஏற்பாடு செய்திருந்த அரச நாடகப் போட்டியில் சிறந்த துணை நடிகருக்கான விருதினைப் பெற்றார்.

ஊடகங்களுக்கான வர்த்தக விளம்பரங்கள், பாடல்கள், நாடகப் பிரதிகள் ஆகியவற்றை எழுதியுள்ளார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் வெளியீடான 'வானொலி மஞ்சரியின் 'உதவி ஆசிரியராக' இருந்திருக்கிறார். ஸ்ரீலங்கா தேசிய நூலக சேவைகள் சபையின் 'நூல்கள் தெரிவுக் குழுவில்' அங்கம் வகித்துள்ளார் .

இலங்கை சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகள் நிறைவுற்றதை யொட்டிய பொன்விழாவின் போது மும்மொழிகளிலும் வெளியான 'ஸ்ரீலங்காவின் 50 ஆண்டுகால விளையாட்டு' (*50 years of Sports in Sri Lanka*) எனும் நூலின் நூலாக்கக் குழு உறுப்பினராகவும் இருந்திருக்கிறார் .

கொழும்பு தமிழ் சங்கத்தின் இலக்கியக் குழு செயலாளராகவும், செயற்குழு உறுப்பினராகவும், சங்கத்தின் வெளியீடான 'ஓலை 'சஞ்சிகையின் கௌரவ ஆசிரியராகவும் விளங்கியவர். 2015 ல் அவுஸ்திரேலியாவுக்கு இடம் பெயர்ந்த இவர் தற்போது அங்கிருக்கும் தாயகம் தமிழ் வானொலியில் பணியாற்றுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி. சுபத்ரா சுபேஸ்

# கல்முனைப்பிரதேச பேச்சு வழக்குச் சொற்கள்

எந்த ஒரு மொழியினைப் பொறுத்த வரையிலும் இரண்டு வழக்குகள் காணப்படுகின்றன. ஒன்று பேச்சு வழக்கு மற்றையது எழுத்து வழக்கு இந்த இரு வகைகளும் பயன்பாட்டிலுண்டு.

இவ்வாறான இரு வழக்குகள் இருந்த போதிலும் பிரதேச ரீதியாகவும், சமூகரீதியாகவும், தொழில் ரீதியாகவும் பேச்சு மொழியானது தனிச்சிறப்பினைப் பெற்றுள்ளது. சமூகத் தொடர்பாடலின் போது பிறர் எளிதில் விளங்கிக் கொள்வதற்காக அதிகளவில் இதுவே பிரயோகிக்கப்படுகின்றது.

கல்முனைப் பிரதேசம் என்பது பெரிய நீலாவணை, பாண்டிருப்பு, கல்முனை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, துரவந்தியமேடு ஆகிய ஆறு கிராமங்களைக் கொண்டது. எனவே இப் பிரதேசத்தில் உள்ள அந்தந்த ஊரின் மண் வாசனைக்கேற்ப பேச்சு வழக்குச் சொற்களும் மாறுபட்டு நிற்கின்றன.

கல்முனைப் பிரதேசத்தின் பொதுவான பேச்சு வழக்குச் சொற்களாக மல்லாக்க (நிமிர்ந்து), குப்புற, ஒருக்கணித்து (சரிவாக), பொத்தல்(துவாரம்), ஆணம் (சொதி), நீட்டி (நேராக), வழியிது (வடிதல்), ஏனம் (பாத்திரம்), குண்டாளம் (தாழ்வாக), ஒண்ணா-ஏலா (இயலாது), இணையன் (இரட்டை), இடுக்கி (தூக்கி), நெருக்கி (நெரித்து), கெதியா (விரைவாக), மூஞ்சி (முகம்), கொஞ்சி (முத்தம்), கொள்ளி (விறகு), அடுப்படி - குசினி (சமையலறை), விறாந்தை (முன்கூடம்), சாவூடு (மரண வீடு), குளர்ற (அழுதல்), கச்சை (கோவணம்), கடப்படி (வாசற்படி), குமிஞ்சி (குவிந்து), சவக்கால (மயானம்), புளுகல் (தற்பெருமை), மட்டம் தட்டல் (தரக்குறைப்பு), ஒழிஞ்சி (முடிந்தது), ஒளிச்சி (மறைந்து), ஆறுதலாக(மெதுவாக), கெதியா (விரைவாக), அடப்பம் (பூரணம்), அறுணாகயிறு (அரைஞாண் கயிறு), சாமான் சக்கட்டு (பொருட்கள்), கும்பமாக (அதிகமாக), ஒசில் - வடிவில்ல (அவலட்சணம்) போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறான சொற்களைப் போன்று ஒரு சொல்லிற்கு பல பேச்சு வழக்குச் சொற்களை கல்முனைப் பிரதேச மக்கள் பயன் படுத்துவதுமுண்டு. அதற்கு உதாரணமாக பேதலித்தல் - மலச்சிப் போதல் (வியந்து போதல்), ஆத்திரம், எரிச்சல் (கோபம்), மாசால - பம்மாத்து(பாசாங்கு), கக்கிசம், கரைச்சல், கணகாட்டு (கஷ்டம்) போன்ற பேச்சு வழக்கு சொற்களைக் குறிப்பிடலாம்.

இதே போன்று நற்பிட்டிமுனை, சேனைக் குடியிருப்பு, துரவந்தியமேடு போன்ற கிராமங்களிலும் பேச்சு வழக்கு சொற்கள் புழக்கத்தில் உள்ளன. திண்ண - விறாந்த (வீட்டின் முன்கூடம்), பெட்ட, பொடிச்சி (பெண் பிள்ளை), தாவாரம் (வீட்டின் தாழ்வாரம்), ஓட்டு விறாந்த (ஓட்டுப் படி), சிறாம்பி (பொருட்களை வைக்கும் உயரமான இடம்), தட்டி, படல (வாசல் மறைப்பு), சுருப்பு (சேறு), வெடில் (வெடி), அங்கால (அந்தப் பக்கம்), இஞ்சால (இந்தப் பக்கம்), சங்கை (ரோசம்), துப்பல் (எச்சில்), தேத்தண்ணி (தேநீர்), தும்புக்கட்டு(தும்புத் தடி), வாருவக்கட்டு (விளக்குமாறு), பொறகால (பின்னாடி), கோடி(வீட்டின் பின்புறம்), பீத்தல் (துவாரம்) சக்களம், (குழப்படி), பிராக்கு (வேடிக்கை) இவ்வாறான சொற்கள் நற்பிட்டி முனையில் அதிகளவாகவும் சேனைக்குடியிருப்பு, துரவந்தியமேடு போன்ற கிராமங்களில் பணிய (கீழே) பந்தல், பொண்டாட்டி (மனைவி), புருஷன் (கணவன்), வல்லுவம் (சிறிய பை), ஊத்த (அழுக்கு), வாத்தி (ஆசிரியர்), ஆக்கினை (துன்புறுத்தல்), கக்குசி (மலசலகூடம்), குறுக்கால, மறுக்கால (அங்கும் இங்கும்), மறுகா (பிறகு), கிறுகி (திரும்பி), பொக்குவாய் (பொக்கை வாய்), கொளுவு (தொங்கவிடு) போன்ற சொற்களும் புழக்கத்தில் உள்ளன.

தொழில் ரீதியாக விவசாயம், தோட்ட வேலை புரிவோர்கள் மத்தியில், களவெட்டி (சூடு போடும் இடம்), கால(தோட்டம்), கோணி (சாக்கு), வேலைக் காரன்கம்பு (சூடு போடும் தடி), சீமாடு (சுமை தூக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடை), வெள்ளாமை (வேளாண்மை), வெருட்டி (வயலில் பறவைகளை அண்ட விடாமல் தடுக்கும் உருவ பொம்மை), பறண்(விளைநிலத்தைக் கண் காணிக்க உயரத்தில் உள்ள அமைவிடம்) திரண்டக்குழி (நீர் இறைக்கும் இடம்), தாறாப்புட்டி (சிறிய மேட்டுப் பகுதி) போன்ற சொற்களும் பயன் படுத்தப்படுவதுண்டு.

மீனவர்கள் மத்தியில் அத்தாங்கு(கைவலை), துறையடி(படகுத் துறை) , அலவாக்கர (கடற்கரை) ஓரம்(அருகில்), பாத(ஓடம்) போன்ற சொற்கள் பயன் படுத்தப் படுவதுண்டு.


அக்காலத்தவர் நேரத்தை குறிப்பிட விடியச் சாமம் (அதிகாலை), பொழுதுபட (மாலை அல்லது சாயுங்காலம்), நடுச்சாமம் (நள்ளிரவு), உச்சி வெட்டாப்பு (நண்பகல்), எனவும், திசைகளைக் கூற எழுவான் (கிழக்கு), படுவான் (மேற்கு) எனவும் ஒருவரைக் கடிந்து கூறும்போது நட்டாமுட்டி வழிசல், விசரன், திமிறன், கிறுக்கன் விறுக்கன், தெனாவெட்டு என்றும் பணத்தைப் பொத்திப் பொத்திப் பாதுகாப்பவனை கஞ்சன், எச்சி, பிசினி, உலோபி என்றும் சில குணாதிசயங் களை சுட்டிக்காட்ட பகடமணி, தற்பெருமை, இம்சை, வக்கெத்தவன் போன்ற சொற்களாலும் குறிப்பிடுவர்.

பேச்சுமொழியின் வாயிலாகவே சில சொற்கள் உயிர்ப்புடையனவாகக் காணப் படுவதுண்டு. இதற்கு உதாரணங்களாக அனுகுதல் (முனகுதல்), பிச்சை (யாசகம்), முரட்டுத்தனமான (மூர்க்கத்தனமான), முசுப்பாத்தி (நகைச்சுவை), பாழ்வீடு (கைவிடப்பட்ட வீடு), வங்களா (பெரிய வீடு), வெறிச்சோடி (வெறுமை யானதாக) போன்ற சொற்களைக் கூறலாம்.

மழைக்காலத்தில் மூசாப்பு(இருண்டு), வாந்தோடி (நீர் வார்த்தல்) போன்ற சொற்கள் அதிகமாகப் புழங்கு வதுண்டு.

நெருப்பெட்டி (தீப்பெட்டி), மாட்டுதல் - (அகப்படுதல்), தின்னு(சாப்பிடு), ஏவற (ஏப்பம்), சத்தி (வாந்தி), ஒண்ணா(முடியாது), பொல் (தடி), திலாந்து - (துலா அல்லது நீர் இறைக்கும் கம்பம்), ஒச்சம் (கூச்சம்), மிச்சம் (மிகுதி), அரியண்டம் (அருவருப்பு), நருவுதல் (கொறித்தல்), அய்னைக்கு (அங்கே). சுணங்கி (தாமதித்து), பொலிவு (அதிகம்), நாசம் - (அழிவு), ஆக்கு (சமை), பொளப்பு (பிழைப்பு), சிக்கல் - (பிரச்சினை), நம்மளுக்கு (எங்களுக்கு), பூரிப்பு (மகிழ்ச்சி), கொண்டி (தாழ்ப்பாள்), வீக்கம் (புடைப்பு), கொறளி வித்தை (கண்கட்டு வித்தை), அவதி (அவஸ்தை), நையாண்டி (கேலி,கிண்டல்), பன்னாடை- பழையதுணி, வருத்தம் (நோய்), கத்தல் (சத்தமிடல்), ஏவம் (கொடுத்ததைக் கேட்டல்), துரத்தல் (விரட்டல்), சொதப்பல் (நேர்த்தி யின்மை) ஆகிய சொற்களும் கவனிக்கத்தக்கவை.

மேலும் உடல் பாகங்களைக் கூறும்போது சோத்துக்கை (வலது கை), பீச்சாங்கை (இடது கை),



முட்டிக்கால் (முழங்கால்) , கெண்டக்கால் (பின்னங்கால்), கிறண்டிக்கால் (புறங்கால்) எனவும், மாடுகளை வகைப்படுத்தும் போது ஆண்மாட்டை நாம்பன், என்றும் பெண்மாட்டை நாகு என்றும் அழைப்பதுண்டு.

லஞ்சம் வாங்குவோரை பந்தக்காரன், பணயக்காரன் எனவும் அழைப்பதுண்டு.

சமூகத்தின் மத்தியில் நாளடைவில் உயிரப்பற்று வழக்கொழிந்த சொற்களாக ஒண்டுக்குப் போன (சிறு நீர் கழித்தல்), காட்டுக்கு போன(மலம் கழித்தல்), பொட்டகம் (அலுமாரி), றங்குப்பெட்டி (கைப்பெட்டி), அழிப்பாடு (பாதை), பொளக்கட - (புழக்கடை அல்லது மலசலகூடத்தின் பகுதி), செக்கல், கருக்கல் (மாலைப் பொழுது), ஏட்டுக்கட்டு (சுவடிகள்), எழுத்தாணி (எழுதுகோல்), களிசான் (காற்சட்டை), படப்பெட்டி (தொலைக்காட்சிப் பெட்டி), பாட்டுப்பெட்டி (வானொலி), சட்டம்பியர்,பெருக்கிளாசு (வழக்கறிஞர்), ஒசக்க (உயரத்தில்), மூத்திரம் (சிறுநீர்), பொடவ (சேலை), கந்தோர் (அலுவலகம்), விதானை (கிராம சேவகர்) போன்றவற்றை முழுமையாக மறைந்த சொற்கள் என்று கூற முடியும்.

பேச்சு மொழியானது கால ஓட்டத்திற்கேற்ப மருவிப் பேசப்படுவதுண்டு. அவற்றில் சில: மம்பெட்டி (மண்வெட்டி), வெத்தில (வெற்றிலை), செவல (செந்நிறம்), கறுவல்(கறுப்பு நிறத்தவன்), துண்ணூறு - (திருநீறு), பொத்தகம் (புத்தகம்), புத்து (புற்று).

நம் முன்னோர்கள் அழகு தமிழைப் பேச்சு மொழியுடன் கலந்து அர்த்தம் பொதிந்ததாகப் பேசுவதுண்டு "எளியவள் பிள்ளைக்கு கருப்பட்டித் தீன் என்னத்திற்கு", "எறியிறவண்ட கையில பொல் இல்ல" இப்படிப்பட்ட முன்னோர்களின் பழமொழிகளைத் தற்காலத்தில் கேட்பது அரிதே.

வளர்த்தெடுத்த வண்ணத்தமிழுடன் கோர்த் தெடுத்து ஆங்கிலம் கலந்து உச்சரிப்பதும் கல்முனைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச மக்களின் பேச்சு வழக்காக உள்ளது. சில சொற் பிரயோகங்கள் தற்காலத்தில் குறைவாக இருந்த போதிலும் ஆங்காங்கே காதில் விழாமல் இல்லை. வஸ்பெட்டி (பஸ்), ஓட்டம் பிளேஸ் (பஸ் தரிப்பிடம்), டோச்லைட், ரேப்நாடா, சாப்பாட்டுபொக்ஸ், தையல் மெஷின், பைல் மட்டை, வார்தடி, றோட்ஷூம், சூட்கேஸ் பெட்டி, ரீ.வி பெட்டி, ரேடியோப்பெட்டி, கண்ணாடிக் கிளாஸ், குண்டுவல்ப், கேஸ் அடுப்பு, தண்ணி பைப், சுவிச்கட்ட, கோஸ்பைப், பிளாஸ்டிக்கோப்பை.. இத்தகைய சொற்கள் அதிகமாக எம்மிடையே நிலவுகின்றன.

கொஞ்சும் தமிழை கொச்சைத் தமிழாக்கி பெற்றோர்கள் மழலையின் மொழியில் மலர்ச்சி காண கக்கா, சுச்சா, சோச்சா, மீமீ, சொக்கா, விக்கா, நித்தா போன்ற சொற்களை பேச்சுத் தமிழாக்கிப் பழக்கப் படுத்துவதையும் காணலாம்.

கல்முனைப் பிரதேசத்தினைப் பொறுத்தவரை தமிழ் இலக்கண இலக்கியத்துடன் உச்சரித்த பல நூற்றுக்கணக்கான சொற்கள் கால ஓட்டத்தில் வேறுபட்டும் மறைந்தும், மருவியும் போயுள்ளதை இன்று அறியக் கூடியதாக வுள்ளது.

பேச்சுத்தமிழானது சமூகத்திற்கு சமூகம், காலத்திற்கு காலம் வேறுபட்டு செல்லக் காரணம் அக்கால மக்களின் வாழ்க்கை முறை, கலை, கலாசாரத் தினைப் பிரதிபலிப்பதாகும். இவ்வாறான பேச்சு வழக்குச் சொற்கள் நம் மத்தியில் நீடித்து நிலைக்குமா? என்பதுதான் எம்முன் எழும் பெரிய வினாவாகும்.

எது எவ்வாறாயினும் பேச்சுத் தமிழிற்கு தனித்துவமான சிறப்பும் பெருமையும் உண்டு அதிலும் கல்முனைப் பிரதேச மக்களின் பேச்சுத் தமிழானது தனக்கென தனி இடம் பிடித்துள்ளது எனலாம்.

# சாத்தானின் சேனைகள்...

## கௌசிகன்



எனக்கு முன் நிற்பவன்-யாரென்பதில்
எனக்கு ஐயமற்ற தெளிவுண்டு....
என் போரும் சமாதானமும் நிகழ்த்தப்படுவது
யார் மீது என்பதிலும் -எனக்கு ஐயமற்ற தெளிவுண்டு....
என் முன்னோர் மீதும்.... என் வழி சந்ததியினர் மீதும்
படர்ந்து கிடக்கும் இருளின் "மூலம்"
எது என்பதிலும் - எனக்கு ஐயமற்ற தெளிவுண்டு....
என் ஆன்மாவின் மீதும்....
அதன் அசைவியக்கத்தின் மீதும்
மையம் கொள்ளும் தாழ் அமுத்தம்
எங்குள்ளது என்பதிலும்
எனக்கு ஐயமற்ற தெளிவுண்டு....
என் கரம் பிடித்து-நீங்கள்
கூட்டிச்செல்ல முயலும்
உங்களது சொர்க்கத்தை - சிருஷ்டித்த
சாத்தானின் சேனைகள் பற்றியும்
எனக்கு ஐயமற்ற தெளிவுண்டு....
சாத்தானின் சேனைகளிடம்
சோரம் போன-என்
கடவுள்களின் பிள்ளைகளே.....
உங்கள் வெற்று அறிக்கைகள் எழுதப்படுவது.....
நம் சந்ததியினரின் குருதியினால்தான் என்பதில்
உங்களுக்கு ஐயமற்ற தெளிவுண்டா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சபா.தயாபரன்

# அவனாகிய அவளும்

சிவா என்கிற சிவசக்தி விநாயக குமாருக்கு ஆஸ்திரேலியா வந்த பிறகே தன நீண்ட பெயர் பற்றி சங்கடப்பட வேண்டிய நிலை வந்திருந்தது.

சிவாவின் அப்பா வீட்டுக்கு விருந்தினர் வந்தால் சிவாவின் பெயர் வந்த காரணத்தை பெருமையாக சொல்வது அப்போது சிவாவிற்கு பெரிதாக தெரியவில்லை. ஆனால் இங்கு வந்த பிறகுதான் அவர் மேல் கோபம் கோபமாக வந்தது

சக்தி பக்தை அம்மா. அப்பா விநாயகர் பக்தர். எல்லாம் சேர்ந்து சிவனையும் துணைக்கழைத்து இவனுக்கு இந்த பெயர் வைத்ததாக அப்பா தம்பட்டம் அடிப்பார். கடைசியில் வந்த குமார் யாரின் பக்தர் என்று கேட்க நினைத்தும் சிவாவினால் கேட்க முடியாத அளவுக்கு அப்பாவின் கண்டிப்பு.

இங்கு சுருக்கமான பெயர் கொண்டு தான் அழைப்பார்கள். சிவாவும் தன் பெயரை பல தடவைகளில் சொல்ல முயன்று சலிப்படைந்தது உண்மை.

இதே அநுபவம்தான் ஜூலியானா விடயத்திலும் நடந்தது

சிவா விண்ணப்பித்திருந்த தொண்டர் வேலை நேர்முகத்திற்கு இவன் போனபோது தன்னை அறிமுகப்படுத்த முழுப்பெயரை பூபாலசிங்கம் சிவசக்தி விநாயககுமார் என்று சொன்னபோது ஜூலியானாவிற்கு மயக்கம் வராத குறை.

இந்த வியப்போடுதான் ஜூலியானா வின் அறிமுகம் நடைபெற்றது.

"ஒ மை கோட் " என்றபடி அவள் கண்கள் பிதுங்கி முகம் ஆச்சரியத்தால் கவிழ்ந்தது. சிவாவின் பெயரை அவள் உச்சரித்த போது சிவாவின் முழுப் பெயர் சிதைந்து சின்னாபின்னப்பட்டு சிதிலமாகி சித்திரவதையுடன் அவள் வாயில் இருந்து வேறொரு ரூபத்தில் பரிதாபமாக வெளிவந்தது

அவள் சிக்கலை உணர்ந்த இவன் தன் பெயரை இனி சிவா என்றே சொல்லலாம் என்றதில் அவள் நிம்மதி அடைந்திருக்க வேண்டும்

"ஹாய் சிவா... என் பெயர் ஜூலியனா" என்றபடி இவனை அவள் கட்டிப்பிடித்து முதுகில் தட்டி வாழ்த்தியது அப்போது புது அனுபவமாக இருந்தது அவள் பாவித்திருந்த அந்த சென்ட் வாசனையும் அவளின் மென்மையான ஸ்பரிசம் ஏறபடுத்திய அந்த உணர்வும் இவனை ஒருவித சங்கடத்தில் ஆழ்த்தியது.

அன்றைய அந்த நேர்முகப் பரீட்சையை அவள்தான் நடாத்தினாள். அது ஒரு கலந்துரையாடல் போலவே இருந்தது.

சிவாவும் தன் அநுபவங்களைப் பகிர்ந்து கொண்டான்.

"என்னை விட உனக்கு இந்த துறை யில் அனுபவம் கூடத்தான்" என்றபடி படபடக்கும் தன் கண்களால் இவன் கண்களை உற்று நோக்கினாள் ஜூலியானா. அது எதையோ தனக்கு சொல்ல வருகிறாளா ? அவள் இயல்பே அப்படித்தானா என்பது சிவாவுக்கு புரியவில்லை.

நேர்முகம் முடிய ஜூலியானா எழுந்து போய் இரண்டு தேநீர் கோப்பையுடன் வந்து ஒன்றை இவனுக்கு நீட்டியபடி 'குடி' என்றாள்.

'வேலை செய்யப் போகின்ற அமைப்பை'



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பார்க்க நேரம் இருக்குமா "என்று இவனைப் பார்த்துக் கேட்டாள். இவன் ஓமென்றான்.

தன் பெற்றோர் லண்டனிலிருந்து இங்கே வந்து எப்படி செட்டிலாகியது, தான் காதலித்துத் திருமணம் செய்து கொண்டது, குழந்தை பிறந்ததும் தன்னை விட்டு கணவன் வேறு ஒருத்தியுடன் குடும்பம் நடத்தப் போய் விட்டது என்று அவள் தன்னைப் பற்றிய விடயங்களை எல்லாம் தன் காரிலேயே இவனை அந்த அமைப்புக்குக் கூட்டிச் செல்லும் போது இயல்பாக சொல்லிக் கொண்டு வந்தாள் .

"உனக்கிட்ட சொல்லவேண்டும் போல் இருக்கு சிவா. சைக்கொலஜிக் சொல்லுது ஒருவரது மனநிலையை அறிய நான்கு நிமிடம் போதும் என்று"

"ஆனா நாம் பழகி ஒரு மணித்தியாலம் ஆகிவிட்டது"

"அதுதான் கெமிஸ்ட்ரி வேக்கவுட்டாகி விட்டது போல" என்று சிரித்தாள்.

அவுஸ்திரேலியாவின் ஆதிக்குடிகள் பற்றி இவன் கேட்டபோது சரித்திரத்தையே விரித்துப் போட்டாள். அவர்கள் மேல் அவுஸ்திரேலிய வெள்ளை யர்கள் செலுத்திய ஆதிக்கம், அடக்கு முறை, துன்புறுத்தல்கள், கொலைகள் என்பவற்றையும் அவர்கள் மற்றைய சமூகங்களில் இருந்து எப்படி ஒதுக்கி வைக்கப்பட்டார்கள் என்பதையும் அவள் விளங்கப் படுத்திக் கொண்டிருந்தாள்.

இவனுடைய நாட்டுப்பிரச்சினை என்னவென்று தனக்குத் தெரியும் என்றும் மக்கள் அநீதியாகக் கொல்லப் படுவதை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது என்றும் தனக்கு இலங்கைத் தமிழ்ப் பெண்கள் நண்பிகளாக இருக்கிறார்கள் என்றும் சொல்லி விட்டு , எனக்குக் கிடைத்த முதல் இலங்கைத் தமிழ் நண்பன் நீதான் என்று கண்ணைக் சிமிட்டியபடி குறும்பாய்ச் சிரித்தாள்.

பின், தொண்டர் கள அறிக்கைகள் சம்பந்தமாக அவளை அடிக்கடி சந்தித்துக் கலந்துரையாட வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படத் தொடங்கின.

ஒரு நாள் "சிவா உனக்காக மதிய விருந்து ஏற்பாடு செய்கிறேன் நீ கட்டாயம் வரவேண்டும்" என்றாள்.

"என்ன விசேஷம்"

"ஒண்டுமில்ல... அதற்குத்தான்" பொடி வைத்துப் பேசினாள் ஜுலியானா.

அவள் அழைத்தபடி அந்த மதிய விருந்தில் இவனால் கலந்து கொள்ள முடியாமல் போய் விட்டது. காரணம் இவன் பணி புரிந்த கடையின் உரிமையாளனான அந்த சீனாக்காரன் லீவு தரமுடியாது என்று சொல்லி விட்டான். இந்தத் தகவலை அவளிடம் போனில் சொன்ன போது தான் ஏமாற்றம் அடைவதாக அவள் கூறினாள்.

விக்கிரமாதித்தன் வேதாளம் கதையாக மீண்டும் ஒரு நாள் ஆயத்தங்களைச் செய்து விட்டு, எப்படியும் இந்த முறை வந்தாக வேண்டும் என்று இவனைக் கட்டாயப் படுத்தினாள். அவளை மீண்டும் மனக் கஷ்டத்துக்குள் தள்ள விரும்பாத அவன் இந்தத் தடவை எப்படியும் வருவதாக உறுதியளித்தான்.

அவளுக்கும் தனக்கும் இடையில் மெல்லிய ஒட்டுதல் ஒன்று உருவாவதை அவன் உணரத் தொடங்கினான். இந்த ஒட்டுதலில் அவள் செய்கைகளே பெரும் பங்கு வகிக்கின்றன என்பதை சிவா உணராமல் இல்லை.

அன்று மூன்று தடவைகளுக்கு மேல் கோல் எடுத்து இவன் வருவதை உறுதி செய்து கொண்டாள். இவன் தனக்குச் சுகமில்லாததால் இன்றைக்கு வேலைக்கு வரவில்லை என்று சீனாக் காரனிடம் கூறி விட்டான். சீனாக்காரன் நிச்சயம் நம்ப மாட்டான். அவன் ஒரு சந்தேகப்பிராணி.

அன்று சிவா போனபோது அவள் இவனுக்காக அந்த ரெஸ்ரரான்றில் காத்திருந்தாள்.

கறுப்பு உடையில், கறுத்த கண்ணாடி அணிந்தபடி இருந்த அவள் அன்று தன் நாற்பத்தைந்து வயதிலும் குறைந்த தோற்றத்தில் தென் பட்டாள். இவனைக் கண்டதும் கண்ணாடியைக் கழற்றிக் கொண்டு கைலாகு கொடுத்தாள்.

" இந்த முறையும் என்னை ஏமாற்றி விடுவாய் என்று நினைத்தேன்"

"மன்னிக்கவும் கொஞ்சம் லேற்றாகிற்று.

"ட்ரஸ்கள் சும்மா அள்ளுது"

அவள் தோளில் கை வைத்தபடி இவன் சொன்னது அவளை சந்தோஷப்படுத்தி இருக்க வேண்டும்.

"நீ வந்ததே போதும்" அவன் தோளில் செல்லமாகத் தட்டியபடி சொன்னாள்.

அது ஒரு உதைபந்தாட்ட கிளப்புக்குரிய ரெஸ்டோரன்ட் .இருவரும் மூலை இருக்கை யொன்றில் அமர்ந்து கொண்டனர்

"என்ன வேண்டும் என்று நீயே உனக்கு ஓர்டர் பண்ணு "என்றாள். இவனுக்கு அங்கிருந்த உணவு வகைகள் பரிச்சய மில்லாததால் சங்கடத்தைத் தவிர்க்க "நீயே ஓர்டர் பண்ணு " என்றான்.

அவள் இவன் சிக்கலை புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

"ஸீ ஃ பூட் ஓகே யா? "என்றாள்

இவன் "உன் விருப்பம் " என்றான்.

"என்ன ட்ரிங் எடுக்கப் போகிறாய்?"

"நீ என்ன மாதிரி"

"ஒவ்வீஸ் ...எடுக்கேலா ...ஒரேன்ஜ் ஜுஸ் ஓகே"

"எனக்கு பியர் ஓகே"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"சிவா என்னப்பற்றி என்ன நினைக்கிறாய் "

"ஏன் இப்படித் திடீரென்று .......யூ ஆ மை பொஸ்.....அப்பிடியில்ல நீ எண்ட நல்ல நண்பி ஏன் இந்த டவுட்? ''

"சும்மா கேட்டேன்"

"காரணம் இல்லாம கேட்க மாட்டியே"

"காரணம் இருக்கு சிவா "

"ஒரேன்ஜ் ஜுஸுக்கே கிக் ஆயிற்று போல"

கையில் இருந்த முள்ளுக்கரண்டியால் இவனைக் குத்துவது போல் அவள் பாவனை செய்தாள்.

"ஓகே.... ரிலக்ஸ்...ரிலக்ஸ்"

"நான் சீரியசாக் கதைக்கிறன்"

"நீ இப்ப என்ன சொல்ல வருகிறாய் ஜுலி"

"என்னைப் பற்றி நீ முழுமையாகப் புரிய வேண்டும்" இவனுக்கு அடிச்ச பியர் இறங்கி இருந்தது.

இன்னொரு பியருக்கு ஓர்டர் பண்ணினாள் ஜுலியானா.

"உனக்கு என்ன நடந்தது...."

"நான் நானாக இருந்தன் நீதான் வந்து என்னக் குழப்பிற்றாய்....." கண்ணைச் சிமிட்டியடி சிரித்தாள்.

பதவி அந்தஸ்து எல்லாம் அகன்று போய் அவள் ஒரு சாதாரண சிறு பெண்ணாக தன் முன்னே நிற்பது அவனுக்கு வியப்பை அளித்தது. தான் செய்த 'வசியம்' என்ன வென்பது அவனுக்குப் புரியவில்லை.

இரண்டாவது பியர் வேலை செய்ய ஆரம்பித்திருந்தது இவனுக்கு .

'ஏன் இப்படி இவள் குழம்பி நிற்கிறாள்?'

"உன்ட சுபாவம், அமைதி, நீ பழகும் தன்மை ....உன் கனிவு....," அவள் அடுக்கிக் கொண்டே போனாள்.

"என்ன கரெக்டர் செர்டி.ஃபிக்கேட் தரப் போறாயா..? "அவள் சிரித்தாள் "அப்படித் தான் வைத்துக் கொள்ளேன் ''

"என்னைப் பற்றி நீ முழுமையாகப் புரியவேண்டும். புரிய வைப்பன்" "ஏன் எதுக்கு என்று சொல்லன்"

"அத இப்ப சொல்லமாட்டன். எப்படியும் சொல்வன்"

பியர் ஒன்று ஓர்டர் பண்ணு என்றான். அவள் 'போதும். இனி சாப்பிடலாம் '' என்றாள்.

சாப்பிட்டு முடிந்து அவளின் ஒ.ஃபிஸ் வரை இருவரும் நடந்தே வந்தனர்.

டாக்சி ஒன்றை நிற்பாட்டி விட்டு "தாங்ஸ் சிவா, உன்னோட இன்றைக்கு சாப்பிட்டது புது அநுபவம். மறக்கமுடியாது.தாங்ஸ் நீ தந்த கம்பெனிக்கு "என்று கூறி விட்டு அவள் கன்னத்தில் முத்தமிட்டாள். ஒரு குழந்தையின் முத்தம் போல் அது பதிந்தது.



டாக்சியில் இவன் போகும் வரை பார்த்துக் கொண்டே நின்றிருந்தாள் ஜுலியானா.

அதன் பிறகு கொஞ்ச நாளாக போனில்தான் கதைக்க முடிந்தது . நேரில் சந்திக்கும் சந்தர்ப்பங்கள் அமையவில்லை.

கிறிஸ்மஸ் நாளன்று காலையில் ஜுலியானா போன் பண்ணி இருந்தாள். இவனைத் தயாராக நிற்கும் படியும் தான் காரில் வந்து ஏற்றிக் கொள்வதாகவும் சொன்னாள். சிவாவால் மறுக்கமுடியவில்லை.

அவள் சொன்ன நேரத்துக்கு வந்து அழைப்புமணியை அழுத்தினாள். செல்வா தான் கதவைத் திறந்தான்.

"சிவா..எங்கே ?....." என்று அவள் கண்கள் தேடிய போது இவன் உள்ளிருந்து விரைந்து வந்தான். "ஹேப்பி கிறிஸ்மஸ் "என்ற படி இவனைக் கட்டியணைத்து வாழ்த்துத் தெரிவித்த போது செல்வா திகைத்துப் போய் நின்றான்.

"எங்கே என்னைக் கூட்டிக் கொண்டு போகப்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

போகிறாய் ? "

"உன்னக் கடத்தப் போறன்" அவளின் சின்னத் தெற்றுப் பல் தெரிய சிரித்தாள் ஜூலியானா.

"கடத்தி ....."

"உஷ் ரகசியம்""

"கடத்தினா கஷ்டப்பட போவது நீதான்"

"ஆளப் பார்ரா"

சுமார் அரை மணி நேரத்துக்குப் பிறகு கார் ஒரு பெரிய வீட்டின் முன் நின்றது.

கிறிஸ்மஸ் சோடனைகளுடன் அந்த வீட்டில் ஒரு பெரிய ஹோல். அங்கே நான்கு பெண்களும் ஒரு வயதான தம்பதியும் இருந்தனர் ஜூலியானா அவர்களையும், இவனையும் அறிமுகப்படுத்தி வைத்தாள். அங்கிருந்த சிவந்த அந்த உயரமான பெண் தன் பெயர் கத்தரீன் என்றும் தான் ஒரு மெடிக்கல் ரெப் அடிக்கடி ஸ்ரீலங்காவுக்குக்கு போய் வருகின்றவள் என்றும் சொன்னாள்.

அப்போது உள்ளே இருந்து பதினெட்டு வயது மதிக்கத்தக்க இளம்பெண் வந்தாள்.

"ஹை மம்மி "என்றவாறு ஜூலியானவைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டாள்.

ஜூலியான இவன் பக்கம் திரும்பி "உனக்கு ஒரு முக்கியமான ஆளை அறிமுகப் படுத்தப் போகிறேன்" என்றாள்

"இது என் seweet honey. என் செல்லக் குட்டி பெயர் எல்வின் "

எல்வின் கையை நீட்டி இவனுக்கு கைலாகு கொடுத்தபடி சொன்னாள்

"மம்மி உங்களைப்பற்றி அடிக்கடி கதைப்பா"

கரகரத்த குரல் அவளுடையது. இவனுக்குள் எதோ ஒன்று உறுத்தியது. எல்வினின் நடை உடை பாவனை அங்கிருந்தவர்களிலிருந்து அவளை வேறு படுத்திக் காட்டியது.

"ஹாப்பி கிறிஸ்மஸ்"

சற்று நேரத்தில் பார்ட்டி ஆரம்பமானது. எல்வின் இவனுக்கு நெருக்கமாக உட்காந்து கொண்டாள். அவள் பயன்படுத்தியிருந்த அந்த சென்ட் வாசனை இவனுடைய வயிற்றைக் குமட்டச் செய்தது.

தான் ஒரு வெப் டிசைனர் என்று எல்வின் சொன்னாள். போனில் பதிவு பண்ணியிருந்த தன் வெப் டிசைன்களைக் காட்டினாள். அகதிகள் விடயத்தில் அரசாங்கத்தின் போக்கு குறித்து கடுமையாக விமர்சித்தாள். அவள் அடிக்கடி கோபப்பட்டாள். அப்போதெல்லாம் அவள் குரல் மாறி ஒலிப்பது போலிருந்தது. சிவாவின் குடும்பம் பற்றி அவள் அக்கறையுடன் விசாரித்தாள். பிள்ளைகள் பற்றி விசாரித்து இங்கு அவர்களை அழைப்பிக்க முடியாதா என்று கேட்டாள். ''இங்கேயுள்ள சட்டங்கள் கடுமையாக்கப்பட்டு விட்டதால் எடுக்கமுடியாது ''என்று அவன் பதிலளித்ததும் தங்கள் அரசாங்கத்தை திட்டித் தீர்த்தாள். உள்ளே இறங்கிக் கொண்டிருந்த வைன் அவனை இன்னொரு உலகத்துக்கு இழுத்துச் சென்று கொண்டிருந்த போதும் எல்வினின் உணர்ச்சிக் கொந்தளிப்பான அந்த முகமும், அவளின் அந்தக் குரலின் கரகரப்பும் அங்கும் அவனைத் தொடர்வது போலிருந்தன.

சிவாவுக்கு கொஞ்சம் போதை ஏறி இருந்தது. ஹாலில் இருந்த அந்த உயரமான மெடிக்கல் ரெப் கேத்தரின் இவனுக்கு வொட்க்காவை வேறு ஊற்றிக் கொடுத்தாள். வைன் – வொட்கா கூட்டணியால் நாடி நரம்புகள் அதிர்ந்து கொண்டிருந்தன.

ஜூலியானா வந்தாள்

"சிவா ஆர் யு ஓகே?"

இவன் ஓமென்று சொன்னான் .

எல்வின் இரண்டு பியர் மட்டுமே அருந்தியிருந்தாள்.

"ஹனி ... போதும்டா " எல்வினைப் பார்த்துச் சொல்ல

"மம்மி" இது கடைசி என்று இன்னொன்று எடுத்துக்கொண்டாள் எல்வின்.

"என்ன சொல்கிறது என் செல்லக் குட்டி" என்றவாறு எல்வினை அணைத்து ''லஞ்ச அரேஞ்ஜ் பண்ண ஹெல்ப் பண்ணு'' என்று எல்வினை அனுப்பினாள்.

ஜூலியானா இவனை அழைத்துக் கொண்டு வெளியே வந்தாள்.

''சிவா வா! வீட்டை சுத்திக் காட்டுறன்.''

அது ஒரு சுமாரான வீடு என்றாலும் சகல வசதிகளும் கொண்டதாக அமைந்திருந்தது. ஒரு சின்ன நீச்சல் தடாகம். அதை ஒட்டிய சுவரில் சாய்ந்து கொண்டு ஜூலியானா இவனைப் பார்த்தாள். அவள் முகம் சிவந்து முகம் கலங்கி இருந்தது.

அந்நேரம் பார்த்து கத்தரின் இவனைத் தேடி வந்தாள். அவள் கையில் வொட்கா கிளாஸ்.

''சிவா எங்க இருக்கிறாய்? உன்னைக் தேடிக் கொண்டிருந்தன். எல்வின்தான் சொல்லியது நீ இஞ்ச என்று. இவன் கையில் கிளாஸைக் கொடுத்து விட்டு இவனையும் ஜூலியானாவையும் பார்த்து விட்டு ''கரி ஒன்'' என்றவாறு கத்தரின் உள்ளே சென்றது ஜூலியானாவைச் சந்தோஷப்படுத்தி இருக்க வேண்டும்.

"ஏய் ஜூலி என்ன நடந்தது ஏன் இப்படி.....?

அவள் தோளைத் தொட்டு தலையை நிமிர்த்தினான். ஜூலியானா அழுது கொண் டிருந்தாள். அவள் இப்படி கலங்கியதை சிவா முன்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்ததில்லை

"என்ன நடந்தது ஜூலி"

"என்ன சொல்கிறாள் என் செல்லக் குட்டி"

"ஆள் நல்ல ஸ்மார்ட்"

"எல்வினைப் பற்றி புரிந்து வைத்தது அவ்வளவுதானா சிவா."

"அப்படி என்றால்.....,"

"எல்வின் ஒரு திருநங்கை சிவா"

ஜீலியானா குலுங்கி குலுங்கி அழத் தொடங்கினாள்.

எல்வினின் நடை உடை பாவனை அவளின் குரல் மற்றவர்களிடம் இருந்து மாறு பட்டிருந்ததற்கான விடை இப்போது இவனுக்குக் கிடைத்துவிட்டது.

"நான் என்ன பாவம் செய்தேன் என்று எனக்குத் தெரியல்ல சிவா. பாவம் அது என்ன பாவம் பண்ணியதோ என் வயிற்றில் வந்து பிறந்திருக்கு."

அவள் அழுகை வலுத்தது. இவன் அவள் முதுகைத் தடவியபடி

"ரிலக்ஸ் .....ரிலக்ஸ்" என்றான்.

அவள் அழுகையை நிற்பாட்டி "இது என்ட பிழையா சிவா. அதுக்காக அந்த மடையன் என்னையும் பிள்ளையையும் விட்டுப் போட்டு இன்னொருத்தியோடு குடும்பம் நடத்துகிறான். எப்படியென்றாலும் எல்வின் என் வயிற்றில்தானே பிறந்தது. பாவம் எல்வின். நாங்கள் என்ன குற்றம் செய்தோம்."

மௌனத்தை மீண்டும் கலைத்தாள் ஜூலியானா.

"இதுக்குப் பிறகு சிவா என்ட நட்புகள் எல்லாவற்றையும் நானாக விலத்திக் கொண்டேன். அவர்களுடைய ஏளனங்களை என்னால் சகிக்க முடியவில்லை. இனி என்ட வாழ்க்கை எல்வினுக்காக என்றே முடிவெடுத்திற்றன்.

உங்கட கலாச்சாரம் போல இல்ல சிவா எங்களது. ஒரு ஒட்டுறவில்லாத வாழ்க்கை. விரும்பினா இரு. இல்லாட்டிப் விலகிப் போ என்ற மனப்பான்மை. நீங்கள் உங்கள் குடும்பத்தின் மேல வைத்திருக்கிறது பாசம் நேசம். குடும்பத்திற்கான அர்ப்பணிப்பு.அதில் ஒன்றுமே இங்கில்ல. ஒரு விலங்கு வாழ்க்கை. இப்ப என் வாழ்க்கையில் விரல் விட்டு எண்ணக் கூடிய ஓரிரு பேர் மட்டுமே இருக்கிறார்கள். உன்னச் சந்தித்த பிறகு உன் சுபாவம், அமைதி, நீ நட்புகளுக்கு கொடுக்கும் மரியாதை எல்லாவற்றையும் உணர முடிந்தது. நீ உன் குடும்பத்தில் வைத்திருக்கிற அக்கறையைக் கண்டுதான் உன்னில் ஒரு ஈர்ப்பு ஏற்பட்டது. உனக்கிட்ட என் மனப்பாரங்களைச் சொல்லி அழுதாலாவது ஓரளவு என் பாரம் குறையும் என்று நினைத்தேன். எனக்கு இப்ப பாரம் குறைந்த மாதிரி இருக்கு சிவா.

எனக்கு ஒரு நல்ல நண்பனாக நீ எப்போதும் இருக்க வேண்டும் சிவா. நீ என் நண்பனாக இருப்பதே



எனக்கு ஒரு பாதுகாப்பாக உணரகிறன். நான் தனிய இல்லை என்னைச் சுற்றி பலபேர் என் நன்மை தீமைகளில் பங்கு கொள்ள இருக்கிறீர்கள் என்ற நம்பிக்கை..செய்வாயா...?"

இவன் கைகளைப் பிடித்துக்கொண்டு யாசகம் கேட்பதைப் போல் அவள் நின்றாள்.

இவன் கண் கலங்கி நிற்கிறான். கண்ணில் நிறைந்த நீர் ஜூலியானாவின் முகத்தை மங்கலாக்கியது.

இன மத பேதங்களைக் கடந்ததுவா இந்த நேசிப்பு......,தொக்கி நிற்கிறது மனதில் கேள்வியாய்....

ஜூலியானா இன்னும் அழுது கொண்டிருந்தாள் இவன் கைகளைப் பற்றியவாறு....



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போதைப் பொருள் பாவனையிலிருந்து மீட்சி பெறல்

திருமதி. சைலஜா சுதர்சன்,

இன்றைய காலப்பகுதியில் அதிகரித்த போதைப் பொருட்களின் பாவனையால் சமூகம் ஒரு பிறழ்வான பாதையில் சென்று கொண்டிருப்பதாக சமூக ஆர்வலர்களால் எச்சரிக்கை விடப்படுகின்றது. அவ்வாறே நல்வழிப்படுத்துதல், சீர் செய்தல் ஆகிய கருதுகோள்கள் இன்று என்றுமில்லாத அளவிற்கு முக்கியம் பெற்ற கருத்தாக்கங்களாக காணப்படுகின்றன.

அந்த வகையில் நாம் போதைப் பொருட்கள் என்றால் என்ன, அதனால் ஏற்படும் பாதகமான விளைவுகள் அதிலிருந்து மீள்வதற்கான வழிவகைகள் என்பன பற்றி அறிந்து கொள்வது அவசியமானதாகும். போதைப் பொருட்கள் எனும் பதத்தால் குறிப்பிடப் படுவது யாதென்றால் ஏதேனும் ஒரு திண்மம், திரவம், அல்லது வாயு நிலையில் ஒருவர் ஒரு பொருளை உள்ளெடுப்பதனால் உடல், உள ரீதியாக பக்க விளைவுகளை உண்டு பண்ணக் கூடியதும் சட்ட ரீதியாக தடை செய்யப் பட்டதும் சமூகப் பிறழ்வுகளுக்கு காரணமாக அமைகின்ற அனைத்துமே போதைப் பொருட்கள் எனலாம்.(உ.ம்) சிகரெட், மதுபானம், புகையிலை, ஹெரோயின், கஞ்சா, அபின், கொக்கெய்ன். சாதாரணமாக ஒருவர் போதைப் பொருட்களின் பாவனைக்கு உள்ளாகும் விதங்களை நோக்கினால்

» இணங்கிப் போதல் (தவறான வழிகாட்டல்)
» அறியும் ஆர்வம் (முதிர்ச்சியற்ற ஆர்வமும் தேடலும்)
» தவறான எண்ணங்கள் (மிகைப்படுத்தி கூறப்படும் தகவல்கள்)
» நிர்ப்பந்திக்கும் சூழ்நிலை (குடும்ப வறுமை)
» குழப்பமான நிலை (விரக்தி,சோகம்)

போதைப்பாவனைக்கு அடிமையாவதை ஊக்குவிக்கும் காரணிகளாகப் பின்வருவன குறிப்பிடப்படுகின்றன.

» உளவியல் காரணிகள்
» சமூகபண்பாட்டுக் காரணிகள்
» பொருளாதார காரணிகள்
» உயிரியல், இரசாயன, பரம்பரைக் காரணிகள்

போதைப் பாவனையாளர்களை பொதுவாகப் பின் வருமாறு வகைப்படுத்துவர்.

» *Experimental/Recreational users* - பரீட்சித்துப்பார்த்தல்
» *users Circumstantial/Occasional*- அவ்வப்போது பாவித்தல்
» *Intensified/Regular users* – தொடர்ச்சியாக பாவிப்பவர்கள்
» *Compulsive/addictive users* – போதைப் பாவனைக்கு அடிமையாகியோர்

பொதுவாக போதைப் பாவனையில் ஈடுபடுவோர் தத்தமக்கென ஒவ்வொரு காரணத்தைக் கொண்டிருப்பர். அவ்வாறான போலியான காரணங்களாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

- அதீத உணர்ச்சிகளை வெளிப்படுத்த (இன்பத்துக்காக, பொழுது போக்கிற்காக)
- யதார்த்தத்திலிருந்து தப்பியோட (பிரச்சினைகளை தற்காலிகமாக மறப்பதற்காக)
- போலியான சண்டித்தனத்தை வெளிப்படுத்து வதற்காக கவலைகளை போக்குமென்று
- போலி நம்பிக்கை (தற்காலிகம்)
- சலிப்பிலிருந்து விடுபட (களைப்பை போக்கும் என்ற போலி எண்ணம்)
- பாலியல் பலத்தை அதிகரிக்கும் என்ற போலி நம்பிக்கை. குழந்தைப் பருவத்தில் ஏற்பட்ட பாதிப்பு. (அன்பு கிடைக்காமை, துஷ்பிரயோகத்திற்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளானமை) சரியாக திட்டமிடாமல் இலக்குகளை அடைவதில் தோல்வியடைதல்

- அதனால் எற்படும் விரக்தி உளவியல் அழுத்தம் மனச்சோர்வு
- குடும்பத்திற்கிடையே ஏற்படும் மோதல்கள் நிம்மதியற்ற நிலை

போதைப் பொருள் பாவனையால் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. அவற்றை தனிமனித, குடும்ப, சமூக பாதிப்புக்கள் எனப் பலவாறாக நோக்கலாம்.

அவற்றுள் தனிமனித பாதிப்புக்களாக பின்வரும் சிலவற்றைக் குறிப்பிடலாம். தலைவலி, ஆன்மீகத்தில் நாட்டம் இன்மை, வாழ்வில் பிடிப்பின்மை, நாளாந்த செயற்பாடு பாதிப்பு, குழப்பமான மனநிலையில் எப்பொழுதும் காணப்படல், அன்றாட நடவடிக்கைகளில் கருத்தூன்றி செயற்பட முடியாமை, ஏதோவொரு இனம்புரியாத கவலையும், பயமும் தொடர்ந்து ஏற்படல், பாலியல் நாட்டம் தொடர்பான மாறு பாடுகள் (அதிகம் / குறைவு).



அதேபோல குடும்ப பாதிப்புகளாக பின்வரும் சிலவற்றைக் குறிப்பிடலாம். குடும்பச் செயற்பாடு சீர் குலைந்து போதல். குடும்பத் தினர் வீண் மன உளைச் சலுக்கு உள்ளாதல், பிள்ளைகளின் தொழில், கல்வி பாதிக்கப்படல், குடும்பத்தில் அமைதியின்மை, சந்தோஷம் இன்மை.

அத்தோடு சமூக பாதிப்புக்களாக பின்வரும் சிலவற்றைக் குறிப்பிடலாம். சமூக உறவு துண்டிக் கப்படுதல். குடும்பத்தை சமூகம் மற்றும் அயலவர்கள் ஒதுக்கி வைத்தல். சமூக நிறுவனங்களில் சுதந்திரமாகக் கலந்துகொள்ள முடியாமை. சமூகத்தில் குற்ற உணர்வுடன் காணப்படுதல். உறவினர்கள் மதியாமை. சமூகத்தில் சிக்கல் மிக்கவராக காணப்படுகின்றமை சிறுவர் துஷ்பிரயோகத்தை ஊக்குவிப்பவராக காணப்படுதல். இவை சமூகத்திலிருந்து ஒதுங்கும் நிலையை ஏற்படுத்துகின்றது. இவர் ஒன்றுக்கும் பிரயோசனமற்றவர் என்ற எண்ணம் சமூகத்தில் தோன்றிவிடும். சமூகத்தில் அந்தஸ்தை இழத்தல் மேலும் பல்வேறு சமூக, கலாசார சீரழிவுகள் ஏற்பட வழிவகுக்கும் குற்றச் செயல்கள், வன்முறைகள் அதிகரித்தல், விபத்துக்கள் அதிகரிப்பு என்பனபோன்றவை அவை. உலகலாவிய ரீதியில் போதைப் பாவனையாளர் களால் வருடம் ஒன்றிற்கு அறு இலட்சம் விபத்துகள் ஏற்படுத்தப்படுகின்றன.

நீதிமன்றங்களுக்கு வரும் பெரும்பாலான வழக்குகள் போதைப்பாவனை தொடர்பானவையாகும். பெரும்பாலான சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் துஷ்பிரயோகங்கள் போதைப் பாவனையாளர்களாலேயே நிகழ்த்தப்படுகின்றன. போதைப்பொருள் பயன்படுத்து வதனால் ஏற்படும் விளைவுகள் பற்றி விழிப்பணர்வு ஏற்படுத்தும் விதமாக ஒவ்வொரு வருடமும் ஜீன் 26ம் திகதி போதைப் பொருள் மற்றும் சட்டவிரோத கடத்தல் ஒழிப்பு தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு கடைப் பிடிக்கப்பட்டு வருகின்றது.

போதைப்பொருள் பாவனையாளர்களை பின்வரும் செயற்பாடுகள் மூலம் படிப்படியாக அதனின் றும் மீட்டெடுக்கலாம். அவ்வாறான சமுதாயஞ்சார் சீர்திருத்த செயற்பாடுகளாக உளவள ஆற்றுப்படுத்தல் (தனி, குடும்ப, குழு), ஆன்மீக வழிகாட்டல் (தியானம், யோகாசனம்), விழிப்புணர்வை ஏற்படுத்தல் (போதைப் பாவனையின் தீங்குகள் பற்றி எடுத்துரைத்தல்) தொழிற் பயிற்சிகள் வழங்குதல் (வாழ்வாதார உதவி நலத் திட்டங்கள்) மருத்துவ ரீதியான சிகிச்சைகளுக்கு ஆற்றுப்படுத்துதல், போதைப் பொருள் புனர்வாழ்வு நிலையங்களுக்கு ஆற்றுப்படுத்தல், புனர் வாழ்வளித்தல் சமுதாய சேவைகளில் ஈடுபடுத்துதல் (அங்கீகரிக்கப்பட்ட அரச பொது ஸ்தாபனங்கள்) மற்றும் நல் வாழ்வு பற்றிய பிரக்ஞையை படிப் படியாக உண்டு பண்ணல், உறுதியான இலக்கும் அது நோக்கிய முயற்சியும் சமூக சேவைகளில் ஈடுபடல் சமூக அந்தஸ்தை ஈட்டிக் கொள்ளல் ஏனையவர்களுக்கு முன் மாதிரியானவர்களாக வாழ்ந்து காட்டல் தற்போதைய நிலையிலிருந்து மேலும் முன்னேற மேம்பட முயற்சித்தல் போன்ற வற்றைக் குறிப்பிடலாம்.

சமூகக் கட்டமைப்பானது பல காரணிகளால் பாதிக்கப் படுகின்ற போதும் அவை இயற்கை சார் அம்சமாகவோ அல்லது குழு சார் அம்சமாகவோ தான் காணப்படுகின்றது. அவ்வகையில் இவற்றை தனிநபரின் முயற்சியினால் கட்டுப்படுத்த முடியாது. சமூகத்தில் விழிப்புணர்வுகளை எற்படுத்தி ஒற்றுமை உணர்வை வளர்த்தெடுப்பதன் மூலம் ஒரு சீரான வளர்ச்சிப் போக்கில் சமூகத்தை இட்டுச் செல்வதன் மூலமே இவற்றுக்கு சாத்தியமான தீர்வுகளைக் காண முடியும். அதுவே எமது சமுதாயத்திலுள்ள அனைவரி னதும் பொறுப்பும் எதிர்கால வளமான சந்ததியி னருக்கான எமது கடமையும் ஆகும்.

அக்காரியம் கைகூடி வர அனைவரும் ஒன்றிணைந்து உழைப்போம் இவ் வேளையில் போதைப் பாவனையை நாட்டிலிருந்து முற்றாக இல்லா தொழிப் பதை நோக்காக கொண்டு ஜனாதிபதி விசேட செயலணி உருவாக்கப் பட்டுள்ளதோடு சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களத்தின் ஊடாக அவ்வாறான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவது பாராட்டுக்குரியதாகும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# உயிர் நிழல்

யௌவனா வசந்தன்

வெளியே நின்று அழைப்பு மணியை அமிழ்த்தத் தயாரான போது, சஞ்ஜீவின் தொலைபேசிக்கு சுந்தரால் அனுப்பப்பட்ட குறுஞ் செய்தி 'நீக்..நீக் ' என்ற ஒலியுடன் வந்திருந்தது.

'2 நாள் வரை கீழ் ரூம்ல நில்லுடா, சதீமேல் ரூம்லதான் இருப்பான். கூப்பிட்டு பார். இல்லாட்டி பக்கத்து வீட்டு அக்காட்ட சாவி வாங்கித் திறந்து கொண்டு உள்ள போ. நான் வர 3 நாள் ஆகும்.' 'தமிங்கிலீஷில் வந்த அவனின் குறுஞ்செய்தி இரு மொழி களையும் பதம் பார்த்திருந் தது. வாசித்தவன் முன்னாலிருந்த கதவை மெதுவாகத் தள்ளினான். அது திறந்து கொண்டது.

ஆண்களின் விடுதிக்கே யான ஒரு வித மணம் நாசியில் நுழைந்து இவனை வரவேற்றது. சற்று நேரத்துக்குள் அந்த மணத் திற்கு அவன் பழக்கப்பட்டு விட்டான். குளித்து விட்டு, பயணக் களைப்பில் சுந்தரின் அறையில் அப்படியே படுத்துத் தூங்கி விட்டான்.

திடீரென்று கேட்ட ஒரு சத்தத்தில் அவன் கண் விழித்தான். தொலைபேசியில் நேரத்தைப் பார்த்தான் நேரம் இரவு 9:38. விளக்கேற்றக் கூட மறந்து நீண்ட நேரமாகத் தான் தூங்கியதை உணர்ந்து கொண்டான். புது வீட்டில் இருளில் ஸ்விட்ச்களை தேடிக் கண்டு பிடிக்கத் தட்டுத் தடுமாறி,சுவரைத் தடவியவாறு மண்டப அறையுள் நுழைந்தான். அப்போதுதான் அதைக் கண்டான். மேசையின் கீழ் ஓர் உருவம். இடப்புறம் சரிந்து படுத்திருந்தது. சஞ்ஜீவ் தைரியசாலிதான் . இருந்தாலும், அந்தக் கணத்தில் அவன் மூளையில் அடிக்கப்பட்ட ஆணியின் அதிர்வு போலொன்று உள்ளங்கால் வரை பரவியது. தன்னை சுதாகரித்தவனாய் 'டேய்... யார்ரா அது......' என்று சத்தமிட்ட படி வேகமாய் சென்றான். ஆனால் அவனை முந்திக் கொண்டு வேகமாக அந்த உருவம் மாடிப்படிகள் வழியே மேலேறியது.

சஞ்ஜீவ் அவசர அவசரமாக மின் விளக்குகளை ஏற்றி விட்டான். வெறும் உடலில் நீல நிற சாரம் மட்டும் அணிந்திருந்த அந்த உருவம் இப்போது சஞ்ஜீவிற்கு தெளிவாகத் தெரிந்தது .

"ஏய்... நான் மேல் வீட்டுல இருக்குற சதீஷ் நீங்க சுந்தர்ர பிரண்ட் தானே?' என மாடிப்படிகளில் நின்ற படி அவன் கேட்டான்.

'ஓம்.. ஓம்.. நான்தான் அது. சஞ்ஜீவ் நீங்க இங்க இருக்கீங்க எண்டு சுந்தர் சொன்னவன், ஆனா நான் வார நேரம் நீங்க இருக்காததால கொஞ்சம் குழம்பிட்டன்.' எனக் கூறி கை குலுக்க எத்தனித்த சஞ்ஜீவ்விடம், 'இல்ல பரவால்ல..' என கூறி கையை விலக்கிக் கொண்டு மேலே நகரத் தொடங்கினான் சதீஷ்

'மேசைக்கு கீழ என்ன செய்த நீங்க?' அந்தக் கேள்வி சதீஷைத் தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும்.

'போன் கீழ விழுந்தது, தேடிட்டு இருந்தன்.' என்றான் சதீஷ் 'லைட்டைப் போட்டிட்டுத் தேடியிருக்கலாமே?' என சஞ்ஜீவ் கேட்டான்.

'போட்டேன்தான். ஆனால் அந்த நேரம் கரண்ட் இருக்கல்ல.' எனக் கூறிய படி, அங்கே மேலும் நிற்பதைத் தவிர்ப்பவனாக மர்மப் புன்னகையோடு மேலே சென்றுவிட்டான் சதீஷ். ஆனால் அவன் கைகளில் அப்படியொரு தொலைபேசியை சஞ்ஜீவ் காணவில்லை. அவனைப் பற்றிய பல கேள்விகளுடன் தன் வேலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை முடித்துக் கொண்டு தூங்க ஆயத்தமானான். அப்போது ஒருவித அலறல் சத்தம் கேட்டது. ஆண் குரல் அது. சதீஷின் அறைப் பக்கமிருந்தே அந்த அலறல் கேட்பதை அவன் உணர்ந்தான். சதீஷைப் பற்றி சுந்தர் கூறியது அப்போதுதான் நினைவிற்கு வந்தது.

'டேய் மேல் வீட்டுக்காரன் பேங்க்ல வேலை செய்றான். அதோட கதை, நாடகம் எண்டு பேப்பருக்கு எழுதுறவன். அதுமட்டுமில்லாம தன்ட சுயபுராணத்தை சொல்லிச் சொல்லியே நம்மளை சாகடிப்பான். அவனுட்ட மாட்டிராத. சில நேரம் ரூம்ல தன்பாட்டுக்கு நடிச்சு பார்ப்பான். சத்தம் ஏதும் கேட்டா போயிராத. மாட்டிருவாய்..'

அவனின் அலறலை இப்போது கேட்ட போது சஞ்ஜீவுக்கு சிரிப்பு வந்தது. மறுபடியும் அறைக்கு வந்து தூங்கத் தொடங்கினான்.

**இரண்டாம் நாள்**

காலை 6 மணிக்கு அவசர அவசரமாகத் தயாராகி வெளியே வந்தான் சஞ்ஜீவ். சதீஷிடம் கூறி விட்டு நேர்முகப் பரீட்சைக்காகச் சென்றான்.

அன்று மாலை 7 மணி. கதவைத் திறந்தான் சஞ்ஜீவ். மின் விளக்குகளைப் போட்டுவிட்டுத் திரும்பிய அவன் கதவு மூலையில் படுத்திருந்த சதீஷைப் பார்த்தான். பரிதாபத்தோடு 'என்ன சதீஷ் உடம்பு சரியில்லையா இல்லாட்டி மனசு சரியில்லையா?' என்று கேட்டான்.

விரக்திச் சிரிப்போடு சதீஷ் கூறினான் 'உடம்பு சரியில்லாததால மனசும் சரியில்ல'

"என்ன வருத்தம் சதீஷ் ?"

சதீஷ் சட்டென சுயநினைவுக்குத் திரும்பியவனைப் போல் 'ஒன்றுமில்லை சஞ்ஜீவ். எனக்கு பிடிச்ச ஒன்று என்ன விட்ட போய்ட்டு. அத என்னால தாங்கிக் கொள்ள முடியல' என்றான்.

சற்று மௌனத்துக்குப் பின் சஞ்ஜீவ் 'நமக்கு பிடிச்சது நம்மள விட்டுப் போனா, அத நாம திரும்ப அடையப் பார்க்கிறது வேற யாருக்கும் கஷ்டம் தராதெண்டால், அத அடைய நாம முட்டி மோதிப் பார்க்கிறதுல ஒரு பிழையும் இல்லதானே சதீஷ் சளைக்காமப் போராடுங்க' என்றான் .

சஞ்ஜீவ்வின் கருத்தை சதீஷ் ஏற்றுக் கொண்டானோ இல்லையோ, அவன் சஞ்ஜீவ்வை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த விறைப்பான பார்வையும், சூழ்நிலையும் பிடிக்காதவனாக சஞ்ஜீவ் அவ்விடத்தை விட்டகன்று சென்றான்.

'இன்ரர்வியுல செலக்ட் ஆகிட்டன்டா. பத்து நாள் ரிறெய்னிங். நீ வரும் மட்டும் இங்கேதான் தங்குவன்' என சுந்தருக்கு தொலைபேசிக் குறுந்தகவல் அனுப்பிவிட்டு சஞ்ஜீவ் சற்று நேரத்தில் தூங்கத் தயாரானான்.

தூங்க ஆரம்பித்த கொஞ்ச நேரத்தில், கட்டிலிலிருந்து தன்னைத் தூக்கி எறிவதைப் போல் கேட்ட அந்த அலறலைக் கேட்டு சஞ்ஜீவ் திடுக்கிட்டுக் கண் விழித்தான். ஆனால் தூக்கத்தின் பிடி அவனை இறுக்கியிருந்தது . புரண்டு படுத்து விட்டான் .

**மூன்றாம் நாள்**

காலை 6 மணிக்குக் கிளம்பிய சஞ்ஜீவ் மாலை 7 மணிக்குத் திரும்பிக் கொண்டிருந்தான். சதீஷ் மாடிப்படியில் சரிந்திருந்து எதையோ சிந்திப்பது போல் தோன்றினான் . அவனை இடையூறு செய்ய விரும்பாது, சதீஷ் தன் வேலைகளை முடித்து விட்டுத் தூங்கச் சென்றான். தூக்கம் வரும் வரை முகப் புத்தகத்தில் மேய ஆரம்பித்தான்.

வழக்கம் போல் இன்றும் அதே அலறல் .ஒரு வித ஆர்வத்துடன் சஞ்ஜீவ் சதீஷின் அறையை நோக்கிச் சென்றான் . மின் விளக்குகளைப் போடாது, தன் தொலைபேசி ஒளியைப் பின் தொடர்ந்த படி சென்றான். மேல் நோக்கிச் செல்ல செல்ல அலறல் அதிகரிப்பதை உணர்ந்தான். இதயத்தின் படபடப்பு அதிகரிக்கத் தொடங்கியது. வியர்க்கத் தொடங்கி யிருந்தது. மாடிப்படி முகட்டில் குந்தியிருந்த அந்த உருவம் அவனைத் திடுக்கிடச் செய்தது .தொண்டை வறண்டு போயிருந்தது. சுதாகரித்த சஞ்ஜீவ் சந்தேகத் தோரணையில் கேட்டான், 'சதீஷ்... ஏன் இங்க இருக்கீங்க'

'உனக்கு எண்ட ரூமுக்கு கிட்ட என்ன வேல சஞ்ஜீவ்?

'ஏதோ சத்தம் கேட்டது, அதான் பார்க்க வந்தன்'

'பொய் சொல்லாத... ஏதும் எடுக்கத்தானே வந்தாய்??'

'சதீஷ்..! கதைக்குறத யோசிச்சு கதைங்க'

'நீ சமாளிக்காத.. முதல்ல இங்க இருந்து போ'

அவமான உணர்வோடும், சலிப்போடும், வெட்கம் மேலிட அறைக்குள் நுழைந்து கதவை சாத்திக் கொண்டு கட்டிலில் விழுந்தான் சஞ்ஜீவ்.

**நான்காம் நாள்**

கடந்த இரவு தந்த மனக் குழப்பங்கள் சற்றே சஞ்ஜீவை சரியாகத் தூங்க விடவில்லை. தாமதமாகவே எழுந்தான். அவசரமாய்க் கிளம்பிய அவன் சதீஷிடம் எதுவும் கூற விரும்பாமல் சென்று விட்டான்.

மதியம் 12 மணி. சஞ்ஜீவ்விற்கு சுந்தரின் தொலைபேசி அழைப்பு வந்தது.

'மச்சான்.....' என்றான் சுந்தர்.

'டேய் வந்துட்டயா? எங்க ....'

குறுக்கிட்ட சுந்தர், பதற்றத்துடன் 'உடனே வீட்ட வாடா..' என்றான்.

'ஏன்டா?' பதறினான் சஞ்ஜீவ்.

'ஒன்றும் கேக்காம உடனே வா' என்றான்.

அரைநாள் விடுமுறைக்கு அனுமதி வாங்கிக் கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்ஜீவ் விரைந்தான். வீட்டு வாசலில் அவன் கண்ட காட்சி திகைக்கச் செய்தது. கால்கள் பின்னின. பொலிஸ் ஜீப், அம்பியுலன்ஸ், இரு மோட்டார் சைக்கிள்கள் என நான்கைந்து வாகனங்கள் நின்றன. வியர்வையால் நனைந்து கொண்டிருந்த அவனுக்கு சுந்தரின் 'சஞ்ஜீவ்...' என்ற வார்த்தை ஆறுதலைத் தந்தது..

'என்னடா நடந்துச்சு?' என்றான் சுந்தரிடம்.

'சதீஷ் செத்துட்டான்டா...' என்ற பதிலைக் கேட்டதும் சஞ்ஜீவ் அதிர்ந்து போனான் .

'நேற்றிரவு அவன் இருந்த கோலத்தைப் பார்த்த போதே யோசிச்சன்டா... இவன் பிழையா ஏதும் முடிவு எடுத்துருவானோ எண்டு' என கூறியவனையே வெறித்துப் பார்த்து நின்றான் சுந்தர்.

'என்னடா ஏன் பாக்குறா நீ.. என்னில சந்தேகப்படுறயா?' என்றான் சஞ்ஜீவ்.

'இல்லை' என்பதற்கு அடையாளமாகத் தலையசைத்தவன் கூறினான்.. 'சஞ்ஜீவ்... சதீஷ் ஐந்து நாளைக்கு முதலே செத்துட்டான்....'

தன்னுடலிலுள்ள குருதியெல்லாம் திண்மமாகியதைப் போன்று உணர்ந்தான் சஞ்ஜீவ். நிறமூர்த்தச் சிக்கலாய் அவனது தலைக்குள் ஏதோ பிசைய ஆரம்பித்தது.

'டேய்... சஞ்ஜீவ்' சுய நிலைக்குக் கூட்டி வந்தான் சுந்தர்.

'சுந்தர் நான் அவன பார்க்கணும்' என்றவன் மறு வார்த்தைக்காகக் காத்திராமல் மாடிக்கு விரைந்தான். பின்னால் சுந்தரும் இழுபட்டுச் சென்றான்.

பிணவாடை முகத்தில் வந்து மோதியது. சஞ்ஜீவ் மூக்கைப் பொத்திக் கொண்டான்.

ஆனால் கும்மிருட்டும் கூட கணப்பொழுதுகளில் கண்களுக்குப் பழகிப் போவதைப்போல் சில நாட்களுக்குள் சஞ்ஜீவ்வும் அவ் வாடைக்குப் பழக்கப் பட்டிருந்தான் போலும்.

'நீங்கதானே இங்க வந்து தங்குனது?' பொலிஸ் அதிகாரியின் கேள்வி சஞ்ஜீவ்வை பொறியில் அடித்தது போலிருந்தது.

'ஓ..ஓஒம் சேர்..' தடுமாறினான் சஞ்ஜீவ்.

'சேருக்கு மூக்கு அவ்வளவு பழுது போல. பிண வாடை கூட அடிக்கல போல இருக்கே... எல்லாம் விசாரணைல ஒருக்கா பார்க்கத்தான் வேணும். பொடிய எடுத்துட்டு போகக்குள்ள நீங்களும் ஸ்ரேஷனுக்கு வாங்க' எனத் தனக்கே உரித்தான தொனியில் மிரட்டினார் அந்தப் பொலிஸ் அதிகாரி. மிரட்டலும் கூட வெறும் பாவனை போன்றே இருந்தது சஞ்ஜீவ்விற்கு. அவனது பார்வை முழுவதும் சதீஷின் அறைக் கதவிலேயே குவிந்திருந்தது .

பொலிஸ் நகர்ந்த பின், சன நெரிசலாயிருந்த அவ் அறைக்குள் மெதுவாக எட்டிப் பார்த்தான் சஞ்ஜீவ். குளியலறையிலிருந்து இழு பட்டு வந்த குருதிக்கறையின் தடம் தென் பட்டது. கட்டிலின் அருகே இடப்புறம் சரிந்தவாறு சிதைந்த நிலையில் சதீஷின் சடலம். அதே நீல நிற சாரத்துடன் காய்ந்து கிடந்தது. வெலவெலத்த சஞ்ஜீவ், தன் இதயம் இடம் பெயர்ந்து உடல் முழுவதும் ஓடித்திரிவதாய் உணர்ந்தான்.

வீட்டின் கீழ் பகுதிக்கு வந்த சஞ்ஜீவ்வை சுந்தர் அமைதிப் படுத்திக் கொண்டிருந்தான். 'எல்லாம் எனக்கு விளக்கமா சொல்லுடா' என்றான் சஞ்ஜீவ்.

'செவ்வாய்க்கிழம பின்னேரம் அவண்ட பிரண்ட்டிட்ட சொல்லியிருக்கான் ஊருக்கு போகப் போறன், அதால வேலைக்கு நாலு நாள் லீவு எண்டு. நைற் பஸ்ல போறதுக்கு குளிக்கக்குள்ள பாத்ரூம்ல சறுக்கி சிங்க் ல பின் தலை அடிபட்டு விழுந்திருக்கான். அப்படியே தட்டுத் தடுமாறி இழுபட்டு வந்து போன் எடுக்கப் பார்த்திருக்கிறான். ஆனால் அதுக்கு முதலே கட்டிலுக்குக் கிட்ட மயங்கி விழுந்து செத்துட்டானாம்டா.' என்றான்.

'எப்படி பொலிஸ் வந்துச்சு?'

'நாலு நாளா அவன்ட பிரண்ட் அவனுக்கு கோல் பண்ணிருக்கான். இவன் எடுக்காததால வீட்டுக்கு எடுத்திருக்கான். அங்கயும் ஆள் இல்ல என்ட பிறகு இங்க வந்தான். அவன் வாற நேரம் பார்த்து நானும் வந்துட்டன். ரெண்டு பேரும் தான் பொடியப் பார்த்தம். அவன்தான் பொலிஸுக்கு சொன்னான்.' எனக் கூறி முடித்தான் சுந்தர்.

மலைமுகட்டில் பட்டுத் தெறிக்கும் வார்த்தைகள் போல் சுந்தர் சொன்னவை சஞ்ஜீவ்விற்குள் எதிரொலித்துக் கொண்டிருந்தன. நாற்காலியில் அமர்ந்திருந்த சஞ்ஜீவ்வின் விழிகள் சதீஷை மட்டுமே தேடிக்கொண்டிருந்தன.

'டிரைவர் ரெடியா?' என கேட்டவாறு மேலே இருந்து பொலிஸார் வர, அவரைத் தொடர்ந்து சதீஷின் சடலமும் தூக்கி வரப்பட்டுக் கொண்டிருந்தது. அக்கணத்தில் தான் சஞ்ஜீவ்வின் உடல், நரம்புகள் வெளித் தள்ளி, மயிர்க்கூச்செறியும் பயத்தின் வலியை உணர்ந்தது. கொண்டு வரப்படும் சடலத்தின் மேலாக சஞ்ஜீவ்வுடன் பேசிய சதீஷின் உருவம் அந்தரத்தில் மிதந்தபடியே வந்து கொண்டிருந்தது. அது தன் உடலுள் செல்ல முட்டி மோதி அலறிக் கொண்டே சென்று கொண்டிருந்தது. மூன்று நாட்கள் இரவில் தனக்குக் கேட்ட அதே அலறல் இப்போதும் தனக்கு மட்டும் கேட்பதை உணர்ந்து உறைந்து நின்றான் சஞ்ஜீவ். அந்தரத்தில் மிதந்து சென்ற சதீஷின் உருவம் வாயிலருகில் வைத்து தன் சடலத்தை தொடர்வதை சட்டென நிறுத்தியது. அது சஞ்ஜீவ்வை இலக்கு வைத்து வெறித்த படி உற்று நோக்க ஆரம்பித்தது...

●

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாழ்தல் என்பது வேறு

க.டனிஸ்கரன்

அம்மம்மாவின் பித்தம் வெடித்த
பாதங்களாயிருந்தது
ஆயிரம் வாய் பிளந்து
தாகத்தில் தவித்திருந்த பெருநிலம்
மேகத்தைக் கீறி மழையையும்
நதியை வரைந்து மீன்களையும்
அழைத்துவரும் கவிதைமொழிபற்றி
கதைத்துக் கொண்டு வருகிறேன்
மழை பொழிவதற்கான எந்த சாத்தியமும்
வானத்தில் இல்லை
நிலம் பற்றிய வருத்தத்தோடும்
ஆழி தின்றவளோடும் வருகையில்
பள்ளிச்சிறுமியொருத்தி
முகம் பார்த்துக் கொண்டிருக்கிறாள்
வீதிக்கு வந்திருந்த குளமொன்றில்.

வெடித்த நிலத்திலிருந்து
அம்மம்மா கடத்தியிருந்தாள்
இனி இந்த நாளைக் கடக்க
குளம் பற்றிய நினைவுகளை
கடந்தாக வேண்டும்.
எனக்குத் தெரியும் கவிதைக்குள்
சாத்தியமாயிருந்த மேகம்
மழை பெய்யப் போவதில்லை என்று.






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அன்றொரு நாள்

அன்றொரு நாள் இரவினில்
தென்னைகள் சலசலக்கும் கடற்கரையோரம்
தன்னந் தனியே நின்றிருந்தேன்
பாலொழுகும் முழு நிலவாக நீ
பவனி வரும் அழகினைப்
பார்த்து ரசித்தேன்.

பாவை இவள் பக்கத்தில்
யாருமில்லை உன்னைப்
பார்த்து ரசிக்கவே !
நீயும் நானும் ஓரினம்
இருவரும் இங்கே தனியினம்.





# நினைவில்லையா

கவிதை எழுதினேன்
உனை வந்து சேரவில்லை
கடிதங்கள் எழுதினேன்
உனை வந்து அடையவில்லை

முகவரி இல்லையே ! முடிந்ததா காதல் ?
காற்றுப் போல் கண்களில் படவில்லை
இருந்தும் நான் எழுதுகிறேன்
முடிவு வரை எழுதுவேன்
முகம் சுளிக்காமல் எழுதுவேன்
முடிந்த வரை தேடுவேன் முகவரி அறிந்திட...


வார்த்தைகளால் என்னை
வதைத்தது நினைவில்லையா ?
வண்ண வண்ணக் கவிதைகளால்
வகை வகையாய் புகழ்ந்தது நினைவுண்டா?
கானல் நீர் போல்
காதல் மறைந்ததென்ன ?

இலவு காத்த கிளி போல்
இறுதி வரை காத்திருப்பேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரியானதையும் பிழையானதையும்

# தீர்மானிக்க எனக்கு அனுமதியில்லையேல்...



**- வ. சுப்பிரமணியம்**

தனிமனித நடத்தைகளிலும், சமூக நடத்தைகளிலும் பெறுமான விளைவுகள் வெளிப்படுத்தப்படுகின்றன. தனக்கும். சமூகத்திற்கும் நன்மை விளையக் கூடியவையெனின் அவை பயன்மிக்கவையாகும். ஒருவருக்கு நன்மை பயக்கக்கூடியவை எப்போதும் சமூகத்திற்கு பயன் மிக்கவையாக இருப்பதில்லை. சரியானதையும், பிழையானதையும் சுதந்திரமாகத் தீர்மானிக்கும் தன்மை ஒருவருக்கு இருக்க வேண்டும். சரியை அல்லது பிழையை பிறரால் ஒருவர் மீது திணிக்கவியலாது. ஒருவரது சுயாதீன சித்தத்தில் *(Freedom of will)* இருந்தே அது முகிழ்க்க வேண்டும். தனி மனிதன் சமூகத்தில் ஒரு அங்கமானதால் ஒருவருக்கு சமூகப் பொறுப்பும் உண்டு. ஆதலால் சுய காட்டுப்பாடுடன் ஒருவரது செயல்கள் அமைந்திருக்க வேண்டியதாகிறது.

மனிதன் பகுத்தறிவுள்ள புத்திஜீவி - சமூகப் பிராணி மொழியை உருவாக்கியும், கருவிகளை உருவாக்கியும் பயன்படுத்த வல்லவன். நவீன விஞ்ஞான தொடர்பாடல் தொழில்நுட்பக் கருவிகளைக் கண்டு பிடிக்கவும் பயன்படுத்தவும் கூடியவன். அழகியல் உணர்வும், நயக்கும் திறனும் படைப்பிலக்கியங்களை ஆக்கும் திறனும் மிக்கவன் கலை, கலாசார வடிவங்களை ஆக்கவும் பேணவும் கூடியவன். இத்தகைய புத்திஜீவிக்கு சரியானதையும், பிழையானதையும் தீர்மானிக்க அனுமதியிருக்க வேண்டும்.

சுதந்திரம், உரிமை, பொறுப்புணர்ச்சி, நீதி/ அநீதி, சரி/பிழை என்பவை கண்ணுக்குத் தெரிபவை யல்ல. எந்த இயந்திரத்தாலும் கண்டு பிடிக்க முடியாதவை. வெறும் சதையாலும், எலும்பாலும், இரத்தத்தாலும் மட்டும் வார்க்கப் பட்ட சடமல்ல மனிதன். மனம், சிந்தனை உணர்சிகள் என்பனவற்றால் ஆக்கப்பட்டவன். எனது சிந்தையினதும், செயலினதும் விளைவுகளின் சரி பிழைகளைப் பற்றித் தீர்மானிக்க எனக்கு அனுமதி யில்லையெனில் நான், நானில்லாது வேறு ஒருவராகி விடுவேனன்றோ? எனது செயலின் சரி, பிழை, நன்மை, தீமையைத் தீர்மானிக்க எனக்கு சுயவிருப்பத்தோடு சுதந்திரமும் இருக்க வேண்டுமன்றோ! பிறரின் தலையீடுகளோ திணிப்புக் களோ இருத்தலாகாது.

சரி/பிழை; நன்மை/ தீமை என்பன மனித நடத்தை பற்றி ஆராயும் மதிப்பீட்டு விஞ்ஞானமாகக் கருதப்படும் ஒழுக்கவியலா கும். மனித வாழ்வியலின் சகல முனைகளையும் விமர்சனக் கண்ணோட்டத் தோடு அவாவி நிற்கும் மெய்யியலின் ஒரு பிரிவே ஒழுக்கவியல். ஒழுக்கவியல் கோட் பாடுகள் சமுதாய வளர்ச்சியோடும் சிந்தனை மேம்போடும் கைகொடுத்துப் பயணிக்கின்றன.

ஒருவருக்கு சரியாக இருப்பது மற்றவருக்குப் பிழையாக இருக்கலாம். சரி / பிழை; நன்மை/தீமை என்ற பதங்கள் வெவ்வேறு பொருள்களிலே பயன்படுத்தப் படுகின்றன. 'ஒரு நடத்தை சரியானது



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எனும் போது அது சில ஒழுக்க விதிகளுக்கு அமைந்துள்ளது என்று கருதலாம். சரியானது அல்லது நன்மையானது எனும் போது அந்த நடத்தை அல்லது செயலின் விளைவு பயனுள்ள முடிவைத் தருகிறது' என "மெக்கன்சி" என்ற ஒழுக்கவியலாளர் கூறுகிறார்.

'சரி' என்றால் என்ன? 'பிழை' என்றால் என்ன? இவற்றின் இயல்பு என்ன? என்ற வினாக்களுக்கு உடனடியாகவும், எழுந்தமானமாகவும் விடை காணல் சிரமமான காரியம். ஒரு நபரே சந்தர்ப்ப சூழலுக்கேற்ப வேறுபட்டும், ஒத்த சந்தர்ப்பத்திற்கும் வித்தியாசமாகவும் ஆளுக்காள், சமூகத்திற்குச் சமூகம், நாட்டுக்கு நாடு, காலத்திற்கு காலம், வித்தியாசமாக அர்த்தப்படுவதை அறிவோம்.

எனது செயல் வெளிப்படுவதற்கு முன்னதாகவே எனது மனதில் நிகழும் பல் வகையான மன நிலைகளின் இயல்புகளுக்கு நான் ஆளாகின்றேன். எனது செயலைப் பற்றிய உள வியல் விளக்கத்திற்கும் அச்செயல் பற்றிய ஒழுக்க தீர்மானங்களுக்கும் உள்ள பாதிப்புக்களையும் நான் கருத்தில் எடுத்தே வெளிப் படுத்த முடிகிறது. சுதந்திரமான எனது விருப்புத் தீர்மானம் எனது செயலின் சரியானதையும் பிழையானதையும் தீர்மானிக்க வல்லதாகிறது.

"ஒரு நடத்தை சரியானது எனும் போது அது சில ஒழுக்க விதிகளுக்கு அமைந்துள்ளது என்று கருதலாம். சரியானது அல்லது நன்மையானது எனும் போது அந்த நடத்தை அல்லது செயலின் விளைவு பயனுள்ள முடிவைத் தருகிறது"

நான் 'சரியானவை' எனக் கூறுவதற்கு உடன் பாடான சில பெறுமானங்களும், 'பிழையானவை' எனக் கூறுவதற்கு எதிர்மறையான சில பெறுமானங்களும் என்னுள் இருந்து மதிப்பிட்டதாலேயே இத்தகைய தீர்மானங்கள் என்னுள் இருந்து வெளிவந்தன. எனக்குத் தெரிந்ததும் எனது அறிவுத் தொகுதிக்குள் உள்ளதுமான பெறுமானங்களின் அடிப்படையிலேயே இத்தகைய மதிப்பீட்டுத் தீர்மானங்கள் வெளிப்படுகின்றன. எனவே நான் கூறும் 'சரியும், 'பிழையும்' எனது சுதந்திரமான விருப்புத் தெரிவில் இருந்தே மேலெழுந்து வர வேண்டும். இவ்வாறு தீர்மானிக்க எனக்கு அனுமதியில்லை எனில் நான் சம்பந்தப்படாது, அது எனது தீர்மானமில்லாத ஒன்றாகிவிடும் அதற்கு நான் பொறுப்புடையவனுமாகேன்.

ஒரு நடத்தை சரியெனவோ, பிழை எனவோ எந்த அடிப்படையில் கணிப்பிடுவது? எத்தகைய பிரமாணங்களை நியதிகளைப் பயன்படுத்துவது? ஒருவரது ஒழுக்க விழுமியங்கள் மற்றவரின் ஒழுக்க விழுமியங்களோடு முரண்படும் போது என்ன நிகழும்? பெறுமானத் தீர்ப்புகள் உண்மையும் பொய்யுமாகலாமா? இவ்வாறான வினாக்களுக்கு விடை காண முற்படும் போது ஒழுக்கவியற் பிரச்சினைகளில் ஈடுபட வேண்டியுள்ளது.

மனிதன் மனிதனாகவும், மனிதப் பெறுமானங் களை முறையாய்ப் பேணுப வனாகவும் இருக்கும் வரை தான் ஒழுக்க நெறிகளைப் பற்றிய பேச்சுக்கு இடமிருக்கும். ஒழுக்கச் சீர்குலைவுக்கும் அந்நியமாதலுக்கும் தொடர்புண்டு. சரியான தையும் பிழையானதையும் தீர்மானிக்க எனக்கு அனுமதியில்லையெனில் நாளைடைவில் நானும் எனது சுயங்களிலிருந்தும் நான் வாழும் சமூகத்திலிருந்தும் அந்நியப்பட வேண்டிய நிலை ஏற்படும்.

இயற்கை ஆற்றலிருந்து மனிதன் வளர்த்துக் கொள்ளும் மானிடப்பண்புகளே புதிய பரிமாணத்திற்குக் காரணமாகின்றன. இத்தகைய பண்பினாலேயே மனிதன் மனிதனாக வேறுபடுகின்றான். இன ஆற்றல்தான் மனித வாழ்வுக்கும் அதன் செழுமைக்கும் உதவுகின்றது. இயற்கையை அறிவதிலும் இதர மனிதனோடு இணங்கி வாழ்வதிலும் தவிர்க்க முடியாத பெரும் பங்கினை மனிதச் செயல் கொண்டுள்ளது.


மனிதனுக்கு சுதந்திரம் இருக்கும் வரைதான் அவன் மனிதப் பெறுமானத் தோடும், திருப்தியோடும் வாழ்கிறான் என்று பொருள். நான் எனது விருப்புக் கும் சுய உணர்வுக்கும் பொருளாக அமையும் வாழ்க்கைச் செயலை உருவாக்குபவனாவேன். சுதந்திரமான உணர்வு நடத்தையே பகுத்தறிவுள்ள இன ஜீவியான மனிதன் பண்பு என்று கார்ள்மாக்ஸ் கூறுகிறார். எனது சுயமான நடத்தைக் கோலமே எனது வாழ்வாகும். இதனாலேயே எனது செயல் சுதந்திரச் செயலாகிறது. இதுவே எனது இருப்பிற்கும் காரணமாக அமைகிறது.

மனிதனின் செயல் மனிதனுக்கு மட்டுமன்றி அது பிரபஞ்ச ரீதியானதாகவும் வியாபிக் கிறது. மனிதன் வளர்த்துக் கொள்ளும் மானிடப் பண்புகளே புதிய மனிதப் பரிமாணத் திற்கு வித்திடு கின்றது. இதன் மூலமே தான் வாழும் சமூகத்தோடும், பிரபஞ்சத்தோடும் உறவு கொள்ளும் நிலையும் அவனுக்குஏற்படுகிறது.

சமுதாயம் என்ற அமைப்பைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமானால், அதில் உறுப்பினராகவுள்ள ஒவ்வொருவரும் சமூகத்தின் மீது அக்கறையுடைய வராயும், பொறுப்புடையவராயும், செயற்பட வேண்டிய கடமை அவருக்கு இருக்க வேண்டும். தனி மனிதன் தான் நினைத்தவற்றை எல்லாம் தான் நினைத்தவாறு செயற்படுத்தாது சமூக நலன் கருதி தன்னைக் கட்டுப் படுத்தி எடுக்கும் தீர்மானங்கள் சமுதாயம் என்ற அமைப்பை நிலைத்து வாழ வைக்கும் என பிடோ என்ற மெய்யிலாளர் கூறுகிறார். தனி மனிதத் தீர்மானம் கூட, சமுதாய நிலைப்பட்ட நன்மை கருதியதாகவே அமைய வேண்டும். எனவே நான் சரியானதையும்,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பிழையானதையும் தீர்மானிக்கும் போது சமூகநலன் கருதியதாகவே அமைய வேண்டும். ஏனெனில் சமூகத்தில் நானும் ஓர் அங்கமே. எனவே எனது நடத்தைகளும், தீர்மானங்களும் சமூகநலன் சார்ந்ததா கவே, சமூகத்தின் சரியையே அவாவி நிற்க வேண்டும்.



எனது தீர்மானங்களிலும் அதன் விளைவுகளிலும், உண்மை, நன்மை, அழகு என்பன ஒருங்கே அமைந்திருந்தால் அத் தீர்மானங்களால் பயனுடையதாகவே இருக்கும். ஒவ்வொரு மனிதனும் அவனது இயற்கை உந்தல்களைக் மனம்போன போக்கில் செலுத்தலாகாது. இயற்கை உந்தல்களை கட்டுப்படுத்தி செம்மையான நடத்தைகளையே செயற்படுத்த வேண்டும். எனவே நானும் இதற்கமைய எனது சரிகளையும், பிழைகளையும் தீர்மானிக்க வேண்டியவனா கின்றேன்.

நான் செய்கின்ற செயலுக்கு நான் பொறுப்புடை யவனாக இருக்கும் பட்சத்திலே தான் அச்செயலின் விளைவுக்கும் நான் உரித்து டையவனாவேன். இந் நிலையிலே 'சுயாதீனசித்தம்' எனும் ஒழுக்கவியல் சிந்த னைக்குள் பிரவேசிக்க வேண்டியுள்ளது. எனது தீர்மானமும், செயலும் அதன் விளைவும் சமூக நிலை சார்ந் ததாகவே அமைய வேண்டும்.

சரியானதையும் பிழையானதையும் தீர்மானிக்க எனக்கு அமனுதியில்லையெனில் நளைடைவில் நானும் எனது சுயங்களிலிருந்தும் நான் வாழும் சமூகத்திலிருந்தும் அந்நியப்பட வேண்டிய நிலை ஏற்படும்.

ஒருவர் செய்யும் செயலுக்கு அவர் வெறும் கருவியாகவும், வேறு ஒருவர் அச்செயலின் கர்த்தா வாகவும் கூறும் கொள்கையும் உண்டு. இந்நிலையில், செயல் சரியோ பிழையோ அது கருத்தாவுக்குரியதன்றி கருவிக்கல்ல. கர்மம் பற்றிய தத்துவக் கொள்கையிலே பகவத்கீதையில் இதனைக் காணலாம். கர்மம் பயன் கருதாதிருக்க வேண்டும். 'கடமையைச் செய் - பயனை எதிர்பாராதே.' பற்றற்று நில். செயலால் ஏற்படும் விளைவுகளுக்கு சரி / பிழைக்கு நானே பொறுப்பாளி. நீர் அல்லன் என்று கீதையிலே கண்ணன் காண்டீபனுக் குக் கூறியிருப்பதிலிருந்து இது தெரிகிறது.

நல்ல நடத்தையா? கெட்ட நடத்தையா? என மனித நடத்தையை ஆராயும் அறிவியல் ஒழுக்கவி யலாகும். ஆளுக்காள், சமூகத்திற்குச் சமூகம், நாட்டுக்கு நாடு வேறுபட்டுக் காணப்படுகின்றது. ஒரு காலகட்டத்தில் நல்லதென்று காணப்பட்டவை வேறு ஒரு காலத்தில் கெட்ட நடத்தையாகவும், கெட்டது எனக் காணப்பட்டவை நல்லவை யாகவும் கூடக் காணப்பட்டன. குறித்தகால தேவைக்கும், சிந்தனையாளர்களின் தேடலுக் கும் ஏற்ற ஒழுக்கக் கொள்கைகள் உருவாகி யுள்ளன.

அறிவுமையமும், தகவல் மையமும் கொண்டு அறிவுப் பிரவாகம் எடுத்தோடும் 21ம் நூற் றாண்டிலே நாம், வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நவநாகரிக மனித குலம் என எம்மை நாமே கூறுவதில் என்ன பெருமை உள்ளது? சரியான செயலையும், பிழையான செயலையும் தேர்ந்து பிழையைத் தவிர்த்து சரியானதைச் செய்ய முடியாதவர்களாவே இருக்கின்றோம். சரியானதையும், பிழையானதையும் சமூகம் சார்ந்து தீர்மானிக்க எனக்கு அனுமதி அவசியமாகிறது.

"மனிதன் எந்த அளவு அறிவினைப் பெருக்குகின்றானோ அந்தளவு தூய அறநெஞ்சத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். இல்லை யெனில் அந்த அறிவுப் பெருக்கம் துன்பப் பெருக்கத்திலேயே போய் விடும்"

- பேட்டன் ரஸல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாரோ...

பாவாணர்
அக்கரைப்பாக்கியன்



வாழவே பிறந்திருந்தும்
வாழ்க்கையின் நியதிமண்ணில்
வீழவே வழிசமைத்து
விலங்கிலும் கீழதாக
நீளவே வாழவைத்து
நிம்மதி சாகடித்து
சூழவே துயர் விளங்கத்
தூண்டுகோல் வைத்தார் யாரோ?

****

மானுடம் வாழவென்று
மணம்பெறும் வழிவகுத்து,
காணுமெக் காட்சியெல்லாம்
கருணையே வெளியதாகி,
தேனெனச் சுரந்த வாழ்வைத்
தேங்கவே வைத்திடாமல்
வீணெனச் சிதைவதற்கு
விதிதனை வகுத்தார் யாரோ?

****

நெஞ்சிலே சாந்தமின்றி
நிலை தடுமாறியிங்கு
அஞ்சியா வாழ வந்தோம்!
அழுவதா எங்களுள்ளம்.
பஞ்சமும் பசியுமாகி
பரிதவித்துழலுமிந்த
வஞ்சனை பெருத்த வாழ்வை
வழக்கினில் வைத்தார் யாரோ?

****

கண்டதே காட்சியென்றும்,
கொண்டதே கோலமென்றும்,
தண்டனை தந்தார் யாரோ?
தாய் மனங் கொண்டார் யாரோ?
அண்டியே மக்களோடு
ஆனந்தமாக வாழ்ந்தால்,
சுண்டியே அதனை வீசி
துரும்பென எறிவார் யாரோ ?

****

உழைப்பவன் உயர்ந்திடாமல்
உறிஞ்சுபவன் உயருகின்ற,
தலைமுறைத் தொடர்ச்சியான
தத்தளித்திருக்குமிந்த
நிலைதனை மாற்றியன்பாய்
நீண்டதோர் சுகம் பிடித்து
வலைதனை விரித்துமிங்கே
வைத்திட வருவார் யாரோ?

****

போதித்த தத்துவங்கள்
புனிதமுறு தன்மை கொண்டு
நீதியே நிலைக்குமென்னும்
நிலைதனை உறுதியாக்கி ,
ஆதியோடந்தமிங்கே
அடைந்திட்ட அவலமெல்லாம்
நாதியே கெட்டுவோட
நலமுடன் வருவார் யாரோ?

****

வறுமையும், தீதுமாக
வழிவகை தினந்தொடர்ந்து,
சிறுமைகள் தோற்றுவிக்கும்
சின்னதாம் மனதைப் போக்கி
நறுமணம் வீசுமந்த
நயம்மிகு சிறப்பையெல்லாம்
பெறும் வகை எந்தநாளும்
பிரியமாய் வருவோர் யாரோ?

****

எல்லாரும் எல்லாமாக
இனிதெனப் பெற்றிருந்து,
உள்ளார்ந்த மகிழ்ச்சிதன்னை
உருவாக்கி, அதிகமாக்கி,
சொல்லாலும், செயலாலும்,
தூய்மையாய் வளர்ந்திருந்து
பொல்லாமைத் தடமழித்து
புதுவழி படைப்பார் யாரோ?

****

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்முனை பிரதேசத்தின் மறைந்த ஆளுமைகள்

## கல்முனை தமிழ்ப் பிரதேசத்தின் மறைந்த ஆளுமைகள் – அறிமுகக் குறிப்புகள்

இந்தப் பிரதேசத்தில் வாழ்ந்து, மறைந்து / மறைந்தும் மறையாதவர்களாக நம் நெஞ்சங்களில் நிலைத்திருப்போர் பற்றிய சுருக்கமான குறிப்புகளும், அவர்களுடைய புகைப்படங்களும் இங்கே இடம் பெற்றுள்ளன.

திருவாளர்கள் கே.ஆர்.அருளையா ஆசிரியர், மாரிமுத்து ஆசிரியர் ஆகியோரின் பெயர்கள் இப் பட்டியலில் இருந்தும் அவர்களைப் பற்றிய முழுமையான விபரங்களையோ அவர்களுடைய படங்களையோ பெற முடியாமையால் அவர்கள் இங்கு இடம் பெறவில்லை .அவர்களுடைய குடும்ப உறுப்பினர்கள் சிலரை அணுகிய போதும் இம் முயற்சி கை கூடவில்லை.

எங்களுடைய இந்தத் தேர்வில், தேடலில், நினைவில் தகுதி வாய்ந்த ஆளுமைகள் சிலர் தவறிப் போயிருக்கலாம். எனினும் இந்த 'விடுபடலுக்கு' அலட்சியமோ, உள்நோக்கமோ, பாரபட்சமோ காரணங்கள் அல்ல. அவர்கள் குறித்துத் தெரியப் படுத்தினால், எதிர்காலத்தில் வரக் கூடிய இத்தகைய மலரொன்றில் அவர்களை சேர்த்துக் கொள்ள முடியும்.

---


### கவிஞர் நீலாவணன்



சின்னத்துரை என்ற இயற்பெயரைக் கொண்ட நீலாவணன் ஈழத்து நவீன தமிழ்க் கவிதை வளர்ச்சியில் முக்கிய இடத்தை வகிப்பவர். கிழக்கிலங்கையில் 'தமிழ்க் கவிதைகளின் தலைநகரம் 'போல் விளங்கிய கல்முனை யிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் முக்கியமான பல கவிஞர்கள் உருவானதில் நீலாவணனின் செல்வாக்கு கணிசமானது.

44 ஆண்டுகளே அவர் உயிர் வாழ்ந்த போதும், தன் ஆயுளில் அரைவாசிக் காலம் இலக்கிய உலகில் தீவிரத்துடன் இயங்கியவர். கவிதை, சிறுகதை, நாடகம், உருவகக் கதை, நடைச் சித்திரம், கட்டுரை, சஞ்சிகை என அவரது இலக்கிய அக்கறை விசாலமானது. எனினும் கவிதையையே தன் முக்கியமான களமாகக் கொண்டார். (இம் மலரின் பிறிதொரு பக்கத்தில் இவரைப் பற்றிய மேலதிகக் குறிப்புகள் உண்டு)

### கவிஞர் பாண்டியூரன்



கவிஞர் பாண்டியூரனின் இயற்பெயர் கணபதிப்பிள்ளை.1935 ல் பாண்டிருப்பில் பிறந்த இவர் தமிழ்ப்பற்றும், தமிழ்த் திறனும் கொண்ட கவிஞர். கிராமத்தின் மண்வாசனையை, வர்க்க ரீதியிலான சுரண்டலின் கொடுமையை, தமிழ்த் தேசியத்தை, சுதந்திர வேட்கையை, ஏழ்மையின் அவஸ்தையை, காதலை, ஆன்மீகத்தை மரபு வழி நின்று கவிதைகளில் படைத்தவர்.

அவரது கவிதைகளின் எண்ணிக்கை, பாடுபொருட்கள், தொடர்ச்சியாக அவர் எழுதிய கவிதைகள், கவிதை வடிவில் படைப்பாளிகளுடன் அவர் பரிமாறிக் கொண்ட கடிதங்கள் போன்றவை அவருக்கும் கவிதைக்குமிடையேயிருந்த 'தீராக் காதலைப்' பறை சாற்றுவன.

தமிழ்த் தேசியத்தின் பால் தீவிர பற்றுக் கொண்ட அவர் எழுத்துடன் நின்று விடாமல் மேடைகளிலும் முழங்கியவர். 1990 ல் 'காணாமல் ஆக்கப்' பட்டார்.

அவருடைய படைப்புகள் நூல் வடிவம் பெறாத போதும் இங்குள்ளோர் மனதில் என்றும் வாழும் கவிஞர் அவர். (கவிஞர் பற்றிய மேலதிகக் குறிப்புகள் இம் மலரின் பிறிதொரு பக்கத்தில்)

### திரு.காசுபதி தெய்வநாயகம்



1920 ல் நற்பிட்டிமுனையில் பிறந்த காசுபதி தெய்வநாயகம் அவர்கள் ஆசிரியராக, அதிபராக விளங்கியவர். அம்பாறை மாவட்ட கல்வி கலாசார ஒன்றியத்தை உருவாக்கி கல்முனைப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு அரும் பாடுபட்டவர். கல்முனை வை.எம்.சி.ஏ. ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவர். தனது தாய்மாமனாகிய தலைமை ஆசிரியர், மறைந்த திரு. க.கணபதிப்பிள்ளையின் அடிச்சுவடுகளைத் தொடரும் விதத்தில் அவர் கட்டியெழுப்பிய அம்பாறை மாவட்ட தமிழர் மகா சங்கத்தின் மூத்த துணைத் தலைவராக நீண்ட காலம் பணியாற்றியவர்.

1988 ல் கரவாகு மேற்கு சமாதான சபையின் தலைவராக இருந்து, தமிழ்-முஸ்லிம் மக்களின் இன நல்லுறவை வளர்க்கப் பாடுபட்டவர்.அகில இலங்கை சமாதான நீதிவான். இவருடைய சேவையைப் பாராட்டும் விதத்தில் கல்முனையின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், அமைச்சருமான வன்னியனார் கேற்முதலியார் மர்ஹூம் எம்.எஸ்.காரியப்பர் 'கல்முனையின் காந்தி' எனப் பட்டமளித்து கௌரவித்தார்.இது தவிர 'சொல்லழகன்',,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நாவலர்' ஆகிய பட்டங்களையும் இவர் பெற்றுள்ளார். கல்முனையில் இந்து மாமன்றத்திற்கென ஒரு தனிக் கட்டிடத்தை அமைப்பதற்குப் பகீரதப் பிரயத்தனம் செய்தவர். 2005 ல், தனது 85 வது வயதில் காலமானார்.

### பாலன் பரிகாரி கணபதிப்பிள்ளை



1898 ல் பாண்டிருப்பில் பிறந்த இவர் வைத்தியப் பரம்பரையில் 9 வது வைத்தியராவார். மாந்திரீக முறையில் பேய்.பில்லி, சூனியம் என்பவற்றை விரட்டியடிக்கலாம் என நம்பிய மக்களின் காவலனாக இருந்தார். வைத்தியப் பிரிவில் (சர்வாங்கம்) ஆயுள் தேகத்தில் உடற்பாகங்கள் அனைத்துக்கும் வைத்தியம் செய்தவர். (இவருடைய வைத்திய அத்தாட்சிப் பத்திர இலக்கம் 734 என்பதாக இருந்தது. ஏட்டுச் சுவடிகளில் தான் பயின்ற வைத்திய முறை மூலம் தீரா நோய்களை எல்லாம் குணப் படுத்தியவர் எனப் பலரும் கூறுவதுண்டு.

பாண்டிருப்பு மாணிக்கப் பிள்ளையார் கோயில் கடற்கரை வீதியில் 'ஸ்ரீ கோதண்ட சித்த ஆயுள் வேத வைத்தியசாலை ஒன்றை நிறுவி வைத்தியப் பணியில் பின்னாட்களில் ஈடு பட்டார்.

1957ல் பாண்டிருப்பு ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தை உருவாக்கி, பிரதம பூசகராகத் தொடர்ந்து 10 வருடங்கள் பணியாற்றினார்.

1938ல் சிறுத் தொண்டர் நாட்டுக் கூத்தை ஆரம்பித்து அதில் சிறுத் தொண்டனாக நடித்தார். இயந்திர வாகனங்கள் இல்லாத காலத்தில் ஊர் ஊராகச் சென்று வைத்தியம் பார்க்க வில்லுக் கரத்தையைப் (இருவர் செல்லக் கூடிய மாட்டு வண்டி) பயன் படுத்தினார்.
1972 ல் காலமானார்.

### திருமதி.கமலாம்பிகை லோகிதராஜா



1939 ல் பாண்டிருப்பில் பிறந்த இவர், ஊருக்குப் பெருமை சேர்த்த ஒரு பெண்மணி. ஆசிரியராகவும், உதவி அதிபராகவும், ஆசிரிய ஆலோசகராகவும், உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் (ஆங்கிலம்) பணியாற்றி ஓய்வு பெற்றவர். இள வயதில் கணவனை இழந்த போதும் தளர்ந்து போய் விடாமல், துயரத்தின் ஆற்றையும் தன்னம்பிக்கையுடன் கடந்தவர். கல்வித் துறையுடன் மாத்திரம் அவர் நின்று கொள்ளாமல் கலை, இலக்கியம், சமூக செயற்பாடு, தியானம் என்று தன் பயணத்துக்கான திசைகளை தேர்ந்தெடுத்துக் கொண்டார்.

அவர் என்றும் "தேடல் மனநிலை" கொண்ட ஒருவராக இருந்தார். சாஹித்திய விழா மலரில் அவர் எழுதிய "கல்முனைப் பிரதேசத்தின் நாடக முயற்சிகள்" கட்டுரை மிகச் சிறந்ததோர் ஆவணம். (இம் மலரில் அக் கட்டுரை பிரசுரமாகியுள்ளது.)

பாண்டிருப்பு கிராமத்தைப் பற்றி அவர் எழுதிய "பத்தும் பதியமும் "என்றொரு நூல் 2012 ல் வெளியானது.

இந்த நூலுக்காக அவர் மேற் கொண்ட தேடுதல்களும், அவற்றின் நிமித்தம் அவர் காட்டிய கடுமையான உழைப்பும் குறைத்து மதிப்பிடக் கூடியவை அல்ல. அவர் சிறந்ததொரு இலக்கிய விமர்சகர். கல்முனை கலை - இலக்கிய நண்பர்கள் அமைப்பின் தலைவியாக விளங்கியவர்.
2015 ல் காலமானார்.

### 10. சங்கைக்குரிய. மா.சதாசிவம் குருக்கள்



1922 ல் பாண்டிருப்பில் பிறந்தார். தந்தை வழியாகத் தங்கள் குலத் தொழிலான அர்ச்சகர் தொழிலைப் பயின்றார். அயல்கிராமங்களில் ஒன்றான சேனைக் குடியிருப்பு மாரியம்மன் ஆலயத்தின் பூசகர் ஆனார். பின்னாட்களில் பாண்டிருப்பு மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தின் பூசராகவும் விளங்கினார். 1967 ல் கரவாகு வடக்கு கிராம சங்கத்தின் உறுப்பினராகவும் பின்னர் கிராமோதய சபை, சமாதான சபை ஆகியவற்றின் தலைவராகவும் இருந்து ஊருக்கான பணிகளை ஆற்றியவர். விஷக் கடி வைத்தியத்தில் பெயர் பெற்றவர். 2004 ல் காலமானார்.

### 15. திரு. தெ.ஜெய்தீபன் (ஸ்தபதி)



1975 ல் பாண்டிருப்பில் பிறந்த இவர் சிறு வயது முதல் சிற்பக்கலையில் ஆர்வம் மிக்கவர். சுயமாக முயற்சி செய்து இக் கலையை வளர்த்துக் கொண்டவர். இவருடைய கைவண்ணத்தில் உருவான சிற்பங்கள், வாயிற் கோபுரங்கள் பல இந்தப் பிரதேசத்தின் ஆலயங்களில் காணப்படுகின்றன. இவர் சமூக அமைப்புகள் பலவற்றில் முக்கிய பதவிகளை வகித்தவர். இளவயதில் (2012) மரணத்தைத் தழுவினார்.

### அருட் சகோதரர் எஸ்.ஏ.ஐ.மத்தியூ அவர்கள்



1939 ல் கண்டி,உலப்பனையில் பிறந்த இவர் 1960 ல் துறவற வாழ்க்கையில் புகுந்தார். 1972ல் ஆசிரியராகக் கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரிக்கு வந்து, அங்கேயே அதிபராகி 30 வருடங்களுக்கு மேலாகக் கடமையாற்றியவர். அவருடைய காலத்தில் மறுபடியும் கல்லூரி 'புத்துயிர்' பெற்றதென்றால் அது மிகையில்லை. கல்லூரி வளாகத்தில் உருவான ஏராளமான கட்டிடங்களுக்கு இவரே காரணம். இவர் காலத்திலேயே நடிகர்கள், மதத் தலைவர்கள், அரசியல்வாதிகள், அறிஞர்கள், அதிகாரிகள், வெளிநாட்டு இராஜதந்திரிகள் எனப் பல தரப் பட்டோரும் கல்லூரிக்கு வந்து சென்றனர்.

அதற்குப் பின்னர் கல்முனையின் முக்கிய முகங்களில் அருட் சகோதரர் மத்தியூவினுடையதும் ஒன்றாகி விட்டது. அவர் ஒரு கல்லூரியின் அதிபராக மட்டுமல்லாமல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நினைத்ததை முடிப்பவர்" என்ற பிம்பத்தையும் பெற்றதே அதன் காரணம். அவருடைய தன்னம்பிக்கை நிறைந்த சுபாவம், இந்த நாட்டின் மூன்று முக்கிய மொழிகளிலும் இருந்த புலமை, பல துறைகளிலும் அவருக்கிருந்த தேடல், பரிச்சயம் என்பவை அவருக்கு எந்தக் கதவையும் தட்டித் திறக்கும் தைரியத்தை வழங்கியிருந்தது.

கல்முனைப் பிரதேசத்தின் கல்வி வரலாற்றில் அழியாத தடங்களை அவர் பதித்து சென்றுள்ளார். கலை இலக்கிய ஆன்மீகத் துறைகளுக்கு அளப்பரிய பங்களிப்பு களை அவர் நல்கியுள்ளார். சமூக செயற்பாடுகளில் ஆர்வம் காட்டியுள்ளார். நாடகத் துறையில் இயக்குனராக, நடிகராக முத்திரை பதித்தவர்.

சங்கைக்குரிய சகோதரர் எழுதிப் பதிப்பித்த சுமார் 60 புத்தகங்கள் சிறியதும், பெரியதுமான ரூபங்களில் வெளி வந்திருக்கின்றன. "கிழக்கிலங்கையில் கிறிஸ்தவர்கள் ஆற்றிய கல்விப்பணி "எனும் நூலும் 2009ல் "கர்மயோகி பவுல்" என்ற நூலும் 2013ல் "சட்டம் சமயம் ஆட்சி"என்ற நூலும் அரச சாகித்திய விருதுகளைப்பெற்றன.
2016ல் காலமானார்.

## சங்கைக்குரிய. மா.கணேசதுரைக் குருக்கள்




1931 ல் பாண்டிருப்பில் பிறந்தார். தந்தை வழியாகத் தங்கள் குலத் தொழிலான அர்ச்சகர் தொழிலைப் பயின்றார். அயல்கிராமங்களில் ஒன்றான துறைநீலாவணையில் தில்லையம்பலப் பிள்ளையார் ஆலயத்தின் அர்ச்சகர் ஆனார்.17 வயது முதல் 80 வயது வரை (64 ஆண்டுகள்) ஒரே ஆலயத்தில் திருப்பணியாற்றிய பெருமைக்குரியவர். ஊரில் கைத்தறி நெசவுச்சாலை ஒன்றை அமைத்து அதில் பலரும் தொழில் புரிய வாய்ப்பளித்தார்.

1977 -1983 காலகட்டத்தில் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராக இருந்து, வீதிகளைப் புனரமைத்தார். பாண்டிருப்பு மகாவித்தியாலயத்துக்கான புதிய கட்டிடத்தையும், கிராம அபிவிருத்திச் சங்கப் பணிமனையையும் நிர்மாணித்தார். வாய்க்கால்களை அமைத்தார்.

1975ம் ஆண்டு அகில இலங்கை சமாதான நீதிவான் ஆனார். பாண்டிருப்பு இந்துமதப் பேரவையின் தலைவராகவும், அதன் வெளியீடான 'இந்துமதி ' இதழின் கௌரவ ஆசிரியராகவும் விளங்கியவர். இவர் ஓர் இசைப் பிரியர். திருமுறைகளைப் பண்ணோடு ஓதுவதிலும். ஹார்மோனியம் இசைத்துப் பாடுவதிலும் தேர்ச்சி பெற்றவர். 2011 ல் காலமானார்.

## 23. திரு.சி.என்.செல்வராஜன்



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இவர் தொழில் நிமித்தம் 70களின் முற்பகுதி யில் கல்முனைக்கு வந்தார். பின் கல்முனை வாசியானார்.

1969 காலப்பகுதியில் யாழ்ப் பாணத்திலிருந்து வெளிவந்த சிரித்திரன் எனும் சஞ்சிகையில் வெய்யோன் எனும் புனை பெயரில் பல ஆக்கங் களை எழுதியிருக்கிறார்.

சிறந்த நாடகக் கலைஞர். 1971 காலப்பகுதியில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஒலி பரப்பிய இவருடைய 'சக்கடத்தார்' என்னும் முழு நீள நகைச்சுவை வானொலி நாடகம் மக்களின் பெரும் பாராட்டைப் பெற்றதோடு, வடகிழக்கு மலையகம் முழுவதும் மேடை நாடகமாகவும் அரங்கேறி மக்களை வயிறு குலுங்க சிரிக்க வைத்தது.

இன்றைய கார்மேல் பாத்திமா கல்லூரியாக உள்ள அன்றைய பாத்திமா கல்லூரியில் 'நெஞ்சே நீ சொல்' என்னும் நாடகத்தை தன்னுடன் சக ஆசிரியராக கடமையாற்றிய மறைந்த அருட் சகோதரர் எஸ்.ஏ.ஐ.மத்தியூ அவர்களுடனும் ஏனைய ஆசிரியர்களுடனும், இணைந்து மேடையேற்றி தேசிய ரீதியில் முதலாம் இடத்தை பெற்றுக் கொடுத்தார்.

கல்லூரியின் மதிற்கட்டுமானப் பணிகளுக்காக மேற்படி நாடகத்தையும், இன்னும் பல நகைச்சுவை நாடகங்களையும் மேடையேற்றி நிதி திரட்டிக் கொடுத்தார்.

1990 ம் ஆண்டு போர்க்கால சூழலில் கஞ்சி குடிச்சாறு பகுதியில், இருந்து, இடம் பெயர்ந்த பிள்ளைகளுக்கு கொட்டில் அமைத்து, கல்வி புகட்டி அப்பகுதியில் தற்பொழுது ஒரு பாடசாலை உருவாகக் காரணமாக இருந்தார்.

## திரு.சண்முகம் சிவலிங்கம்



'ஸ்டீபன் சேர் ' என்ற பெயரால் ஊரில் பெரிதும் அறியப் பட்டவர்.விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர், அதிபர். இலங்கை அரச கல்வி வெளியீட்டுத் திணைக் களத்தில் நூலாக்கக் குழுவில் கடமையாற்றியவர்.

70 களில் இயங்கிக் கொண்டிருந்த புதிய தலைமுறைப் படைப்பாளிகள் மத்தியில் தன் கவிதைகள் வாயிலாக மிகவும் செல்வாக்குப் பெற்றவர். மார்க்ஸீயக் கருத்துகளால் இவர் ஈர்க்கப் பட்டிருந்த போதும் அவை தன் படைப்புகளில் துருத்தி நிற்கா வண்ணம், அழகியல் பிறழாத் தன்மையுடன் வெளிப்படுத்தியவர். ஈழத்தின் முக்கிய கவிஞராகவும், விமர்சகராகவும், புனைகதையாளராகவும், நாடக ஆசிரியராக வும், நடிகராகவும் விளங்கியவர்.

1961ல் மேடையேறிய 'இலங்கேஸ்வரன் 'நாடகத்தில் இராவணனாக நடித்தார். ஊரில் தைப்பொங்கல், சித்திரைப் புத்தாண்டையொட்டி 70களில் இடம் பெற்ற விழாக்கள் பலவற்றிற்கும், அவ்வேளை நிகழ்ந்த விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், கவியரங்குகள் ஆகியவற்றிற் கும் இவருடைய வழிகாட்டுதலும், ஆலோசனைகளும் பெருமளவில் உதவின.

பாண்டிருப்புக்கெனத் தனியான சந்தை ஒன்றை உருவாக்க வேண்டுமென்ற எண்ணக் கருவை விதைத்து 1966 இல் அதை செயற்படுத்திக் காட்டிய ஒருவர்.
(இம் மலரின் பிறிதொரு பக்கத்தில் இவரைப் பற்றிய மேலதிகக் குறிப்புகள் உண்டு )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு.சின்னத்தம்பி செல்லத்துரை



1915 ல் நீலாவணையில் பிறந்த இவர் திருமண நிமித்தம் பாண்டிருப்பு வாசியானார். ஆசிரியராகவும் அதிபராகவும் விளங்கியவர்.எனினும் பாட்டனார், தந்தை வழியாகத் தன்னையும் வந்தடைந்த சோதிடக் கலை மூலமே இப் பிரதேசத்தைத் தாண்டியும் இவர் பிரபல்யம் பெற்றிருந்தார்.சோதிடம் என்பது கணித பாடமென்ற அத்திவாரத்தில் எழுப்பப் படும் ஒரு மாளிகை என்பதை இவர் நன்கறிந்து வைத்திருந்தார். அதனால் இவர் கணித்துக் கூறும் சோதிட பலன்கள் சிறப்பாக அமைந்தன என்று பலரும் கூறுவதுண்டு.

சமயம் சார்ந்த போட்டிகள், நிகழ்வுகள் பலவற்றிலும் நடுவராக அல்லது சிறப்புப் பேச்சாளராக விளங்கியவர். தன்னடக்கம் மிக்கவர். 2002 ல் இவர் காலமானார்.அவருடைய இறுதிச் சடங்குகள் நடை பெற்ற போது பல சமயங்களையும் சேர்ந்த அன்பர்கள் பெருமளவில் குழுமியிருந்தனர். அவர் சிறந்த மனிதராக வாழ்ந்து காட்டியவர் என்பதற்கான மரியாதை அது.


## டாக்டர்.மயில்வாகனம் முருகேசபிள்ளை



1931 ல் யாழ்ப்பாணம் கரவெட்டியில் பிறந்த இவர் ஒரு வைத்தியராகக் கல்முனைக்கு 1962 ல் வந்தவர். வைத்தியத்தை ஒரு தொழிலாகக் கருதாமல் சேவையாகப் புரிந்தவர்.இதனாலேயே இன-மத வேறுபாடுகளைக் கடந்து அனைவருடைய மனங்களிலும் இடம் பிடித்தார். கலை-இலக்கிய ஆர்வலராகவும், புரவலராகவும் விளங்கியவர். இவர் முன்னிலை பெற்றுக் கலந்து கொள்ளாத கலை-இலக்கிய-சமய நிகழ்வுகள் அக் காலத்தில் அரிதென்றே கூறலாம். இவர் மீது கொண்ட அபிமானத்தினாலும், அன்பினாலும் இவருடைய சேவையைப் பாராட்டி இப் பிரதேசத்தின் தமிழ்-முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து 1998ல் கல்முனையில் பெரு விழாவொன்றினை எடுத்தனர். வாகன அணிகளும், மக்களும் பின் தொடர, திறந்த வாகனத்தில் பவனி வந்த டாக்டரை வரவேற்கவும், வாழ்த்தவும் அன்றைய தினம் கல்முனை நகரம் விழாக்கோலம் பூண்டிருந்தது. 2003 ல் கல்முனையில் காலமான டாக்டரின் இறுதிச் சடங்குகள் அவர் ஏற்கனவே கூறியதற்கிணங்க மிகவும் எளிமையான முறையில் இடம் பெற்றன.

## 16. திரு.யோகம் வேலுப்பிள்ளை

மிகவும் கண்டிப்பான அதிபர் எனப் பெயரெடுத்திருந்த



இவருடைய வருகைக்குப் பின்னரே உவெஸ்லி உயர்தர பாடசாலை மீண்டும் புத்தெழுச்சி பெற்றது என்றால் அது மிகையான கூற்றல்ல. பள்ளிக்கூடத்தின் சுவர்களுக்குள் மாத்திரம் தன் சேவையை முடக்கிக் கொள்ளாமல் வேறு எல்லைகள் வரை அதனை விரிவு படுத்திக் கொண்டவர். ஆளுங் கட்சி, எதிர்க் கட்சி அரசியல்வாதிகளுடன் அவருக்கிருந்த தனிப்பட்ட நட்பு பள்ளிக்கூடத்தின் அபிவிருத்தி சம்பந்தப் பட்ட விடயங்களுக்குப் பெரிதும் உதவிற்று. இந்தப் பிரதேசத்தின் இன்ப-துன்பங்கள் பலவற்றிலும் பங்கெடுத்துக் கொண்டவர். அவருடைய திடீர் மரணம் கல்முனையை உலுக்கிற்று எனக் கூறலாம்.

## திரு. அருளம்பலம் வேதநாயகம்



1953 ல் பெரிய நீலாவணையில் பிறந்த இவர் கல்வியின் மூலம் தன்னை வளர்த்துக் கொண்ட ஒருவர்.இப் பிரதேசத்தின் பல்வேறு பாடசாலைகளிலும் கல்வி பயின்ற இவர் இடை நடுவே வவுனியா விவசாயப் பாடசாலையில் விவசாய டிப்ளோமா பட்டம் பெற்று காணித் திணைக்களத்தில் வெளிக்களப் போதனாசிரியராகக் கடமையாற்றினார். பின்னர் 1977 -1979 காலப் பகுதியில் அம்பாறை சீனிக் கூட்டுத் தாபனத்தில் போதனாசிரியராகக் கடமையாற்றினார்.இக் காலப் பகுதியில் க.பொ.த. (உயர்தர) பாடநெறியைப் பூர்த்தி செய்து, தனிப் பட்ட பரீட்சார்த்தியாகத் தோன்றி, சிறந்த பெறுபேறு பெற்று, பேராதனைப் பல்கலைக்கழகம் சென்றார். 1985 ல் வர்த்தக மாணி பட்டம் பெற்றார்.

உதவி ஆசிரியராக நியமனம் பெற்று பணியாற்றிய இவர் 1987 ல் பெரியநீலாவணை விஷ்ணு வித்தியாலயத்தின் அதிபர் ஆனார்.இவர் இப் பாடசாலையின் உயர்ச்சிக்காக இரவு பகல் பாராது, அயராது பாடு பட்டார். சிறந்த ஆளுமைப் பண்புகளைக் கொண்ட இவரின் நிர்வாகத்தில் பாடசாலை மேன்மையான நிலையை எட்டியிருந்தது. இவரது காலத்திலேயே -1987 ல்- இந்தப் பாடசாலை 1உ ஆகத் தரமுயர்ந்தது.க.பொ.த. (உயர்தர) வகுப்புகள் ஆரம்பிக்கப் பட்டு, மாணவர்கள் பல்கலைக் கழகம் செல்ல வழி சமைக்கப் பட்டது.

தான் பிறந்த கிராமத்தையும், பாடசாலையையும் இரு கண்களாகப் போற்றினார். கிராம மக்களுடன் மிகவும் அன்னியோன்னியத்துடன் பழகினார்.
1995 ல் அகால மரணமடைந்தார்.

## 8. திரு. ஆறுமுகம் வேல்முருகு



1937 ல் பிறந்தவர்.தொழில் சார்ந்து ஓர் ஆசிரியராக விளங்கினாலும் கூட மக்கள் மத்தியில் துடிப்பான ஓர் அரசியல்வாதியாகவே இவர் அடையாளம் காணப்பட்டார். அம்பாறை மாவட்டத்தில் தமிழரசுக் கட்சியின் வளர்ச்சிக்கு முன்னின்று உழைத்தவர். இம் மாவட்டமெங்கும் தன் மேடைப் பேச்சுகள் மூலமும், மக்கள் சந்திப்புகள் வாயிலாகவும் விழிப்புணர்வூட்டியவர். சமூக செயற்பாட்டாளர். இதனால் பல இன்னல்களை இவர் எதிர் கொண்டார். இவர் இயங்கிய காலம் மிகவும் உக்கிரம் நிறைந்தது. துப்பாக்கி அரசியல் மேலோங்கியிருந்த இந்தக் காலத்தில் எவரும் எதிர்பாராத விதத்தில் - 1988 ல்- கல்முனையில் கொல்லப்பட்டார். அதிர்ச்சியில் கல்முனை உறைந்து போனது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 12. திரு. திருவிளங்கம் பாஸ்கரன்



1941 ல் பாண்டிருப்பில் பிறந்த இவர் பின்னாட்களில் முக்கியமான கலை-இலக்கிய-சமய-அரசியற் செயற்பாட்டாளராக விளங்கியவர்.1960 தொடக்கம் இலங்கை தமிழரசுக் கட்சியின் தொண்டனாக விளங்கினார். அதன் ஸ்தாபகத் தலைவர்களின் நம்பிக்கையைப் பெற்று, அம்பாறை மாவட்டத்துக்கான கட்சிச் செயலாளராகவும், ஆலோசராகவும் விளங்கியவர். கட்சி ஏற்பாடு செய்த சாத்வீகப் போராட்டங்கள் பலவற்றில் கலந்து கொண்டவர்.

1962 ல் நிகழ்ந்த இன வன்முறைகளின் போது இடம் பெயர்ந்து வந்த மக்களை பாண்டிருப்பில் இருந்த அரச காணிகளில் குடியமர்த்துவதற்கான முயற்சிகளில் முன்னின்று உழைத்தவர்களில் இவரும் ஒருவர்.

பாண்டிருப்பு அறிஞர் அண்ணா மன்றத்தின் தலைவராக இருந்து சமூகப் பணிகள் பலவற்றை ஆற்றியிருந்தார். 'பாண்டித் தமிலன்' என்ற புனைபெயரைக் கொண்ட இவர் 'அரும்பு கலா மன்றத்தை உருவாக்கி, மேடை நாடகங்கள் பலவற்றை எழுதி, அரங்கேற்றி, நடித்துமுள்ளார். வானொலிக்கென நாடகப் பிரதிகள் எழுதியுள்ளார். பத்திரிகைகளில் இவருடைய கவிதைகள், கட்டுரைகள் பிரசுரமாகியுள்ளன. தன் படைப்புகளை 'வதனா வெளியீடா'க வெளிக் கொணர்ந்தார்.

சுமார் 35 ஆண்டு காலமாக பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய உற்சவப் பொழுதுகளில் 'மகாபாரதத்துக்கு பொருள் சொல்லும் ' பணியை ஆற்றி வந்தார்.கந்தபுராண வதைபடலத்திற்கு பொருள் தரும் பணியையும் இவ்வூர் மற்றும் சுற்று வட்டார ஆலயங்களில் மேற் கொண்டார் ஆயுர்வேத மருத்துவத்திலும் இவர் தேர்ச்சி பெற்றவர். தன் அந்திம நாட்களிலும் 'முதியோர் சங்கத்' தலைவராக விளங்கி சேவைகள் பல புரிந்தார். 2017ல் காலமானார்.

## 13. திரு.சின்னத்தம்பி சிவலிங்கம் (தொண்டர்)



1921 ல் பாண்டிருப்பில் பிறந்தார். கல்வி கற்கும் காலத்தில் அவர் மிகவும் துடிப்பும், குழப்படியும், குறும்புத்தனமும் மிக்க மாணவர். அவருடைய ஆசான் அவரை 'சூரன்' என்று இதனாலேயே அழைத்தார். ஒரு காலத்தில் சூரத்தனங்கள் செய்த அவர் பின்னாட்களில் சமயத்துக்காகத் தன்னை அர்ப்பணித்தார். இந்தப் பிரதேசங்களின் இந்து ஆலயங்கள் பலவற்றினதும் உற்சவ காலங்களில் அவரைக் காணலாம். பக்திப் பரவசத்துடன் கசிந்துருகும் அவருடைய குரலை ஒலிபெருக்கிகள் வாயிலாகக் கேட்கலாம். பிரசங்கங்கள் செய்தல், புராண படலங்களைப் படித்தல், மகாபாரதக் கதை படித்தல் என அவை வெளிப்பட்டன.

'முருகன் மனமுருக விண்ணப்பம் – நமசிவாய மாலை' எனும் நூலை 1977 லும் 'கிழக்கிலங்கையில் வீசிய சூறாவளி ஒப்பாரியும், துயர் மாற்றும் பதிகமும்' எனும் நூலை 1979 லும் வெளியிட்டார்.

1972 ல் இவருடைய சமயப் பணியை மெச்சும் விதத்தில் காஞ்சிப் பெரியார் 'தொண்டன்' என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தார். 2006 ல் மறைந்தார்.

## 14. சுவாமி. ஸ்ரீ சிதானந்த சரஸ்வதி யோகி



1912 ல் பாண்டிருப்பில் பிறந்த இவருடைய இளமைப் பெயர் காசிப் பிள்ளை என்பதாகும். தன் பிள்ளைப் பராயத்திலேயே தந்தையை இழந்த இவர், ஐந்தாம் வகுப்புக்கு மேல் கல்வியைத் தொடர முடியாத நிலையில் தாயாருடன் திருகோணமலை சென்று பல்வேறு தொழில்கள் புரிந்தார். பின்னர் பிரித்தானியக் கடற்படையில் சுமார் 20 வருடங்கள் கடமையாற்றினார். மீண்டும் பாண்டிருப்பு திரும்பிய இவர் பெரிய தச்சுக் கூடமொன்றை நிறுவி, இளைஞர்கள் பலருக்கும் தொழில் வாய்ப்புகளை வழங்கினார்.

ஆன்மீக ஈடுபாடு கொண்ட இவர் பாண்டிருப்பு மாரியம்மன் கோயில் அமைவதற்கு உந்துகோலாக இருந்தார். அதன் திருவிழாக் காலத்தில் 'பறவைக் காவடி' எடுத்து மக்களைப் பக்திப் பரவசத்தில் ஆழ்த்தினார்.1970 களில் இந்தியா சென்று ஸ்ரீலஸ்ரீ பசுபலிங்கம் ஸ்வாமிகளிடம் யோகக் கலையைப் பயின்று ஸ்வாமி ஸ்ரீ சிதானந்த யோகி என்ற பெயருடன் ஊர் திரும்பினார். இந்தப் பிரதேசத்தில் மட்டுமின்றி நாட்டின் பல பாகங்களிலும் இக் கலையைப் பயிற்றுவித்தும், பரப்பியும் வந்தார்.அமெரிக்கப் பெண் ஒருவரின் உதவியோடு இமாலயம் சென்று, அங்கு பயற்சியும், ஞான தீட்சையும் பெற்று ஸ்ரீலஸ்ரீ சிதாணந்த சரஸ்வதி யோகி என்ற நாமத்துடன் நாடு திரும்பினார். யோகக்கலை சம்பந்தமாக சில நூல்களை எழுதியுமுள்ளார். 2008ல் அமரத்துவம் எய்தினார்.

## 19. டாக்டர் (திருமதி ) ஷாந்தி விக்கிரமசிங்ஹ



1950களின் நடுப்பகுதியில் தன் வைத்தியத் தொழில் நிமித்தம் கல்முனைக்கு இந்தப் பெண்மணி வந்தார். இவருடைய பூர்வீகம் இந்தியாவின் மேற்கு வங்காளம். குருணாகலைச் சேர்ந்த திரு. விக்ரமசிங்ஹ என்பவரைத் திருமணம் செய்தமையால் இலங்கை மண்ணுக்கு வந்தவர்.

இவருடைய வருகை இந்தப் பிரதேசத்தின் பெண் நோயாளிகளுக்கு ஓர் ஆறுதலைத் தந்தது. கூச்சம் என்ற திரையை விலக்கித் தங்கள் பிரச்சினைகளை மனம் விட்டுக் கூறுமளவுக்கு ஆக்கியது. எப்போதும் புன்னகை பூத்த அழகிய முகம், இங்கிதமான வார்த்தைகள், பலனளிக்கும் மருத்துவம் என்பவற்றால் பலரையும் கவர்ந்தார்.

கல்முனை சமூகத்தின் பல மட்டத்தினரையும் நன்கு தெரிந்து வைத்திருந்த அவர் தன் செல்வாக்கின் மூலம் பலருக்கும் உதவியிருக்கின்றார். பலருடைய இன்பதுன்பங்களிலும் பங்கேற்றிருக்கிறார்.

1985 ல் ஒரு நாள் இரவு, அவருடைய மருத்துவ மனைக்குள் நோயாளி எனக் கூறிக் கொண்டு நுழைந்த கொடூரன் ஒருவன் இயக்கமொன்றின் பெயரைக் கூறி அச்சுறுத்திக் கப்பப் பணம் கோரினான். அவர் மறுக்கவே, ஈவிரக்கமின்றி அவரின் குரல்வளையில் கத்தியால் குத்திக் குற்றுயிராக்கி விட்டு அங்கிருந்து அகன்றான்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வைத்தியசாலைக்கு அவரைக் கொண்டு சென்ற போதும், பலன் கிடைக்கவில்லை. மேற்கு வங்காளத்தின் கிராமமொன்றில் பிறந்த அந்தப் பெண் மணி கல்முனையின் மயானத்தில் கல்லறையொன்றின் கீழ் இந்த மண்ணுடன் கலந்து போயுள்ளார்.

## 20. திரு. தோமஸ் அந்தோனிப்பிள்ளை



1910 ல் மட்டக்களப்பில் பிறந்த இவர் பின்னாட்களில் கல்முனை வாசியானார். தமிழரசுக் கட்சியின் தீவிர ஆதரவாளர். நகரத்தின் மத்தியில் இருந்த அவருடைய வளவில் இந்தக் கட்சியின் பொதுக் கூட்டங்கள் பல இடம் பெற்றிருக்கின்றன. கல்முனை நகரத்தின் எல்லையில் உள்ள தரவைப் பிள்ளையார் கோயில் காணி சம்பந்தமான பிணக்குகள் ஏற்பட்ட போது, அது தமிழருக்குரியது என உரிமைக் குரலெழுப்பி, அதை மீட்பதில் போராடியவர். இனக்கலவரங்கள் ஏற்பட்ட போது அல்லலுற்ற மக்களுக்காகக் குரல் கொடுத்தவர். எல்லாவற்றினும் மேலாகக் கல்முனையில் இன-மத பேதமின்றி ஆங்கிலக் கல்வியை மாணாக்கருக்குப் புகட்டியவர். 1986 ல் இவர் காலமானார்.

## 22. ஓவியர் திரு.கதிர்காமர் செல்வசுந்தரம்



1941 ல் கல்முனையில் பிறந்த இவர் பின்னாட்களில் 'ஆர்ட்டிஸ்ட் சுந்தரம்' என்ற பெயரால் பரவலாக அறியப் பட்டார். தத்ரூபமாக ஓவியங்கள் வரைவதில் ஆற்றல் பெற்றிருந்த இவர் நாளடைவில் தொழில் முறை ஓவியர் ஆனார். குறிப்பிட்டதொரு கால கட்டத்தில் கல்முனை நகரின் கடைகள் பலவற்றினதும் 'பெயர்ப்பலகைகளில்' இவருடைய கைவண்ணம் வெளிப்பட்டது.


அகில இலங்கை சமாதான நீதிவானாகவும், கல்முனையின் பாடசாலைகள் சிலவற்றின் அபிவிருத்திக் குழு உறுப்பினராகவும், கல்முனை வடக்கு ஆதார வைத்திய சாலை அபிவிருத்திக் குழு உறுப்பினராகவும், கல்முனை மூன்றாம் குறிச்சி அபிவிருத்திக் குழுவின் தலைவராகவும் விளங்கியவர். 31.03.2013 ல் காலமானார்.

## 24. டாக்டர். இரா.சிவ அன்பு



1939 ல் வல்வெட்டித்துறையில் பிறந்த இவர் மாத்தளை, திருகோணமலை, மானிப்பாய், கெக்கிறாவை, மலையகம் ஆகிய இடங்களில் வைத்தியராகப் பணி புரிந்தவர். எனினும் தொழில் நிமித்தம் அவர் கால் பதித்த கல்முனையே இறுதி யில் நிரந்தர வசிப்பிடமாக ஆயிற்று. வைத்தியரான இவர் சமூகத்தில் தன் சமயப் பணிகளுக்காகவே அதிகௌரவம் பெற்றார். சைவசமயம் சார்ந்த கதாப்பிரசங்கங்கள், சொற்பொழிவுகள் மக்கள் மத்தியில் சிறப்பிடம் பெற்றன. அவருடைய ஆற்றல் இலங்கையின் பல பாகங்களுக்கும், இந்தியா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கும் அவரை அழைத்துச் சென்று சமய வளர்ச்சிக்கான காரியங்களில் ஈடுபட வைத்திருக்கின்றன. தன் திறமையினதும், ஞானத்தினதும் பொருட்டு அவர் பெற்ற பட்டங்கள் இவை : அருட் கலைத் திலகம் (இந்து சமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சு-1993), கலா பூஷணம் (கலாசார அலுவல்கள் திணைக்களம் -2004),ஞானவாரிதி (அகில இலங்கை சபரிமலை ஶ்ரீசாஸ்தா பீடம்), சாயிசாகரம் (பாண்டிருப்பு இந்து மத பேரவை), சிவநெறிச் செல்வர் (லண்டன் ஶ்ரீமுத்து மாரியம்மன் தேவஸ்தானம் -1996), கதாப் பிரசங்க மாமணி (வல்வை ஶ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம் -1996), சாயி கதாமிர்த பானு (மட்/கல்லடி பகவான் ஶ்ரீ சத்ய சாயி சேவா நிலையம் -1997), சிவத் திரு (நாச்சிமார் கோயில் தேவஸ்தானம்), அன்பரசன் (மட்/கல்லடி பகவான் சத்ய சாயி சேவா நிலையம் -2004) சமய உலகின் முக்கியமான இந்தக் குரல் 2005 ல் ஓய்ந்து போனது.

## 25. டாக்டர். இரத்தினம் மதனகோபால்



பருத்தித்துறையில் 1950 ல் பிறந்த இவர் பாண்டிருப்பிலும் பின்னர் கல்முனையிலும் வாழ்ந்தவர். இவர் தலைவராக இருந்த பாண்டிருப்பு விளையாட்டுக் கழகம் ஏழு ஆண்டுகள் தொடர்ச்சியாக கல்முனை உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் நடத்திய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்திருக்கிறது.

1967 ல் அறிஞர் அண்ணா மன்றத்தின் இணைச் செயலாளராகவிருந்து சமூகப் பணிகள் புரிந்திருக்கிறார். பின்னர் உதய சூரியன் மன்றத்தின் தலைவராக இருந்து மேடை நாடகம், ஆலயப் பணிகளில் கவனம் செலுத்தினார். கல்முனை சமூக மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு 'சாலூ ரம்' எனும் ஓர் அமைப்பை நிறுவி, பணிகள் பலவற்றை செய்ததுடன் இறுதி வரை அதன் தலைவராகவும் இருந்தார். சுனாமியின் பின்னர் நிகழ்ந்த சிரமதானங்கள், கடற்கரையில் அமைக்கப் பட்ட இருக்கைகள், மரணித்தவர்கள் நினைவாக அங்கே அமைக்கப் பட்ட தூபி, மீளமைக்கப் பட்ட மாமாங்கப் பாடசாலை, இலவசமாக வழங்கப் பட்ட தையல் இயந்திரங் கள், துவிச்சக்கர வண்டிகள் என்பவற்றின் பின்னணியில் இவருடைய 'சாலூரம்' அமைப்பு இருந்துள்ளது.

இந்தப் பிரதேசத்தின் பல்வேறு ஆளுமைகளையும் கௌரவிக்கு முகமாக சாலூரம் நடத்திக் காட்டிய பெருவிழா அவருடைய தலைமைப் பண்புக்கு ஓர் எடுத்துக்காட்டு. கல்முனை வைத்தியசாலை உட்பட இப்பிரதேசத்து மக்கள் எதிர் கொண்ட பல பிரச்சினைகளின் போது இவரும், இவருடைய அமைப்பும் அதிகாரத் தரப்புடன் பேச்சு வார்த்தைகள் நடத்தியிருந்தன. இனிமையான சுபாவம் கொண்ட இவர் சாமானியர்களுக்கு மிகவும் நெருக்கமான ஒரு வைத்தியர். 2009 ல் இவர் காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26. திரு.இளையதம்பி சிவானந்தநாயகம்




1938 ல் மண்டூரில் பிறந்த சிவானந்த நாயகம் அவர்கள் திருமணத்தின் பின்னர் -1965 இலிருந்து - கல்முனையில் வாழ்ந்தவர். கல்முனையின் புகழ் பெற்ற ஆசிரியர்களுள் ஒருவர்.ஆசிரியராக, அதிபராக, ஆசிரிய ஆலோசகராக பணி புரிந்த இவர் 1996 ல் ஓய்வு பெற்றார்.

உத்தியோக பூர்வ ஓய்வுக்குப் பின்னரும், தன்னுடைய ஆங்கில மொழியறிவு காரணமாக சம்மாந்துறை, தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் பகுதி நேர ஆங்கில விரிவுரையாளராகவும், சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரியில் ஆங்கிலப் பாட விரிவுரையாளராகவும், கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியில் ஒப்பந்த அடிப்படையிலான ஆங்கில ஆசிரியராகவும் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

அந் நாட்களில் இந்தப் பிரதேசத்தில் விளையாட்டுப் போட்டிகள் நிகழும் போது அங்கேயுள்ள ஒலிபெருக்கிகள் வாயிலாக அவரின் அழகிய ஆங்கில அறிவிப்புகள் காற்றோடு கலந்து நம் காதுகளை அடைவதுண்டு.1975 ல் கல்முனை கலாலயம் என்ற பெயரில் நாடக மன்றம் ஒன்றை அமைத்து நடிகராகவும், நெறியாளராகவும் இயங்கினார்.

முறையாக இசை கற்கா விட்டாலும் இனிமையாகப் பாடக் கூடியவர். இசை ஞானமும்,ரசனையும் கொண்டவர் தமிழ் மொழி தினப் போட்டிகள் பலவற்றில் நடுவராகப் பங்கேற்றவர். கல்முனை இந்து இளைஞர் மன்றத் தலைவரா கவும், கல்முனை முதியோர் சமாசத்தின் செயலாளராகவும், கிராமோதய சபையின் தவிசாளராகவும், மத்தியஸ்தர் சபையின் உறுப்பினராகவும், பிரசித்த நொத்தாரிஸாகவும் விளங்கியவர். சுனாமியால் நேரடியாகப் பாதிக்கப் பட்ட இவர் மனமும், சரீரமும் துன்புற்ற நிலையில் 2005ல் காலமானார்.

## திரு.கறுவல்தம்பி கந்தக்குட்டி



பாண்டிருப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் திருமணத்தின் பின் சேனைக்குடியிருப்பில் குடியேறினார். அஞ்சல் துறை ஊழியராகக் கடமை புரிந்த இவர் ஒரு சிறந்த கலைஞர். தான் தயாரித்து நடித்த நாடகங்கள் மூலம் 'ஹாஸ்ய மன்னன் கந்தக்குட்டி' ஆனார். மேடையில் தோன்றிய மறுகணமே சபையில் பலத்த சிரிப்பொலியை ஏற்படுத்தும் 'உடல் மொழி' அவருக்கு வாய்த்திருந்தது.

இவருடைய அநேகமான நாடகங்கள் பண்டிகை காலத்தையொட்டிய 'திடீர்த் தயாரிப்புகளாக', திரௌபதி அம்மன் ஆலய வீதியில் மேடையேறின. பிரதி என்று எதையும் வைத்துக் கொள்ளாமல் 'ஒரு கோட்டினை வைத்துக் கொண்டு 'கோலம் வரையும் முயற்சிகளாக அவை இருந்தன. ஊர் விவகாரங்கள், குத்து வெட்டுகள், சூடான செய்திகள் இவற்றைக் கிண்டலுடன் மேடையில் இவரும், இவருடைய குழுவினரும் அலசும் பாணி வரவேற்புப் பெற்றிருந்தது.

இவருடைய நாடகங்களைப் பார்க்க ஊர் மக்கள் உற்சாகமாகக் கூடினார்கள்.நாடகக் கோட்பாடுகள் எவற்றையும் கற்காமலேயே பலரையும் கவர்ந்த 'மக்கள் கலைஞனாக' இவரைக் கூறலாம். நூற்றுக்கு மேற்பட்ட நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றிய கலைஞர் இவர். இவருடைய 'வா கோர்ட்டுக்குப் போக ' என்ற நாடகம் பல ஊர்களில் பல தடவைகள் மேடையேறியது.

அருட் சகோதரர் எஸ்.ஏ.ஐ.மத்தியு, உமா வரதராஜன் ஆகியோரின் முயற்சியினால் கல்முனை ரோட்டரிக் கழகம் அவரை கௌரவித்து விருது வழங்கியது.

## 30. திரு.நவரெத்தினம் நல்லரெத்தினம்



இவர் நற்பிட்டிமுனையில் 1945ல் பிறந்தார். ஆரம்பக் கல்வியை நற்பிட்டிமுனை அ.த.க. பாடசாலையிலும் (தற்போதைய சிவசக்தி மாவித்தியாலயம்) பின்னர் கல்முனை ஸ்ரீஇராமகிருஷ்ண மகா வித்தியாலயத்திலும் கற்றர். உயர் கல்வியை மட்டக்களப்பு அரசினர் கல்லூரியில் தொடர்ந்தார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டு கலைமாணிப் பட்டத்தைப் பெற்றார்.

இவர் பட்டப்படிப்பை முடித்து வெளியேறிய காலத்தில் இலங்கையில் சேகுவரா புரட்சி உக்கிரமடைந் திருந்தது. அரச பணிகளில் ஈடுபடாதிருந்த பல்கலைக் கழகப் பட்டதாரிகள் கைதுசெய்யப்பட்ட காலம்.இதனால் ஆசிரியத் தொழிலில் நாட்டமிருந்தும் கூட, உடனடியாக கிடைத்த கூட்டுறவு பரிசோதகர் பதவியிலேயே 1970களில் நுழைய வேண்டியேற் பட்டது. ஓய்வு பெறும்போது கூட்டுறவுத் திணைக்களத்தில் கணக்காய்வு அபிவிருத்தி உத்தியோகத் தராகப் பதவி வகித்தார்.

1969 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக் கழகத்திலிருந்து பட்டதாரியாக வெளிவந்த இவர் பிரத்தியேக கற்பித்தலில் ஈடுபட்டார். அக்காலத்தில் கல்முனைப் பிரதேசத்தில் உயர்தரம் கற்பிக்க போதிய ஆசிரியர் வளம் இருக்கவில்லை. இதனால் தமிழ், பொருளியல், இந்து நாகரீகம், வர்த்தகம் ஆகிய நான்கு பாடங்களையும் தானே கற்பித்தார்.

நற்பிட்டிமுனையில் திருத்தணிகை வளாகம் என்ற கல்வி நிலையத்தை நிறுவி ஏழை மாணவர்களுக்கு பணம் பெறாமலேயே கற்பித்தார். தன் கிராமமான நற்பிட்டிமுனை மற்றும் அயல் கிராமங்களில் எட்டாம், ஒன்பதாம் வகுப்புடன் பாடசாலையிலிருந்து இடைவிலகி, பல்வேறு காரணங்களால் தொடர்ந்து கற்க முடியாத இளைஞர்களின் நிலை கண்டு கவலை கொண்டார். இதனை நீக்குவதற்காக அத்தகைய மாணவர்களைத் திரட்டி தனது வீட்டிலேயே கற்பித்தார். இவ்வாறு பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய பலர் சாதாரண தரம்- உயர் தரம் என தொடர்ந்து கற்று பல்கலைக்கழகம் சென்றனர். பலர் வெளிவாரியாக பட்டப்படிப் பையும் மேற்கொண்டனர். மாணவர்கள் சேர்ந்திருந்து கற்பதற்காக தனது வீட்டில் ஒருபகுதியை ஒதுக்கிக் கொடுத்து, அவர்களின் கற்றல் செயற்பாடுகளை இரவுப் பொழுதுகளில் கண்காணித்து, கண்டித்து, வழிநடத்தினார். நற்பிட்டிமுனையில் கல்வி அலைவீசிய ஒரு காலத்தை இவர் உருவாக்கினார். கல்முனைக் கல்விப் புலத்தில் படிப்படியாக ஆசிரியர் வளம் வளர்ந்த பின்னர் தமிழ் பாடத்தில் மட்டும் தனது கற்பித்தலை மட்டுப்படுத்திக் கொண்டார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிறந்த பேச்சாளாராகவும் விளங்கிய அமரர் நல்லரெத்தினம், பல்வேறு கலை இலக்கிய பங்கேற்புகளையும் இப்பிரதேசத்திற்கு நல்கியுள்ளார். இவரது கல்விசார் தொகுப்புகள் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு துணையாய் அமைந்தன. அவற்றில் "தமிழ் இலக்கணத் தெளிவு", ஈழத்து தமிழ் மணிகளின் தமிழ்ப் பணிகள்", "ஈழத்துப் பெரியார்கள்" முதலான கட்டுரைத் தொகுப்புகள் ஆகியவை முக்கியமானவை.


இப்பிரதேசத்தில் தன் தனி மனித கல்விச் சேவை மூலம் நன்கு அறியப்பட்ட இவர் இறுதிவரை கல்விப் பணிக்காகவே வாழ்நாளைச் செலவிட்டார். 2006.12.05 அன்று காலமானார்.

## 31. டாக்டர்.கிருஷ்ணபிள்ளை ராகவன் பிள்ளை



தென்னிந்தியாவில் 1923 ல் பிறந்த இவர் தொழில் நிமித்தம் கல்முனை வாசியானார். கிழக்கு மாகாணத்தில் ஹோமியோபதி வைத்திய முறையை அறிமுகப் படுத்தியவர் இவரே என்பது குறிப்பிடத் தக்கது. அவர் வழங்கிய 'நிறமற்ற மருந்து 'அக்காலத்தில் மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்க வேண்டும். 'பச்சைத் தண்ணி டொக்டர்' என்ற பெயரால் அவர் பலராலும் குறிப்பிடப் பட்டார். அவரை நாடி ஏராளமான நோயாளிகள் வந்தனர்.

## 32. திரு. சீனித்தம்பி குணரத்தினம் ஆசிரியர்



1972 ல் பிறந்த இவர் நற்பிட்டிமுனை வாசியாவார். உவெஸ்லி உயர்தர பாடசாலையில் கல்வி கற்ற இவர் அங்கேயே ஆசிரியராக, உப அதிபராகப் பணியாற்றியுமுள்ளார். கிராமோதய சபைத் தலைவராகவும், பிரஜைகள் குழுத் தலைவராகவும், இந்து மகா சபைத் தலைவராகவும் விளங்கியவர். வீரகேசரி வார இதழ்களில் இலக்கியம் சம்பந்தப் பட்ட கட்டுரைகளை எஸ்.குணம் என்ற பெயரில் எழுதியுள்ளார். இவருடைய முயற்சியில் 'பவளக் கொடி', 'அல்லி அர்ஜுனா' ஆகிய நாட்டுக் கூத்துகள் மேடையேறியுள்ளன.

## 33. திரு.காசுபதி சுப்பிரமணியம்



1929 ல் கல்முனையில் பிறந்த இவர் திருமண நிமித்தம் நற்பிட்டிமுனை வாசியானவர்.34 வருடங்கள் கல்விப் பணியில் இணைந்திருந்தவர்.கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையின் அதிபராகப் பணியாற்றிய காலத்தில் மாணவர்களுடனும், ஆசிரியர்களுடனும் அன்புடனும், ஆதரவுடனும் நடந்து கொண்டவர். இவர் அம்பாறை மாவட்ட தமிழர் மகா சபையின் தலைவராகவும், சைவ மகாசபை, இந்துக்கள் பேரவை ஆகியவற்றின் முக்கியஸ்தராகவும் விளங்கியவர். பாரபட்சத்துடன் நடத்தப் படும் மக்களுக்காகக் குரல் எழுப்பும் அமைப்பொன்றின் தலைவராக விளங்கியவர் என்ற வகையில் இவருடைய பணி துணிச்சலானது. உவெஸ்லி உயர்தர பாடசாலையில் இவர் பணியாற்றிய காலமும், தமிழர் மகா சங்கத்தில் தலைவராக இவர் விளங்கிய காலமும் மிகவும் இக்கட்டானது. இனக்கலவரங்களின் போது அபயக் குரல் எழுப்பி வந்த மக்களை இவர் பணியாற்றிய கல்லூரி வாஞ்சையுடன் அரவணைத்துக் கொண்டது.

## 34. திரு.சங்கரப்பிள்ளை நாகமணி



1939 ல் சேனைக்குடியிருப்பில் பிறந்து, அங்கேயே வாழ்ந்தவர். ஆசிரியராகவும், அதிபராகவும் பணி புரிந்தவர். ஊர் மக்களால் பெரிதும் நேசிக்கப் பட்ட இவர் கிராமோதய சபைத் தலைவராகவும், சித்தி விநாயகர் ஆலயம், முத்துமாரியம்மன் ஆலயம் ஆகியவற்றின் அறங் காவலர் அமைப்பின் தலைவராகவும் இருந்திருக்கிறார். இவருடைய காலத்தில் பாதைகள் பல புனரமைப்பு செய்யப் பட்டதோடு, புதிய பாதைகளும் உருவாக்கப்பட்டன. கோயில்கள் பொலிவுற்றன.பிள்ளையார் நோன்பு, கந்த சஷ்டி விரதம், திருவெம்பாவை காலங்களில் பாடல்களைப் பாடி, அவற்றுக்குப் பொருள் சொல்லி மக்களிடையே பக்தியுணர்வைப் பரப்பினார்.

தமிழ்– முஸ்லிம் இன முறுகல் வேளைகளில் அவற்றைத் தணிக்கவும், சுமுகமான நிலைமையைத் தோற்றுவிக்கவும், பரஸ்பரம் நம்பிக்கை, நல்லிணக்கம் என்பவற்றைக் கட்டி யெழுப்பவும் அவர் 'சமாதானக் குழு' வினூடாக முயற்சிகள் மேற்கொண்டார்.

அயல்கிராமமான துரவந்திய மேடு மின் இணைப்பு பெறுவதற்கு முக்கிய காரணமாக இருந்த இவர் உள்ளூர்ப் பிரச்சினைகள்,பிணக்குகள் பலவற்றைத் தன் ஆளுமைத் திறனால் தீர்த்து வைத்தவரும் கூட.

நற்பிட்டிமுனை சிவசக்தி வித்தியாலயத்தை 11 வகுப்பு வரை தரமுயர்த்தி வைத்ததில் இவருக்கு முக்கிய பங்குண்டு. சாம ஸ்ரீ, தேசகீர்த்தி, சமாதான நீதிபதி போன்ற கௌரவங்களைப் பெற்றவர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்முனை தமிழ்ப் பிரதேச செயலக

## கலாசாரப் பேரவை விருதுகள் - 2017

இப் பிரதேசத்திலுள்ள மூத்த கலை - இலக்கிய வாதிகளினதும், சமய,சமூக செயற்பாட்டாளர்களினதும் இற்றை வரைக்குமான பங்களிப்பைக் கருத்திற் கொண்டு அவர்களை கௌரவிக்கும் விதத்தில் இவ் விருதுகள் வழங்கப்படுகின்றன.

இத் தேர்வின் போது வயது, ஆற்றல், பங்களிப்பு, ஏற்கனவே வெளியுலகில் அவர் பெற்ற அங்கீகாரம், சமூகத்துடன் அவருக்குள்ள ஒட்டுறவு என்பன கவனத்தில் கொள்ளப்பட்டன. இவ் அடிப்படையில் கலாசாரப் பேரவையின் உறுப்பினர்கள் மத்தியிலும், பின்னர் தேர்வுக் குழு மட்டத்திலும் பல கட்டங்களில் நிகழ்ந்த ஆலோசனைகளின் இறுதியில் விருதுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். விருது பெற்றவர்களின் பெயர்களும், அவர்களுடைய தகைமைகளும் இங்கே தரப்படுகின்றன. அவர்களுக்கு எங்கள் நல்வாழ்த்துகள்.

### பிரதேச கலாசார விழா - 2017
### விருதும், கௌரவமும் பெறுவோர் விபரமும், வரிசையும்



திரு.சரவணமுத்து அழகையா (1936)
திரு.மாணிக்கம் கனகசுந்தரம் (1937)
திரு.வயிரமுத்து ஞானமாணிக்கம் (1939)
திரு.முருகேசு சடாட்சரன் (1940)
திரு.நாகமணி விநாயகமூர்த்தி (1940)
திரு.வேலுப்பிள்ளை சண்முகநாதன் (1942)
திரு.பொன். செல்வநாயகம் (1942)
சிவஸ்ரீ முருகேச பிள்ளை நல்லதம்பி குருக்கள் (1943)
திரு.கிருஷ்ணபிள்ளை சுந்தரநாதன் (1944)
திரு.தினகரன்பிள்ளை செல்லத்துரை (1944)
திரு.பூபாலபிள்ளை நமசிவாயம் (1945)
திரு.வயந்தராசபிள்ளை சுப்பிரமணியம் (1946)
திரு.சிவகாமி நாதன் சிவகுருநாதன் (1947)
திரு.பொன்னையா ஏகாம்பரம் (1947)
திரு.பொன்னையா கணேசன் (1950)
திரு.கணபதி ஐயர் யோகராஜா ஐயர் (1950)
திரு.கணபதிப்பிள்ளை பாக்கியராசா (1951)
திரு.காளிக்குட்டி சந்திரலிங்கம் (1951)
திரு.சுப்பிரமணியம் அரசரெத்தினம் (1952)
திருமதி.விமலேஸ்வரி கிருபைராஜா (1952)
செல்வி.நோணிஸப்பு சரோஜா (1952)
திரு.வைரமுத்து கணேசன் (1953)
திரு.பூபாலபிள்ளை சரவணபவன் (1953)
திரு.சபாரெத்தினம் சபேசன் (1954)
திரு.உமா வரதராஜன் (1956 )
கலாநிதி.பரதன் கந்தசாமி (1957)
திரு.கதிரமலை நவமணி (1957)
திரு.சாமித்தம்பி விக்னேஸ்வரன் (1960)
திரு.ஜெயக்கொடி டேவிட் (1963)
திருமதி.திரேஸ் கமலினி பத்திரண (1965)
திருமதி.மாதுமையாள் வரதராஜன் (1965)
திருமதி.நிர்மலா தம்பிராஜா (1965)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு.சரவணமுத்து அழகையா



சேனைக்குடியிருப்பைச் சேர்ந்த இவர் பாடல்களுக்கு இசையமைப்பதில் வல்லவர். குறிப்பாக நாட்டுப் பாடல்களுக்கு இசை வடிவம் கொடுத்து, பாடுவதில் தேர்ச்சி பெற்றவர். சில வருடங்களுக்கு முன்னர் இடம் பெற்ற கிழக்கு மாகாண இலக்கிய விழாவின் போது இவரின் தயாரிப்பிலும், இசையமைப்பிலும் உருவான 'அருச்சுனன் தபசு' என்னும் நாட்டுக்கூத்து பார்வையாளர்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றது.

## மாணிக்கம் கனகசுந்தரம்



1937 ல் பாண்டிருப்பில் பிறந்த இவர் பின்னாட்களில் இலங்கை அஞ்சல் துறை ஊழியராகப் பணியாற்றினார். ஊரின் இன்பதுன்பங்களில் பங்கேற்ற சமூக செயற்பாட்டாளர் . இன வன்முறைகள் காரணமாகத் தமிழ் மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்து பாண்டிருப்புக்கு வந்த போது அவர்களைக் குடியமர்த்தும் பணிகளில் மும்முரமாக இயங்கியவர். பாண்டிருப்பு இந்து வாலிபர் சங்கத்தின் ஸ்தாபக முக்கியஸ்தர்களில் ஒருவராக விளங்கியவர். இவருடைய முன் முயற்சிகளின் பேரிலேயே ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் சிவராத்திரி, நவராத்திரி மற்றும் விசேட உற்சவ காலங்களில் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற ஆரம்பித்தன. திரௌபதை அம்மன் ஆலய இறுதி நாள் உற்சவம் (ஊர் வீதி உலா) வருடாவருடம் கோலாகலமாக நிகழ்வதற்கு கால்கோள் இட்ட முன்னோடிகளில் ஒருவர். பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயத்தில் கடந்த பல ஆண்டுகளாக மகாபாரதம் பாடி, அதற்குப் பொருள் சொல்லும் பணியை செய்து வருகிறார்

## திரு. வயிரமுத்து ஞானமாணிக்கம்



அக்கரைப்பற்றில் 1939 ல் பிறந்து பாண்டிருப்பில் வாழ்ந்து வரும் இவர் 'அக்கரை மாணிக்கம்' என்ற புனைபெயரைக் கொண்டவர். ஆன்மீகம், அறநெறி, ஆலயம் ஆகியவற்றுடன் நெடுங்காலமாகத் தொடர்பு கொண்டவர். பல்கலையிலும் தேர்ச்சி மிக்க இவர் எழுத்து, நாடகம், நாட்டுக் கூத்து, நாட்டிய நாடகம், வில்லுப்பாட்டு, கரகம், காவடி, கும்மி, கோலாட்டம் போன்றவற்றின் மூலம் பலரையும் கவர்ந்தவர். கலைப்பணிகளும் சமூகப் பணிகளும் இவர் வாழ்வுடன் பின்னிப் பிணைந்தவை. வரவேற்புப் பாடல்கள், வாழ்த்துப் பாடல்கள் எழுதுவதில் சிறந்து விளங்கும் இவரைப் பற்பல அமைப்புகளும், கல்வி நிறுவனங்களும் பட்டங்கள், விருதுகள் வழங்கிக் கௌரவித்திருக்கின்றன. நாடளாவிய ரீதியில் கலாபூஷணம், சாகித்திய விருது, கிழக்கு மாகாண முதலமைச்சர் விருது, தேசகீர்த்தி விருது உள்ளிட்ட உயரிய பல விருதுகளைப் பெற்றவர். ஓய்வு நிலைத் தபாற்தலைவரான இவர் இன்றும் சமூக சேவைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்.

## முருகேசு சடாட்சரன்



கல்முனையிலே பிறந்து, படித்து, ஆசிரியராகி, அதிபராகி, உதவிக் கல்விப் பணிப்பாளராகிக் கல்விப் பணி புரிந்த திரு .சடாட்சரன் பிரபல கவிஞராகவும், எழுத்தாளராகவும் விளங்குபவர். இது வரை வெளியான, இவருடைய நூல்கள் : மேட்டு நிலம் (புரவலர் புத்தகப் பூங்கா-2009), பாதை புதிது (நவீனன் வெளியீடு - 2012) இலக்கியத் துறை சார்ந்த உயர் விருதுகளைப் பெற்றவர். அகில இலங்கைக் கம்பன் கழகம் இவரின் தொடர்ச்சியான கவிதைப் பணிக்காக வழங்கிய 'மகரந்தச் சிறகு விருது, கலா பூஷணம், வித்தகர் ஆகியவை இவற்றில் முக்கியமானவை . இவருடைய 'மேட்டு நிலம்' சிறுகதைத் தொகுப்பு கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் விருதினையும் (2009), 'பாதை புதிது' கவிதைத் தொகுப்பு அரச சாகித்திய விருதினையும், தேசிய கொடகே விருதினையும், கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் விருதினையும் (2012) பெற்றுள்ளன. கல்முனையின் இலக்கிய அமைப்புகளான கல்முனை எழுத்தாளர் சங்கம், வியூகம், கலை இலக்கிய நண்பர்கள், தமிழ் இலக்கியக் கழகம், அகரம் கலைக் கழகம் என்பவற்றுடன் வெவ் வேறு காலகட்டங்களில் இணைந்து ஆக்க பூர்வமான பணிகளை ஆற்றியிருக்கின்றார். கல்முனைப் பிரதேசத்தின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவராக மட்டுமின்றி முக்கியமான எழுத்தாளராகவும் விளங்குபவர்.



## திரு.நாகமணி விநாயகமூர்த்தி

1940 ல் சேனைக்குடியிருப்பில் பிறந்த இவர் நாட்டுக்கூத்து உட்பட கிராமியக் கலைகள் பலவற்றிலும் பெரிதும் ஈடுபாடு கொண்டவர். 1978 இலிருந்து சமயம் சார்ந்த 35 க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியும், தொகுத்தும் வெளியிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. வேலுப்பிள்ளை சண்முகநாதன்



1942 ல் பாண்டிருப்பில் பிறந்த இவர் 'முகில்வண்ணன்' என்ற புனைபெயர் மூலம் பரவலாக அறியப்பட்டவர். எழுத்துலகில் கடந்த 56 ஆண்டுகளாக இயங்கி வருபவர். 1956 ம் ஆண்டு கல்முனை பற்றிமா கல்லூரியின் *'The Fatimate'* பத்திரிகையில் இவருடை ய முதல் கதை பிரசுரமானது. 'ஆம்பல்' என்னும் கையெழுத்துப் பத்திரிகையையும் தன் பள்ளிப் பருவத்தில் இவர் வெளியிட்டார்.

1961 ல் தினகரன் பத்திரிகையில் எழுதியதன் மூலம் தேசியப் பத்திரிகைகளில் பிரவேசித்தார். இதுவரை சிறுவர் இலக்கியப் பிரிவில் 5ம், நாவல்களாக 3ம், குறு நாவல்களாக 5ம், கட்டுரைத் தொகுப்புகளாக 11ம், கவிதை நூல்களாக 11ம், சிறுகதைத் தொகுப்புகளாக 8ம் நூல் வடிவம் பெற்றிருக்கின்றன. சமூக சேவையாளரான இவர் சமூக, சமய, கலை – இலக்கிய அமைப்புகள் பலவற்றில் உயர் ஸ்தானம் வகித்தவர். உள்ளூர் மட்டங்களில் மட்டுமின்றி அகில இலங்கை ரீதியாகவும் கலை –இலக்கியத் துறையில் கலாபூஷணம், வித்தகர் உள்ளிட்ட உயரிய பல விருதுகளைப் பெற்றிருக்கிறார்.

## திரு.பொன் .செல்வநாயகம்



பட்டதாரி ஆசிரியரான இவர் பாண்டிருப்பில் வசிப்பவர். கல்முனை சிவில் சமூகத்தினதும் , கல்முனை தமிழர் கலாசாரப் பேரவையினதும் தலைவராவார். கல்முனை தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் சமூக ரீதியான பிரச்சினைகளின் போது அவர்களுக்காகக் குரல் கொடுக்கும் ஒருவர். இம் மக்களுக்கும், தமிழர் அரசியல் தலைமைக்கும் நடுவே பாலம் போல் செயற் பட்டு வருபவர். ஓய்வு நிலை கோட்டக் கல்வி அதிகாரியான இவர் பிரதேச மட்ட பன்முக அபிவிருத்தியில் தன் வழி காட்டுதலையும், ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றார்.

## சிவஸ்ரீ முருகேச பிள்ளை நல்லதம்பி குருக்கள்



சேனைக்குடியிருப்பை சேர்ந்த இவர் சோதிட வைத்திய கலாநிதியாவார். திருநீலகண்ட தேவஸ்தான ஆதீன குரு எனக் குறிப்பிடப் படுகின்றார். 1962 ம் ஆண்டு தொடக்கம் உள்ளூர் ஆலய உற்சவ காலங்களில் புராண, சமூக நாடகங்கள் பலவற்றைத் தயாரித்து, அவற்றில் நடித்துமுள்ளார். 40 வருடகால வைத்தியத் துறை அனுபவம் மிக்கவர். சோதிடத்தின் மூலமாக கிரக பலன்களையும், தோஷங்களையும் கண்டறிந்து சாந்தி கிரியைகள் மூலம் நிவர்த்தி செய்து வருகின்றார். சமாதான நீதிவானாகவும் உள்ளார்.

## திரு. கிருஷ்ணபிள்ளை சுந்தரநாதன்



1944 ல் கல்முனையில் பிறந்த இவர், பரம்பரை வழியாக சித்த வைத்தியக் கலையை முறைப்படி கற்றவர். வினாசித்தம்பி உடையார் வைத்தியப் பரம்பரையிலே பதினோராவது தலைமுறையினரான இவர் கொழும்பு சித்தாயுர் வேத வைத்திய சபையின் பரீட்சையில் சித்தியடைந்து, அங்கீகாரம் பெற்ற வைத்தியராகப் பணி புரிகின்றார். இப் பிரதேசத்தின் பல்வேறு சமூக அமைப்புகளாலும், சித்த வைத்திய சங்கத்தினாலும், பாடசாலைகளாலும், ஆலயங்களாலும் இவருடைய சேவை பாராட்டி,கௌரவிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் ஆலய தலைவராகவும், கிழக்கு மாகாண சித்த வைத்திய சங்கத்தின் முன்னாள் தலைவராகவும், தற்போது போஷகராகவும், கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலக வைத்திய பாதுகாப்பு சபையின் தலைவராகவும், கல்முனை நீதி பரிபாலன எல்லைக்கு உட்பட்ட சமாதான நீதிவானாக வும், சித்த வைத்தியர்களைத் தேர்வு செய்யும் நேர்முகப் பரீட்சைகளின் போது பரீட்சிப்பவராகவும் விளங்குகின்றார். புதிய மாணவர்களுக்குப் பயிற்சியளித்து வைத்தியர்களாக உருவாக்குவதில் தன் சிறப்பான பங்களிப்பை வழங்குகின்றார்.

## திரு.தினகரன்பிள்ளை செல்லத்துரை



07.02.1944 ல் திருகோணமலையில் பிறந்த தினகரன்பிள்ளை செல்வதுரை கடந்த பல வருடங்களாக பாண்டிருப்பில் வசிப்பவர். 1965 ம் ஆண்டு அஞ்சல் திணைக்களத்தில் இணைந்த இவர் 38 வருடங்கள் பணியாற்றி தற்போது ஓய்வு நிலையில் இருப்பவர். கல்முனை நீதிமன்ற நிர்வாக எல்லைக்குட்பட்ட சமாதான நீதிவானாகவும், பாண்டிருப்பு அம்பாள் சைவ மகாசபையின் தலைவராகவும் மேலும் பல பொது அமைப்புகளின் உறுப்பினராகவும் செயற்பட்டு வருகின்றார். பாடசாலை நாட்கள் தொடக்கம் மேடை நாடக நடிப்பில் மிகவும் ஆர்வம் கொண்டவர். 1987 வரை 22 க்கும் மேற்பட்ட நகைச்சுவை நாடகங்களிலும், 02 சமூக நாடகங்களிலும், 02 சரித்திர நாடகங்களிலும் நடித்துள்ளார். சிறுகதை, கவிதை, நாடகப் பிரதிகள், மெல்லிசைப் பாடல்கள், பக்தி பஜனைப் பாடல்கள் ஆகியவற்றை எழுதியுள்ளதோடு இசைக்குழுக்கள் பலவற்றில் பாடியுமுள்ளார். தற்போது சமூகப் பணிகளிலும், ஆலயத் தொண்டுகளிலும், தந்தை வழி வந்த வைத்தியம், மாந்திரீகம் என்பவற்றிலும் ஈடுபட்டு வருகின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூபாலபிள்ளை நமசிவாயம்



இந்தப் பிரதேசத்தின் புகழ் பெற்ற கணித ஆசிரியரான திருநமசிவாயம் அவர்கள் சிறந்ததொரு நாடகக் கலைஞருமாவார். பாடசாலையில் பயிலும் காலந் தொட்டு நாடகத் துறையில் ஈடுபாடு கொண்டவர் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக் காலத்தில் (1977-1978) கலாசாலை சகபாடிகளுடன் இணைந்து நாடகங்கள், வில்லுப்பாட்டு போன்ற நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கியவர். கல்முனை வெஸ்லி உயர்தர பாடசாலையில் சேவையாற்றிய காலத்தில் அங்கு பணியாற்றிய கலைத் துறை ஆர்வலர்களையும், வெளியார் சிலரையும் இணைத்து 'கலாலயம்' என்ற அமைப்பின் கீழ் இயங்கியவர். இவ் அமைப்பு நாடகங்கள் பலவற்றை கல்முனையிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் அரங்கேற்றின. இந் நாடகங்கள் பலவற்றிலும் இவர் பெண் பாத்திரமேற்று நடித்தார். கவிஞர் ஆத்மாவின் இயக்கத்தில் 2004 ல் ரூபவாஹினி தொலைக்காட்சியில் ஒளிபரப்பான 'இறக்கை' நாடகத்தில் இவர் விடுதிப் பொறுப்பாளராகப் பிரதான வேடமேற்று சிறப்பாக நடித்தார். பல தடவைகள் ஒளிபரப்பப் பட்ட நாடகம் இது . இதையொட்டி ரூபவாஹினியில் இடம் பெற்ற நேர்காணலின் போது 'என் நடிப்பாற்றலால் கணித பாடத்தை நகைச்சுவையுடன் கற்பிப்பதாக மாணவர்கள் கூறுவதாகக்' குறிப்பிட்டார். 'கணித சிரோமணி' என்ற பட்டத்தை அருட்சகோதரர். எஸ்.ஏ.ஐ. மத்தியு இவருக்கு வழங்கி கௌரவித்துள்ளார்.

## திரு.வயந்தராசபிள்ளை சுப்பிரமணியம்




எமது பிரதேசத்தில் மாணவர்களால் "லொஜிக் சுப்பர்" என்றும் கல்வியலாளர்களால் "*Logic Super*" என்றும் *Super Logic* என்றும் நெருக்கமான உணர்வுடன் குறிப்பிடப்படும் திரு. வயந்தராசபிள்ளை சுப்பிரமணியம் அவர்கள் கூர்மையான சிந்தனையும் மென்மையான சுபாவமும் உடையவர். மெய்யியல், உளவியல், தமிழிலக்கணம், இலக்கியம், கலாசார விழுமியங்கள் போன்றவற்றில் மிகுந்த ஈடுபாடு காட்டுபவர். பயிற்றப்பட்ட ஓர் ஆசிரியர் என்ற நிலையிலிருந்து ஆசிரிய சேவைக்கால ஆலோசகராகவும், பின்னர் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் பதவி உயர்வுகள் பெற்று, இறுதியாக 2006ம் ஆண்டு ஓய்வு பெற்றவர். இவர் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கலைப் பட்டம் பெற்றதோடு, கல்வியல் டிப்ளோமா (பட்டப்பின் படிப்பு) சான்றிதழும் பெற்றவர். இலங்கை தேசிய கல்வி நிறுவனத்தின் வளவாளராகவும் தேர்வுசெய்யப்பட்டு கடமையாற்றியவர். இப் பிரதேசத்தின் பல்வேறு பாடசாலைகளிலும், மலையகத்தின் பூண்டுலோயா மகா வித்தியாலயத்திலும் பணி புரிந்தவர். இவர் தனது இளமைக் காலத்தில் குறிப்பாக 1970, 80களில் இலங்கையின் தேசிய பத்திரிகைகளான தினபதி, வீரகேசரி, தினகரன் போன்றவற்றிலும், சிற்றிதழ்கள் சிலவற்றிலும் தொடர்ச்சியாக, காத்திரமான கட்டுரைகளை எழுதியவர். இவரது கட்டுரைகள் கல்வி, உளவியல், மெய்யியல், சமயம், கலாசாரம், ஒழுக்க விழுமியங்கள் பற்றியனவாக அமைந்தன. எமது பிரதேசத்தில் கற்பித்தல் பாடவிதானங்களுக்குள் மாத்திரம் முடங்கி விடாமல் பழந்தமிழ் இலக்கியங்கள் முதல் நவீன இலக்கியங்கள் வரை ஆர்வத்துடன் தேடிக் கற்று சுயமான அபிப்பிராயங்களை உருவாக்கிக் கொண்ட மிகச்சில ஆசிரியர்களுள் இவரும் ஒருவர். இத் தகுதியானது இலக்கிய மேடைகளில் பல விமர்சன உரைகளை ஆற்ற இவருக்கு உதவியது . உரைகளைத் தர்க்கரீதியாகவும் நுட்பமாகவும் நகர்த்தும் இவரது திறன் தனித்துவமானது. இவர் எழுதிய கட்டுரைகள் நூலுருப்பெறவில்லை. இவை கடந்த 2004ம் ஆண்டு ஆழிப்பேரலையில் அள்ளுண்டுபோய்விட்டன. எழுபத்தெட்டு வயதாகின்ற இவர் எவ்வித ஆரவாரமுமின்றி, சுய தம்பட்டமின்றி மிக நிதானமாக ஒரு நிறைகுடத்தின் தன்மையுடன் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கிறார்.

## திரு.சிவகாமி நாதன் சிவகுருநாதன்



இளமைக்காலத்தில் ஒன்பது வருடங்கள் 'சுதந்திரன்' பத்திரிகையில் அச்சுக் கோர்ப்பாளராகப் பணியாற்றிய அனுபவம் எழுத்துத்துறை பால் இவரை ஈர்த்தது. இவருடைய கவிதைகள் பல வானொலியிலும், பத்திரிகைகளிலும் இடம் பெற்றிருக்கின்றன. கதைகளும் பிரசுரமாகியுள்ளன.

## திரு பொன்னையா ஏகாம்பரம்



கல்முனையை சேர்ந்த இவர் 'கலைக்கொழுந்தன்' என்ற புனைபெயரால் அறியப் பட்டவர் .சிறு வயது முதல் கலை-இலக்கியத் துறையில் ஆர்வம் கொண்டவர். 1959-196 காலப் பகுதியில் தலைநகரிலிருந்து வெளியான 'தாய்நாடு' கலை, இலக்கிய, அறிவியல் சஞ்சிகையில் இவருடைய முதலாவது கவிதை பிரசுரமானது. இதனைத் தொடர்ந்து ஈழத்தின் பல்வேறு பத்திரிகைகளிலும் இவருடைய ஆக்கங்கள் வெவ்வேறு புனை பெயர்களில் பிரசுரமாகியுள்ளன. 'தலைவன்', 'நவயுகம்', எழில் கீற்று ஆகிய சஞ்சிகைகளில் இணையாசிரியராகவும் ,பொதுப்பணித் துறைத் தளத்தின் 'பொது மக்கள் பூமி' சஞ்சிகையின் ஆசிரியராகவும் இருந்திருக்கிறார். தன் சமூக,சமய, கலை-இலக்கியப் பணிகள் மூலம் இப் பிரதேசத்தின் பல்வேறு அமைப்புகளினதும் அபிமானத்தைப் பெற்றவர் .

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## திரு. பொன்னையா கணேசன்



*1950 ல் கல்முனையில் பிறந்த இவர் இலக்கிய உலகில் 'கல்லூரன்' என்ற புனைபெயரால் அறியப் பட்டவர். தமிழ் மற்றும் ஆங்கிலக் கவிதைகளை எழுதும் ஆற்றல் கொண்ட இவர் கல்முனை நவீன தமிழ் இலக்கியத்தின் முக்கியமான பிரதிநிதி. இவர் ஆசிரியராக இருந்த 'கீற்று' இதழ் நவீன தமிழிலக்கியத்துக்குக் கணிசமான பங்களிப்பை வழங்கியிருக்கிறது. இதுவரை 'வெளிக்குள் வெளி' (வியூகம் வெளியீடு),' மனிதனாய் இருப்பதன் பெருவலி' (புது எழுத்து வெளியீடு-தமிழ்நாடு) ஆகிய இரண்டு கவிதை நூல்கள் வெளியாகியுள்ளன. 32 நாடுகளின் 1000தமிழ்க் கவிதைகள் கொண்ட தொகுப்பில் (செல்லமுத்து வெளியீட்டகம்: முல்லைத்தீவு) இவருடைய கவிதையும் இடம் பெற்றுள்ளது. இவருடைய ஆங்கிலக் கவிதைகள் www.poemhunter.com/ponniah என்ற வலைத்தளத்தில் உள்ளன. ஓய்வுநிலை நீதிமன்றப் பதிவாளரான இவர் தற்போது அரச சார்பற்ற நிறுவனமொன்றில் நிர்வாக உத்தியோகத்தராகப் பணி புரிகின்றார்.*

## திரு. கணபதி ஐயர் யோகராஜா ஐயர்



*இறைபணி ஆற்றும் தன் பரம்பரை வழக்கம் அறுந்து போகாமல் நான்காவது தலைமுறையிலும் அதனைத் தொடரும் கணபதி ஐயர் யோகராசா ஐயர் பாண்டிருப்பைச் சேர்ந்தவர். இவர் சைவாகமக் கிரியைகளையும், பூஜைகளையும் தமிழ் விளக்கங்களுடன் புரிவதால் பெரும்பாலான பொதுமக்களின் அபிமானத்தைப் பெற்றவர். 67 வயது நிரம்பிய இவர் தனது 13 வது வயதிலேயே தந்தையுடன் இணைந்து பாண்டிருப்பு ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோயில் கடமைகளில் ஈடுபட்டது முதல் இன்று வரை பல்வேறு கோயில் கடமைகளுடன் தன்னைப் பிணைத்துக் கொண்டவர். சமூக செயற்பாடுகளில் இந்து மதக்கருத்துகளின் பங்கு, தமிழர்களின் பெருமை போன்ற விடயங்களைப் பற்றிய இவருடைய குரல் பல்வேறு சமயங்களின் நிறுவனங்கள், ஒன்றியங்கள், நிலையங்கள் ஆகியவற்றில் ஒலித்திருக்கிறது. 'கிழக்கிலங்கைக் குருமார் ஒன்றியம்' எனும் அமைப்பு தோன்றுவதற்கு இவர் முன்னோடியாகவிருந்தார். கல்முனைப் பிரதேசத்தில் உள்ள சில கோயில்களின் உருவாக்கத்திலும், விரிவாக்கத்திலும், புனரமைப்பிலும் இவர் முக்கிய பங்கு வகித்திருக்கிறார். 1983 காலப்பகுதியில் 'பாண்டிருப்பு இந்துமதப் பேரவை'யின் வெளியீடான 'இந்துமதி' இதழுக்குப் பொறுப்பாசிரியராக இருந்திருக்கிறார். இவர் ஆசிரியராக இருந்த ஏனைய இதழ்கள் : 'வானோசை', 'அர்ச்சனா'.*

## திரு. கணபதிப்பிள்ளை பாக்கியராசா



*அக்கரைப்பற்றைப் பிறப்பிடமாகவும், பெரிய நீலாவணையை வசிப்பிடமாகவும் கொண்ட இவருடைய புனைபெயர் 'அக்கரைப்பாக்கியன்'. 1971 ம் ஆண்டு சுதந்திரன் பத்திரிகையில் இவருடைய முதல் கவிதை வெளியானது. 1978 ல் இவருடைய 'அக்கறை' என்னும் கவிதை நூல் வெளியானது. மாவட்ட, மாகாண, அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற கலை-இலக்கியப் போட்டிகள் பலவற்றில் பரிசில்களும், பாராட்டுகளும் பெற்றுள்ளார். 1975 ல் இவருடைய முதலாவது மெல்லிசைப்பாடல் வானொலியில் ஒலிபரப்பானது. இதனைத் தொடர்ந்து வானொலியிலும், தொலைக்காட்சியிலும் இவருடைய மெல்லிசைப் பாடல்கள் பல இடம் பெற்றுள்ளன. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இவருடைய ஆற்றலை மதித்து 'மெல்லிசைக் கலைஞர் ' என்ற பட்டம் வழங்கி கௌரவித்தது. 2016ம் ஆண்டு ஏனாதிநாத நாயனார் அறப்பணி மன்றம் 'மறைந்து போன அரச குல மாண்மியம் ' என்னும் இவருடைய வரலாற்று நூலை வெளியிட்டது. இரு இதழ்கள் வெளிவந்து, நின்று போன 'மணிப்புறா' சஞ்சிகையின் ஆசிரியர். 'விமோசனம்' என்னும் குறும்படத்தின் கதை, வசனம், பாடல்களை எழுதியதோடு அதன் இயக்குநராகவும் இருந்தார். கலாபூஷணம், கிழக்கு மாகாண முதலமைச்சர் விருது உள்ளிட்ட உயர் விருதுகள் பலவற்றைப் பெற்ற இவர் தற்போது ஓய்வு நிலை அதிபராக இருக்கின்றார்.*

## திரு.காளிக்குட்டி சந்திரலிங்கம்



*13.10.1951ல் சேனைக்குடியிருப்பில் பிறந்த காளிகுட்டி சந்திரலிங்கம் யாழ்.பல்கலைக் கழக பட்டதாரியாவார். பின் கல்வி டிப்ளோமாவினைப் பூர்த்தி செய்து, பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமாவில் முன்னுரிமை சித்தி பெற்றவர். அரச பணியில் பல்வேறு பதவிகளிலிருந்த இவர் பின்னர் பட்டதாரி ஆசிரியராகவும், முதலாம் தர அதிபராகவும் கொழும்பு ,கல்முனை கல்வி மாவட்டங்களில் பணியாற்றியவர். தற்பாதுகாப்புக் கலைகளான குஸ்தி, சிலம்பம் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்ற இவர் கராட்டிக் கலையில் சர்வதேச தரத்தில் 3 வது கறுப்புப் பட்டியினையும், ஸ்ரீலங்கா கராட்டி சம்மேளனத்தின் 4 வது கறுப்புப் பட்டியினையும் பெற்றவர். சர்வதேச கராட்டி போதனாசிரியராகவும், ஸ்ரீலங்காவின் பிரதம கராட்டி போதனாசிரியராகவும், தேசிய ரீதியில் நடுவராகவும் விளங்கியவர். ஜப்பான் கராட்டி மயோஷிக்காய் அமைப்பின் ஸ்ரீலங்கா கிளையின் தலைவர். சர்வதேச ரீதியாகப் புகழ் பெற்ற கராட்டி போதனாசிரியர்கள் பலரிடம் மாணவராக இருந்த இவர் கல்முனையில் கராட்டி கலையை வளர்ப்பதில் பெரும் பங்காற்றியவர். பெங்களூர் விவேகானந்தா யோகா ஆராய்ச்சி நிலையத்தில் யோகப் பயிற்சியினையும்,தகைமையினையும் பெற்ற இவர் பல்வேறு பயில் நிலையங்களில் யோகா ஆசிரியராக இருந்திருக்கிறார். தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றில் இவருடைய நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன. யோகக் கலையில் 'யோகரத்னா', 'யோகாச்சாரியார்', யோகாசனக் கலாநிதி' போன்ற பட்டங்களால் கௌரவிக்கப் பட்ட இவர் தான் ஆற்றிய சேவைக்காக 'தேச பந்து' என்ற பட்டமும் பெற்றிருக்கிறார். ஆலயங்களில் ஆன்மீகச் சொற்பொழிவுகளையும் நிகழ்த்தியுள்ளார். உள்ளூரில் மட்டுமின்றி தலைநகரிலும் நூல் ஆய்வு, விமர்சன உரைகளை நிகழ்த்தியுள்ளார். கவிதைகள், கட்டுரைகள் பலவற்றை எழுதியுள்ள இவர் சிறந்த நாடக நடிகருமாவார். சமூக, சரித்திர, ஹாஸ்ய நாடகங்கள் பலவற்றில் பங்கு கொண்டவர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திரு. சுப்பிரமணியம் அரசரெத்தினம்



1952 ல் களுவாஞ்சிக்குடியில் பிறந்த இவர் கல்முனையை வசிப்பிடமாகக் கொண்டவர். சுமார் 25 வருடங்களுக்கு மேலாக கலை-இலக்கியத் துறையில் ஈடுபாடுள்ள இவர் இலக்கியம், ஆன்மீகம், அரசியல் வரலாறு எனப் பல்துறை சார்ந்த நூல்களை வெளியிட்டுள்ளார். வளமான வாழ்வைத் தேடி, விழிகளால் கதைகள் பேசி, இலங்கையின் பாராளுமன்ற அரசியலும் பன்னிரண்டாவது பொதுத் தேர்தலும், 'இலங்கையின் அரசியல் வரலாறும், பதின்மூன்றாவது பொதுத் தேர்தலும்', 'சாம்பல் பறவைகள்' ஆகியவை இவருடைய நூல்களாகும். இவற்றுள் 'சாம்பல் பறவை ' 2017, கிழக்கு மாகாண இலக்கிய விழாவில் சிறந்த நாவலுக்கான விருதினைப் பெற்றது. இலங்கையில் வெளியாகும் அநேகமான பத்திரிகைகளில் எழுதி வரும் இவர் கல்முனை சைவ மகாசபையின் தலைவராவார். கல்முனை கலை-இலக்கிய நண்பர்கள் அமைப்பின் செயலாளராகவும், எவரெடி விளையாட்டுக் கழகத்தின் ஆலோசகராகவும் உள்ள இவர் குறிப்பிடத்தகுந்த சமூக செயற்பாட்டாளரு மாவார். கலாபூஷணம், வித்தகர் உள்ளிட்ட உயரிய பல விருதுகளை இவர் பெற்றுள்ளார்.

### திருமதி. விமலேஸ்வரி கிருபைராஜா




பாண்டிருப்பைச் சேர்ந்த இவர் மனைப் பொருளியல் ஆசிரியையாக நியமனம் பெற்றவர் . கோப்பாய் அரசினர் பயிற்சிக் கலாசாலையில் விசேட பயிற்சியினைப் பெற்று வெளியேறி இப் பிரதேசத்தின் பல்வேறு பாடசாலைகளிலும் ஆசிரியையாகப் பணியாற்றியவர். வாழ்க்கைத் திறன், வாழ்க்கைத் தேர்ச்சி, மனைப் பொருளியல் போன்ற பாடங்களின் ஆசிரிய ஆலோசகராக கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் பணியாற்றி, பின்னர் ஓய்வு பெற்றவர். 1980 தொடக்கம் அறநெறி ஆசிரியராகவும், பின் அதிபராகவும் கடமையாற்றி வருகின்றார் இவருடைய சேவைக்காலத்தில் மாணாக்கர்களைப் பல்வேறு கலை நிகழ்சிகளிலும் பங்கேற்கப் பயிற்றுவிப்பதில் மிகவும் சிறப்பாக செயற்படுபவர்.

### செல்வி.நோணிஸப்பு சரோஜா



கல்முனையைச் சேர்ந்த செல்வி. நோணிஸப்பு சரோஜா இளம்பராயம் தொடக்கம் இசையில் நாட்டம் கூடியவர். கர்நாடக சங்கீத ஆசிரியராகப் பணி புரிந்தவர். பின்னர் சங்கீத பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகப் பணி புரிந்து ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்ற போதும் இன்று வரை பொதுச் சேவையில் ஈடுபட்டு, பல பணிகளைப் புரிந்து வருகிறார். கடந்த 10 வருடங்களாக கல்முனை சைவ மகாசபையின் அறநெறிப் பாடசாலையில் அதிபராகப் பணி புரியும் இவர் மாணாக்கர்களுக்கு கர்நாடக சங்கீதத்தைக் கற்பித்து வருகின்றார். இந்து கலாசாரத் திணைக்களம் அகில இலங்கை ரீதியாக நடத்தும் பண்ணிசை பஜனைப் போட்டிகளில் மேற்படிப் பாடசாலை சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கது. அம்பாறை மட்டக்களப்பு மாவட்டங்களில் அறநெறி' பாடசாலை ஆசிரியர்களுக்கு வளவாளராகவும் இவர் விளங்குகின்றார். கல்முனைப் பிரதேசங்களில் இடம் பெறும் அநேகமான கலை இலக்கிய நிகழ்வுகளிலும், சமய வைபவங்களிலும் இவர் பாடிச் சிறப்பித்திருக்கின்றார். அவரிடம் பயின்ற மாணவர்களில் பலர் உயர் நிலைகளை எய்தியுள்ளனர். இந்து கலாசாரத் திணைக்களத்தினால் அகில இலங்கை ரீதியில் 'மேன்மை' விருது வழங்கி கௌரவிக்கப் பட்ட இவர் உள்ளூர்ப் பாடசாலைகளாலும், ஆலயங்களாலும், சமூக அமைப்புகளாலும் கௌரவிக்கப் பட்ட ஒருவராவார்.

### திரு.வைரமுத்து கணேசன்



1950 ல் பிறந்த இவர் ஒரு விவசாயி .1974 தொடக்கம் சைவ மறுமலர்ச்சி மன்றத்தில் இணைந்து நாடகம், வசந்தன் கோலாட்டம் போன்ற கலைநிகழ்ச்சிகளில் பங்கு பற்றினார். பின்னர் நாடகம், வில்லுப் பாட்டு , நவீன நாட்டுக்கூத்து ஆகியவற்றை எழுதி பாடசாலை மாணவர்களை அவற்றில் பங்கேற்கச் செய்தார் அவர்களைத் திறம்படப் பயிற்றுவித்தார். 1990 ம் ஆண்டு முதல் ஆன்மீகத் துறையில் ஈடுபாடு கொண்டு காவடிச் சிந்து, காவியம், அகவல் ,பொன்னூஞ்சல், கும்மிப் பாடல், வாழ்க்கைச் சக்கரம், மோட்சப் பத்து, மயானப் பத்து போன்ற 5000 க்கும் மேற்பட்ட பாடல்களை எழுதி சிறு சிறு நூல்களாக ஆக்கியுள்ளார்.

### திரு . பூபாலபிள்ளை சரவணபவன்



14.11.1953ல் பிறந்த பூபாலப்பிள்ளை சரவணபவன் பாடசாலைக் காலம் தொட்டே கலை-இலக்கியத் துறையில் ஈடுபாடு கொண்டவர். கடந்த நாற்பது வருடங்களாக கவிதை, மேடைப்பேச்சு, நாடகம், வில்லிசை, கதாகாலட்சேபம், சமயச் சொற்பொழிவு, வானொலி நிகழ்ச்சி என இயங்கி வருபவர். 'பூவை சரவணன்'என்ற புனைபெயரால் பரவலாக அறியப்பட்டவர். அவர் எழுதிய நூல்கள்: 'பதிகம் பன்னிரண்டு' (வழிநடைச் சிந்து வெண்பா-20 பாடல்கள் ''உகந்தை மலை முருகன் மாலை' - (வழிநடைச் சிந்து-20 பாடல்கள் 'கண்ணீர்க் கடல் பத்து'- (சுனாமிப்பேரலை அனர்த்தத்தை மையமாகக் கொண்டது) ஏராளமான வாழ்த்துப் பாக்களை எழுதியுள்ள இவர் இளைய தலைமுறை மாணவ சமுதாயத்தின் நாடகத் தயாரிப்புகள் பலவற்றின் போது பக்க பலமாக இருந்து, உதவியிருக்கிறார். அவருடைய கலைத்துறை ஈடுபாட்டை கருத்தில் கொண்டு 2017ல் சாகித்திய மண்டல விருது (அம்பாறை மாவட்டம்) வழங்கப்பட்டது. கல்முனை ஸ்ரீமுருகன் தேவஸ்தானத்தால் 'மதுரகவி', 'கலாதிபதி ' பட்டங்களும் வழங்கப்பட்டன. கல்முனையின் குறிப்பிடத்தகுந்த சமூக செயற்பாட்டாளர்களில் ஒருவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. சபாரெத்தினம் சபேசன்



கலை-இலக்கிய ஈடுபாடு மிக்க குடும்பப் பின்னணியைக் கொண்டவர். 1954ல் பாண்டிருப்பில் பிறந்த சபா சபேசன் ஏறத் தாழ 49 வருட கலை-இலக்கிய அனுபவங்களைக் கொண்டவர். இப் பிரதேசத்தின் மூத்த கவிஞர் நீலாவணன் தொடக்கம் இன்றைய இளம் எழுத்தாளர்கள் பலர் வரை பரிச்சயம் கொண் வர். இளமைக் காலத்திலிருந்தே சமூக செயற்பாடுகளில் ஆர்வம் காட்டியவர். கவிதை, சிறுகதை, குறுங்கதை, கட்டுரை, வில்லுப்பாட்டு எனப் பல பிரிவுகளில் இயங்கியவர் 70களில் பாண்டிருப்பில் இயங்கிய அக்கினி இலக்கிய வட்டத்தின் செயற்பாடுகளில் முக்கிய பங்காளியாகவிருந்தார். 1979 ல் கல்முனையில் இயங்கிய 'புது மொடிகள்' என்ற நாடகக் குழுவின் இயக்குநர்களில் இவரும் ஒருவர்

## திரு. உமா வரதராஜன்



பாண்டிருப்பைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண் இவர் சிறுகதை, கவிதை, விமர்சனம், பத்தியெழுத்து , நாடகப்பிரதி, நடிப்பு, தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பு, மேடைப் பேச்சு, நாவல் ஆகிய பிரிவுகளில் கடந்த 45 வருடங்களாக இயங்கி வருபவர். 1988-89ல் வெளியான சிறந்த சிறுகதைத் தொகுப்புக்கான சாகித்திய மண்டலப் பரிசையும், விருதையும் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, கலாசார அலுவல்கள், விளையாட்டுத் துறை இவருக்கு வழங்கியுள்ளது. இந்து சமய, கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் "தமிழ் மணி" பட்டம் (1993), இஸ்லாமிய ஆய்வு மையமும், ஸ்ரீலங்காவுக்கான தென் கிழக்கு ஆய்வமைப்பும் வழங்கிய இலக்கியத் துறைக்கான விருது (2002), கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 'வித்தகர்' விருது (2017) ஆகியவற்றை இவர் பெற்றுள்ளார். இந்திய சாகித்திய அகாடமி உட்பட கடல் கடந்த நாடுகள் சிலவற்றின் இலக்கியத் தொகுப்புகளில் இவருடைய படைப்புகள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இவரது சில படைப்புகள் ஆங்கிலம், ஜேர்மன், சிங்கள மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவருடைய சிறுகதையொன்று அரச பாடசாலைகளில் தரம் 10-11 க்கான "தமிழ் இலக்கிய நயம் " பாடத் திட்டத்தில் 2015ல் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. 1980 களில் கல்முனையில் இயங்கிய "புது மோடிகள் " நாடகக் குழுவின் இயக்குனர்களில் ஒருவராகவும், நடிகராகவும் செயற்பட்டவர். இலங்கை ரூபவாஹினி மற்றும் நேத்ரா தொலைக்காட்சிகளில் நிகழ்ச்சித் தொகுப்பாளராக விளங்கியவர். ஈழத்தின் இலக்கியச் சிற்றிதழ்களில் ஆசிரியராகப் பணியாற்றியவர். (காலரதம், வியூகம், களம்). 70களின் இறுதி ஆண்டுகளில் கல்முனை எழுத்தாளர் சங்கத்திலும் பின்னர் வியூகம் என்றோர் இலக்கிய அமைப்பிலும் செயற்பட்டவர். தற்போது கல்முனை கலை - இலக்கிய நண்பர்கள் அமைப்பு, பாண்டிருப்பு மறுமலர்ச்சி சன சமூக நிலையம் மற்றும் கல்முனை நெட் ஊடக வலையமைப்புடனும் இணைந்து இயங்குகின்றார். பத்தியெழுத்தாளராக ஈழத்தின் தேசியப் பத்திரிகைகள், இலக்கிய சிற்றிதழ்கள் மூலம் நன்கு அறியப்பட்ட இவர் தற்போது தினகரன் வாரமஞ்சரியின் "பிரதிபிம்பம்" எனப்படும் கலை - இலக்கிய விவகாரங்களுக்கான பக்கத்துக்குப் பொறுப்பாகவுள்ளார் அவருடைய, வெளி வந்த நூல்கள் : உள்மன யாத்திரை (அன்னம் பதிப்பகம், தமிழ்நாடு-1989) சிறுகதைத் தொகுப்பு மூன்றாம் சிலுவை (காலச்சுவடு வெளியீடு, தமிழ்நாடு 2009) -நாவல் உமா வரதராஜன் கதைகள் (காலச்சுவடு வெளியீடு, தமிழ்நாடு 2011)

## கலாநிதி. பரதன் கந்தசாமி



1957 ல் களுதாவளையில் பிறந்த இவர் திருமணத்தின் பின் கல்முனை வாசியானவர். பட்டதாரி உதவி ஆசிரியர், அதிபர், கலாசார உத்தியோகத்தர், கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிகளில் பணியாற்றியவர். கலை - இலக்கிய, சமய, சமூக அமைப்புகள் பலவற்றில் உயரிய ஸ்தானங்களை வகித்தவர். உள்ளூரிலும், கடல் கடந்த நாடுகளிலும் உள்ள பல்வேறு அமைப்புகளினால் 'தமிழ்த் தென்றல்', தேச கீர்த்தி' உள்ளிட்ட உயரிய பட்டங்கள், விருதுகள் என்பன வழங்கப் பட்டு கௌரவத்துக் குள்ளானவர். கலை-இலக்கியத் துறை சார்ந்த பல போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியீட்டி பணப் பரிசில்களையும், சான்றிதழ்களையும், வெளிநாட்டுப் பயணத்தையும் தன் ஆற்றல் மூலம் பெற்றவர். சைவ மாநாடு (இந்தியா), கல்வி மாநாடு (தாய்லாந்து), தமிழ்ப் பண்பாட்டு மாநாடு (மலேசியா), இந்து மாநாடு (கொழும்பு) ஆகியவற்றில் கலந்து சிறப்பித்தவர். இவர் எழுதிய 5 நாடகங்கள் மேடையேறியுள்ளன. பத்திரிகைகள், இலக்கிய இதழ்களில் இவருடைய அனேகமான படைப்புகள் வெளியாகியுள்ளன. கல்முனையின் குறிப்பிடத் தகுந்த சமூக செயற்பாட்டாளர்களில் ஒருவர். அம்பாறை –மட்டக்களப்பு மாவட்டங்களில் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு வளவாளராகவும் இவர் விளங்குகின்றார். கல்முனைப் பிரதேசங்களில் இடம் பெறும் அநேகமான கலை –இலக்கிய நிகழ்வுகளிலும், சமய வைபவங்களிலும் இவர் பாடிச் சிறப்பித்திருக்கின்றார். அவரிடம் பயின்ற மாணவர்களில் பலர் உயர்நிலைகளை எய்தியுள்ளனர். இந்து கலாசாரத் திணைக்களத்தினால் அகில இலங்கை ரீதியில் 'மேன்மை' விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட இவர் உள்ளூர்ப் பாடசாலைகளாலும், ஆலயங்களாலும், சமூக அமைப்புகளாலும் கௌரவிக்கப் பட்ட ஒருவராவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திரு. கதிரமலை நவமணி



கல்முனையை வசிப்பிடமாகக் கொண்ட இவர் சிறு வயதிலேயே தன் தந்தை வழியாகத் தச்சு, மற்றும் கலைகள் மேல் ஈர்ப்புக் கொண்டார். களிமண்ணால் உருவம் சமைத்தல், மாயாவின் சித்திரங்கள், சிற்பியின் கோட்டோவியங்கள் இவரைப் பெரிதும் கவர்ந்தன. அவற்றின் செல்வாக்கினால் இவர் உலகப் பெரியார்கள் பலரினதும் உருவங்களை வரைந்து பாராட்டுகள் பெற்றார். இவர் கைவண்ணங்களை கல்முனையின் முக்கிய ஆலயங்களில் காணலாம். (ஸ்ரீ தரவைச் சித்தி விநாயகர் ஆலயத்தின் திருக் கதவுகளில் காணப் படும் பிள்ளையார் உருவங்கள், கண்ணகியம்மன் ஆலயத்தின் தெய்வ உருவங்கள், பாண்டிருப்பு மாரியம்மன் மற்றும் சிவன் ஆலய சுவரோவியங்கள், சாத்துப் படிகள்) கிராம மட்ட கலை, இலக்கிய நிகழ்வுகளில் இவர் பங்களிப்புகளைக் காணலாம்.ஆலயங்களின் திருவிழாக்களுக்கான ஆடையணிகள், முகமூடிகள், முகப்புத் தோரணங்கள் பலவற்றை இவர் உருவாக்கியுள்ளார். 1979 ல் இலங்கை போக்குவரத்து சபையில் இணைந்த இவர் பின்னாட்களில் உதவி முகாமை பொறியியலாளராகப் பதவி உயர்வு பெற்று 2016 இல் சேவை ஓய்வு நிலையை அடைந்தார்.

### திரு.சாமித்தம்பி விக்னேஸ்வரன்



02.10.1960 ல் கல்முனையில் பிறந்த சாமித்தம்பி விக்னேஸ்வரனின் புனைபெயர் 'விக்கினேஷ் கவிஞர்'. 20 வருட கால கலை - இலக்கிய அனுபவங்களைக் கொண்ட இவர் கவிதைத் துறையில் மிகவும் ஈடுபாடு கொண்டவர் . ஓசை நயத்துடன் கலையழகையும் பேண முயல்வதன் மூலம் குறிப்பிடத் தகுந்த கவிஞராக விளங்குகின்றார் .தன்னுடைய முகநூல் பக்கத்தை இலக்கிய முயற்சிகளுக்காக சிறப்பாகப் பயன் படுத்துபவர். சமூக செயற்பாடுகளில் ஆர்வம் மிக்கவர். தற்போது கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்தில் கிராம உத்தியோகத்தராகக் கடமையாற்றுகிறார்.

### திரு. ஜெயக்கொடி டேவிட்



1963ல் பிறந்த இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பட்டதாரி. பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விவசாய விசேட பயிற்சி, தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டப் பின் கல்வி டிப்ளோமா திறமைச் சித்தி, கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழியில் முதுமாணிப் பட்டம் என்பவற்றைப் பெற்றவர். இளவயது முதலே வாசிப்பில் அதீத ஈடுபாடு கொண்ட இவர் வானொலி நாடகங்களில் தொடங்கி ,மேடை நாடகப் பிரதிகள் பலவற்றை எழுதி, நெறியாள்கை செய்தவர். நாடகத் துறையில் தேசிய ரீதியாக சாதனைகள் புரிந்தவர். சிறுகதைகள், கவிதைகள் என இவருடைய இலக்கிய முயற்சிகள் பரந்து பட்டவை. 'பைந்தமிழ்க்குமரன்' என்ற புனைபெயரைக் கொண்ட இவருடைய 24 சிறுகதைகளை கிழக்குமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 'கானல் வசந்தங்கள் ' என்ற தலைப்பில் நூலாக 2017ல் வெளியிட்டது. 2017 இல் இவருடைய 50 கவிதைகளைக் கொண்ட 'மண்மாதா' நூல் வெளியானது. ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றை எழுதியுள்ளார். பட்டிமன்றங்கள், விவாத அரங்குகள் பலவற்றில் தன் பேச்சாற்றலால் பலரையும் கவர்ந்தவர். கல்விப் புலத்தில் சிறந்த அதிபருக்குரிய ,அதிபுயர் விருதான 'குரு பிரதீப பிரபா' விருதை 2014,2015,2016 ம் ஆண்டுகளில் பெற்றவர். கொடகே சாகித்திய விருது - 2015 தேர்வின் போது, 'கானல் வசந்தங்கள்' அவ்வாண்டில் 'முதல் நூல் வெளியிடுவோருக்கான பிரிவில்' பரிசினைப் பெற்றது. சமூகத் தொடர்பு நிலையமும், தொண்டன் சஞ்சிகையும் நடத்திய உலகத் தொடர்பு தினத்தில் கலைத் துறைப் பங்களிப்புக்காக பொன்னாடையிட்டு, பொற்கிழி வழங்கி கௌரவிக்கப்பட்டார். ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, அதிபராக, பகுதி நேர விரிவுரையாளராக அவருடைய சேவைத் தடங்கள் தொடர்கின்றன.

### திருமதி .திரேஸ் கமலினி பத்திரண



1965 ல் கல்முனையில் பிறந்த இவர் கமு / கார்மேல் பற்றிமா கல்லூரி (தேசிய) பாடசாலையின் பழைய மாணவியாவார் . சிறு வயதிலிருந்தே நடனக் கலையில் ஆர்வம் கொண்ட இவர் பாடசாலை நிகழ்ச்சிகள் பலவற்றிலும் போட்டியிட்டு, வெற்றி பெற்று பரிசுகளையும், சான்றிதழ்களையும் பெற்றவர். திருமதி.வசந்தி சபாநாதனின் மாணவியான இவர் பின்னர் சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கை நிறுவகத்தில் நான்கு வருடங்கள் நடனம் கற்றவர். 1992 ல் கமு / உவெஸ்லி உயர்தர பாடசாலையில் நடன பாட ஆசிரியையாக நியமனம் பெற்ற இவர் பல மாணவர்களை இக் கலையில் தேர்ச்சி மிக்கவர்களாக உருவாக்கியுள்ளார். இவர் பயிற்றுவித்த மாணவர்களில் பலர் மாகாண, தேசிய மட்டங்கள் வரை சென்று தங்கள் திறமைகளை நிரூபித்துள்ளனர். கலை தன் பாரம்பரியத்தை இழக்கலாகாது என்ற கருத்தினைக் கொண்ட இவர் நவீன நாட்டிய முயற்சிகளை வேறாக அடையாளப்படுத்தி அதிலும் ஈடுபட்டவர். 2002 ல் கல்முனை கல்வி வலயத்தில் நடன பாடத்துக்குரிய ஆசிரிய ஆலோசகராக நியமனம் பெற்ற இவர் இப் பிரதேசத்தின் கலை சார் செயற்பாடுகளில் முக்கிய பங்கு வகிப்பவர். கல்விப்புலம் சார்ந்த முக்கிய பயிலரங்குகளில் வளவாளராக இருந்து வருகிறார். இவர் சமூக, சமய செயற்பாட்டாளருமாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமதி. மாதுமையாள் வரதராஜன்




பல்வேறு உயரிய பட்டங்களையும், விருதுகளையும், புகழையும் பெற்ற கதாப் பிரசங்கியார் சிவத்திரு டாக்டர். இரா. சிவ அன்பு, கதிராசிப்பிள்ளை ஆகியோரின் புதல்வியாவார். பாடசாலைக் காலத்தில் ஆண்டுதோறும் நிகழும் தமிழ் மொழித் தினப் போட்டிகளில் நடனப் பிரிவில் கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம், அகில இலங்கை மட்டங்களில் குறிப்பிடத் தகுந்த வெற்றிகளைப் பெற்றவர். நடன பட்டதாரியான இவர் நடனப் பயிற்சி ஆசிரியருமாவார், பட்டப் பின் கல்வி டிப்ளோமா (PGDE),நடன டிப்ளோமா, *MFA IN DANCE* (கிழக்குப் பல்கலைக் கழகம்), *MFA IN DANCE* (கலைக்காவேரி, பாரதிதாசன் பல்கலைக்கழகம், தமிழ்நாடு) ஆகியவற்றைப் பூர்த்தி செய்தவர். தன்னுடைய ஆற்றல் காரணமாக கலா வித்தகர், நடனக்கலை மாமணி, திகாமடுல்ல அபிமானி, சாமஸ்ரீ நர்த்தன கீர்த்தி ஆகிய பட்டங்களையும் ஜெயாஞ்சலி விருதினையும் பெற்றவர். 'நிருத்திய க்ஷேத்ரா' எனும் நாட்டிய நிறுவனத்தை உருவாக்கி, அதன் ஆசிரியராகவிருந்து, அதன் மூலம் பல நூற்றுக் கணக்கான மாணவர்களின் திறமைகளைப் பளிச்சிடச் செய்தவர். இவரிடம் கலை பயின்ற மாணவர்களில் பலர் தற்போது இத்துறை சார்ந்து உள்ளூரில் விரிவுரையாளர்களாகவும், ஆசிரியர்களாகவும், வெளிநாடுகளில் ஆசிரியர்களாகவும் விளங்குகின்றனர். தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் பரதம் தனி நடனம், கிராமிய நடனங்கள், புத்தாக்க நடனங்கள் அனைவற்றிலும் இவர் தயாரித்தளித்தவை அகில இலங்கை ரீதியாக வருடா வருடம் முதலிடம் பெற்றவை. உள்ளூரிலும், உள்ளூர் எல்லைகளுக்கு அப்பாலும் இடம் பெறும் நிகழ்வுகளில் இவரது மாணவர்கள் வழங்கிய நடனங்கள் சிறந்த பாராட்டுகளைப் பெற்றிருக்கின்றன. அம்பாறையில் இடம் பெற்ற 'தயட்ட கிருள' நிகழ்ச்சியின் ஆரம்பநாளில் சகோதர மொழி மாணவர்களுடன், இவருடைய குழுவினரும் இணைந்து வழங்கிய நடனம் பலருடைய கவனத்தையும் ஈர்த்திருந்தது. நடன ஆசிரியையாக கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையில் 25 வருடங்கள் பணியாற்றியவர். தற்போதும் நடன ஆசிரியையாக அக்கரைப்பற்று ஸ்ரீஇராமகிருஷ்ணா கல்லூரி தேசிய பாடசாலையில் சேவையைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்.

## திருமதி. நிர்மலா தம்பிராஜா



பாண்டிருப்பில் பிறந்த திருமதி. நிர்மலா நடன ஆசிரியை ஆவார். ஆரம்பப் பயிற்சியை திருமதி. இராஜகுமாரி ஆசிரியையிடம் பெற்ற இவர் மறைந்த ஆசிரியை திருமதி .வசந்தி சபாநாதனிடமும் நடனம்கற்றவர் .தொடர்ந்து மட் / கல்லடி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் திருமதி .கமலா ஞானதாஸ் அவர்களிடம் பரதத்தை முறையாகக் கற்றுத் தேர்ந்தவர். பின் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையில் பரத நாட்டிய ஆசிரியையாக நியமனம் பெற்ற இவர் இத் துறை சார்ந்த மாணவர்களின் ஆற்றல்களை மேம்படுத்தும் பணிகளில் ஈடு பட்டவர் . இவர் பயிற்றுவித்த மாணவர்களில் பலர் கோட்ட, வலய, மாவட்ட, மாகாண மட்டங்களில் கல்வித் திணைக்களம் ஏற்பாடு செய்திருந்த போட்டிகளில் குறிப்பிடத் தகுந்த வெற்றிகளை ஈட்டியிருக்கின்றனர் "நர்த்தனாலயா" என்னும் நடனப் பள்ளியையும் நடத்தி வருகின்றார். பாண்டிருப்பு கலாசார மத்திய நிலையத்தின், பரதத்துக்கான வளவாளர் இவர் என்பதும் குறிப்பிடத் தகுந்தது. தற்போது கமு / இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தில் பரத ஆசிரியையாகப் பணி புரிகின்றார்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நன்றிகள்

கல்முனை தமிழ்ப் பிரதேச செயலக பிரதேச கலாசாரப் பேரவையின் கன்னி கலாசார விழாவின் போது வெளியாகும் இம் 'முனையம்' சிறப்பு மலருக்கு ஆசிச் செய்திகள் வழங்கிய மதகுருமார்கள், பெரியார்களுக்கும்

வாழ்த்துச் செய்திகளை வழங்கிய நாடாளுமன்ற உறுப்பினர், அரசாங்க அதிகாரிகளுக்கும்,

மலர் வெளியீடு, கலைஞர் கௌரவம், கலை நிகழ்ச்சிகள் என விழாவின் அனைத்து விடயங்களிலும் சிறந்த வழிகாட்டலையும் ஆலோசனைகளையும் முன்னின்று வழங்கிய பிரதேச செயலாளருக்கும்,

இம் மலர் பொலிவுற ஆக்கங்களை வழங்கிய கலை, இலக்கியவாதிகள் மற்றும் கட்டுரையாளர்கள், ஓவியர்களுக்கும்

பிரதேச கலாசாரப் பேரவை கீதத்தை இயற்றிய கவிஞர். மு.சடாட்சரன் அவர்கள், மெட்டமைத்த திருமதி. பிரியா ஜதீஸ்வரன் அவர்களுக்கும்,

கலாசார விழாவுக்கான பாடசாலை மட்டத்துக் கலை நிகழ்வுகளைப் பெறுவதற்கு உதவிய கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர், அதிபர்கள், ஆசிரியர்கள், பங்கேற்ற மாணவர்களுக்கும்,

கலை நிகழ்வுகளை வழங்கிய பிரதேச கலை, இலக்கிய மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்களுக்கும்,

மற்றும் கலாசார பேரவை குழுக்களின் பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும்,

விழாவின் சிறப்புக்குப் பலம் சேர்க்கும் விதத்தில் நிதியுதவிகளை வழங்கிய புரவலர்கள், வர்த்தகர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும்,

ஹட்டன் நஷனல் வங்கி,தேசிய சேமிப்பு வங்கி, செலான் வங்கி, சம்பத் வங்கி, பேன் ஏசியா வங்கி, கல்முனை நெற் ஊடக வலையமைப்பிற்கும், மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றுக்கும்,

மலர் வெளியீட்டுக்கு அனுசரணை வழங்கிய மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள் ஆகியவற்றுக்கும்,

ஒளிப்பட அனுசரணையினை வழங்கிய காயத்திரி கலையகத்திற்கும்,

எமது அழைப்பினை ஏற்று விழாவில் கலந்து சிறப்பித்த பிரதம, சிறப்பு, விசேஷ, கௌரவ அதிதிகளுக்கும்,

விழா நடந்தேற கமு/கமு/உவெஸ்லி உயர்தர பாடசாலை மண்டபத்தை வழங்கிய அதன் அதிபருக்கும்,

ஊடகவியலாளர்களுக்கும், நூலை சிறப்புற அச்சிட்டுத் தந்த வணசிங்கா அச்சகத்தினருக்கும்,

பல்வேறு உதவிகளை பல விதங்களில் வழங்கிய நண்பர்கள், அன்பர்கள், ஆதரவாளர்களுக்கும்,

மற்றும் அனைவருக்கும் கலாசார பேரவையின் சார்பில் மனமார்ந்த நன்றிகள்.

**திரு. த. பிரபாகரன்**
கலாசார உத்தியோகத்தரும்
கலாசார பேரவை செயலாளரும்
பிரதேச செயலகம்
கல்முனை - த.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலருக்கான அனுசரணை

கல்முனை பிரதேச கிராம அபிவிருத்தி சங்கங்களும்
மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org